www.tamilarangam.net

# தேர்தல் அரசியல்

## காமராஜ் முதல் கருணாநிதி வரை

தி. சிகாமணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# தேர்தல் அரசியல்

**காமராஜ் முதல் கருணாநிதி வரை**

**தி. சிகாமணி**

NORWAY SIGNATURE SEELAN BOOKS

**பாவை பப்ளிகேஷன்ஸ்**
142, ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**THERDHAL ARASIYAL**
**KAMARAJ MUDHAL KARUNANITHI VARAI**
By **T. Sigamani**
**தேர்தல் அரசியல்**
காமராஜ் முதல் கருணாநிதி வரை
திரு. தி. சிகாமணி

© உரிமை : ஆசிரியருக்கு

**பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு**

முதல் பதிப்பு : ஏப்ரல் 2001

Code No : P0044
ISBN : 81-7735-040-4

SEETHA BOOKS

**விலை : ரூ. 50.00**

அச்சிட்டோர்: **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**
142, ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
✆ : 8532441, 8532973, 8550664

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிப்புரை

தேர்தல் அரசியல் - காமராஜ் முதல் கருணாநிதி வரை என்ற தலைப்பில் பிரபல பத்திரிகையாளர் திரு. தி. சிகாமணி எழுதியுள்ள பயனுள்ள இந்த நூலை வெளியிடுகிறோம். அவர் பல ஆண்டுகள் 'தினமணி'யில் தலைமை நிருபராக பணி யாற்றியவர். மக்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் பற்றி அந்த நாளிதழில் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

1952ம் ஆண்டிலிருந்து 1999 வரை நடைபெற்ற மக்களவை, தமிழகச் சட்டப்பேரவைக்கான தேர்தல்களைப் பற்றி அவர் இந்த நூலில் பரிசீலிக்கிறார்.

அரசியல் நிர்ணய சபை நிறைவேற்றிய அரசியலமைப்புச் சட்டம் 1950 ஜனவரி 26ம் தேதி அமுலுக்கு வந்தது. அதன் அடிப்படையில் முதல் தேர்தல் 1952 துவக்கத்தில் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி மத்தியில் பெரும்பான்மை பெற்றபோதிலும் சென்னை மாகாணத்தில் (மொழிவாரி மாநிலங் கள் அமைவதற்கு முன்பு) பெரும்பான்மை பெறவில்லை. திரு. பிரகாசம் தலைமையில் உருவக்கப்பட்ட ஐக்கிய முன்னணி அரசு அமைக்க வாய்ப்பைப் பெற்றிருக்க வேண்டும். அதற்கு பதிலாக காமராஜ் அவர்கள் முன்முயற்சியில் 'காமன்வீல்', உழைப்பாளர் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைத் தங்கள் பக்கம் இழுத்து ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அரசை அமைத்தது. இது அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்த பார்லிமென்டரி ஜனநாயக முறைக்கு எதிரானது. பின் ஆண்டுகளில் கட்சி தாவல்கள் நடந்ததற்கு காங்கிரஸின்.இந்தச் செயல் வழிவகுத்தது. இதுபற்றி திரு. சிகாமணி இந்நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

நமது கவனத்தை ஈர்க்கும் மற்றொரு முக்கிய நிகழ்ச்சி 1959ல் நடைபெற்றது. 1957ல் நடந்த தேர்தலில் கேரள மாநிலத் தில் கம்யூனிஸ்ட் கட்சி பெரும்பான்மை பெற்று நமது நாட் டிலேயே முதலாவது கம்யூனிஸ்ட் கட்சி இ.எம்.எஸ் தலைமை யில் அரசை அமைத்தது. காங்கிரஸ் மற்றும் நாயர் அமைப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களின் நிர்பந்தம் காரணமாக, 1959 மேமாதம் அரசியல் சட்ட விதி 356ஐ பயன்படுத்தி மத்திய அரசு கம்யூனிஸ்ட் அரசைக் கலைத்தது. ஜனநாயக மரபுகளுக்கு மதிப்புத்தருபவர் என்று கருதப்பட்ட பண்டித ஜவஹர்லால் நேரு அமைச்சரவையின் நடவடிக்கைதான் இது என்பது வருந்தத்தக்கது. இந்தத்தவறான செயல் பின்பு காங்கிரஸ் மற்றும் ஜனதா மத்திய அரசுகளால் மாநில அரசுகள் பல எவ்வாறு கலைக்கப்பட்டன என்பதை இந்நூல் எடுத்துக்காட்டுகிறது. விதி 356ஐ தவறாகப் பிரயோகித்தது மத்திய - மாநில உறவுகளை பாதித்தது. எஸ்.ஆர். பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு இந்த தவறான போக்கைக் கட்டுப்படுத்த உதவியது.

1975ல் திருமதி இந்திரா காந்தி அவசர நிலை பிரகடனப் படுத்தியதால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளை நூலாசிரியர் விளக்குகிறார்.

1967ல் தமிழகச் சட்டப் பேரவைக்கு நடந்த தேர்தலில் காங்கிரஸ் தோல்வியைத் தழுவியதற்கான காரணங்களை விளக்கும் இந்த நூல், பெரும்பான்மை பெற்ற தி.மு.க. அறிஞர் அண்ணா தலைமையில் அரசு அமைந்ததையும் அதற்குப் பின் இன்றுவரை திராவிடக் கட்சிகளே (தி.மு.க. அல்லது அ.தி.மு.க.) ஆட்சியில் இருக்கின்றன என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. ஒவ்வொரு தேர்தலிலும் தமிழகத்தில் உருவான தேர்தல் அணிகள் பற்றியும் அவை பெற்ற இடங்களையும் குறிப்பிடுகிறது.

மத்தியிலும் தமிழகத்திலும் ஆட்சி செய்த அமைச்சரவைகளின் செயல்பாடுகளை எடுத்துக் கூறுவதோடு குறைகளையும் குறிப்பிடுகிறார் திரு. சிகாமணி. செயல் திட்டத்தின் அடிப்படையில் செயல்படும் இடதுசாரிக் கூட்டணி அரசுகளின் (வங்கம், கேரளா) சாதனைகளைப் பாராட்டுகிறார்.

இந்துத்துவப்போக்கின் வளர்ச்சி பாபர் மசூதி இடிக்கப்பட்டது இவை காரணமாக முஸ்லிம் வகுப்புவாதத்தின் தோற்றம் கிருஸ்தவ மதத்தினருக்கு பாதுகாப்பு இன்மை ஆகியவை எவ்வாறு நமது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கின்றன என்பதையும் கோடிட்டு காட்டுகிறது நூல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேர்தல்களில் தாதாக்களின் தலையீடு, பணபலத்தின் பாத்திரம், கொள்கை அடிப்படையில் அமையாத கூட்டணிகள், ஊழல் குற்றச்சாட்டுகள், வன்முறைச் செயல்கள் ஆகியவை வோரா (Vohra - 1995) கமிட்டி குறிப்பிட்டுள்ளது போல நாட்டின் கலாசாரத்தையும் பண்புகளையும் எவ்வாறு சீர்குலைத்துள்ளன என்பதை இந்நூலில் காணமுடியும்.

சாதி - சமய நல்லிணக்கத்திற்கும் பேர்போன தமிழகத்திலும் இப்பூசல்கள் தலைதூக்கியுள்ளதையும் சாதிகள் அடிப்படையிலான அமைப்புகள் தோன்றியுள்ளதையும் கவலையுடன் குறிப்பிடுகிறார் நூலாசிரியர். அரசியல் சட்டம் தலித்களுக்கு உரிமைகள் வழங்கியுள்ள போதிலும் அவை எவ்வாறு மீறப்படுகின்றன என்பதையும் தலித் மக்கள் இன்னமும் பல இடங்களில் கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதையும், அவர்களிடையே உள்ள ஒற்றுமை இன்மையை எவ்வாறு அரசியல் வாதிகள் பயன்படுத்துகின்றனர் என்பதையும் விரிவாக ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

தேர்தல்கள் நேர்மையாக நடைபெற வேண்டுமெனில் ஒடுக்கப்பட்டவர்களும் கீழ்மட்டத்தில் உள்ள சாமான்ய மக்களும் பெண்களும் தங்கள் உரிமைகளைப் பெற வேண்டும். அவர்களின் நலன்களைப் பேணிக்காக்க சட்டங்கள் இயற்றப் படுவதோடு அவை சரியாக அமுல் நடத்தப்பட வேண்டும். இவை பற்றியும் தேவையான தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றியும் தமது ஆக்கபூர்வமாக ஆலோசனைகளை நூலாசிரியர் வழங்கியுள்ளார்.

இந்நூலின் மற்றொரு சிறப்பு அம்சம் இதில் இணைக்கப்பட்ட அட்டவணைகள். கடந்த 50 ஆண்டுகளாக மக்கள் அவைக்கும் தமிழ் மாநில சட்டப் பேரவைக்கும் நடந்த தேர்தல்களில் ஒவ்வொரு கட்சியும் பெற்ற இடங்கள், பெற்ற வாக்குகள் அவற்றின் சதவிகிதம் ஆகியவை இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல்களின் அனுபவங்களையும் படிப்பினைகளையும் விளக்கும் இந்த நூல் தமிழ் மக்களின் வரவேற்பைப் பெறும் என நம்புகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*'மூத்த அரசியல் தலைவர் திரு. இரா. செழியன் அவர்கள் இந்நூலுக்கு சிறப்பான அணிந்துரையை வழங்கியுள்ளார். இந்நூலின் தனிச் சிறப்புகளையும் பத்திரிகைத் துறையில் நூலாசிரியரின் நீண்டகால அனுபவங்களையும் இதில் விளக்கியுள்ளார். இந்நூலை படிக்க இந்த அணிந்துரை தூண்டுகோலாக அமையும் என்பதில் ஐயமில்லை. திரு. செழியன் அவர்களுக்கு எங்களது உளமார்ந்த நன்றி.*

*இந்நூலை வெளியிடும் வாய்ப்பை எங்களுக்கு அளித்த திரு. தி. சிகாமணி அவர்களுக்கும் எங்களது நன்றி உரித்தாகுக.*

**பதிப்பகத்தார்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணிந்துரை

**இரா.செழியன்**

**மூத்த அரசியல் தலைவர்**

நண்பர் தி.சிகாமணி பத்திரிகைப் பணியில் தேர்ச்சி பெற்றவர். செய்திகளைச் சேகரித்துத் தருவதோடு மட்டுமல்லாமல் சேகரித்த செய்திகளை ஒழுங்குபடுத்தி சிந்தனை மூலம் ஆய்வு நடத்தி காலக்கண்ணோட்டத்தில் அரசியல் வழிமுறைகள் எவ்வாறு செல்கின்றன என்பதை ஆராய்ந்து அடிப்படையான கருத்துகளை தெரிவித்து வந்தவர். அந்த வகையில் 1952 தொடங்கி கடந்த அரை நூற்றாண்டு காலமாக இந்திய அரசியல் பின்னணியில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கட்சி அரசியல் மாறுபாடுகளை ஆழ்ந்த ஆய்வு மூலம் அவர் கணித்திருக்கிறார்.

இந்தியாவிலும் உலக வரலாற்றிலும் ஆட்சிமுறை பலவாறு மாறியிருக்கின்றன. மன்னராட்சி முறையில் பரம்பரை வழியாக நாட்டுத் தலைவர் அதிகாரம் பெற்றார். படை பலத்தையும் எதேச்சதிகார முறையையும் கையாண்டவர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்தார்கள். இவற்றிற்கு பதிலாக மக்களாட்சியில் மக்களால் மக்களுக்காக மக்களே ஆளும் முறை வந்தது. சிறிய அளவில், ஒரு பஞ்சாயத்து அல்லது நகர எல்லைக்குள் இருந்த நிர்வாகத்தை மக்களே நேரடியாகப் பங்குகொண்டு நடத்திவிடலாம். ஆனால் லட்சம் அல்லது கோடிக் கணக்கில் மக்களைக் கொண்ட ஒரு நாட்டில் மக்கள் நேரடியாக ஆட்சிப் பொறுப்பை நடத்த முடியாது. எனவே மக்கள் தங்கள் நலன்களைப் பாதுகாக்க பிரதிநிதிகளை அனுப்பினார்கள். பிரதிநிதிகளில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றவர் ஆட்சித் தலைவர் ஆகின்ற முறை வந்தது. அதையடுத்து தேர்தல் முறைகளை ஒட்டி கட்சி அரசியலும் வந்தது.

www.tamilarangam.net

அரசியலில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகும்போது ஒத்த கருத்துகளை உடையவர்கள், ஒன்றுபட்டு கட்சியை உருவாக்கினார்கள். கொள்கை அடிப்படையில் அல்லது பிரச்சினை அடிப்படையில் கட்சிமுறை வளர்ந்தது. கொண்ட கொள்கைகளை நிறைவேற்ற ஆட்சியில் அமர்ந்தால்தான் முடியுமென்பதால் ஆட்சியில் அமர கட்சிகள் போட்டியிட்டன. ஆனால் நாளடைவில் கொள்கைகளை நிறைவேற்றும் நோக்கம் போய், ஆட்சிகள் அமைந்தால் கிடைக்கக்கூடிய அதிகாரம், செல்வாக்கு, வசதிகள் ஆகியவை கட்சி செல்லும் வழியில் மாறுபாடுகளை உண்டாக்கின. கொள்கை அரசியல் என்பதிலிருந்து கட்சிமுறை அகன்று தேர்தல் அரசியலுக்கு வந்துள்ளது.

இந்தியாவிலும் சரி, உலகநாடுகளிலும் சரி கொள்கைவழி நின்ற அரசியல் கட்சிகளின் வரலாறுகளை ஆராய்வதும் அவர்கள் மேற்கொண்ட மாறுபாடுகளைத் தெரிந்துகொள்வதும் எளிதான காரியம். ஆனால் தேர்தலுக்காக கட்சிகள் அல்லது கட்சித் தலைவர்கள் எடுக்கிற முடிவுகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் அதற்கு முன்பு கையாண்ட வழிமுறைகளிலிருந்து மாறுபட்டது மட்டுமல்ல நேரடியாக முரண்பட்டவையாகவும் மாறிவிட்டன. எனவே கொள்கை முறையில் கட்சிகளின் வரலாற்றை ஆராய்வதை விட தேர்தல் அரசியலில் கட்சிகள் ஏற்படுத்திக்கொண்ட மாறுபாடுகளை ஆராய சிகாமணி எடுத்துக்கொண்ட முயற்சி ஓர் அடிப்படையான முயற்சியாகும். வெறும் அரசியலை மட்டுமல்ல, வெறுமையான அரசியலை ஆராய்ந்து பார்க்கிற கட்டாயமும் ஏற்பட்டுள்ளது.

இந்த நூலில் எடுத்துக்கொண்ட கணிப்பில் மூன்று அடிப்படைப் பிரிவுகள் இருக்கின்றன. தமிழக அரசியலில் எழுந்த கட்சிகளின் தேர்தல் அரசியல்; இதற்கு மேலாக அகில இந்திய அளவில் ஏற்பட்ட தேர்தல் அரசியலின் விளைவுகளால் தமிழக அரசியலில் ஏற்பட்ட பாதிப்புகள்; மூன்றாவதாக கட்சிகளுக்குள் ஏற்பட்ட சிக்கல்கள்; கட்சித் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்கள்; இவற்றால், ஒரே கொள்கை வழி நின்றவர்கள் - அதே கொள்கையில் தொடர்ந்து நிற்பதாகக் கூறிக்கொள்பவர்கள் பல்வேறு கட்சிகளை உருவாக்கி தேர்தல் அரசியலில் ஒரு நிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளனர்.

www.tamilarangam.net

துணைக்கண்ட அளவில் இருக்கிற இந்தியாவில் பொதுவான அரசியல் கட்சிகள் சிதறுண்டு போனபின் மாநிலத்திற்கு மாநிலம் நிலைமைகள் மாறுபட்டுக் காணப்படுகின்றன. அந்த வகையில் ஒரு ஒருமித்த மாறுபாடு மாநிலங்களைப் பாதிக்கவில்லை. பல்வேறு திசைகளிலிருந்து விதவிதமான மாறுதல்கள் இந்தியாவையும் இந்தியக் கூட்டாட்சியில் உள்ள மாநிலங்களையும் மேலும் மாநிலங்களுக்குள் உள்ள தனிப்பட்ட பகுதிகளையும் வெகுவாகப் பாதித்திருக்கிறது.

ஆக, இந்திய அரசியல் பின்னணியில் தமிழக அரசில் ஏற்பட்ட தேர்தல் வழி மாறுபாடுகளைக் கணிப்பது மிகவும் கடினமான ஒரு பணி. அந்தவகையில் தேர்தல் அரசியல் தொடங்கி தேர்தல் சீர்திருத்தம் வரை 18 தலைப்புகளின் கீழ் மிக நுணுக்கமான வகையில் சிறப்பாக ஆய்வு நடைபெற்றிருக்கிறது. கடந்த அரைநூற்றாண்டு தேர்தல் முடிவுகளை எடுத்துக்காட்டும் அட்டவணைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

கட்சி சாராத ஒருவர், பாரபட்சமில்லாமல் பல்லாண்டு காலம் கட்சிகளின் போக்குகளை அறிந்த ஒருவர், எழுதிய இந்த நூலில் பல்வேறு அரசியல் தலைவர்கள் தந்த கருத்துகள் ஆங்காங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்த நூலில் உள்ள ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஒரு தனிப்பட்ட நூலை எழுதக்கூடிய அளவிற்குச் செய்திகளும் கருத்துகளும் இருக்கின்றன. அவற்றைச் சுருக்கமான அளவில் வழிமுறைப் படுத்தி நூலாசிரியர் தந்துள்ளது அரசியலில் ஈடுபாடுள்ளவர்கள் அல்லது கட்சி அரசியலில் சேர்பவர்கள் கற்க வேண்டிய ஆரம்பப் பாடமாகும். புதியதொரு கண்ணோட்டத்தில் இந்த அடிப்படை நூல் வந்துள்ளது. இதை ஒரு தொடக்கமாக வைத்து இன்னும் விரிவான வகையில் மற்றும் பலர் ஆய்வு நடத்தினால் நலம் பயப்பதாக இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# முன்னுரை

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் மக்கள் தீர்ப்பை வெளிப்படுத்தும் தேர்தல்கள் பற்றிய பதிவுகள் தமிழில் குறிப்பிடத்தக்க அளவு இல்லை. கடந்தகாலத் தேர்தல் அரசியலைத் தமிழக மக்களுக்குத் தெரிவிக்கும் முயற்சியாக 'தினமணி கதிர்' இதழில் நான் எழுதிய 'கொடிகள்... கோஷங்கள்...' தொடருக்கு வாசகர்கள் அளித்த ஆதரவே இந்நூல் உருவாகக் காரணம்.

தேர்தலுக்குத் தேர்தல் அணி தாவும் கட்சிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இத்தகைய சூழலில் தேர்தல் நேரங்களில் தலைவர்கள் என்னென்ன பேசினார்கள், எத்தகைய தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டார்கள், பிரசாரமுறை எப்படி அமைந்தது என்பதை வெளிப்படுத்தும் வகையில் நூலின் முதல் பகுதி அமைந்துள்ளது.

மக்களின் ஞாபக மறதியே பல அரசியல்வாதிகளின் மூலதனமாக உள்ளது; பதவியைப் பிடிக்கக் கொள்கையற்ற கூட்டணிகள் உருவாக்கப்படுகின்றன; கட்சிகளின் கூட்டணி சமரசங்கள், சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

சமீப காலமாக தேர்தல் அரசியலுக்கு சாதி, மதம் பயன்படுத்தப்படும் போக்கு அதிகரித்துள்ளது. தமிழகத்திலும் இதன் வெளிப்பாடு வலிமை பெற்று வருவதை நூலின் இரண்டாம் பகுதி விவரிக்கிறது. இதன் அடிப்படையில், அரசியலில் பல்வேறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திசைவழிப் போக்குகளை ஆராய்வதின் மூலம் மாற்று அரசியல் பாதை ஒன்றை வகுக்க இயலும். அது குறித்த விவாதங்களுக்கு இந்நூல் தூண்டுகோலாக இருக்கும்.

மூத்த அரசியல் தலைவரும் சிறந்த நாடாளுமன்ற ஜனநாயகவாதி என்று பெயர் பெற்றவருமான இரா.செழியன் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி பெருமை சேர்த்துள்ளார். நாட்டில் நெருக்கடி நிலையை எதிர்த்துப் போராடிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான இரா. செழியன் ஆரோக்கியமான அரசியலின் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறார். ஆளுநர் பதவி போன்ற பதவிகள் தேடி வந்த போதிலும் அதை ஒதுக்கித் தள்ளியவர் அவர். கட்சி அரசியலில் இருந்து விலகி விட்ட அவர் நாட்டு நலன், மக்கள் முன்னேற்றம் ஆகியவற்றில் அக்கறை கொண்டு கடமையாற்றி வருகிறார். இந்நூலுக்காக தனது நேரத்தை ஒதுக்கி அணிந்துரை வழங்கியதற்காக நெஞ்சார்ந்த நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் எனது நண்பரும் சிறந்த ஓவியருமான வீர. சந்தானம் அவர்கள் முகப்பு ஓவியத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளார். நூலைப் பதிப்பித்த பாவை பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்கும் பதிப்புரை வழங்கிய மதிப்பிற்குரிய ஏ.எஸ். மணி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

தினமணிகதிரில் வெளியிட வாய்ப்பளித்த தினமணி ஆசிரியர் இராம. திரு. சம்பந்தம், தினமணிகதிர் இதழாசிரியர் ப.இளையபெருமாள் மற்றும் தினமணி கதிர் நண்பர்கள் ஆகியோருக்கும் இரண்டாம் பகுதியில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளை வெளியிட்ட ஆறாம்திணை ஆசிரியர் அப்பணசாமிக்கும் நன்றிகள்.

இந்நூல் வெளிவர உறுதுணை புரிந்த நண்பர்கள் எஸ்.விஸ்வநாதன், ஏ.ராயப்பா, பொன்.தனசேகரன், மே.து. ராசுகுமார், ராஜய்யா மற்றும் உதவிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

சென்னை
6.3.2001

**தி.சிகாமணி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளடக்கம்

## பகுதி-1


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | கட்சித் தாவலுக்கு அடிக்கல் நாட்டிய கட்சி | 1 |
| 2. | தி.மு.க.வின் முதல் வெற்றி | 10 |
| 3. | கூட்டணி அரசியலுக்கு அச்சாரம் | 21 |
| 4. | ஆளப் பிறந்தவர்களுக்கு பலத்த அடி | 30 |
| 5. | கங்கையுடன் காவிரி அமைத்த கூட்டணி | 41 |
| 6. | சர்வாதிகாரத்திற்கு படுதோல்வி | 49 |
| 7. | ஜனதா மாற்று சக்தியின் அற்பாயுள் | 55 |
| 8. | சாவுக்கும் நோவுக்கும் வாக்கு | 61 |
| 9. | போஃபர்ஸ் கிளப்பிய புயல் | 68 |
| 10. | மண்டலும் கமண்டலமும் | 75 |
| 11. | ஊழல் எதிர்ப்பு அலை | 82 |
| 12. | பா.ஜ.க.வின் புதிய வியூகம் | 89 |
| 13. | கார்கில் போர் தந்த வெற்றி | 96 |


## பகுதி–2


| | | |
|---|---|---|
| 1. | தலித் அரசியலும் சாதி அரசியலும் | 105 |
| 2. | தமிழகத்தில் மதவெறியின் வேர்கள் | 114 |
| 3. | கூட்டணி ஆட்சி சகாப்தத்தில் சிக்கல்கள் | 123 |
| 4. | சீர்திருத்தம் வேண்டி நிற்கும் தேர்தல் முறை | 132 |
| 5. | ஊகமா? உண்மையா? | 139 |
| | பின்னிணைப்பு | 147 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கட்சித் தாவலுக்கு அடிக்கல் நாட்டிய கட்சி

உலகிற்கு ஒரு புதுமையாய் இந்தியாவில் நாடாளுமன்ற ஜனநாயகம் உதித்த நேரத்தில் அது பல சோதனைகளைச் சந்திக்கவும் தயாராக இருந்தது. ஏறக்குறைய 80 சதவீத மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாய் இருந்த நிலையில் 21வயதான ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை என்று இந்திய அரசமைப்புச் சட்டம் அறிவித்தபோது உலகமே நம் நாட்டை வியந்து நோக்கியது.

ஏற்கனவே பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் 1909-ம் ஆண்டு சட்டத்தின்படி 1910-ம் ஆண்டில் முதல் தேர்தல் இந்தியாவில் நடைபெற்றது. அதன்பின் 1919-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மற்றொரு சட்டத்தின் கீழ் இந்தியாவில் சில பிரிவினருக்கு வாக்குரிமை கிடைத்தது. ஏதாவது ஒரு சொத்து மீதான வரியை அரசாங்கத்திற்கு அளிப்பவர்கள் மட்டுமே வாக்குரிமை பெற்றிருந்தனர்.

சுதந்திர இந்தியாவில் அனைவருக்கும் வாக்குரிமை என்ற சம வாய்ப்பு உருவானபோது அதைப் பலர் விமர்சித்தனர். எடுத்துக்காட்டாக, ''நம்மால் மெல்ல முடிந்ததைவிட அதிக அளவில் வாயில் போட்டுவிட்டோம்'' என்று ஹிந்து பத்திரிகை வர்ணித்தது.

www.tamilarangam.net



'' முதல் பொதுத் தேர்தல் நடந்து முடிந்த பின்னர்கூட அப்பத்திரிகை எழுப்பிய அவநம்பிக்கையோ அச்ச உணர்வோ மங்கவில்லை. இந்திய மக்கள் இன்றுள்ள நிலையில் அவர்களைச் சாதி, மதத் தலைவர்கள் தவறான வழிக்கு அழைத்துச் செல்ல முடியும். அத்தலைவர்களுக்கு லஞ்சம் கொடுத்து தீவிரவாதம் வென்றுவிடக் கூடும் என்ற அச்சம் உள்ளது'' -(ஹண்ட்ரட் இயர்ஸ் ஆப்தி ஹிண்டு: பக்.692, 693) என அப்பத்திரிகை தெரிவித்தது.

விடுதலைக்கு முன்பு 1946-ம் ஆண்டுத் தேர்தலின்போது உருவான மத்திய மாநில ஆட்சிகளே 1952-ம் ஆண்டுவரை நாட்டு நிர்வாகத்தை நடத்தி வந்தன. சென்னை மாகாணம் உள்பட நாடு முழுவதும் ஆட்சி செய்த காங்கிரசார் அதிகாரத்தின் ருசி என்ன என்பதை அறிந்து வைத்திருந்தனர்.

வீர சுதந்திரத்திற்கு முழு உரிமை கொண்டாடிய காங்கிரஸ் கட்சியினர் தாங்கள்தான் தொடர்ந்து நாட்டை ஆளவேண்டும் என்று விரும்பினர். குறித்த காலத்தில் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்பதில் பிரதமர் ஜவஹர்லால் நேரு மிகுந்த அக்கறை காட்டினார். ஆனால் காங்கிரஸ் கட்சியினரோ, 'தேர்தலைத் தள்ளிப் போடவேண்டும்; மேலும் அவகாசம் வேண்டும்' என்ற கோரிக்கையை அவரிடம் முன்வைத்துக் கொண்டிருந்தனர்.

இருந்தும், முதல் பொதுத் தேர்தல் 1951 அக்டோபர் தொடங்கி 1952 ஏப்ரல் வரை நடைபெறும் என்ற அறிவிப்பு வெளியானது. தமிழகத்தில் ஜனவரி 2, 5, 8, 9, 11, 12, 16, 21, 25 ஆகிய ஒன்பது நாள்கள் வாக்குப் பதிவு நடைபெறும் என முடிவு செய்யப்பட்டது.

நாட்டின் தனிப்பெரும் கட்சியாக காங்கிரசே விளங்கியது. கட்சியில் வசதி படைத்தவர்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. காங்கிரஸ் கட்சியில் தூய்மையை விரும்பிய ஆசார்ய கிருபளானி அக்கட்சியிலிருந்து விலகி கிசான் மஸ்தூர் பிரஜா கட்சியை (கேஎம்பிபி) உருவாக்கியிருந்தார்.

அதேபோல் காங்கிரசிலிருந்து வெளியேறி தனியாக சோசலிஸ்டுக் கட்சி இயங்க வேண்டும் என்று 1948-ல் நடந்த நாசிக் மாநாட்டிலேயே முடிவு செய்யப்பட்டிருந்தது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் சோசலிஸ்ட் கட்சியை நடத்தி வந்தார். தேர்தலுக்குப்பின் இந்த இரு கட்சிகளும் இணைந்து பிரஜா

www.tamilarangam.net



சோசலிஸ்ட் கட்சியாக மாறிவிட்டது. 1952 செப்டம்பரில் இக்கட்சியைக் கலைத்து விட்டனர்.

அஜாய் கோஷ் தலைமையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செயல்பட்டு வந்தது. ஷெட்யூல்டு பழங்குடியினர் சம்மேளனத்தின் தலைவராக டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் இருந்தார். டாக்டர் ஷியாம பிரசாத் முகர்ஜி தலைமையில் இருந்த ஜனசங்கம் தெற்கில் பிரபலமடையவில்லை. சென்னை மாகாணமாக இருந்தபோதிலும் ஒவ்வொரு பகுதிக்கும் காங்கிரஸ் சார்பில் ஒருவர் தலைவராக இருந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக காமராஜர் இருந்தார். சத்திய மூர்த்தியின் சீடர் என்பதால் காமராஜருக்கு எதிராக ராஜாஜி ஆதரவு கோஷ்டி காங்கிரசில் செயல்பட்டு வந்தது. ''காங்கிரசைத் தேர்ந்தெடுக்காவிட்டால் நாடு சிதறுண்டு போகும். காங்கிரசால்தான் சுபிட்சத்தையும் நிலையான ஆட்சியையும் தரமுடியும். மக்களின் அவலங்களைத் தீர்க்கமுடியும்'' என்று கூறி தேர்தலைச் சந்தித்தது அக்கட்சி. ஆந்திரம் மற்றும் கர்நாடகத்தில் சில பகுதிகளையும் மலபார் பகுதியையும் உள்ளடக்கியதாக சென்னை மாகாணம் இருந்தது.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் நுகத்தடி பூட்டிய இரட்டை காளைச் சின்னத்தில் போட்டியிட்டால் வெற்றி நிச்சயம் என்ற எதிர்பார்ப்பில் சீட்டுக்காகப் பெரும் போட்டி நிலவியது. வசதி படைத்தவர்கள் எளிதில் 'சீட்' பெற்றனர். ஊழல் புகார்களுக்கு ஆளானவர்களுக்குக் கூட 'சீட்' கிடைத்தது. அதுபற்றி நேருவிடம் கேட்டபோது ''நான் தவறே செய்ய முடியாதவன் அல்ல. வேட்பாளர் தேர்வில் தவறு செய்திருக்கலாம்; தவறானவருக்கும் நேர்மையற்றவருக்கும் 'சீட்' அளித்திருந்தால் அவர்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டாம்'' என்று துணிச்சலாகக் கூறினார்.

''சுதந்திர மாளிகையை நிர்மாணிக்கும் சரித்திரப் பணியை காங்கிரஸ் இன்னும் செய்து முடிக்கவில்லை. அப்பணியை நிறைவேற்ற காங்கிரசுக்கு உதவ வேண்டும்'' (தினமணி 4-12-1951) என்று நேரு பிரசாரம் செய்தார்.

விடுதலை அடைந்த பின்னரும் நாட்டில் உணவுப் பஞ்சம் நீடித்தது. பல இடங்களில் கஞ்சித்தொட்டிகள் திறக்கப்பட்டிருந்தன. ரேஷனில் அவுன்ஸ் கணக்கில் அரிசி விநியோகம் நடந்தது. இந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலைமை காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் சவாலாக அமைந்தது. 'ஆறு அவுன்ஸ் ஆட்சி ஒழிக' என்று கம்யூனிஸ்டுகள் முழக்கமிட்டனர்.

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்தவர்கள் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை (17.9.1949) தொடங்கியிருந்தனர். ஆனால் பொதுத் தேர்தலில் பங்கேற்கப் போவதில்லை என்று முடிவெடுத்திருந்தனர்.

''திராவிடர்களின் கருத்தை அறியாமலும், திராவிடர்களின் ஜீவாதார உரிமைக்கு ஊறு செய்யும் வகையிலும் ஒரே கட்சியினரின் எதேச்சாதிகார முறைப்படியும்'' தயாரிக்கப்பட்டதாகக் கூறி இந்திய அரசியல் சட்டத்தைக் கண்டித்து வந்த தி.மு.கழகம் தன் எதிர்ப்பின் அறிகுறியாகத் தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்தது.'' (-டி.எம். பார்த்தசாரதி, தி.மு.க. வரலாறு : பக்.186)

எனினும் இத்தேர்தலில் கம்யூனிஸ்டுகளையும் காங்கிரஸ் அல்லாத நாணயமுள்ள திறமைசாலிகளான முற்போக்குக் கருத்தினரையும் ஆதரிப்பது என்று தி.மு.க. முடிவு செய்தது. ஆதரவு கோரி தலைமை நிலையத்திற்கு மனுக்களை அனுப்பி தலைமை நிலையம் குறிப்பிடும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்பது நிபந்தனை. சட்டசபையிலும் மக்களவையிலும் திராவிடத் தனியரசுக் கோரிக்கையை ஆதரிப்போம் என்ற வாக்குறுதியைக் கோரும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட கம்யூனிஸ்டுகள் மறுத்துவிட்டனர்.

காங்கிரஸ் - கம்யூனிஸ்டு நேரடிப் போட்டி நிலவிய இடங்களில் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நிலையிலும் கம்யூனிஸ்டுகளை தி.மு.கழகம் ஆதரித்தது.

கம்யூனிஸ்டுகள் மற்றும் முற்போக்கு சுயேச்சைகளுக்கு திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ.ராமசாமி ஆதரவளித்தார். அதே சமயத்தில் சேத்தூர் ஜமீன் உள்ளிட்ட பல வசதி படைத்தவர்களையும் அவர் ஆதரித்தது விமர்சனத்திற்கு உள்ளாயிற்று.

'' நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தந்தோம்; சமஸ்தான அதிபதிகளின் எதேச்சாதிகாரத்திற்கு முடிவு கட்டினோம்; ஜமீன்தாரி முறையை ஒழித்தோம்; உணவு உற்பத்தியைப் பெருக்கினோம்;

www.tamilarangam.net



தீண்டாமை சாபக்கேட்டை, மது அரக்கனை விரட்டினோம்'' என்றெல்லாம் கூறி காங்கிரசார் வாக்கு கேட்டனர்.

தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தை அடுத்து கம்யூனிஸ்டுகள் மீது தடை விதிக்கப்பட்டிருந்தது. பலர் மீது சதி வழக்குகள் போடப்பட்டிருந்தன. இதனால் கம்யூனிஸ்டு பிரமுகர்கள் சிறையிலிருந்து கொண்டே தேர்தலைச் சந்திக்க நேரிட்டது.

தொழிலாளர் வேலை இழப்பு, உப்புக்கும் புளிக்கும்வரி, பஞ்சம், விலைவாசியேற்றம், கம்யூனிஸ்டுகள் மற்றும் தொழிற்சங்கங்கள் மீது அடக்குமுறை, பிரிட்டிஷ் மூலதன வரவேற்பு, பிரிட்டிஷ் அதிகாரிகள் தொடர்ந்து இந்திய ராணுவத்தில் பணியாற்றியது போன்ற பிரச்சினைகளை முன் வைத்து கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்தனர்.

புதுவை, காரைக்காலில் பிரெஞ்ச் நாட்டு ஆட்சி நீடித்தது. இதை எதிர்த்துத் தமிழர்கள் போராடிக் கொண்டிருந்தனர். திருவாங்கூர் சமஸ்தானம் உள்பட தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களைத் தமிழ் மாகாணத்தில் சேர்க்க வேண்டும். மொழிவாரி மாகாணம் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையும் தேர்தலின்போது வலியுறுத்தப்பட்டது. குறுநில மன்னர்களுக்கு காங்கிரஸ் ஆட்சி ரூ.12 கோடிக்கும் மேல் நஷ்டஈடு தந்திருப்பதற்கு எதிரான பிரசாரமும் நடந்தது.

பெரிய தலைவர்கள் பேசும் பொதுக்கூட்டங்களில்தான் 'மைக்' பயன்படுத்தப்பட்டது. ஸ்டூலில் ஏறி நின்றுகொண்டு 'மெகா போன்' மூலமும் வாய் மொழியாகவும் உரத்த குரலில் பிரசாரத்தை வேட்பாளர்கள் செய்தனர். சுவரொட்டிகள் பிரபலமடையவில்லை.

பிரசார முறைபற்றி கோவை சட்டப்பேரவைத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட சி.சுப்பிரமணியம் குறிப்பிடுவதாவது:

''கம்யூனிஸ்டுகளுக்கு இந்திய மண்ணில் வேர்கள் இல்லை என்பதையே எனது உரைகளில் முக்கியமாக வலியுறுத்தினேன். பொதுக்கூட்டங்கள், வீடுவீடாகப் பிரசாரம் ஆகியவற்றுடன் சில பெரிய ஊர்வலங்களையும் நடத்தினோம். நுகத்தடி பூட்டிய இரட்டைக் காளைகள் காங்கிரசின் அப்போதைய தேர்தல் சின்னம்.

www.tamilarangam.net



எனவே நுகத்தடி பூட்டிய இரட்டைக் காளைகள் எங்கள் ஊர்வலத்துக்கு முன்னணியாகத் திகழ்ந்தன.''(என் வாழ்க்கை நினைவுகள்: திருப்புமுனை : பக்.174)

தாழ்த்தப்பட்டோர் அதிகம் உள்ள இடங்களில் அவர்களின் பிரதிநிதி ஒருவரும் பொதுப்பிரதிநிதி ஒருவரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இரட்டை உறுப்பினர் தொகுதி என்று இது அழைக்கப் பட்டது. (இம்முறை முதல் இரண்டு தேர்தல்களில் மட்டும் கடைப்பிடிக்கப்பட்டது.)

தேர்தல் நடந்து கொண்டிருந்தபோதே தேர்தல் நடந்து முடிந்த இடங்களுக்கான முடிவுகளும் வெளியாகிக் கொண்டிருந்தன. அகில இந்திய அளவில் காங்கிரஸ் பெரும் வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருந்தது. ஆனால் சென்னை மாகாணத்தின் தொடக்க கட்டத் தேர்தல் முடிவுகளே காங்கிரசுக்குப் பெரும்பான்மை கிடைக்காது என்பதைக் கட்டியம் கூறின.

எஞ்சியுள்ள வாக்காளர்கள் காங்கிரசுக்கு வாக்களித்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் உருக்கமாக வேண்டிக் கொண்டனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மக்களவைத் தொகுதியிலிருந்து, காமராஜர் தெர்ந்தெடுக்கப்பட்டார். இத்தொகுதியில் விஞ்ஞானி ஜி.டி.நாயுடு காமராஜரிடம் தோற்றார். திண்டிவனம் மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனர் ராம்நாத் கோயங்காவை திருக்குறள் முனுசாமி தோற்கடித்தார். முதல்வராக இருந்த குமாரசாமி ராஜா மற்றும் பல மந்திரிகள் தோல்வியைச் சந்தித்தனர். ஆந்திரத்தில் சஞ்சீவ ரெட்டி தோல்வியைத் தழுவினார்.

வண்ணாரப்பேட்டைசட்டசபைத் தொகுதியிலிருந்து ப.ஜீவானந்தமும், மதுரை வடக்கு சட்டபேரவைத் தொகுதி யிலிருந்து பி.ராமமூர்த்தியும் வெற்றி பெற்றனர். அருப்புக் கோட்டை மக்களவை மற்றும் பேரவைத் தொகுதிகளிலிருந்து முத்துராமலிங்கத் தேவர் தேர்வு பெற்றார். மக்களவை உறுப்பினர் பதவியை அவர் ராஜினாமா செய்தார். காங்கிரஸ் ஆதரவாளராக இருந்த ராஜா சர் முத்தையா செட்டியார் திருப்பத்தூரில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வென்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னாள் முதல்வரும் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி வந்தவருமான பிரஜா கட்சித் தலைவர் ஆந்திர கேசரி டி.பிரகாசம் சென்னை துறைமுகத்தில் தோல்வியைச் சந்தித்தார்.

சென்னை மாகாணத்தில் இருந்த 375 பேரவைத் தொகுதிகளில் தமிழ்நாட்டுப் பகுதியில் மட்டும் 190 தொகுதிகள் இருந்தன. இதில் 96 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. ஆனால் ஆந்திரம், மலபார் பகுதிகளில் கம்யூனிஸ்டுகள் பெரும் வெற்றி பெற்றனர். ஏ.கே. கோபாலன் மலபாரிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாகாண அளவில் காங்கிரசுக்கு 152 இடங்களே கிடைத்ததால் உடனடியாக ஆட்சியமைக்க முடியவில்லை. பிப்ரவரி தொடக்கத்தில் தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில் இரண்டு மாதங்கள் பெரும் 'சஸ்பென்ஸ்' நிலவியது. மற்ற மாநிலங்களில் ஆட்சி அமைக்கும் பணி முடிவடைந்துவிட்டது. சென்னை மட்டும் காத்திருந்தது. எதிர்க்கட்சியே ஆட்சி அமைக்கட்டும் என்ற காமராஜரின் கருத்தை காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் ஆதரிக்கவில்லை.

தில்லிக்குச் சென்று என்ன செய்வதென்று காங்கிரஸ் பிரமுகர்கள் நேருவிடம் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தனர். இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரல் போன்ற பெரிய பதவியை வகித்த பின்னர் அரசியல், நிர்வாக நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கி, குற்றாலத்தில் ஒய்வு எடுத்துக்கொண்டிருந்த ராஜாஜியை முதல்வராக்க வேண்டும் என்ற யோசனையைக் காங்கிரசின் முக்கியப் பிரமுகர்கள் தெரிவித்தனர்.

''இப்போதைய நெருக்கடியான நிலைமையை முன்னிட்டு சென்னை ராஜ்ய சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்குமாறு ராஜாஜியை வேண்டிக் கொள்ளும் தீர்மானத்தைக் காங்கிரஸ் கட்சி ஏகமனதாக நிறைவேற்றியது.''(-தினமணி 30.3.1952)

தேர்தலில் போட்டியிட ராஜாஜி விரும்பவில்லை. இதனால் ராஜாஜி முதல்வராவதில் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதை அறிந்த நேரு தயக்கத்துடன் தமிழகத் தலைமை கூறியதை ஏற்றுக்கொண்டார்.

www.tamilarangam.net



சட்டசபை கூடும் முன்பே ராஜாஜி, ஓ.பி.ராமசாமி ரெட்டியார் போன்றோரை ஆளுநர் ஸ்ரீ பிரகாசா மேலவைக்கு நியமித்தார். இவ்வாறு கொல்லைப்புற வழியில்! நியமிக்க ஆளுநருக்கு அதிகாரமில்லை என்று தெரிவித்து, கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பி.ராமமூர்த்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்தார். அவரது மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட கம்யூனிஸ்டுகள், பிரஜா கட்சி போன்றவை இணைந்து ஐக்கிய ஜனநாயக முன்னணியை அமைத்தார்கள். அதன் தலைவர் ஆந்திர கேசரி டி.பிரகாசம் தங்கள் அணிக்கு 166 உறுப்பினர்கள் ஆதரவு இருப்பதாகத் தெரிவித்து ஆளுநர் ஸ்ரீ பிரகாசாவிடம் பட்டியலைக் கொடுத்தார். தனிப்பெரும் கட்சியாக இருந்த காங்கிரசை ஆட்சி அமைக்க ஆளுநர் ஸ்ரீ பிரகாசா அழைத்தார். காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்கும் வாய்ப்பு உருவான நிலையில் ஐக்கிய முன்னணியில் இருந்த கட்சிகள் மற்றும் உறுப்பினர்களுக்குப் பதவி ஆசை காட்டி அவர்களை காங்கிரசுக்கு இழுத்தனர். மொத்தம் 190 எம்.எல்.ஏக்கள் காங்கிரசை ஆதரிப்பதாக இறுதியில் தெரிவிக்கப்பட்டது.

ஏப்ரல் 10-ம் தேதி ராஜாஜி தலைமையில் 15 பேர் கொண்ட மந்திரிசபை பதவியேற்றபோது காமன்வீல் கட்சியின் மாணிக்கவேல் நாயக்கர் அதில் இடம்பெற்றார். சில தினங்களில் ராமசாமி படையாச்சியின் உழைப்பாளர் கட்சியும் மந்திரிசபைக்கு ஆதரவை நல்கியது. (இவ்விரு கட்சிகளும் வன்னியர் சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய கட்சிகள்.)

சென்னை மாகாணத்தில் 34 சதவீத வாக்குகள் மட்டும் பெற்ற காங்கிரஸ் கட்சி, அன்றே 'ஆயாராம் கயாராம்' என்ற அணிதாவும் அரசியல் வழிமுறைக்கு வித்திட்டு விட்டது. ''அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தியும் கட்சிமாறலை ஊக்குவிக்கும் முயற்சிகள் மூலமும் காங்கிரஸ் அதிகாரத்திற்கு வந்தது. இந்தியாவில் கட்சி விட்டுக் கட்சி தாவும் சந்தர்ப்பவாத அரசியலை முதலில் தொடங்கிவைத்து ஊக்குவித்தது காங்கிரஸ் தலைமைதான் ''என்கிறார் பா. மாணிக்கம். (- தேர்ந்தெடுத்த வழி : பக்.82) காங்கிரஸ்காரராக இருந்த ஸ்ரீ பிரகாசா ஆளுநராக நியமிக்கப்பட்டது குறித்த விமர்சனமும் எழுந்தது.

அகில இந்திய அளவில் கூட காங்கிரஸ் கட்சி 45 சதவீத வாக்குகளைத்தான் பெற்றது. ஆனால் 364 மக்களவை இடங்களைப்

www.tamilarangam.net



பெற்றது. அத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 16 பேர் மக்களவையில் இடம் பெற்றனர். இதில் சென்னை மாகாணம் சார்பில் தேர்வு பெற்றவர்கள் 8 பேர்.

மக்கள் ஜனநாயக முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் மற்றும் இடதுசாரி ஆதரவு 8 உறுப்பினர்கள் சேர்ந்து மக்களவையில் ஏ.கே.கோபாலன் தலைமையில் இணைந்து செயலாற்றினார்கள். இந்த அணியின் எண்ணிக்கை 35ஐ எட்டியது.

இதேபோல் தேசிய ஜனநாயகக் கட்சி என்ற குழுவை ஷியாம பிரசாத் முகர்ஜி மக்களவையில் உருவாக்கினார். ஜனசங்கம் மட்டுமின்றி ஹிந்து மகாசபை, அகாலிதளம், கணதந்திர பரிஷத் ஆகிய கட்சிகள் அந்த அணியில் இருந்தன. திடீரென்று எஸ்.பி.முகர்ஜி காலமானதை அடுத்து வலதுசாரிகள் என்றழைக்கப்படும் இக்குழுவின் அமைப்பு இல்லாமல் போனது.

இந்தியா விவசாய நாடு என்ற போதிலும் வெளிநாடு சென்று மெத்தப்படித்தவர்கள், உள்நாட்டு அறிவுஜீவிகள், நகர்ப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள்தான் முதல் மக்களவையில் இடம் பெற்றிருந்தனர். மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் வக்கீல்களாக இருந்தனர். சென்னை மாகாண முதல் சட்டப்பேரவையிலும் அறிவுஜீவிகள் பலர் இடம் பெற்றிருந்தனர். ❑

www.tamilarangam.net

# தி.மு.க.வின் முதல் வெற்றி

**த**மிழகத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த விதத்தில் கோளாறுகள் இருந்தாலும் முதல்வர் ராஜாஜி நேர்மையான ஆட்சியைத் தரமுயன்றார். தலைமைச் செயலக வராந்தாக்களில் சிபாரிசுகளுக்காக காங்கிரஸ்காரர்கள் அலைவதைப் பார்த்து அதைத் தடுக்க உத்தரவிட்டார்.

சர்ச்சைக்குரிய கல்வித்திட்டத்தை ராஜாஜி 1953-ம் ஆண்டு மார்ச்சில் கொண்டுவந்தார். இக்கல்வித்திட்டத்துக்குக் 'குலக்கல்வித் திட்டம்' என்று எதிர்க்கட்சிகள் பெயர் சூட்டின. சாதிமுறையை அவர்கள் செய்யும் தொழிலை நீடித்திருக்கச் செய்ய ராஜாஜி விரும்புவதாக இதற்குக் கண்டனம் எழுந்தது.

''பகுதிநேரக் கல்வித் திட்ட ஏற்பாட்டின்படி சிறுவர்-சிறுமியர் காலை வேளைகளில் சுமார் நான்கு மணிநேரம் பள்ளிக்கூடங்களில் கல்வி பயில வேண்டும். மாலைவேளைகளில் ஏதாவது உடல் உழைப்புப் பணியில் ஈடுபட வேண்டும். காலையில் பள்ளிக்கூடங்களுக்குச் சென்ற சிறுமியர் பிற்பகலில் தங்களது பெற்றோருக்கு உதவிகரமாக இருக்க இந்த ஏற்பாடு வகை செய்தது'' என்று சி. சுப்பிரமணியம் கூறுகிறார். (- திருப்புமுனை -சி.எஸ் : பக்.270) இப் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துக் கம்யூனிஸ்டுகள் பேரவையில் தீர்மானம் கொண்டுவந்தனர். ஒரு வாக்கு வித்தியாசத்தில் இத்தீர்மானம் தோற்றது.

www.tamilarangam.net



''நான் பெற்ற குழந்தையை நானே கொல்ல மாட்டேன்'' என்று கூறி முதல்வர் பதவியை ராஜிநாமா செய்தார் ராஜாஜி. தனக்குப் பதிலாக நிதியமைச்சர் சி.சுப்பிரமணியத்தை முதல்வராகத் தேர்வு செய்யுமாறு ராஜாஜி கேட்டுக்கொண்டார். சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தல் நடந்தது. காமராஜர் 93 வாக்குகள் பெற்றார். எதிர்த்துப் போட்டியிட்ட சி.சுப்பிரமணியம் 41 வாக்குகளே பெறமுடிந்தது. 1954-ம் ஆண்டு மார்ச் 30-ம் தேதி காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். தனது அமைச்சரவையில் சேருமாறு சி.சுப்பிரமணியத்தை காமராஜர் வற்புறுத்திக் கேட்டார். அவரது கோரிக்கையை ஏற்குமாறு சி.எஸ்ஸை நேருவும் ராஜாஜியும் வலியுறுத்தினர். காமராஜர் முதல்வராக வருவதற்கு வேறு பின்னணிகள் இருந்தன என்று கம்யூனிஸ்ட் கட்சி கருதியது.

''அரசு நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிட்டுக் காரியங்களைச் செய்ய விரும்பினார்கள் காங்கிரஸ்காரர்கள். இப் பிரச்சினை காமராஜ் - ராஜாஜி மோதலாக வெடித்தது. 1954-ல் ராஜாஜி நீக்கப்பட்டு காமராஜர் முதல் அமைச்சர் ஆனார். தமிழக அரசியலில் ஏற்பட்ட இத் திருப்புமுனையை ஏற்படுத்தியது வேறுநபர்கள் அல்ல. காரணம் தமிழகத் தொழில் முதலாளிகள், நிலப்பிரபுக்கள் அரசு நிர்வாகத்தை முழுமையாகப் பயன்படுத்த விரும்பித்தான் இந்த மாறுதலுக்கு முயற்சித்தார்கள்''. (தேர்ந்தெடுத்த வழி - பா.மாணிக்கம் :பக்.85)

தேர்தலில் பங்கேற்பு குறித்து விளக்கி திமுக தேர்தல் அறிக்கை வெளியானது. ''கடந்த 9 ஆண்டுகாலமாக ஆட்சியில் அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சி, சட்டசபையிலும் மக்கள் சபையிலும் ஒரு வலுவான எதிர்க்கட்சி அமைத்துச் செயல்பட முடியாதவாறு, தன்னிடம் கிடைத்துள்ள அதிகாரத்தின் துணைகொண்டு மெய்யான ஜனநாயக ஆட்சி ஏற்படவொட்டாமல் தடுத்து, எதேச்சாதிகாரமாக ஆண்டு வருகிறது. திராவிடத்தின் விடுதலை வேண்டி நிற்கும் கழகம் தேர்தலில் ஈடுபட்டு முழுப்பலன் காணமுடியாது என்ற கருத்தில் கடந்த தேர்தல்கள் அனைத்திலும் நேரிடைப் பங்கு கொள்ளாமலே இருந்து வந்தது. இது காங்கிரசின் எதேச்சாதிகார எண்ணத்தை நிறைவேற்றப் பெரிதும் சாதகமாய் அமைந்தது. மேலும் கழகம் நாட்டு மக்களிடையே ஏற்படுத்திய விடுதலை வேட்கை யுணர்ச்சியும் வடநாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியும் தேர்தல்

www.tamilarangam.net



நேரத்தில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட பல சுயநல சுயேச்சைகளுக்கு வெற்றியைத் தேடித்தந்தன. வெற்றி பெற்றபின் அந்த சுயேச்சைகளை மிக மலிவாகக் காங்கிரஸ் தன் அணிக்கு இழுத்துக் கொள்வது எளிதாக அமைந்தது. இந்நிலை, காங்கிரசை எவரும் எப்போதும் எதிர்க்கவே முடியாது என்ற எண்ணத்தையும் அக் கட்சியின் ஆட்சியேதான் என்றும் நிலைத்திருக்குமோ என்ற அச்சத்தையும் பெரும்பாலான மக்களுக்கு ஊட்டியது. இந்த அச்சம் நாளடைவில் மெய்யான ஜனநாயகம் 'உருவாவதற்குப் பெருந்தடையாக இருக்குமே என்ற கவலையில் கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்ற முடிவினை மேற்கொண்டு இதுவரைதான் இயங்கி வந்த நிலையில் ஒரு மாற்றத்தைக் கண்டுள்ளது.'' (நம்நாடு : 11.2.1957)

மாகாணங்களின் எல்லைகள் நாடு முழுவதும் சீரமைக்கப்பட்டன. சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரம் முன்பே பிரிந்து விட்டது. மாகாணப் பிரிவினை சில பகுதிகளில் தாமதம் ஆனதால் இரண்டாவது பொதுத் தேர்தலும் உரிய காலகட்டத்தில் நடக்காது என்ற யூகங்கள் எழுந்தன. ஆனால் 1957-ல் பிப்ரவரி 24 முதல் மார்ச் 1-ம் தேதிவரை தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியானது.

1952-ம் ஆண்டு தேர்தலில் பங்கேற்காத தி.மு.கழகம், இத்தேர்தலில் பங்கேற்பது என்ற முடிவை திருச்சி மாநாட்டில் எடுத்தது. ''வெட்ட வெளியிலே நின்றுகொண்டு எங்களைப் பற்றி பேசுகின்றவர்களுக்கு மக்கள் ஆதரவு இல்லை. மக்கள் ஆதரவு இருந்தால் சட்டசபைக்கு வந்து தி.மு.க.வினர் பேசத் தயாரா?'' என்றுகாமராஜர் கேள்வி எழுப்பி வந்தார். (நெஞ்சுக்கு நீதி - கருணாநிதி :பக். 274) இச் சவாலை ஏற்க திமுகழகம் தயாரானது.

தி.மு.க தனது அலங்கார, அடுக்குமொழிப் பேச்சுகளால் மக்களை ஏற்கெனவே கவர்ந்து வந்தது. கல்லூரிகளுக்கு கம்யூனிஸ்ட் தலைவர்கள் அழைக்கப்படுவது நிறுத்தப்பட்டிருந்தது. கல்லூரிப் பேரவைக் கூட்டங்களில் தமிழரின் கலாசாரப் பெருமை, தமிழ் மொழியின் மேன்மை, இன உணர்வின் தேவை பற்றிப் பேசி தி.மு.கழகத் தலைவர்கள் இளைஞர்களைக் கவர்ந்தனர். பிரசாரத்தினால் ஈர்க்கப்பட்ட மாணவர்கள் தங்கள் ஊர்களில் தி.மு.கவின் கருத்துகளைப் பரப்பினர்.

www.tamilarangam.net



ராஜாஜியின் புதிய கல்வித்திட்டத்தை எதிர்த்து ஈ.வி.கே. சம்பத்தும், டால்மியாபுரத்துக்குக் கல்லக்குடி என்று பெயர் சூட்டக் கோரி கருணாநிதியும் போராட்டத்தில் குதித்தனர்.

இந்திய அளவில் காஷ்மீர் விஷயம் பெரும் பிரச்சினையாக நீடித்தது. இதுகுறித்து ஐ.நா. சபையில் இந்தியாவுக்கு எதிராகப் பிரிட்டன் தீர்மானம் கொண்டுவந்தது. காஷ்மீர் பகுதிகளை ஆக்கிரமித்த பாகிஸ்தான் அங்கிருந்து வெளியேறவில்லை. இந்நிலையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் நேருவின் வெளியுறவுக் கொள்கையை ஆதரித்தனர்.

அமெரிக்கா மட்டுமின்றி சோவியத் யூனியனுடனும் நேரு நட்பு பாராட்டியதால் முற்போக்குப் பாதையில் காங்கிரஸ் நடைபோடுகிறதென்ற மயக்கம் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்பட்டது. இது கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயே குழப்பம் வளர வழிவகுத்தது. அதுமட்டுமின்றி கம்யூனிஸ்ட் கட்சிக்குப் போட்டியாக மற்ற பல கட்சிகளும் சோசலிஸம் பேசின.

1955-ல் ஆவடியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் சோசலிஸ சமூகம் அமைக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. தி.மு.க.வோ சமதர்மப்பூங்கா அமைப்போம் என்றது. இச்சூழலில் மக்கள் இத்தகைய சோசலிச வெற்றுகோஷங்களால் ஏமாற்றப்படாமல் மக்கள் நலச் சட்டங்கள் கோரி கம்யூனிஸ்டுகள் போராடி வந்தனர். (Our Party's Growth in TN, C.S. Subramaniam : பக் 54)

வசதி படைத்தவர்களின் கூடாரமாகவே காங்கிரஸ் திகழ்ந்தது. மத்தியப் பிரதேசத்தில் காங்கிரஸ் வேட்பாளராக குவாலியர் மகாராணி போட்டியிட்டார். பஞ்சாபில் அகாலிகளுடன் காங்கிரஸ் கூட்டணி வைத்துக்கொண்டனர். பல இடங்களில் வெற்றிக்காகப் பல சமரசங்களை மேற்கொண்டனர். தேர்தலில் அரசாங்க இயந்திரம் முழுமையாகக் காங்கிரசுக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கியது. அகில இந்திய வானொலி கூட காங்கிரசின் குரலாக எதிரொலித்தது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல வாக்குறுதிகளை காங்கிரஸ் அரசு தந்தது; ஆவடி காங்கிரசுக்குப்பின் சோசலிஸ வேடத்தையும் போட்டுக்கொண்டது. நேருவின் தனிப்பட்ட செல்வாக்கும் காங்கிரசுக்கு உதவியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்குவங்க காங்கிரஸ் முதல்வர் பி.சி.ராய் கல்கத்தாவிலுள்ள மசூதிக்குச் சென்று இமாமுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார். மதத்தை தேர்தல் அரசியலுக்குப் பயன்படுத்துவது அன்றே தொடங்கி விட்டது. வெற்றிக்கான அனைத்து வழிமுறைகளையும் கடைப்பிடிக்க காங்கிரஸ் தயங்கவில்லை.

மதம், சாதி ஆகியவற்றைக் காங்கிரஸ் கட்சி தேர்தலுக்காகப் பயன்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் புகார் தெரிவித்தன. சீர்குலைவு சக்திகள் காரணமாக நாடு ஏற்கனவே பெரும் சோதனைகளைச் சந்தித்து விட்டது. இந்த நவீன உலகில் தன் நாட்டு நலனைவிட வட்டார நலனில் அக்கறை காட்டும் எந்த நாடும் பிழைத்திருக்க முடியாது என்று நேரு தனது வருத்தத்தை வெளிப்படுத்தினார்.

தனிநாடு, 'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது,' 'காகிதப்பூ மணக்காது, காங்கிரஸ் சோசலிஸம் இனிக்காது' என்பது போன்ற கோஷங்களை வைத்து தி.மு.க.வினர் தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய சங்கரலிங்கனார் 1956-ம் ஆண்டு அக்டோபரில் உயிரிழந்தார். இதை முன்வைத்து காங்கிரசுக்கு எதிரான பிரசாரத்தையும் தி.மு.க.வினர் மேற்கொண்டனர்.

சென்னைக்குப் பிரசாரம் செய்ய வந்த பிரதமர் நேரு, ''தமிழ்நாட்டில் உள்ள வகுப்புவாதக் கட்சியினர் பிராமணர்களைத் துரத்திவிட்டு சுயேச்சையான திராவிடப் பிரதேசம் அமைப்போம் என்கிறார்கள். ஒரு பாகிஸ்தான் ஏற்பட்டது போதும்; என்ன நடந்தாலும் இனி நாடு துண்டாடப்படாது. ஸ்திரமான சர்க்காரை காங்கிரஸ்தான் தரமுடியும்'' என்று குறிப்பிட்டார். (தினமணி,1.2.1957)

துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களை நினைவூட்டும் வகையில் 'தாய்மார்களே, தாலி ஜாக்கிரதை' என்று தி.மு.க.வினர் பிரசாரம் செய்தனர். 'தாலி கட்டும் பழக்கமில்லாதவர்கள் அதில் நம்பிக்கை இல்லாதவர்கள் ஏன் அதற்கு இவ்வளவு பரிந்து பேசுகிறார்கள்' என்று மத்திய நிதியமைச்சர் டி.டி.கிருஷ்ணமாச்சாரி கேட்டார். ''தமிழகத்தின் நலன் பாதிக்கப்படுவதை மத்தியில் நிதியமைச்சராக இருக்கும் நான் அனுமதிப்பேனா? நாட்டின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பணப்பெட்டி என்னிடம்தான் உள்ளது'' என்றும் கூறி அவர் பிரசாரம் செய்தார். (-தினமணி, 27.2.1957)

'வடவர் ஆதிக்கத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொள்பவர்கள் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்க்காதது ஏன்?' என்று சி.சுப்பிரமணியம் கேள்வி எழுப்பி பிரசாரம் செய்தார்.

குத்தகை விவசாயிகளுக்கு விளைச்சலில் 60 சதவீதம் அளிக்க வேண்டும் என்ற நியாயவாரச் சட்டம் ராஜாஜி காலத்தில் பரிசீலிக்கப்பட்டு காமராஜர் காலத்தில் கொண்டுவரப்பட்டது. அதன் மூலம் சாகுபடியாளரின் ஆதரவைப் பெற காங்கிரஸ் முயற்சித்தது. பெண்களுக்கு சொத்தில் பங்கு போன்ற முற்போக்குத் திட்டங்களும் காமராஜரின் செல்வாக்கை உயர்த்தின.

பெண்களுக்குச் சொத்துரிமை தரும் காமராஜரின் திட்டத்தை ராஜாஜி எதிர்த்தார். 'விவசாயத்தில் ஆர்வம் குறைந்துவிடும். பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கினால் நிலங்கள் துண்டுதுண்டாகிவிடும்' என்று ராஜாஜி பிரசாரம் செய்தார். ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி தேவை என்பதால் எதிர்க்கட்சிகளுக்கும் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று ராஜாஜி கூறினார். (தினமணி: 25.2.1957)

மாநிலங்களுக்கு நிதி அதிகாரம் உள்ளிட்ட அதிகாரங்களை வழங்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் உள்ளிட்ட கூடுதல் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். உபரி நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான தொழில்களை வளர்க்க வேண்டும் என்பவை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலைச் சந்தித்தது.

"கம்யூனிஸ்டு கட்சி பல கஷ்டங்களுக்கிடையே இந்தத் தேர்தலில் பிரவேசிக்கிறது. திருச்சி, சேலம், இராமநாதபுரம், நெல்லை சதி வழக்குகளில் நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்டு ஊழியர்களையும் தலைவர்களையும் காங்கிரஸ் ஆட்சி சிறைப்படுத்தி வைத்திருக்கிறது. எங்களுடைய கட்சியின் அபேட்சகர்களும் தலைவர்களுமான பி.ராமமூர்த்தி, பி.சீனிவாசராவ், மணலி கந்தசாமி, கே.பாலதண்டாயுதம் முதலியோர் தலைமறைவு வாழ்க்கை நடத்துகின்றனர். கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்குப் பலவகைகளில் முட்டுக்கட்டை

www.tamilarangam.net



*போடப்படுகிறது. போலீஸ் அனுமதியில்லாமல் கூட்டம் நடத்தவும் மைக் பிரசாரம் செய்யவும் முடியாது.'' (கம்யூனிஸ்டு கட்சி இரண்டாவது பொதுத்தேர்தல் மத்திய கமிட்டி பரிசீலனை அறிக்கை: பக்.19)*

வில்லுப்பாட்டு போன்ற கலைநிகழ்ச்சிகளை நடத்தி கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்தனர். காளை மாட்டுக்கு வாக்குக் கேட்பவர்கள் பணம் கொடுப்பதை விமர்சித்து பாவலர் வரதராசன் பாடிய 'ஒத்த ரூபா தாரேன்' பாடல் பிரபலமாக இருந்தது.

கம்யூனிஸ்டுக் கட்சியின் முக்கியத் தலைவர் பி.ராமமூர்த்தி ''தி.மு.கழகம் பாகிஸ்தானிடம் லட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டு தேர்தலில் ஈடுபடுவதாகக்கூட மனமறிந்த பொய்சொல்லி வந்தார். *(நெஞ்சுக்கு நீதி,பாகம்-1, கருணாநிதி : பக்.301)*

உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்பது போன்ற புரட்சிகரமான கோரிக்கையை வைத்த தி.மு.க.வினர் சினிமாப் பாடல்கள், நாடகங்கள் போன்ற நவீன உத்திகளைக் கடைப்பிடித்தனர். இவர்களின் சுவரொட்டிகள், சுவர் எழுத்துகள் பிரபலமடைந்தன.

இத்தேர்தலில் காமராஜரை ஆதரிக்க திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா முன்வந்தார். சாதி முறையை நிரந்தரமாக்கும் ராஜாஜியின் கல்வித் திட்டத்தை நீக்கியதாலும் சிறப்பாகச் சேவை செய்வதாலும் பச்சைத் தமிழரான காமராஜரை ஆதரிப்பதாக அவர் கூறினார்.

''காங்கிரஸ் செத்தால் மகிழ்ச்சியடைவேன். காங்கிரசைத் தேர்தலில் ஆதரிக்கவில்லை. காமராஜர் தலைமை நீடிக்க வேண்டும் என்பதே என் விருப்பம். நான் வகுப்புவாதி என்பது சரியல்ல. காஞ்சிபுரத்தில் (அண்ணா போட்டியிட்ட இடம்) டாக்டர் சீனுவாசயயரையும், சென்னையில் டி.டி. கிருஷ்ணமாச்சாரி, கிருஷ்ணாராவையும் ஆதரிக்கிறேன். பிராமணர்கள் இந்த நேரத்தில் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். காமராஜ் வெற்றி பெற்றால் பிராமணர்களுக்கு மந்திரி பதவி கிடைக்கும்'' என்றார் பெரியார்.

தி.மு.க. எதிர்ப்புநிலை காரணமாகவும் பெரியார் முழுமூச்சாக காமராஜரை ஆதரித்தார். பெரியாரின் காமராஜர் ஆதரவு நிலையை

www.tamilarangam.net



அடுத்து 'கூடா நட்பு' என்று விமர்சனம் செய்யப்பட்டார். ''பெரியாரின் ஆதரவை நான் கேட்கவில்லை. தி.க.வுடன் கூட்டணி இல்லை. வலிய வந்து ஆதரிப்போரை நான் வேண்டாம் என்று சொல்ல முடியுமா?'' என்று காமராஜர் பதில் கூறினார். (தினமணி : 19.2.1957)

நாடகம் ஆடி வந்தவர்கள் தேர்தலில் குதித்துள்ளனர். தாங்கள் எழுதிய சினிமாப்படங்களுக்குக்கூட்டம் வருகிறதே என்று நினைத்து தங்களுக்கு மக்கள் ஆதரவு அதிகம் இருப்பதாகக் கருதுகின்றனர் என்று காங்கிரஸ் தலைவர்கள் பிரசாரம் செய்தனர்.

உதயசூரியனைத் தேர்தல் சின்னமாகத் தேர்ந்தெடுத்திருப்பதை டி.டி. கிருஷ்ணமாச்சாரி கிண்டல் செய்தார். 'மலையிலிருந்து உதயசூரியன் தோன்றுவதாகச் சின்னம் உள்ளது. கிழக்கே மலை ஏது? கடல்தானே உள்ளது' என்று அவர் கூறினார்.

தேர்தலில் மிராசுதார் - தி.மு.க. கூட்டு வந்துள்ளது என்று கூறிய காமராஜர், தி.மு.க.வினரை 'வெத்து வேட்டுகள்; கம்யூனிஸ்டுகளை விட அபாயமானவர்கள்' என்றும் பிரசாரம் செய்தார்.

காங்கிரசின் மாற்றாகக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாவதை விரும்பாத வசதி படைத்தவர்கள் தி.மு.கழகத்திற்கு ஆதரவு தர முன்வந்தனர். பத்திரிகைகளிலும் தி.மு.க.வுக்குத் திடீர் முக்கியத்துவம் கிடைத்தது. தி.மு.க. வின் சீர்திருத்தக் கருத்துகள் மக்களைக்கவர்ந்தன.

தேர்தலில் அகில இந்திய அளவில் 47 சதவீத வாக்குகள் பதிவாகின. மொத்தம் 19.36 கோடிபேர் வாக்களித்தனர். முன்பைவிட இது இரண்டு கோடி அதிகம். காங்கிரஸ் கட்சி 47.8 சதவீத வாக்குகளைப் பெற்றது. தமிழ்நாட்டில் அப்போது இருந்த 41 மக்களவை இடங்களில் 31 இடங்களைக் காங்கிரஸ் பிடித்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கே.டி.கே. தங்கமணி, பார்வதி கிருஷ்ணன் மட்டுமே மக்களவைக்குத் தேர்வு பெற்றனர்.

பி.ராமமூர்த்தி, மணலி கந்தசாமி, ஜீவானந்தம் உள்ளிட்ட தலைவர்கள் எதிர்பாராத தோல்வியைச் சந்தித்தனர். பார்வர்ட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிளாக் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சட்டப் பேரவைக்கு 204 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் 151 இடங்களில் வெற்றி பெற்றது. 112 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க.15 இடங்களில் வெற்றி பெற்றது. தி.மு.க.வின் அதிரடித் துவக்கம் கம்யூனிஸ்டுகளுக்குக் கலக்கத்தைத் தந்தது. நான்கு தொகுதிகளில் மட்டுமே கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது. முந்தைய தமிழக சட்டசபையில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 13 பேர் உறுப்பினர்களாக இருந்தனர்.

காங்கிரசில் தூய்மை வேண்டியவர்கள் எஸ்.எஸ்.கரையாளர் தலைமையில் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியை உருவாக்கி யிருந்தனர். இக்கட்சியினர் சார்பில் ஒன்பது பேர் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்றனர். பார்வர்ட் பிளாக் மூன்று இடங்களைப் பெற்றது. பிரஜா சோஷலிஸ்ட் இரண்டு இடங்களையும் சோஷலிஸ்ட் ஒரு இடத்தையும் பெற்றன.

(1952-ம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சிக்கு வர உதவிய காமன் வீல் கட்சியும் உழைப்பாளர் கட்சியும் காங்கிரசில் ஐக்கியமாகி விட்டன. காமராஜர் ஆட்சியில் ராமசாமி படையாச்சி உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தார்.)

அண்ணா காஞ்சிபுரத்திலும், அன்பழகன் எழும்பூரிலும், கருணாநிதி குளித்தலையிலும், ப.உ.ச. திருவண்ணாமலையிலும், ஆசைத்தம்பி ஆயிரம் விளக்கிலும், சத்தியவாணிமுத்து பெரம்பூரிலும் வெற்றி பெற்றனர். மக்களவைக்கு ஈ.வி.கே. சம்பத்தும், திருவண்ணாமலை ஆர்.தர்மலிங்கமும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

காஞ்சிபுரத்தில் அண்ணாவையும் சேலத்தில் நெடுஞ்செழிய னையும் தோற்கடிக்கும் வகையில் கம்யூனிஸ்டுகள் செயல்பட்டனர் என்று தி.மு.கழகம் புகார் தெரிவித்தது.

''விவசாயமே முக்கியத் தொழிலாக இருந்த தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி, தொழிலாளிகளைத் தொழிற்சங்கங்களில் திரட்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்களுடைய போராட்டங்களிலேயே பிரதான கவனத்தைச் செலுத்தியது. இதனால் தஞ்சை மாவட்டத்தின் கீழ்ப் பகுதிகளையும் சிதம்பரம் தாலுகாவில் சில பகுதிகளையும் தவிர கிராம மக்களிடையே செல்வாக்கு வளரவில்லை'' என்று தோல்வி பற்றி பி.ராமமூர்த்தி கருத்து தெரிவித்தார்.

அகில இந்திய அளவில் மூன்று கோடிக்கும் அதிகமான (சுமார் 27 சதவீதம்) வாக்குகள் எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்தன. ஜனநாயகக் கட்சிகள் மற்றும் கம்யூனிஸ்டுகளுக்கு இடையே தேர்தலுக்கு முந்தைய உடன்பாடு ஏற்படவில்லை. அதனால் எதிர்க்கட்சி வாக்குகள் பிளவுபட்டன.

மக்களவையில் காங்கிரஸ் 371 இடங்களைக் கைப்பற்றியது. கம்யூனிஸ்டுகள் 27 இடங்களையும் பிரஜா சோஷலிஸ்ட் 19 இடங்களையும் ஜனசங்கம் 4 இடங்களையும் பெற்றன. கம்யூனிஸ்டுகள் மொத்தத்தில் 1.20 கோடி வாக்குளை அதாவது 11 சதவீத வாக்குகளைப் பெற்றனர். வாக்கு சதவீதம் கூடியபோதிலும் தமிழகத்திலும் ஆந்திரத்திலும் கம்யூனிஸ்ட் கட்சியினர் தோல்வியைத் தழுவினர்.

ஆனால் காங்கிரசின் ஏகபோக உரிமைக்குச் சவால் விடும் வகையில் கேரளத்தில் கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்பட்டது. ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கம்யூனிஸ்ட் அரசு என்று அது வர்ணிக்கப்பட்டது. பம்பாய், மேற்கு வங்கத்தில் அக்கட்சி நல்ல முன்னேற்றம் கண்டது.

''தமிழ் மக்களின் உண்மையான தேசிய அபிலாஷைகளையும் விருப்பங்களையும் கணிக்க கம்யூனிஸ்ட் கட்சி தவறிவிட்டது. காங்கிரசை எதிர்ப்பதில் போதிய கவனம் செலுத்தாமல் தி.மு.க.வை எதிர்ப்பதில் அதிகம் கவனம் செலுத்தக்கூடிய போக்கு இருந்தது. இதைப்பற்றி நம்முடைய கட்சிப் பத்திரிகை ஜனசக்தி பிரசுரித்த முறையானது நாம் காங்கிரசுக்குப் பதிலாக தி.மு.க.வைத் தாக்குவதில் குறியாகக் கொண்டிருக்கிறோம்'' என்ற ஒரு எண்ணத்தையே ஏற்படுத்தியது என்று கம்யூனிஸ்டுகள் சுயவிமர்சனம் செய்தனர்.

www.tamilarangam.net



*சதவீத அடிப்படையில் பார்த்தால் தமிழ்நாட்டில் மட்டும்தான் 1952-ம் ஆண்டுத் தேர்தலைவிடக் குறைந்த வாக்குகளைக் கம்யூனிஸ்டுகள் பெற்றனர். ''பிரிவினைவாதத்திற்கு இடமளிக்க கட்சி மறுத்தது முற்றிலும் சரியே. எனினும் பிரிவினைவாத சக்திகளைத் தனிமைப்படுத்துவதற்கும் ஜனநாயக எதிர்க்கட்சிகளின்பால் ஜனங்களை இழுப்பதற்குமான சரியான அணுகுமுறையைக் கட்சி கடைப்பிடிக்கவில்லை என்றும் அவர்கள் மதிப்பீடு செய்தனர்.* ❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கூட்டணி அரசியலுக்கு அச்சாரம்

சீனா, பாகிஸ்தான் எல்லைகளில் 1962க்கு முன்பே போர் மேகங்கள் சூழ்ந்திருந்தன. இத்தருணத்தில் நாடு மூன்றாவது பொதுத் தேர்தலுக்குத் தயாரானது.

அரசுத்துறையின் கட்டுப்பாட்டில் பெரிய தொழில்கள் நீடிக்க வேண்டுமா? நேரு, கிருஷ்ண மேனனின் வெளிநாட்டுக் கொள்கை நீடிக்க வேண்டுமா? என்ற சர்ச்சை தீவிரமடைந்த நேரம் அது. அமைதியான வழியில் சோசலிஸத்தை அடைய நேரு விரும்பினார். ஆனால் கம்யூனிஸ்டுகளின் கைப்பாவையாக நேரு ஆகிவிட்டார் என சோசலிஸ்ட், சுதந்திரா, ஜனசங்கம் ஆகிய கட்சிகள் புகார் தெரிவித்தன.

''உண்மையில், வசதி படைத்தவர்கள் மேலும் வசதி படைத்தவர்களாக ஆகிவிட்டனர்'' என்று கம்யூனிஸ்டுகள் கணித்தனர். ''நில உச்சவரம்புச் சட்டம் அமலாவதற்கு முன்பே நில உடைமையாளர்களுக்கு அரசாங்கம் ரகசியத்தை வெளியிட்டு விட்டது. அவர்கள் தங்கள் உறவினர்கள், பினாமிகள் பெயர்களில் நிலங்களை முன்கூட்டியே பிரித்துவிட்டனர். இதனால் நில உச்சவரம்பின் பலன் நிலமற்றவர்களைப் போய்ச் சேரவில்லை'' என்று கம்யூனிஸ்டுகள் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நில உச்சவரம்புச் சட்டத்தை 'மிச்சவரம்புச் சட்டம்' என்றார் தி.மு.க. தலைவர் அண்ணா .

நாட்டின் பொருளாதாரப் பாதை பற்றிய சர்ச்சை ஒருபுறமிருக்க, ஒவ்வொரு கட்சிகளுக்குள்ளும் கொள்கைப் போராட்டங்களும் தலையெடுத்தன.

சென்னை மாநகராட்சித் தேர்தலில் 1959-ல் தி.மு.கழகம் வெற்றி பெற்றது. வெற்றிப் பாதையில் அடியெடுத்து வைத்த நிலையில் அக்கட்சிக்குள் கோஷ்டிப்பூசல் உருவானது. தலைமைக்கான போட்டியும் தலையெடுத்தது. திராவிட நாடு கோரிக்கை விஷயத்தில் கட்சி போதுமான கவனம் செலுத்தவில்லை என்று ஈ.வி.கே. சம்பத் புகார் கூறினார்.

''வேலூர் செயற்குழுவிற்குத் தலைமை தாங்கினார் சம்பத். சட்டத்திருத்தங்கள் பற்றி மதுரை முத்துவும் அன்பழகனும் பேசவந்தனர். இது பொதுக்குழுவில் பேச வேண்டியது என்று கூறி சம்பத் தடுத்தாராம். அப்போது அடுத்த அறையிலிருந்த எம்.ஜி.ஆரும் எஸ்.எஸ்.ஆரும் மற்றும் சிலரும் வந்தனர். கலவரச் சூழல் ஏற்பட்டு சம்பத் தாக்கப்பட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியானது. இதையடுத்து கட்சியின் செயற்குழு, பொதுக்குழுவில் நடிகர்கள் ஆதிக்கம் மட்டுமின்றி அடியாட்களின் வன்முறைக் கலாசாரமும் உருவாகிவிட்டது என்றார் சம்பத். வேலூர் செயற்குழுவில் நடந்த சம்பவம் பற்றிக் கண்ணதாசன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். ''கவிஞர், கவிஞர் என்றொரு குரல் கேட்டது. அந்தக் குரலில் தோன்றிய பதற்றத்தில் அவனும் (கண்ணதாசனும்) பதறி எழுந்தான். பரபரப்போடு உள்ளே நுழைந்தார் ஆர்.எஸ். பாண்டியன். செயற்குழுவில் அடிதடி நடக்கிறது. சம்பத்தை எல்லோரும் அடிக்கிறார்கள் என்று சொன்னார். அவன் கலங்கிவிட்டான். அங்கிருந்த காரை எடுத்துக்கொண்டு செயற்குழு நடக்குமிடத்திற்குச் சென்றார்கள். செயற்குழுவில் கலந்து கொண்டிருந்த எம்.பி.சுப்பிரமணியம் (எம்.எல்.ஏ.) இறங்கி வந்தார். மதுரை சண்டியர் ஒருவர் சம்பத்தின் சட்டையைப் பிடித்ததாகவும் கருணாநிதி சத்தம் போட்டுத் திட்டியதாகவும் இரண்டு நடிகர்கள் முண்டா பனியனோடு வந்து நின்றதாகவும் அண்ணாதுரை அழுததாகவும் அவர் சொன்னார்''. (-வனவாசம் - கண்ணதாசன் : பக்.342)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆரின் சினிமாப் புகழால் கட்சி செல்வாக்குப் பெற்றது ஒருபுறமிருக்க கட்சியில் அவர்களின் ஆதிக்கம் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்தது. குறிப்பாக சினிமாக்காரர்கள் அண்ணாவின் ஆதரவாளர்களாக இருந்தனர். இந்நிலையில் கவிஞர் கண்ணதாசன், கோவை செழியன், சேலம் குப்புசாமி உள்ளிட்டவர்களுடன் *1961*-ம் ஆண்டு ஏப்ரலில் வெளியேறி தமிழ்த்தேசியக் கட்சியைத் துவக்கினார் சம்பத்.

சட்டசபை வழிமுறையை 1957-ல் பயன்படுத்தத் தொடங்கிய உடனேயே, திராவிட நாடு கோரிக்கையை எப்போது கைவிடுவீர்கள் என்று பேரவை விவாதத்தின்போது காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பி வந்தது. அண்டை மாநிலங்களின் ஆதரவு இல்லாத நிலையில் திராவிட நாட்டுக் கொள்கையைத் தொடர்ந்து வலியுறுத்த முடியாது என்று உணர்ந்து வந்த நிலையிலும் சம்பத் திராவிட நாடு பிரச்சினையை முன்வைத்ததால், அண்ணாவும் திராவிட நாடு கோரிக்கைக்கு அழுத்தம் கொடுத்தார்.

''நாட்டு விடுதலை கேட்கும்போதே நாம் வாய்க்கரிசி போட்டுக்கொண்டுதான் கேட்கிறோமே தவிர, வாழ அல்ல; இந்த நாட்டில் நமக்கு வாழ்வு என்ன கேட்கிறது? வடநாட்டு ஆட்சியின் கொடுமையைத் தாங்கிக் கொண்டு உள்நாட்டில் உள்ள கங்காணிகளின் பேச்சையும் கேட்டுக்கொண்டு நாம் வாழத்தான் வேண்டுமா? என்று அண்ணா கூறினார்.

''குவைத்தை ஒரு தனி நாடாக ஏற்கலாம். குவலயம் புகழும் தமிழகத்தை - திராவிடத்தை ஏற்கக் கூடாதா? எங்கள் முன்னோர்களை இகழலாமா? எங்கள் மூதாதையர் கட்டிய கோபுரம் இடிந்தா போய்விட்டது? அவர்கள் வெட்டிய குளம் தூர்ந்தா போய்விட்டது? எழுதிய இலக்கியம் செல்லரித்துப் போயிற்றா? நாங்கள் உலகம் மெச்ச வாழ்ந்தோம். உலகிற்கு நாங்கள் நாகரீகத்தைக் கற்றுத் தந்தோம்'' என்று அண்ணா பேசினார்.

இத்தகைய சூழலில் 1962-ம் ஆண்டு பிப்ரவரி 19 முதல் 25-ம் தேதிவரை வாக்குப்பதிவு நடக்கும் என்ற அறிவிப்பு வந்தது.

தி.மு.கழகம் விரிவான அறிக்கையை வெளியிட்டுத் தேர்தலுக்குத் தயாரானது. ''இன்றைய அரசியல் அமைப்பு, திராவிடத்தை அடிமைப்படுத்தவே பயன்படுகிறது என்பதைப் பாரறியச் செய்யும் பணியில் தி.மு.கழகம் தொடர்ந்து

www.tamilarangam.net



ஈடுபடுவதுடன், இந்த அமைப்புக்குள்ளாகவே கூடச் செய்யக்கூடிய முற்போக்கான காரியங்களைச் செய்யத் தவறிய காங்கிரசின் எதேச்சாதிகாரத்தை முறியடித்து, சமதர்மத்தை நிலைநாட்ட வேண்டும்'' என்று கட்சி திட்டமிட்டிருக்கிறது. ''காங்கிரசாட்சியில் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாவதும், ஏழை மேலும் ஏழையாவதுமான நிலைமை இருப்பதால் வருமானங்களில் உள்ள ஏற்றத் தாழ்வைக் குறைக்க தி.மு.க. பாடுபடும்'' என்று தி.மு.க. தேர்தல் அறிக்கை தெரிவித்தது.

இந்தியாவின் எல்லைப் பகுதிகளை சீனா ஆக்கிரமித்து விட்டதாக எழுந்த பிரசாரம் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்குள் பெரிய மனப்போராட்டத்தை ஏற்படுத்தியது. கட்சிக்குள் சீனா, ரஷிய ஆதரவாளர்கள் என்ற இரு பிரிவுகள் உருவாகி வந்தன. நாட்டின் வெளியுறவுக் கொள்கையை கம்யூனிஸ்டுகள் ஆதரித்தனர். கிருஷ்ண மேனனைத் தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் ஓரணியில் சேர்ந்த நிலையில் மேனனை ஆதரிக்க கம்யூனிஸ்டுகள் முன்வந்தனர். இதுபெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

தேர்தல் நடைபெறுவதற்கு முன் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் அஜாய் கோஷ் காலமானார். முன்னதாக அவர் தனது அறிக்கையில் 'சுதந்திராக் கட்சி, ஜனசங்கம் போன்றோரும் காங்கிரசைத் தோற்கடிக்க விரும்புவதாகக் கூறுகிறார்கள். அது உண்மையே. ஆனால் ஓரளவு முற்போக்காக இருக்கும் காங்கிரசின் கொள்கைகளையே அவர்கள் குறிப்பாகக் கண்டித்து எதிர்க்கிறார்கள். அவர்கள் நாட்டின்மீது திணிக்க விரும்பும் கொள்கைகள் படுமோசமான பிற்போக்குக் கொள்கைகளாகும். அவர்கள் சரித்திரத்தின் சக்கரங்களைப் பின்னால் திருப்ப விரும்புகிறார்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

ராஜாஜி 1959-ல் சுதந்திராக் கட்சியைத் துவக்கினார் 'பெர்மிட் கண்ட்ரோல்' லைசென்ஸ் முறை ஒழிந்தால்தான் விலைவாசிகள் இறங்கும். அரசு போடும் திட்டங்களின் பலன்கள் மக்களைச் சென்றடையவில்லை. காண்டிராக்டர்கள் தான் லாபம் அடைகின்ற னர் என்று ராஜாஜி பிரசாரம் செய்தார்.

''ராஜாக்கள், மகாராஜாக்கள், ஜமீன்தார்கள் ஆதிக்கத்தை மீண்டும் கொண்டுவர சுதந்திராக்கட்சி முயற்சிக்கிறது'' என்று ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டார். சிலசமயம் தவறான நபர்களுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெர்மிட் கிடைப்பது சாத்தியமே. அதனால் கண்ட்ரோல் கூடாது என்பது விந்தையான வாதம். ஒழுங்குபடுத்தப்பட்ட பொருளாதார முறையில் பெர்மிட்டுகள் அவசியம் என்றும் நேரு பதிலளித்தார்.

கேரளத்தில் முஸ்லிம் லீக் கட்சியுடன் காங்கிரஸ் மறைமுக உறவு கொண்டிருந்தது. தமிழகத்தில் காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் தலைமையிலான முஸ்லிம் லீக்குடன் தி.மு.க. சேர்ந்திருப்பது பற்றியும் நேரு விமர்சித்தார். ''முஸ்லிம் லீக்கைப் புதுப்பிக்க முயற்சிப்பவர்கள், முஸ்லிம்களுக்குத்தான் தீங்கு இழைக்கிறார்கள். கலாசார அல்லது மதவாத காரியங்களுக்காக ஒரு ஸ்தாபனம் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அரசியலில் மதத்தைப் புகுத்துவது தவறு'' என்று நேரு திட்டவட்டமாகக் கூறினார்.

கேரளத்தில் 1957-ல் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி 28 மாதங்களே நடந்தது. காங்கிரஸ் மற்றும் மத, சாதீய நிறுவனங்கள் நடத்திய போராட்டத்தைத் தொடர்ந்து அந்த ஆட்சி கலைக்கப் பட்டது. பின்னர் இடைத்தேர்தல் மூலம் பிரஜா சோஷலிஸ்ட் தலைவர் பட்டம் தாணுப் பிள்ளை முதல்வர் பொறுப்புக்கு வந்திருந்தார். மக்களவைத் தேர்தலில் கம்யூனிஸ்டுகளுக்கு வாக்களிக்கக்கூடாது என்று 16 கத்தோலிக்க பிஷப்புகள் அறிவிப்புச் செய்திருந்தனர்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கை, மீண்டும் வாக்குறுதிகளை வாரி வழங்கியது. இந்தியாவிலுள்ள அடிப்படைப் பிரச்சினை படிப்படியாக சமூகப் பொருளாதார சமத்துவத்தினைக் கொண்டு வருவது என்பது மட்டுமல்ல. இப்போது சமூகக் கட்டுக்கோப்பில் காணப்பெறும் அசமத்துவங்களும் ஏற்றத்தாழ்வுகளும் நீதி நெறிகளுக்கு முரணானதாகும். இவை எல்லா முனைகளிலும் முன்னேற்றத்தினைத் தடைசெய்து கணிசமான அளவு தொல்லையைத் தரும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி இதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று அந்த அறிக்கை கூறியது.

கம்யூனிஸ்ட் கட்சி தவிர இதர கட்சிகள் ஒப்பந்தம் செய்து கொண்டு காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டும் என்று ராஜாஜி வலியுறுத்தினார். அத்தகைய உடன்பாடு ஏற்படாமல் போய்விட்டது. 'தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை;

www.tamilarangam.net



பிறருக்கு இரண்டு கண்களுமே போகவேண்டும்' என்று அவர் பிரார்த்திப்பதுபோல் உள்ளது என்று ராஜாஜி பற்றி டி.டி.கிருஷ்ணமாச்சாரி விமர்சித்தார்.

தி.மு.கவுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே உடன் பாட்டிற்கான முயற்சி வெற்றி பெறவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி, தான் போட்டியிடாத இடங்களில் தி.மு.க.வை ஆதரிப்பது என்று முடிவெடுத்தது. ஆனால் வாக்களிக்கும் நாள் நெருங்கிய நேரத்தில் தி.மு.க.வும் சுதந்திராக் கட்சியும் பல இடங்களில் உடன்பாட்டுக்கு வந்தன. ''ராஜாஜி என் அரசியல் குரு. அவருக்கு இணையாக இல்லாதவர்களுடன் அவர் கூட்டுச் சேருவதைக் காணத் தாம் வேதனை அடைவதாக'' காங்கிரசில் இருந்த சி.சுப்பிரமணியம் கூறினார்.

தேர்தலின் இறுதிக் கட்டத்தில், 'கம்யூனிஸ்ட் கட்சிக்கு வாக்களிக்க விரும்பாதவர்கள், எங்களுக்குப் பதிலாக சுதந்திராக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம்; காங்கிரசுக்கு வாக்களியுங்கள் என்று பி.ராமமூர்த்தி அறிவித்தார்.

''தி.மு.க.வுக்கு அரசியல் அனுபவம் போதாது. அவர்களுடைய திராவிட நாடு கோரிக்கை நிறைவேற முடியாதது. பதவிக்கு வந்து, திராவிட நாடு கோரிக்கையைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினால்கூட அதை கேரளம், ஆந்திரம், மைசூர் ஆகிய மாநிலங்கள் எதிர்த்தால் அது பயனற்றுப் போகும். அந்நிலையில் அந்த ராஜ்யங்களுக்கு ராணுவத்தை அனுப்பி குழப்பம் விளைவிக்குமா? திராவிட நாடு என்ன கடைச்சரக்கா அல்லது சென்னை சட்டசபையில் பூட்டி வைக்கப்பட்டிருக்கிறதா?'' என்று காமராஜர் கேள்வியெழுப்பினார்.

'நூறு கோடி செலவில் நெய்வேலி அனல்மின் நிலையம், பெரம்பூரில் ரயில் பெட்டித் தொழிற்சாலை போன்ற தொழில்கள் உருவான நிலையில் வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது என்ற வாதமே சரியில்லை' என்று சி.சுப்பிரமணியமும் தி.மு.க.வுக்குப் பதில் கொடுத்தார்.

''ஏழைக் குழந்தைக்கு பள்ளிகளில் பகல் நேரத்தில் சாப்பாடு, புத்தகம் ஆகியவை வழங்கியுள்ளோம். திட்டங்களுக்குப் பணத்தைச் செலவிடுகிறோம். இதெல்லாம் கூடாது என்று சுதந்திராக் கட்சி கூறுகிறது. விதிப்படி நடக்கட்டும் என்கிறது சுதந்திராக்கட்சி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தி.மு.க.வினரோ ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்போம் என்கிறார்கள். விவசாயிக்கு பணமே கிடைக்க வேண்டாம் என்று அவர்கள் கூறுகிறார்களா?'' என்று காமராஜர் பிரசாரம் செய்தார்.

தமது கட்சிக்காக பணக்காரர்களிடமிருந்து பணம் பெறுவதுடன் நிற்காமல் சுதந்திரா கட்சி அல்லது மற்றக் கட்சிகளுக்குப் பணம் தரவேண்டாம் என்று நேரு கோருவதாக ராஜாஜி புகார் கூறினார். தேர்தலின்போது 'சோப், பவுடர், எங்க வீட்டுப்பிள்ளை எம்.ஜி.ஆர் காலண்டர் ஆகியவற்றைத் தி.மு.க.வினர் தந்ததாகக் கம்யூனிஸ்டுகள் புகார் தெரிவித்தனர். பணபலத்தைப் பயன்படுத்திய காங்கிரசை விட்டுவிட்டு தி.மு.க.வை விமர்சிப்பதா என்று அக்கட்சி கண்டனம் தெரிவித்தது. (நம்நாடு பத்திரிகை விமர்சனம் - 13.3.1962)

தேர்தலில் பணத்தின் விளையாட்டு பற்றி அதிகமாகவே பேசப்பட்டது. முந்ரா என்ற திடீர்த் தொழிலதிபரின் கம்பெனிக்குச் சொந்தமான மதிப்பிழந்த பங்குகளை ஆயுள் காப்பீட்டுக் கழகம் வாங்கியது தொடர்பாக பெரோஸ்காந்தி ஏற்கனவே நாடாளுமன்றத்தில் பிரச்சினையைக் கிளப்பினார். காங்கிரஸ் கட்சிக்கு முந்ரா நன்கொடை வழங்கியதாகவும் புகார் எழுந்தது. இது தொடர்பாக நிதியமைச்சர் டி.டி.கிருஷ்ணமாச்சாரி பதவி விலக நேரிட்டது.

இத்தேர்தலில் திருச்செந்தூர் மக்களவைத் தொகுதியில் டி.டி.கே. போட்டியிட்டார். அங்கு போட்டியிட்ட சுதந்திரா கட்சி வேட்பாளரும் இதரரும் போட்டியிலிருந்து விலகியதால் அவர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேர்தல் தினத்தன்று பிராமணர்கள் வாக்களிக்க வரக்கூடாது என்று திராவிடர் கழகத் தலைவர் ஈ.வெ.ராமசாமி எச்சரிக்கை விடுத்திருந்தார். 'வாக்களிக்க வருபவர்களுக்குப் பாதுகாப்பு தரப்படும். அச்சமின்றி வாக்களிக்கலாம் 'என்று காமராஜர் கூறினார். குறிப்பிட்ட பகுதியினர் வாக்களிக்கக்கூடாது என்று தெரிவிக்கும் ஈ.வெ.ரா. மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டதன் மூலம் காமராஜர் - ஈ.வெ.ரா. கூட்டணி நீடிப்பதாக சுதந்திரா கட்சியினர் புகார் தெரிவித்தனர். 1957-ம் ஆண்டு தேர்தலில் பிரசாரம் செய்தது போல் பெரியார் இத்தேர்தலில் பிரசாரத்தில் ஈடுபடவில்லை.

அகில இந்திய அளவில் தேர்தலில் 21.8 கோடிப்பேர் அதாவது 55 சதவீதம் பேர் வாக்களித்தனர். தமிழகத்தில் 41 மக்களவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் முந்தைய தேர்தலைப் போலவே இப்போதும் 31 இடங்களில் வெற்றியை ஈட்டியது. டாக்டர் சுப்பராயன், சி.சுப்பிரமணியம் ஆகியோர் காங்கிரஸ் சார்பில் மக்களவைக்குத் தேர்வு பெற்றனர். 14 இடங்களில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு இடங்களில் மட்டும் வெற்றி பெற்றது. 16 இடங்களில் போட்டியிட்ட சுதந்திரா கட்சி ஓர் இடத்தில் கூட வெற்றி பெறவில்லை.

திமுக பதினெட்டு மக்களவை இடங்களில் போட்டியிட்டு 7 இடங்களைக் கைப்பற்றிச் சாதனை புரிந்தது. நாஞ்சில் மனோகரன், இரா.செழியன், க.ராசாராம் உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர். பார்வர்ட் பிளாக் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் வெற்றிபெற்றார்.

சட்டப்பேரவைக்கு 143 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. 50 இடங்களைக் கைப்பற்றி பலமான எதிர்க்கட்சியாக உருவெடுத்தது.

206 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் 139 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டது. 68 இடங்களில் தனித்துப் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு சட்டப் பேரவை இடங்களை மட்டுமே பிடித்தது.

94 இடங்களில் போட்டியிட்ட சுதந்திரா கட்சி 6 இடங்ளில் வெற்றி பெற்றது. தி.மு.க.விலிருந்து விலகி சம்பத் தொடங்கிய தமிழ்த்தேசியக் கட்சி படு தோல்வியைச் சந்தித்தது. தேர்தலில் அவர் காங்கிரஸ் ஆதரவு நிலை எடுத்ததாகப் புகார் தெரிவிக்கப்பட்டது. தி.மு.க.வினர் அக்கட்சியைக் 'குட்டிக் காங்கிரஸ்' என்றனர். (பின்னர் சம்பத் காங்கிரசில் ஐக்கியமாகிவிட்டார்.)

அகில இந்திய அளவில் காங்கிரஸ் 361 மக்களவை இடங்களைக் கைப்பற்றி, தொடர்ந்து அசைக்க முடியாத ஆளும் கட்சியாக ஆனது. ஆனால் எதிர்க்கட்சி அந்தஸ்து பெற கம்யூனிஸ்ட் கட்சியுடன் போட்டியிடும் வகையில் சுதந்திரா கட்சி, ஜனசங்கம் ஆகியவை ஏறுமுகத்தில் நின்றன.

கம்யூனிஸ்ட் கட்சி 29 மக்களவை இடங்களில் வென்று, 9.9. சதவீத வாக்குகளைப் பெற்றது. அகில இந்திய அளவில் விரிவான தளத்தை ஏற்படுத்திக் கொண்ட ராஜாஜியின் சுதந்திராக் கட்சி 22

www.tamilarangam.net



இடங்களைப் பெற்றது. 14 இடங்களில் வெற்றி பெற்ற ஜனசங்கம் 6.4. சதவீத வாக்குகளைப் பெற்றது. பிரஜா சோசலிஸ்ட் 12 இடங்களையும் சோசலிஸ்ட் 6 இடங்களையும் பெற்றன.

காஞ்சிபுரத்தில் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட பஸ் அதிபர் நடேச முதலியாரிடம் அண்ணா தோல்வியுற்றார். சென்னை கடற்கரைக் கூட்டத்தில் நடந்த வெற்றிவிழாக் கூட்டத்தில் பேசினார். ''அப்போது என் தோல்வியுடன் கழகம் கலைந்தது என்ற அவர்கள் நினைப்பு தவறானது. நேரிட்டு விட்ட தோல்விகளை மறந்துவிடுங்கள். பெருமூச்செறிவதை நிறுத்திக் கொள்ளுங்கள். கண்கலங்கி நிற்காதீர்கள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கழகப் பணிபுரிய புறப்படுங்கள்'' என்று பேசினார். (-நம்நாடு -27.2.1962) எப்படி எங்கள் பதினைந்து பேரையும் 'ஒழிப்போம்' என்று கூறி 'ஐம்பது இடங்களைக் கோட்டை விட்டார்களோ அதேபோல அடுத்தத் தேர்தலில் இந்த ஐம்பது பேரையும் ஒழிப்போம் என்று கூறி இன்னொரு எழுபத்தைந்து இடங்களைக் கோட்டை விடுவார்கள்' என்றார் அண்ணா. அத்தகைய சூழல்தான் தமிழகத்தில் எழுந்தது.❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆளப் பிறந்தவர்களுக்கு பலத்த அடி

சீனயுத்தத்திற்குப் (1962 அக்டோபர்) பின்னர், அந்நாட்டுடன் பேசி எல்லைத் தாவாவுக்குத் தீர்வு காணவேண்டும் என்று யோசனை கூறிய இ.எம்.எஸ். நம்பூதிரிபாட், பி.ராமமூர்த்தி உள்ளிட்ட கம்யூனிஸ்டுகள் ஒரு கோஷ்டியாக உருவெடுத்தனர். அவர்களை அரசாங்கம் திடீரென்று சிறையிலடைத்தது.

''கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு சாராரை இப்படிக் கைது செய்ததை எதிர்த்து வெளியிலிருந்த கட்சித் தலைமை ஒரு கண்டனத் தீர்மானமும் போடாமல் இருந்தது. (விடுதலைப் போரும் திராவிட இயக்கமும், பி.ராமமூர்த்தி : பக்.400) கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து அவர்கள் பிரிந்து மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினர்.

மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற காமராஜர் 1963-ல் ஒரு திட்டத்தை அறிவித்தார். பின்னர் அது காமராஜர் திட்டம் என்று அழைக்கப்பட்டது. முதலமைச்சர்கள், மூத்த மத்திய, மாநில அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணியில் ஈடுபட வேண்டும் என்பதே அத்திட்டத்தின் நோக்கம்.

இதன் அடிப்படையில் 1963-ம் ஆண்டு செப்டம்பரில் காமராஜர் முதல்வர் பதவியிலிருந்து விலகினார். பின்னர் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவரானார். அவருக்குப் பதிலாக பக்தவத்சலம் முதல்வர் ஆனார்.

www.tamilarangam.net



நேருவுக்குப் பின் லால்பகதூர் சாஸ்திரி பிரதமர் பதவி வகித்த காலத்தில் பாகிஸ்தான் போர் தொடுத்தது. யுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யா சென்ற சாஸ்திரி, தாஷ்கெண்டில் காலமானார். நேருவின் மகள் இந்திராகாந்தி பிரதமர் பொறுப் பேற்றார்.

நாட்டின் தனிப்பெரும் கட்சியான காங்கிரசின் ஏகபோகத்திற்குப் பெரும் சவால் உருவாகிக் கொண்டிருந்தது. காங்கிரசுக்குள் தலைமைப் போட்டி, கொள்கை மோதல் உச்சக்கட்டத்தில் இருந்தன. கோஷ்டிப்பூசல்களால் ஆங்காங்கு விரிசல்கள் ஏற்பட்டன.

சீன யுத்தத்தின் போது விலைவாசிப் போராட்டம் காரணமாக அண்ணா வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சிறையிலிருந்து விடுதலை ஆகி வெளியே வந்தவுடன் ''போர் விஷயத்தில் நேருவின் கரத்தை வலுப்படுத்துவோம். எதிரிகளிடமிருந்து முதலில் நாட்டை மீட்ட பிறகுதான், நாட்டுப் பிரிவினையே தவிர, எல்லையில் எதிரிகளை நுழைய விட்டா பிரிவினை வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்க முடியும்''

தி.மு.கழகம் ஒரு தீயணைக்கும் படை; தீயணைக்கும் படை, வேண்டியவர் வீடு - வேண்டாதவர் வீடு பார்த்து தீயை அணைப்பதில்லை; யார் வீடாக இருந்தாலும் தீயை அணைக்கிறது. அதுபோல தீயை அழிக்க திமுக துடிதுடித்துவரும். அதனால்தான் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து அந்த விஷயத்தில் அரசாங்கத்தை ஆதரிப்பதாகக் கூறினோம். ஜனநாயகம் எங்கு பாழ்படுத்தப் படுகிறதோ அங்கு துடிதுடித்துப் பாய்ந்து உதவிக்கு வருகிறது திமுகழகம். (பேறறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு - அ.மறைமலையான் : பக்.323)

திமுகழகத்தின் 'தெற்கு தேய்கிறது' என்ற கோஷம் காரணமாக பயனடைந்த தமிழகத்தின் செல்வந்தர்கள், அகில இந்திய மார்க்கெட்டில் அக்கறை செலுத்தத் தொடங்கினர்.

தொழிலுக்கு மூலப் பொருட்களை வெளி மாநிலத்திலிருந்து பெற வேண்டிய நிலையையும் உணர்ந்தனர். இச்செல்வந்தர்கள் திராவிட நாடு கோரிக்கையை தி.மு.க.வினர் கைவிட வேண்டும் என்று கோரி வந்தனர் என்று கம்யூனிஸ்டுகள் கணித்தனர்.

www.tamilarangam.net



அரசமைப்புச் சட்டத்தின் 19-வது பிரிவு தொடர்பாக 16-வது சட்டத் திருத்தம் டிசம்பர் 1963-ல் கொண்டுவரப்பட்டது. தி.மு.க.வை மனதில் கொண்டு பிரிவினைக் கட்சிகளைத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தடைவிதிக்கும் நோக்கத்தில் இச்சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இச்சட்டம் அமலுக்கு வருமுன்பே அதுபற்றி பரவலாக விவாதிக்கப்பட்டது. 1963-ம் ஆண்டு ஜூனில் நடந்த தி.மு.க.வின் பொதுக்குழுவில் திராவிட நாடு கோரிக்கையைக் கைவிடும் வகையில் விதி-2 திருத்தப்பட்டது.

''தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும் இந்திய அரசுரிமை, ஒருமைத்தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகிய வற்றிற்குள், இயன்ற அளவு கூடுதலான அதிகாரங்களைப் பெற்று நெருங்கிய திராவிடக் கூட்டமைப்பாக நிலவப் பாடுபடுவது'' என அத்திருத்தம் அமைந்தது.

அடிப்படை உரிமையை எதிர்க்கும் வரிவினைச் சட்டத்தை ஆட்சேபித்து மாநிலங்களவையில் அண்ணா பேசினார். ''பிரிவினைக் கோரிக்கையை எழுப்புவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். வற்புறுத்தி அமைதியை நிலைநாட்ட முயற்சிக்க வேண்டாம். மாற்றுக் கருத்தை சட்டம் மூலம் நசுக்குவது சரியல்ல.'' (அண்ணா ஸ்பீக்ஸ் : 1962-1966 : பக்43) என்றார்.

இந்தியை ஆட்சிமொழியாக்கும் தீவிர முயற்சியில் காங்கிரஸ் இறங்கியது. இந்நிலையில் 1965-ம் ஆண்டு ஜனவரி 26-ம் தேதியைத் துக்கநாளாக தி.மு.க. அனுஷ்டித்தது. தி.மு.க. தலைவர்களைப் போலீசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்தனர்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துப்பாக்கிச் சூட்டில் மாணவர் இராசேந்திரன் உயிரிழந்தார். இதனால் தமிழகத்தில் மாணவர் போராட்டம் தீவிரமடைந்தது. போலீஸ் அடக்குமுறைக்கு எதிராக வன்முறை தலைதூக்கியது. தீக்குளித்தும் விஷமருந்தியும் இளைஞர்கள் சிலர் தற்கொலை செய்துகொண்டனர்.

பக்தவத்சலத்தின் அணுகுமுறை, மாணவர் போராட்டம் தீவிரமடையக் காரணமாக இருந்தது. மாணவர்களுடன் பேச்சு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வார்த்தை நடத்த அவர் முன்வரவில்லை. ''தீக்குளித்தவர்கள் வறுமையில் செத்திருக்கலாம்; அல்லது யாராவது கொலை செய்து நரபலி கொடுத்திருக்கலாம்'' என்று பக்தவத்சலம் கூறினார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது மாணவர்களுக்கு எதிராகக் காங்கிரஸ்காரர்களும் ஆங்காங்கே வன்முறையில் ஈடுபட்டனர். உள்நாட்டு யுத்தம் நடப்பது போன்ற நிலைமை தமிழகத்தில் உருவெடுத்தது.

உணவுக் கொள்முதலைக் காங்கிரஸ் ஆட்சி கைவிட்டதால் உணவுப் பஞ்சம் நாட்டை வாட்டிவதைத்தது. இரண்டு ஆண்டுகள் வறட்சி ஏற்பட்டதால் நிலைமை மேலும் சிக்கலாகியது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்து உணவு இறக்குமதியை அதிகரிக்க நேரிட்டது. சோவியத் யூனியன் மக்கள் 17,000 டன் கோதுமையை அளித்தனர்.

தமிழகத்தில் ரேஷன் கடைகள் முன்பு 'க்யூ' வரிசையில் மக்கள் மணிக்கணக்காகக் காத்து நின்றனர். பொதுச்சந்தையில் அரிசிவிலை கடுமையாக உயர்ந்தது. இத்தகைய சூழலில் வரலாற்றில் திருப்பு முனையை ஏற்படுத்திய நான்காவது பொதுத்தேர்தல் வந்தது.

சுதந்திரா கட்சியுடன் முந்தைய தேர்தலில் கடைசி நேரத்தில் உடன்பாடு கொண்ட தி.மு.க. இத்தேர்தலில் அக்கட்சியுடன் முன்கூட்டியே கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டது. முஸ்லிம் லீக்கும் தி.மு.க. அணியில் நீடித்தது. இதை 'முக்காலிக் கூட்டணி' என்று காமராஜர் விமர்சித்தார்.

சுதந்திரா கட்சியுடன் உடன்பாடுகொள்ள மார்க்சிஸ்ட் கட்சி விரும்பவில்லை. தி.மு.க.வுடன் மட்டும் தேர்தல் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டது. தனக்குச் செல்வாக்குள்ள தொகுதிகளில் சுதந்திரா கட்சிக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தும் உரிமையை மார்க்சிஸ்ட் கட்சி பெற்றுக் கொண்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் தி.மு.க.வுடன் கூட்டணி சேர முன்வந்தது. ஆனால் இடப்பிரச்சினை காரணமாக கூட்டணியில் இடம்பெறவில்லை. அக்கட்சி தனித்துப் போட்டியிட்டது.

திராவிட நாடு கொள்கையை தி.மு.க. கைவிட்ட பின்னர் அடுத்த கட்ட கொள்கை நிலையை அக்கட்சி, தேர்தல் அறிக்கையில் விளக்கியது. ''மொழி, வரலாறு ஆகியவற்றில் தொடர்புடைய

www.tamilarangam.net



தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களும் மேலும் அதிகமான நேசத் தொடர்புடன் விளங்கிடக் கழகம் பணியாற்ற விரும்புகிறது.''

''இந்தியாவுக்குள் திராவிடம் என்ற இத்திட்டம் மூலம் திராவிட மொழி, பண்பாடு ஆகியவற்றின் தனித்தன்மைகளைப் பாதுகாத்திடவும், அவற்றின் சிறப்பியல்புகளை இந்தியாவின் பிறபகுதி மக்கள் போற்றி வரவேற்று ஏற்றுக்கொள்ளவும் செய்வோம்'' என்று தி.மு.க. கூறியது. (-தி.மு.க. தேர்தல் அறிக்கை, 1967 : பக்.39) மொழிவழி பிரிந்து இனவழியில் சேருவோம் என்று தெரிவித்தது.

மாநில உரிமை, சீரான பொருளாதார வளர்ச்சி, உழுபவருக்கே நிலம், தனியார் ஆதிக்கம் குறைப்பு போன்றவற்றை தி.மு.க. தேர்தல் அறிக்கை வலியுறுத்தியது.

கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மார்க்சிஸ்ட் கட்சிக்கும் இடையே பெரிய கருத்து வேறுபாடு ஏற்பட்ட போதிலும் கேரளம், மேற்கு வங்கத்தில் இரு கட்சிகளும் உடன்பாடு செய்துகொண்டன. தமிழகத்தில் அதுபோன்று கூட்டணி அமைத்துக் கொள்ள முன்வராதது பற்றி மார்க்சிஸ்ட் கட்சியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விமர்சித்தது.

கொள்கை உள்ளடக்கமில்லாத காங்கிரஸ் எதிர்ப்பில் தி.மு.க. செயல்படுவதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கூறியது. சோசலிஸத்திற்கு தி.மு.க. நிற்பது உண்மையென்றால் சோசலிஸத்தை எதிர்க்கும் சுதந்திராவுடன் கூட்டு மந்திரிசபை அமைத்து, எந்த சோசலிஸ்ட் திட்டங்களை அமலாக்க முடியும் என்று கேள்வி எழுப்பியது.

மத்திய அரசின் நாணய மதிப்புக் குறைப்பு, அமெரிக்கச் சார்பு நிலை, விலைவாசி உயர்வு ஆகியவற்றை இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகளும் கடுமையாக விமர்சித்தன.

'மூடநம்பிக்கை ஒழிப்பு, ஜாதி ஒழிப்பு, கடவுள் நம்பிக்கை ஒழிப்பு ஆகிய தி.மு.க.வின் சொந்தக் கொள்கைகள் மறைந்தவிதம் மாயமாக இருக்கிறது. பகுத்தறிவை வளர்ப்பது, தமிழை வளர்ப்பது, திராவிடப் பொதுவுடைமைப் பூங்காவைச் சமைப்பது ஆகியவை சுதந்திராவுடன் சேர்ந்து சாத்தியமில்லை' என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் கே. பாலதண்டாயுதம் கூறினார்.

www.tamilarangam.net



தி.மு.க.வை ஆட்சியில் அமர்த்திவிட்டுத்தான் என் கண்களை மூடுவேன் என்று சங்கல்பம் எடுத்திருந்த ராஜாஜியோ இந்த விமர்சனத்தைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. ''18 ஆண்டு காலமாக ஆழவேர் விட்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சியைப் பிடுங்கி எறிந்துவிட்டால் அதற்குப்பின் எந்த ஆட்சியும் வேர்விட முடியாது. அது யாராக இருந்தாலும் நமக்குக் கவலையில்லை. அது சோசலிஸத்திற்கு எதிராக இருக்க வேண்டும் என்பது ஒன்றுதான், நாம் உறுதியாகக் கண்காணிக்க வேண்டிய விஷயமாகும்'' என்றார்.

மொழிப்பிரச்சனையைப் பொறுத்தவரை பயிற்சி மொழியாக தாய்மொழியே இருக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கட்சி கூறியது. ''அகில இந்திய மொழியாக இந்தியின் உபயோகம் கட்டாயமாக இருக்கக் கூடாது. ஆனால் வெவ்வேறு மாநிலங்களின் மக்களிடையே தொடர்புக்குச் சாதனமாக அது ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆங்கிலத்தின் இடத்துக்குப் பிராந்திய மொழியைப் பயன்படுத்தும் கொள்கை பின்பற்றப்படவேண்டும். மத்தியில் ஆங்கிலத்தின் இடத்துக்கு இந்தியும் மாநிலங்களில் ஆங்கிலத்தின் இடத்திற்குப் பிராந்திய மொழிகளும் மாறுவது ஏககாலத்தில் நடைபெற வேண்டும். அதே சமயம் இந்தி பேசாத பிராந்தியங்களின் சம்மதத்தோடு தீர்மானிக்கப்படும் இடைக்காலத்துக்கு ஆங்கிலத்துக்கு கூட்டு ஆட்சி மொழி அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும்.'' *(-மார்க்சிஸ்ட் தேர்தல் அறிக்கை, 1967 : பக்.29)*

அதேபோல் இந்திய - சீனத் தகராறை சமாதானமாகத் தீர்ப்பதற்குப் பதிலாக தேசியப் பாதுகாப்பின் பெயரில் காங்கிரஸ் தலைவர்கள் இந்தியாவை அமெரிக்க ஏகாதிபத்திய முகாமுக்கு இழுத்துச் சென்றுள்ளனர் என்று மார்க்சிஸ்ட் கட்சி கூறியது. *(-மார்க்சிஸ்ட் தேர்தல் அறிக்கை, 1967:பக்.35)*

தி.மு.க. கூட்டணியில் ம.பொ.சிவஞானத்தின் தமிழரசுக் கழகம், பார்வர்ட் பிளாக், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சி.பா. ஆதித்தனாரின் நாம் தமிழர் இயக்கம் ஆகியவை சேர்ந்து எட்டுக் கட்சி கூட்டணி ஏற்பட்டது. எட்டு நொண்டிகள் ஒன்று சேர்ந்தால் என்ன ஆகும் என்று காமராஜர் கிண்டல் செய்தார். படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்றார். இவ்வறிவிப்பு எதிர்க்கட்சிகளின் பரவலான விமர்சனத்திற்கு இடமளித்தது.

காமராஜர் போட்டியிட்ட விருதுநகர் பேரவைத் தொகுதியில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய

www.tamilarangam.net



மாணவர்களில் ஒருவரான பெ.சீனிவாசன் நிறுத்தப்பட்டார். அவருக்கு ஆதரவாகக் கல்லூரி மாணவர்கள் நிதியை அனுப்பி வைத்தனர். வாக்காளர்களின் காலில் விழுந்து காமராஜருக்கு வாக்களிக்க மாட்டோம் என்ற உறுதிமொழியை அவர்களிடமிருந்து மாணவர்கள் பெற்றனர்.

தேர்தலுக்கு முன் எம்.ஜி.ஆர். மீது எம்.ஆர். ராதா துப்பாக்கியால் சுட்ட சம்பவம் நடந்தது. இந்தித் திணிப்பு, அரிசிப் பஞ்சம் போன்றவை காங்கிரசுக்கு எதிரான அலையை ஏற்கனவே உருவாக்கியிருந்தன. படி அரிசித்திட்ட வாக்குறுதியால் மக்கள் கவரப்பட்டிருந்த நேரத்தில் எம்.ஜி.ஆர். சுடப்பட்ட சம்பவம் தி.மு.க. மீது அனுதாபம் அதிகரிக்க வழிவகுத்தது. கழுத்துப் பகுதியில் சுடப்பட்ட காயத்துக்கு கட்டுப்போட்ட நிலையில் எம்.ஜி.ஆரின் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டன.

தி.மு.க.வின் கோஷங்கள் மிகவும் கூர்மையடைந்தன. அடுக்கு மொழியும் பரபரப்பும் கொண்ட வாசகங்கள் வாக்காளர்களைக் கவர்ந்தன.

''காங்கிரசை நம்பினால் கல்லறைக்குப் போகவேண்டியது தான்'' 'மாடாக உழைத்தோர் ஓடாகத் தேயும் நிலையை ஏற்படுத்தியுள்ளனர்' என்றார் அண்ணா. 'ரூபாய்க்கு மூன்று படி அரிசி லட்சியம்; ஒரு படி நிச்சயம்' என்று அண்ணா வாக்குறுதி அளித்தார். அரிசியும் அரசியலும் பிரிக்க முடியாத பிரச்சினையாக அன்று உருவெடுத்தது.

''அள்ளிப் போட்டார்கள் உலையில்; பிறகு காங்கிரஸ் ஆட்சியில் அளந்து போட்டார்கள், பிடித்துப் போட்டார்கள். இப்போது எண்ணிப் போடுகிறார்கள் அரிசியை'' என்று தி.மு.க.வின் பொதுச் செயலாளராக இருந்த நெடுஞ்செழியன் பேசினார்.

''ரூபாய்க்கு மூன்று படி அரிசி எப்படிப் போடமுடியும்? ஒருபடி வேண்டுமானால் போடலாம்'' என்று டி.டி.கிருஷ்ணமாச் சாரி கூறினார். ''ஒருபடி போட முடியும் என்றால் இப்போதே அதைச் செய்திருக்கலாமே'' என்று அண்ணா கேள்வி எழுப்பினார். ஒருபடி அரிசி விலை அப்போது ரூ.1.75 ஆக இருந்தது. ஐந்து படிக்கு மேல் அரிசியை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லமுடியாத கட்டுப்பாடும் இருந்தது. தேர்தலுக்காக

www.tamilarangam.net



கண்ட்ரோலை ரகசியமாக அமல்படுத்தவும் காங்கிரஸ் ஆட்சி முயற்சித்தது.

''தீவிரமாகச் சமதர்மம் பேசும் தி.மு.க.வும், தனியார் ஆதிக்கத்தை வலியுறுத்தும் ராஜாஜியும் கூட்டணி ஆட்சி ஏற்படுத்தினால் ஸ்திரமான ஆட்சியைத் தரமுடியுமா?'' என்று காங்கிரஸ்காரர்களும் கேள்வி எழுப்பினர்.

''எங்களுக்கு நிர்வாக அனுபவம் இல்லை என்கிறார்கள். வாய்ப்புக் கொடுத்தால்தானே அனுபவம் வரும். காங்கிரசைவிட நன்றாக ஆட்சி செய்வோம், ஸ்திரமான ஆட்சியைத் தருவோம்'' என்று தி.மு.க. கூறியது.

தமிழகத்திலும் சரி, அகில இந்திய அளவிலும் சரி தேர்தல் காலத்தில் வன்முறை தலைதூக்கியது. புவனேஸ்வரத்தில் பேசிய பிரதமர் இந்திரா காந்தியின் கூட்டத்தில் கல்வீச்சு நடந்தது. இந்திராகாந்தியின் மூக்கில் காயம் ஏற்பட்டது. சென்னை கோட்டூரில் கருணாநிதியைத் தாக்க ஒரு கும்பல் முயன்றது.

பெரு முதலாளிகளின் தேர்தல் நிதி யாருக்கு அதிகம் கிடைக்கிறது என்ற சர்ச்சையும் எழுந்தது. இந்திராகாந்திக்கு சோவியத் யூனியனிலிருந்து தேர்தல் செலவுக்குப் பணம் வந்தது என்றும் கோதுமை இறக்குமதிக்கு லஞ்சம் தரப்பட்டது என்றும் புகார் தெரிவிக்கப்பட்டது.

சுதந்திரா கட்சிக்கு பம்பாயிலிருந்து பணம் கிடைப்பதாக பக்தவத்சலம் கூறினார். தேர்தல் நிதியாக ரூ.1.28 கோடி அக்கட்சிக்குக் கிடைத்திருப்பதாக டி.டி.கிருஷ்ணமாச்சாரி புகார் தெரிவித்தார். ''நான் பணம் வசூலிக்கவில்லை என்று சொல்லவில்லை. காங்கிரசுக்குப் பெருந்தொகை கொடுத்துள்ள ஒரு தொழிலதிபர் எனக்கு எதுவும் கொடுக்க மறுத்துவிட்டார். எங்களுக்குக் கிடைத்த பணத்தைக் குறிப்பிடும் காங்கிரசாருக்கு எங்களைவிட 50 சதவீதம் கூடுதலாகக் கிடைத்ததை ஏன் மறைக்கிறார்கள்?'' என்று ராஜாஜி கேட்டார். (தினமணி, 9.2.1967)

''முரண்பாடான கொள்கை உடையவர்கள் கூட்டணி சேருவதா என்று கேட்கிறார்கள்; சாதிப்பற்றோ, சாதித்துவேஷமோ இல்லாத கட்சி தி.மு.க. அந்தக் கட்சிக்குரிய தனி அம்சம் அது'' என்றார் ராஜாஜி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''தேர்தலில் தி.மு.க.வை நான் வலையில் வீழ்த்திவிட்டதாக பக்தவத்சலம் பேசியிருக்கிறார். ஆனால் என்னுடைய பழைய நண்பர்கள் சிலரோ, என்னைத்தான் தி.மு.க., அதன் வலையில் வீழ்த்தியிருப்பதாகக் குறைபடுகிறார்கள். இரண்டுமே தவறு. யாரும் யாரையும் வீழ்த்தவும் இல்லை; கவிழ்க்கவும் இல்லை. காங்கிரசைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்ற ஆசைதான் என்னை வலையில் வீழ்த்தி இருக்கிறது'' என்றார் ராஜாஜி.

1967-ம் ஆண்டு பிப்ரவரி 15, 21 தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடந்தது. ஆளப் பிறந்தவர்கள் என்ற காங்கிரசின் தனி உரிமைக்குப் பலத்த அடி கிடைத்தது. காமராஜர், முதலமைச்சர் பக்தவத்சலம் மட்டுமின்றி கக்கன், மன்றாடியார், ராமையா, மஜீத், ஜோதி வெங்கடாசலம் ஆகிய அமைச்சர்களும் தோல்வி அடைந்தனர். ஆர். வெங்கட்ராமன், சி.சுப்பிரமணியம், ஓ.வி. அளகேசன் ஆகியோர் மக்களவைத் தேர்தலில் தோல்வியைத் தழுவினர். திருச்சியிலிருந்து மூன்றுமுறை தேர்வு பெற்ற கம்யூனிஸ்ட் தலைவர் எம்.கல்யாணசுந்தரமும் தோல்வியடைந்தார்.

தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்கம், பஞ்சாப், பிகார், உத்தரப் பிரதேசம், ஒரிசா, ஹரியாணா ஆகிய எட்டு மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் ஆட்சி அமைந்தன.

அகில இந்திய அளவில் காங்கிரசின் வாக்கு விகிதம் முந்தைய தேர்தலைவிட 5 சதவீதம் குறைந்து விட்டது. 40.8 சதவீத வாக்குகளைப் பெற்ற அக்கட்சி மக்களவையில் 283 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 4.9 சதவீத வாக்குகளைப் பெற்று 23 இடங்களையும், மார்க்சிஸ்ட் கட்சி 4.5 சதவீத வாக்குகளைப் பெற்று 19 இடங்களையும் பெற்றன. முந்தைய தேர்தலில் ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி 29 உறுப்பினர்களைத்தான் கொண்டிருந்தது.

ஜனசங்கம் 9.2 சதவீத வாக்குகளைப் பெற்று 35 இடங்களைப் பெற்றது. சுதந்திராகட்சி 8.5 சதவீத வாக்குகளைப் பெற்று 42 இடங்களைப் பெற்றது.

தமிழக சட்டப்பேரவைக்கு 173 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. 138 இடங்களில் வெற்றிபெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பறியது. அண்ணா முதல்வர் ஆனார். முந்தைய தேர்தலில் 27 சதவீத வாக்குகளைப் பெற்ற அக்கட்சி, 41.5 சதவீத வாக்குகளைப் பெற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களவையில் போட்டியிட்ட 25 இடங்களிலும் வெற்றி பெற்று அகில இந்திய அரசியலில் அதிர்ச்சி அலையை தி.மு.க. ஏற்படுத்தியது. சுதந்திரா கட்சி ஆறு மக்களவை இடங்களிலும் மார்க்சிஸ்ட் கட்சி 4 மக்களவை இடங்களிலும் வெற்றி பெற்றன. காங்கிரஸ் மூன்று இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

இந்நிலையில் காங்கிரஸ் கட்சி வாக்கு சதவீதம் 35 ஆக குறைந்தது. பேரவையில் 50 இடங்களையே பெற்றது. சுதந்திரா கட்சி 20 இடங்களைப் பிடித்தது. மார்க்சிஸ்ட் கட்சி 11 இடங்களில் வெற்றி பெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2 இடங்களைப் பிடித்தது.

தமிழகத்தில் காங்கிரஸ் எந்த நல்ல காரியங்களையும் செய்யவில்லை என்ற எண்ணம் வேரூன்ற தி.மு.க.வின் பிரசார பலம் உதவியது. தொழில் வளர்ச்சி, சாலைகள், அணைக்கட்டுகள், கல்வி வளர்ச்சி ஆகிய சாதனைகளை காங்கிரஸ் செய்திருந்த போதிலும் அதைத் திறம்பட எடுத்துக்கூறும் திறமை இல்லாதவர்களாக அக்கட்சியினர் இருந்தனர். அரிசிவிலை உயர்வு என்ற அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியதே தோல்விக்கு முழுமுதற் காரணமாக அமைந்தது.

அது தவிர, தமிழ்நாட்டு மக்களின் இனஉணர்வு, தனித்தன்மை ஆகியவற்றுக்கு மதிப்பளிக்காத போக்கு காங்கிரசுக்கு பெரும் சரிவைத் தந்தது. மொழிப்பிரச்சினையில் மத்திய அமைச்சரவையிலிருந்து சி.சுப்பிரமணியம், ஓ.வி. அளகேசன் ஆகியோர் தங்கள் ஆட்சேபத்தை வெளிப்படுத்தியதை உள்ளூர் காங்கிரசார் வரவேற்கவில்லை. அவர்களின் ராஜிநாமா மட்டுமே தமிழ்நாட்டு மக்களைத் திருப்திப்படுத்தப் போதுமானதாக இல்லை.

நேருவின் வாக்குறுதியைச் சட்டமாக்க வேண்டும் என்று சென்னையிலிருந்து வந்த கோரிக்கை விஷயத்தில் மத்திய சர்க்கார் ஒன்றும் செய்யாமல் மழுப்பிவிட்டது என்று காமராஜர் தன் கவலையை வெளியிட்டார். சிறந்த சாதனைகள் செய்தோம். எனினும் மக்களுக்குத் திருப்தியில்லை என்றும் அவர் கூறினார்.

மீண்டும் இந்திரா காந்தி பிரதமர் ஆனார். காங்கிரஸ் கட்சிக்குள் வெளிப்படையான போட்டிகளைத் தவிர்த்து விட்டனர். ஆனால் உட்கட்சிப் பூசலை, கொள்கை மோதலைத் தடுக்க முடியவில்லை. ❑

www.tamilarangam.net

## கங்கையுடன் காவிரி அமைத்த கூட்டணி

ஐந்தாவது பொதுத்தேர்தல் 1971-ல் நடந்த பாங்கைவிட, அத்தேர்தல் ஓராண்டுக்கு முன்கூட்டியே நடத்தப்பட்டதற்கான பின்னணி மிகவும் முக்கியமானது. இப்பின்னணியே தேர்தல் பிரச்சினையாகவும் முன்னின்றது.

ஜாகீர் உசேன் காலமானதை அடுத்து குடியரசுத் தலைவராக யாரைத் தேர்வு செய்வது என்ற சிக்கலில் காங்கிரஸ் கட்சி மாட்டிக்கொண்டது. குடியரசுத் தலைவராக ஜெகஜீவன்ராம் வரவேண்டும் என்று பிரதமர் இந்திராகாந்தி விரும்பினார். ஆனால் மக்களவைத் தலைவராக இருந்த சஞ்சீவரெட்டியை குடியரசுத் தலைவர் பதவிக்கு வேட்பாளராக நிறுத்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி முடிவு செய்தது.

குடியரசுத் துணைத்தலைவராக இருந்தவரே குடியரசுத் தலைவராகவும் வருகிற மரபு பின்பற்றப்பட வேண்டும் என்று கூறிய வி.வி.கிரியும் தேர்தலில் போட்டியிட்டார். பிரதமர் பொறுப்பில் உள்ள தனக்கு நெருக்கடி தரவே தன் விருப்பத்திற்கு மாறாக சஞ்சீவரெட்டியைத் தேர்தலில் போட்டியிடச் செய்கிறார்கள் என்று இந்திராகாந்தி கருதினார்.

www.tamilarangam.net



இந்நிலையில், கட்சியின் விருப்பத்திற்கு மாறாக, கட்சிக் கட்டுப்பாட்டை மீறும் வகையில் குடியரசுத் துணைத்தலைவர் வி.வி.கிரியை ஆதரிப்பதென்று பிரதமர் இந்திராகாந்தி முடிவெடுத்தார். 'மனசாட்சிப்படி வாக்களியுங்கள்' என்று கேட்டுக்கொண்டார்.

காங்கிரஸ் தலைவராக இருந்த நிஜலிங்கப்பா, மொரார்ஜி தேசாய், காமராஜர் போன்ற பெரிய தலைவர்கள் (காங்கிரஸ் சிண்டிகேட்) சஞ்சீவரெட்டியை ஆதரிப்பதில் உறுதியாக நின்றனர். பலப்பரீட்சையில் வி.வி.கிரி வெற்றிபெற்றார். அவரது வெற்றிக்கு தி.மு.க.வும் இடது சாரிகளும் உதவினர்.

இதன் விளைவாக 1969 நவம்பரில் காங்கிரஸ் இரண்டாக உடைந்தது. காங்கிரசைப் புகழ் ஏணியில் ஏற்றிய மகாத்மா காந்தி பிறந்த நூற்றாண்டு கொண்டாடப்பட்ட வருடம் அது. 65 மக்களவை உறுப்பினர்கள் காங்கிரசிலிருந்து விலகினர். இதனால் இந்திராகாந்தி ஆட்சி தனி மெஜாரிட்டி இல்லாத சிறுபான்மை ஆட்சியாக மாறியது. தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக், அகாலிதளம் மற்றும் சில சுயேச்சைகள் ஆதரவில் பதவியில் நீடித்தது.

குடியரசுத் தலைவர் தேர்தல் சர்ச்சை உருவாகிய நேரத்திலேயே 14 பெரிய வங்கிகளைத் தேசியமயமாக்குவது என்ற முடிவை 1970-ம் ஆண்டு ஜூலையில் மத்திய அமைச்சரவை எடுத்தது.

மன்னர் மானிய ஒழிப்புக்கான அரசமைப்புச் சட்டத்திருத்தம் மாநிலங்களவையில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்றது. இதையடுத்து மன்னர் மானிய ஒழிப்பு குறித்து குடியரசுத் தலைவர் அவசரச் சட்டம் பிறப்பித்தார். அந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. உச்சநீதிமன்றம் உயர்வானதா அல்லது மக்கள் மன்றமான மக்களவை உயர்வானதா என்ற அடிப்படையான சர்ச்சை நாட்டில் உருவானது.

முன்னாள் மன்னர்கள் 320 பேரில் 278 பேர் மக்களின் வரிப்பணத்திலிருந்து மானியம் பெற்றுக்கொண்டிருந்தனர். 1950-ம் ஆண்டு முதல் ரூ.101 கோடி அளவுக்கு மன்னர்களுக்கு மானியம் தரப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவர்களின் மானியத்தை ரத்து செய்ய உதவும் சமூக முன்னேற்றம் கருதிய சட்டங்களை உருவாக்க உச்சநீதிமன்றம் முட்டுக்கட்டை போடுவது நல்லதல்ல என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கூறியது.

எதிராளிகளைக் கலங்கடிக்கும் தருணம் பார்த்துக் கொண்டிருந்த இந்திராகாந்தி, மக்களவையைக் கலைத்துவிட்டு மக்களைச் சந்தித்துத் தனது முற்போக்குத் திட்டங்களுக்கு ஆதரவு திரட்ட முடிவு செய்தார். தமிழகத்தில் ஓராண்டு ஆட்சி நடத்த வாய்ப்பு இருந்தபோதிலும் தேர்தலை நடத்த முதல்வர் கருணாநிதி முடிவு செய்தார்.

(1967 -ம் ஆண்டு தேர்தலைத் தொடர்ந்து முதல்வரான அண்ணா 1969-ம் ஆண்டு பிப்ரவரி 3-ம் நாள் காலமானார். பெரும்பான்மை பேரவை உறுப்பினர்களின் ஆதரவுடனும் எம்.ஜி.ஆரின் விருப்பத்தின் அடிப்படையிலும் கருணாநிதி முதல்வராகத் தேர்வு பெற்றார். இதன் காரணமாக அண்ணாவுக்கு அடுத்த நிலையிலிருந்த நாவலர் நெடுஞ்செழியன் அதிருப்தியுற்றார். பின்னர் சமாதானமடைந்தார்.) தமிழகத்தைப் பொறுத்தவரை இரண்டு காங்கிரஸ் கட்சிகளுக்குள் காமராஜர் தலைமையிலிருந்த காங்கிரஸ்தான் பலம் வாய்ந்ததாக இருந்தது. வடவர் எதிர்ப்பு, காங்கிரஸ் எதிர்ப்பில் வளர்ந்த தி.மு.கழகம், இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரசுடன் கூட்டணி அமைத்தது எதிர்பாராத திருப்பமாக அமைந்தது. இந்திய கம்யூனிஸ்ட், பார்வர்ட் பிளாக், பிரஜா சோஷலிஸ்ட், தமிழரசுக் கழகம், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளும் இந்த அணியில் சேர்ந்து தேர்தலைச் சந்தித்தன.

தமிழகம், பாண்டிச்சேரியில்10 மக்களவைத் தொகுதிகளை மட்டும் பெற்றுக்கொண்ட இ.காங்கிரசுக்கு சட்டப்பேரவையில் ஓர் இடம்கூட ஒதுக்கப்படவில்லை. சட்டப்பேரவை இடங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்த சென்னை வந்த மத்திய மந்திரி சஞ்சீவய்யா முதல்வர் கருணாநிதியைப் பார்க்க முடியாமல் திரும்பினார்.

மாநிலத்தின் மீது அக்கறை இல்லாததால்தான் தமிழ்நாட்டில் சட்டப்பேரவை இடங்களைப் பெறுவதில் இந்திராகாந்தி அக்கறை காட்டவில்லை என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்தன. இந்திராகாந்தி அணியில் பக்தவத்சலம், சி.சுப்பிரமணியம் இருந்தனர்.

www.tamilarangam.net



எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் காமராஜரும் ராஜாஜியும் 1970-ம் ஆண்டு டிசம்பர் 15-ம் தேதி சந்தித்துப் பேசினார்கள். இரு துருவங்களாக இருந்தவர்கள் ஓரணியில் செயல்பட முடிவெடுத்தனர். இதன் விளைவாக சிண்டிகேட் என்ற ஸ்தாபன காங்கிரஸ் ஏற்கெனவே ஓர் அணியாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த ஜனசங்கம், சுதந்திரா கட்சியுடன் சேர்ந்து தேர்தலைச் சந்தித்தது.

''தேசத்தை நாசப்படுத்தும் அபாயகரமான இந்திராகாந்தியின் திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் தி.மு.க. நெருக்கமான ஒத்துழைப்புத் தருவதால் தி.மு.க.வை நான் எதிர்க்கிறேன்'' என்றார் ராஜாஜி.

''கம்யூனிஸ்ட் போர்வையின் கீழ் ஆட்சி ஏற்பட்டு விடாதவாறு தேசத்தைக் காப்பதொன்றே இன்றுள்ள மகத்தான பொது நோக்கமாகும். மற்ற விஷயங்கள் நீக்குப் போக்குடையவை. சந்தர்ப்பங்களைப் பொறுத்து நெகிழக்கூடியவை என்று சுயராஜ்யா பத்திரிகையில் ராஜாஜி எழுதினார்.

சிண்டிகேட், இண்டிகேட் என்ற இரு அணிகளில் எதற்கு வாக்களித்தாலும் அது மக்களிடமிருந்து அதிகாரத்தையும் உரிமைகளையும் பறித்துக்கொள்ளும் ஓர் அதிகாரவர்க்க அரசுக்கு வாக்களிப்பதாகத்தான் இருக்கும். இந்த இரண்டு அணிகளிலிருந்தும் சமதூரம் விலகி நிற்போம் என்று கூறி மார்க்சிஸ்ட் கட்சி அகில இந்திய அளவில் தனித்து தேர்தலைச் சந்தித்தது.

'முற்போக்கு' சக்திகளுக்கும் (இந்திரா காந்தி அணி) 'பிற்போக்கு' சக்திகளுக்கும் (சிண்டிகேட், சுதந்திரா, ஜனசங்க அணி) ஏற்பட்டுள்ள தீவிரமான மோதலைப் பின்னணியாகக் கொண்டு தேர்தல் நடைபெறுகிறது. சுதந்திரத்திற்குப் பிறகு, இத்தகைய சவாலுடன் ஒரு தேர்தல் முன் எப்பொழுதும் வந்ததில்லை. (இந்திய கம்யூனிஸ்ட் தேர்தல் அறிக்கை, 1971 : பக்.5) என்று கம்யூனிஸ்ட் கட்சி தன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டது.

வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு சாதாரண மக்களுக்கு பெரும் நம்பிக்கை உருவானது. ஆனால் அவ்வங்கிகள்கூட ஏகபோகவாதிகள் மற்றும் வர்த்தகச் சூதாடிகளின் நலன்களுக்கு ஏற்றவகையில்தான் நிர்வகிக்கப்பட்டதே தவிர, அவை தேசிய மயமாக்கப்பட்ட லட்சியத்துக்கு ஏற்ப நிர்வகிக்கப்படவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆளும் காங்கிரசில் உள்ள சுயநலமிகள், அதிகார வர்க்கத்தின் போக்கே இதற்குக் காரணம் என்றும் கம்யூனிஸ்ட் கூறியது. இருந்த போதிலும் மதவெறி அணியான சிண்டிகேட்டைத் தோற்கடிக்க இந்திராகாந்தியை ஆதரிப்பதாகத் தெரிவித்தது.

தி.மு.கழகம் தனது ஆட்சிக் கால சாதனைகளைச் சொல்லி வாக்கு கேட்டது. அகில இந்திய ரீதியில் மாநில சுயாட்சி இயக்கத்திற்கான ஆதரவு திரட்டும் இயக்கத்தை கட்சி மேற்கொள்ளப் போவதாக அறிவித்தது. (-தி.மு.க. தேர்தல் அறிக்கை : பக்.51) ''சென்னைக்குத் தமிழ்நாடு'' என்ற பெயர் சூட்டப்பட்டது; இந்திக்குப் பள்ளிகளில் வேலையில்லை என்று சட்டமன்றத்தில் இருமொழித்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது, சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடி யாக்கச் சட்டம் இயற்றப்பட்டது, பி.யு.சி.வரை இலவசக் கல்வி அளித்தது, பேருந்து வழித்தடங்களைத் தேசியமயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்ததற்கு ஏற்ப அதில் படிப்படியான வெற்றிச் சாதனைகளை கண்டிருக்கிறது'' என தேர்தல் அறிக்கை விளக்கியது.

''நில உச்சவரம்பு 30 ஸ்டாண்டார்ட் ஏக்கரிலிருந்து 15 ஏக்கராகக் குறைக்கப்பட்டது; ஐந்து ஏக்கர்வரை நிலவரி ரத்து செய்யப்பட்டது; விஞ்ஞான யுகத்திற்கேற்ற சமதர்ம சமுதாயம் அமைப்போம். ஏழை, எளிய மக்கள் வாழ்வு ஒளிபெற சமூகநீதி நிலைத்திட சோசலிஸம் நடைமுறைக்கு வந்திட தனிமனிதனின் வாழ்வுக்கான அடிப்படைச் சொத்துஉரிமைகளைச் சீர்குலைக்காமல் கட்சி சீரிய பணியாற்றும். அதிகமாகின்ற உற்பத்தி ஒரு சிலரது பணப்பெட்டியை மட்டும் நிரப்பாமல் அனைவருக்கும் அந்தப் பலன் விநியோகம் ஆவதில் தகுந்த எச்சரிக்கையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சில பெரிய நடுத்தர தொழில் அமைப்புகளுக்குக் கூட்டுத்துறை முறையை அமல்படுத்த விரும்புகிறோம்'' (-தி.மு.க. தேர்தல் அறிக்கை, 1971:பக்.52) என்று தி.மு.க. தேர்தல் அறிக்கை விவரித்தது.

1967 தேர்தலில் தி.மு.க. வழங்கிய ஒருபடி அரிசித்திட்டம் சென்னை, கோவையில் மட்டும் சில நாட்கள் அமலில் இருந்தது. படிப்படியாக மற்ற ஊர்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் இத்திட்டம் கைவிடப்பட்டது. அத்திட்டத்தைப் பற்றி இத்தேர்தல் அறிக்கையில் தி.மு.க. எதுவும் கூறவில்லை. விலைவாசியைக் கட்டுப்படுத்திட அரசு எடுத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளது என்று மட்டும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

''தி.மு.க.வைச் சேர்ந்த மந்திரிகள் மட்டுமின்றி அக்கட்சியைச் சேர்ந்த மற்றவர்களும் புதுவீடுகள் கட்டியுள்ளனர். கார்கள் வாங்கியுள்ளனர். தி.மு.க. நிர்வாகத்தில் ஊழல் மலிந்துவிட்டது. ஆளும் கட்சியினருக்கு லஞ்சம் கொடுத்தால்தான் இந்த அரசாங்கத்தில் எந்தக் காரியமும் நடக்கின்றது'' என்று தேர்தல் பிரசாரத்தின்போது காமராஜர் புகார் கூறினார்.

'வங்கிகள் தேசியமயமாக்கப்படுவதற்கு நான் எதிரி அல்ல. நடைமுறையில் அதன் பயன் மக்களைச் சென்றடையவில்லை. வாய்ப்பேச்சால் மட்டும் நாட்டின் செல்வம் பெருகிவிடாது'' என்று காமராஜர் பிரசாரம் செய்தார்.

வீராணம் திட்டம், கூவம் சீரமைப்புத் திட்டம் தொடர்பான புகார்கள் அப்போதே எழுந்தன. இதுதவிர வேறு சில பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சரவையிலிருந்து மதியழகன், பாவலர் முத்துசாமி, வேழவேந்தன் ஆகியோரை விடுவிக்கும் நடவடிக்கையை முன்கூட்டியே கருணாநிதி எடுத்திருந்தார்.

சேலத்தில் 1971-ம் ஆண்டு ஜனவரி 24-ம் தேதி திராவிடர்கழகம் நடத்திய ஊர்வலம் தேர்தலில் பெரும் பிரச்சினையாக்கப்பட்டது. அந்த ஊர்வலத்தில் வந்தவர்கள் ராமர் படத்தையும் இந்துக் கடவுளர்களையும் இழிவு படுத்தியதாகக் கூறி பெரும் பிரசாரம் செய்யப்பட்டது. இதுதொடர்பான சுவரொட்டிகள் திடீரென்று முளைத்தன. அதில் ''இந்துக் கடவுளரைச் செருப்பால் அடித்த பெரியாரின் சிலையைத் திறந்த அவரது சீடருக்கா (கருணாநிதி) உங்கள் ஓட்டு'' என்ற வாசகம் இருந்தது.

சேலம் சம்பவம் தொடர்பாக ஆட்சிக்கு எதிராக மாணவர் போராட்டமும் தூண்டிவிடப்பட்டது. இப்பிரச்சினையை முன்வைத்துப் பெரிய பத்திரிகைகள் வகுப்புத் துவேஷத்தை வளர்க்கின்றன என்று முதல்வர் கருணாநிதி புகார் கூறினார். அதேபோல் தி.மு.க.வின் விளம்பரங்களைப் பெரிய பத்திரிகைகள் வெளியிட மறுக்கின்றன என்றும் தெரிவித்தார்.

''பதவியில்தான் இந்திராகாந்திக்கு அக்கறை'' என்று ஜனசங்கத் தலைவர் வாஜ்பாய் பிரசாரம் செய்தார். இந்திராவுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஸ்தாபனப் பற்றுதல் கிடையாது. ஆமாம் சாமிகளைக் கொண்ட ஒரு கட்சியும் ஒரு நாடாளுமன்றமுமே அவரது விருப்பம் என்று சிண்டிகேட் விமர்சனம் செய்தது.

''காங்கிரசுக்குத் தேர்தல் நிதிபெறும் நோக்கத்தில் 1971-ம் ஆண்டு ஜனவரியில் ஒரே மாதத்தில் வழக்கத்தைவிட நான்கு மடங்கு அதிகமாக 200 லைசென்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. எட்டு ஆண்டுகளாக சிறு கார் தொழிற்சாலை தொடங்க மைசூர் அரசாங்கம் மனுப்போட்டுக் காத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்திராகாந்தி, தன் மகன் சஞ்சய்காந்திக்கு சிறு கார் (மாருதி) ஆலை துவங்க லைசென்ஸ் கொடுத்துள்ளார். இதுதான் இந்திரா காந்தியின் சோசலிஸம்' என்று காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா சுட்டிக்காட்டினார்.

சென்னை கடற்கரையில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் காமராஜர், ராஜாஜி ஒரே மேடையில் தோன்றிய மிகப்பெரிய பொதுக்கூட்டம் நடந்தது. காமராஜரின் நெற்றியில் திலகமிட்டு ராஜாஜி ஆசி வழங்கினார். அதில் பேசிய ராஜாஜி ''மன்னர் மானியம் ஒழிக்கிறேன் என்று கூறிவிட்டு அவர்களுக்கு நஷ்டஈடாக 15 மடங்கு பணம் கொடுக்கப் பார்க்கிறார் இந்திரா. அவர்களிடமிருந்து தேர்தல் நிதி வசூலிக்கவும் இந்திரா முயற்சித்தார்'' என்று புகார் கூறினார்.

''கணக்குப் பார்த்தால் இந்திராகாந்தி வசூலித்ததைவிட 5 மடங்கு அதிகமாக தொழிலதிபர்களிடம் தி.மு.க. வசூலித்துள்ளது. எனக்கு எப்படித் தெரியும் என்று நீங்கள் கேட்கலாம். நான் போய் தொழிலதிபர்களிடம் நிதி கேட்கும்போது என்னிடம் இவ்வாறு சொல்கிறார்கள்'' என்றும் பிரசாரத்தின் போது ராஜாஜி கூறினார்.

காமராஜர் பேசுகையில் புது காங்கிரஸ் அதன் தோழர்கள் முற்போக்காளர் என்று சொல்லிக்கொள்வது செயலில் ருசுவாகவில்லை. நாட்டின் பிணிகளை கலப்புப் பொருளாதாரம் மூலம்தான் தீர்க்க முடியும். அரசே எல்லா உற்பத்தி சாதனங்களையும் எடுத்துக் கொள்ள முடியாது. தனியார் துறையும் சரியாக நடந்து கொள்ள வேண்டும். இந்திராகாந்தி தோல்வியடைந்தால் புரட்சி ஏற்படுமென்று கூறுவது மக்கள் மனதை குழப்புவதற்கான மிரட்டலாகும். ராஜாஜியும் புரட்சிக்கு எதிரானவர் அல்ல. நாங்கள் இதைப்போல பயமுறுத்தல்களைப் பார்த்தவர்கள் தான்'' என்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காங்கிரஸ் உடைந்ததால் இந்திரா காங்கிரசுக்குப் பசுவும் கன்றும் சின்னம் ஒதுக்கப்பட்டது. பழைய காங்கிரசுக்கு ராட்டை நூற்கும் பெண் சின்னம் ஒதுக்கப்பட்டது.

காமராஜர் கூட்டணிக்குக் கூடிய கூட்டத்தைப் பார்த்தபோது சிண்டிகேட் அணி வெற்றி நிச்சயம் என்று பேசப்பட்டது. சிண்டிகேட்தான் வெற்றிபெறும் என்ற கணிப்புகளும் வெளியிடப்பட்டன.

1971-ம் ஆண்டு மார்ச் 1, 4, 7தேதிகளில் தமிழ்நாட்டில் தேர்தல் நடந்தது. 43.7 சதவீத வாக்குகள் பெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சி மக்களவையில் மூன்றில் இரண்டுபங்கு இடங்களுக்கு மேல் பிடித்தது. தேர்தல் நடந்த 517 இடங்களில் 350 இடங்களில் இ.காங்கிரஸ் வெற்றி பெற்றது. மீண்டும் இந்திராகாந்தி பிரதமர் ஆனார். இந்திய கம்யூனிஸ்ட் 23, மார்க்சிஸ்ட் 25, ஸ்தாபன காங்கிரஸ் 16, சுதந்திரா 8, ஜனசங்கம் 22 இடங்களைப் பெற்றன. ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 65 எம்.பிக்களில் 56பேர் தோல்வியைத் தழுவினர்.

தமிழகத்தில் மக்களவைக்கு 24 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. 23 இடங்களில் வெற்றி பெற்றது. போட்டியிட்ட நான்கு இடங்களிலும் இந்திய கம்யூனிஸ்ட் வெற்றி பெற்றது. தமிழகத்தில் போட்டியிட்ட 9 இடங்களிலும் இ.காங்கிரஸ் வெற்றியை ஈட்டியது. இ.காங்கிரஸ் சார்பில் மோகன் குமாரமங்கலம் புதுவையிலிருந்து தேர்வு பெற்றார். பார்வர்ட் பிளாக் ஓரிடத்தில் வெற்றி பெற்றது. 29 இடங்களில் போட்டியிட்ட ஸ்தாபன காங்கிரஸ் நாகர்கோயிலில் மட்டும் வெற்றி பெற்றது. அங்கு காமராஜர் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் அதிகமாகப் பெற்று மக்களவைக்குத் தேர்வு பெற்றார்.

பேரவையில் 203 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க., வரலாறு காணாத வகையில் 194 இடங்களில் வெற்றி பெற்றது. கருணாநிதி மீண்டும் முதல்வரானார். மாணவரைக் கொண்டு காமராஜரை முந்தையத் தேர்தலில் தோற்கடித்ததால் இத்தேர்தலில் கருணாநிதிக்கு எதிராக சைதாப்பேட்டை தொகுதியில் மாணவர் குடந்தை ராமலிங்கம் நிறுத்தப்பட்டிருந்தார். ராமலிங்கம் மட்டுமின்றி எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமனும் தோல்வியைத் தழுவினார்.

www.tamilarangam.net



ஸ்தாபன காங்கிரஸ் ஏறக்குறைய 35சதவீத வாக்குகளை அதாவது 55 லட்சம் வாக்குகளைப் பெற்ற போதிலும் 15 பேரவை இடங்களில்தான் வெற்றி பெற முடிந்தது.

''ராஜாஜி என்னை மேடைக்கு அழைத்து அவர் முன் என்னைத் தலைகுனியவைத்து திருநீறு அணிவித்தது ஏழை மக்களுக்குப் பிடிக்கவில்லை போலும். நாம் இப்படி ஏழைகளோடு இருந்து விட்டு ராஜாஜியின் பணக்காரக்கட்சியோடு கூட்டுச் சேர்ந்தது ஏழை மக்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் அவர்களின் ஓட்டுக் குறைந்து நாம் தோற்றிருக்கிறோம் என்று வருத்தப்பட்டுக் கொண்டார் காமராஜர். (-மூன்று முதல்வர்களுடன், பொ.க. சாமிநாதன் : பக்.107)

சட்டப் பேரவையில் இந்திய கம்யூனிஸ்ட் 8, பார்வர்ட் பிளாக் 7, சுதந்திராகட்சி 6, முஸ்லிம் லீக் 6, பிரஜா சோசலிஸ்ட் 4 இடங்களில் வெற்றி பெற்றன.

மகத்தான வெற்றி பெற்றாலும் தி.மு.க.வுக்கு சோதனை உருவெடுத்ததை கருணாநிதி உணர்ந்தார். ''டெல்லியிலிருந்து தொலைபேசியில் எம்ஜிஆர் என்னிடம் உரையாடிய பொழுது, அமைச்சரவையில் தனக்கும் ஓர் இடம் வேண்டும் என்பதையும் அதுவும் 'மெடிகல் மினிஸ்டர்' என்பதையும் சூசமாகத் தெரிவித்து எனது பதிலை எதிர்பார்த்தார்.'' (நெஞ்சுக்கு நீதி, இரண்டாம் பாகம் :பக். 288)

சினிமாவில் நடிப்பதை விட்டுவிட்டு அமைச்சராகலாம் என்ற யோசனையை எம்.ஜி.ஆர் ஏற்றுக் கொள்ளவில்லை.

'வறுமையே வெளியேறு' என்ற கோஷத்தையே தேர்தலின் பிரதான கோஷமாக இந்திராகாந்தி முன்வைத்தார். செல்வாக்கிழந்து வந்த காங்கிரசை மறுபிறவி எடுக்கச் செய்தார். இந்திராகாந்தியைக் கேள்வி கேட்கக்கூடிய தலைவர்கள் இல்லாத நிலைமை கட்சிக்குள் உருவானது. காமராஜர் மற்றும் ஜனநாயகத்தில் அக்கறை கொண்டோரின் எச்சரிக்கைகளையும் மீறி இந்திராகாந்தி தொடர்ந்து தன்னிச்சையாகச் செயல்பட்டார். அவர் நடைபோட்ட ஆபத்தான பாதை நாட்டையே இருளில் ஆழ்த்தக் கூடியதாக இருந்தது. ❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சர்வாதிகாரத்திற்கு படுதோல்வி

இந்திராகாந்தியின் சோசலிஸ கோஷங்கள் நாட்டு மக்களின் வறுமையைத் தீர்க்கவில்லை. ஆட்சி அதிகாரத்தைக் காப்பாற்றிக்கொள்ள அனைத்து தவறான வழிமுறைகளையும் அவர் பின்பற்றினார். தன் மகன் சஞ்சய் காந்தியை அரசியலில் வாரிசாகப் புகுத்தினார்.

தமிழகத்தில் ஆட்சி நடத்தி வந்த தி.மு. கழகத்தில் பதவிப் போட்டி எழுந்தது. கட்சியின் பொருளாளர் எம்.ஜி.ஆர். திடீரென்று போர்க்கொடி உயர்த்தினார். கட்சி நிர்வாகிகள் தங்கள் சொத்துக் கணக்கை வெளியிட வேண்டும் என்று கோரினார். கட்சிக்கு வெளியேயும் இக்கோரிக்கையை வெளிப்படையாகக் கூறிவந்தார். இதனால் 1972 அக்டோபரில் எம்.ஜி.ஆர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

எம்.ஜி.ஆருக்குப் போட்டியாகக் கருணாநிதியின் மகன் மு.க.முத்து முன்பே சினிமாவில் நுழைக்கப்பட்டிருந்தார். தி.மு.க.வுக்கு எதிராகச் செயல்பட முற்பட்ட எம்.ஜி.ஆருக்குப் பின்னணியில் இ.காங்கிரஸ்காரர்களின் கைவண்ணமும் இருந்தது. எம்.ஜி.ஆரை வளைக்க காங்கிரசார் வருமானவரித் துறையைக் கருவியாகப் பயன்படுத்தினர்.

காங்கிரஸ் ஆதரவு நிலையில் இருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் எம்.ஜி.ஆர். மீது அதீத நம்பிக்கை வைத்து அவரது

www.tamilarangam.net



ஆலோசகராகச் செயல்பட்டனர். தி.மு.க. மீது 28 ஊழல் புகார்கள் 1972-ம் ஆண்டு நவம்பரில் குடியரசுத் தலைவரிடம் அ.தி.மு.க. அளிக்க கம்யூனிஸ்ட் கட்சி உதவியது.

அ.தி.மு.கழகத்தை எம்.ஜி.ஆர் துவக்கிய சில மாதங்களிலேயே திண்டுக்கல் இடைத்தேர்தல் நடந்தது. அத்தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. அதன் பின்னர் நடந்த கோயம்புத்தூர், பாண்டிச்சேரி இடைத்தேர்தல்களில் தி.மு.க. செல்வாக்கில் சேதாரம் ஏற்பட்டிருப்பது வெட்டவெளிச்சமானது. இக்கால கட்டத்தில் கருணாநிதிக்கு கட்-அவுட் வைக்கும் கலாசாரம் பெரிய அளவில் நடந்தது. சுவரொட்டிகள் மூலம் கருணாநிதி விளம்பரப்படுத்தப்பட்டார். அவரைத் துதிபாடும் போக்கும் தலைதூக்கியது.

இ.காங்கிரஸ் கட்சியை எம்.ஜி.ஆர். ஆதரித்ததை மார்க்சிஸ்ட் கட்சி கடுமையாக விமர்சித்து வந்தது. ''அனைத்து இன்னல்களுக்கும் அடிப்படையான இன்றைய சுரண்டல் அமைப்பைத் தகர்த்து தரைமட்டமாக்கிட பெரியாரும் விரும்பவில்லை; அண்ணாவும் விரும்பவில்லை. தி.க.வோ, தி.மு.கவோ என்றுமே வர்க்க பேதமற்ற என்ற சொற்றொடரை உபயோகித்ததில்லை. பொதுவாக பொது உடைமைப் பூங்கா என்று அளந்துவிட்டு வந்தனர். ஆட்சிஏறி அமர்ந்த பின்னர் அந்தப் பூங்காவுக்கும் போகும் நோக்கமும் இல்லை. அதற்கான வழிகளையும் அவர்கள் அறியார்கள் என்பது தெளிவாயிற்று. அவர்கள் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளே என்று நாங்கள் கூறிவந்தது மெய்ப்பிக்கப்பட்டது. இப்பொழுது இந்தச் சாதிபேதமற்ற, ஏற்றத்தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் என்ற சொற்றொடர் நம்முன் வரும்பொழுது அதுவும் அண்ணாயிசத்தின் முடிவான குறிக்கோளாக வரும்பொழுது, சுரண்டலை ஒழிப்பது என்பதல்ல நோக்கம் என்பது தெளிவு'' என்று விமர்சித்தது. (-'புரட்சி'தலைவர் எம்.ஜி.ஆருக்கு புரட்சி கட்சியின் பதில், ஏ.பாலசுப்பிரமணியம் :பக்.11)

இதற்கிடையே இந்திராகாந்தியின் செல்வாக்கும் பாதிப்படையும் சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்தன. இந்திரா தொலைபேசியில் 'உத்தரவிட்டதன்' அடிப்படையில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் தலைமைக் காசாளர் நகர்வாலா ரூ.60 லட்சத்தை ஒருவரிடம் அளித்ததாகப் புகார் எழுந்தது. இது கடுமையான சர்ச்சையைக் கிளப்பியது. இந்திரா காந்தி ரேபரேலி

www.tamilarangam.net



தொகுதியில் வெற்றியை ஈட்ட தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டார் என்று அவரிடம் தோற்ற ராஜ்நாராயணன் வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கில் இந்திரா காந்தி வெற்றி பெற்றது செல்லாது என்று அலகாபாத் கோர்ட் நீதிபதி தீர்ப்பளித்தார்.

லஞ்சம், ஊழல், விலைவாசி உயர்வு ஆகியவற்றிற்கு எதிராக பிகாரில் உருவான மக்கள் இயக்கத்திற்கு ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமை தாங்கினார். இந்த 'முழுப்புரட்சி' இயக்கம் நாடு முழுவதும் உள்ள மக்களைக் கவர்ந்தது. இதோடு இந்திராகாந்தி பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையும் சேர்ந்து கொண்டது. இதனால் தன்னையும், தன் ஆட்சியையும் காப்பாற்றிக் கொள்ள நாட்டையே சிறைக் கூடமாக ஆக்கினார் இந்திரா.

உள்நாட்டில் எழுந்த சூழலால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து என்ற காரணத்தை முதன்முறையாகத் தெரிவித்து 1975 -ஆம் ஆண்டு ஜுன் 25-ம் தேதி நெருக்கடி நிலை பிரகடனப்படுத்த ஏற்பாடு செய்தார். (அண்டை நாடுகளால் ஆபத்து என்று கூறித்தான் அதற்கு முன்பு நெருக்கடி நிலைகள் பிரகடனப் படுத்தப்பட்டு வந்தன.)

அடிப்படை ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டன. பத்திரிகைகளில் தணிக்கை முறை அமலானது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்ற பெரிய தலைவர்கள் எல்லாம் சிறைப்படுத்தப்பட்டனர். கைதானவர்களின் பெயர்களைக் கூட பத்திரிகைகளில் பிரசுரிக்க முடியாத நிலை ஏற்பட்டது. நெருக்கடி நிலை குறித்து கவலையடைந்திருந்த காமராஜர் 1975 அக்டோபர் 2-ம்தேதி காலமானார். தமிழக அரசியலின் போக்கைத் தீர்மானித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களான ராஜாஜி (25.12.1972), பெரியார் ஈவெ.ரா. (24.12.1973) ஆகியோர் ஏற்கெனவே காலமாகிவிட்டனர்.

தமிழகத்தில் நெருக்கடி நிலைக்கு எதிராகக் குரல் கொடுத்த கருணாநிதியின் ஆட்சி ஜனவரி 1976-ம் ஆண்டு 31-ல் கலைக்கப் பட்டது. நூற்றுக்கணக்கான தி.மு.கழகத்தினர் சிறையிலடைக்கப் பட்டனர். சிறையில் சித்ரவதை செய்யப்பட்டவர்களில் சாத்தூர் பாலகிருஷ்ணன், சிட்டிபாபு ஆகியோர் உயிரிழந்தனர்.

1972-ம் ஆண்டு நவம்பர் 6-ம் தேதி எம்.ஜி.ஆர். கொடுத்த புகார்ப் பட்டியலை தூசி தட்டி எடுத்து கருணாநிதி மீது சர்க்காரியா

www.tamilarangam.net



கமிஷனை இந்திராகாந்தி 1976 பிப்ரவரி 3-ம் தேதி அமைத்தார். இந்திராகாந்தியின் நடவடிக்கையில் உள்நோக்கம் இருந்தது என்பதை இங்கு விளக்கத் தேவையில்லை.

பத்திரிகையில் கருத்துத் தெரிவிக்கக் கட்டுப்பாடு இருந்தநிலையில் கருணாநிதிக்கு எதிரான தீவிரப் பிரச்சாரத்தை அகில இந்திய வானொலி முடுக்கிவிட்டது. அரசின் செய்தித்துறையும் டெலிவிஷனும் இதே பணியைச் செய்தன. மத்திய அரசின் கட்டப்பாட்டுக்கு உள்பட்ட சமாச்சார் என்ற செய்தி நிறுவனம் மற்ற கட்சிகள் பற்றி அவதூறுகளை பரப்பி வந்தது.

நெருக்கடி நிலை காரணமாக ஐந்தாண்டுக்குப் பின்பும் இந்திரா ஆட்சி நீடித்தது. ஓராண்டுக்குப் பின்னர் தேர்தலை நடத்த இந்திரா முன்வந்தார். ஆறாவது பொதுத்தேர்தல் 1977-ம் ஆண்டு மார்ச் 16, 19 தேதிகளில் கொந்தளிப்பான சூழலில் நடந்தது.

'இந்திராவே இந்தியா; இந்தியாவே இந்திரா' என்ற காங்கிரஸ் தலைவர் டி.கே. பரூவாவின் முகஸ்துதி தேர்தல் சுவரொட்டி வாசகங்களாக மாறின.

சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்த எதிர்க் கட்சியினர் அவசர அவசரமாகக் கூட்டணியை அமைத்தனர். ஸ்தாபன காங்கிரஸ், பாரதீய லோக்தளம், ஜனசங்கம், சோஷலிஸ்ட் கட்சி ஆகியவை ஒன்றாக இணைந்து ஜனதா என்ற கட்சி உருவானது. இ.காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியை ஜெகஜீவன்ராம் துவக்கினார். அவரும் ஜனதா கூட்டணியில் பங்கேற்றார்.

மற்ற மாநிலங்களில் ஜனதா கட்சி ஏர் உழவன் சின்னத்தில் போட்டியிட்டது. தமிழகத்தில் மட்டும் ஸ்தாபன காங்கிரஸ் சின்னமான ராட்டையில் நூல்நூற்கும் பெண் சின்னத்தில் ஜனதா போட்டியிட்டது.

தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் சர்க்காரியா கமிஷனின் இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டது. தேர்தலைச் சந்திக்க தி.மு.க., தனது தேர்தல் அறிக்கையில் 'நாட்டிற்குத் தேவை மற்றக் கட்சிகளுக்கும் வாய்ப்பிருக்கக் கூடிய மக்களாட்சி முறையா அல்லது ஒரே கட்சிதான் இருந்திட வேண்டுமென்ற காட்டாட்சி முறையா?

www.tamilarangam.net



மக்களின் அமைதியும் உரிமையும் தவழும் சூழலா? அல்லது அச்சுறுத்தலும் அரசியல் வஞ்சம் தீர்ப்பதுமான சூதுச் சூழலா? சுருக்கமாய்ச் சொன்னால், ஜனநாயகமா? சர்வாதிகாரமா? என்ற கேள்வியை முன்வைத்தது.

அ.தி.மு.க., இ.காங்கிரஸ் - இந்திய கம்யூனிஸ்ட் அணியும், தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்ட் கட்சி அணியும் தேர்தலைச் சந்தித்தன. குடும்பக் கட்டுப்பாட்டை நிறைவேற்றுவதில் நிர்ப்பந்தம் இருந்ததால் வட மாநிலத்து மக்களிடையே பெரும் அதிருப்தி உருவாகியிருந்தது. இதனால் இத்திட்டத்தில் நிர்ப்பந்தம் எதிர்காலத்தில் நிச்சயம் இருக்காது என்று இ.காங்கிரஸ் உறுதி அளித்தது.

திடீரென்று உருவான ஜனதாவுக்கு வட மாநிலத்து மக்கள் வாக்களித்து முடிவெடுப்பதில் தங்களுக்குள்ள தெளிவை வெளிப்படுத்தினர். 25 ஆண்டுகளாக மத்தியில் அதிகார பீடத்தை அலங்கரித்து வந்த காங்கிரசை மக்கள் சக்தி வீட்டுக்கு அனுப்பி வைத்தது. இந்திய வரலாற்றில் முதன்முறையாக ஒரு கட்சி ஆட்சி முறைக்கு விடை கொடுக்கப்பட்டது. பிரதமர் இந்திரா காந்தியே தேர்தலில் தோல்வியைத் தழுவினார்.

தேர்தலில் 492 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் 152 இடங்களில்தான் வெற்றி பெற்றது. 34.5 சதவீத வாக்குகளைப் பெற்றது. ஜனதா கூட்டணி 43 சதவீத வாக்குகளைப் பெற்று 297 இடங்களில் வென்றது. மொரார்ஜி தேசாய் பிரதமர் ஆனார்.

காங்கிரஸ் கட்சியுடன் அணி சேர்ந்திருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முதன் முறையாக செல்வாக்குச் சரிவைச் சந்தித்தது. 91 இடங்களில் போட்டியிட்ட அக்கட்சி 7 இடங்களில்தான் வெற்றி பெற்றது. 53 இடங்களில் போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கட்சி 22 இடங்களில் வெற்றி பெற்றது.

தமிழகத்தில் 20 இடங்களில் போட்டியிட்ட அ.தி.மு.க. 18 இடங்களில் வெற்றி பெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்ட மூன்று இடங்களிலும் வெற்றியை ஈட்டியது. 15 இடங்களில் போட்டியிட்ட இ.காங்கிரஸ் 14 இடங்களில் வெற்றி பெற்றது. 18 இடங்களில் போட்டியிட்ட ஜனதா சார்பில் பா.ராமச்சந்திரன், குமரிஅனந்தன், தண்டாயுதபாணி ஆகிய மூவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெற்றி பெற்றனர். 19 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. சார்பில் ஏ.வி.பி. ஆசைத்தம்பி மட்டுமே வெற்றி பெற்றார்.

மக்களவைத் தேர்தல் முடிந்த பின்னர் தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தல் 1977-ம் ஆண்டு ஜூன் 12, 14 தேதிகளில் நடந்தது. ஆனால் இத்தேர்தலில் நான்குமுனைப் போட்டி உருவானது. அதிக இடங்களை இ.காங்கிரஸ் கோரியதால் அ.தி.மு.க.வுடன் இருந்த உறவு முறிந்தது.

தி.மு.க. அணியில் இருந்த மார்க்சிஸ்ட் கட்சி திடீரென்று அ.தி.மு.க.விற்குத் தாவியது. இ.காங்கிரஸ் தமிழகத்தில் பலம் பெற்றுவிடாமல் தடுக்க இந்த உபாயத்தைப் பின்பற்றியதாக அது கூறிக்கொண்டது. இந்திராகாந்தியின் சர்வாதிகாரத்தைக் கண்டிக்காத எம்.ஜி.ஆருடன் மார்க்சிஸ்ட் ஏற்படுத்திய உறவு சந்தர்ப்பவாதமானது என்று விமர்சனம் எழுந்தது.

இ.காங்கிரஸ், திமுக, அதிமுக, ஜனதா ஆகியவை தனித்துத் தேர்தலைச் சந்தித்தன. கட்சி துவங்கிய ஐந்தாண்டுகளிலேயே அ.தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது. எம்.ஜி.ஆர். முதல்வரானார். எனினும் பேரவைத் தேர்தலில் அக்கட்சி 30.37 சதவீத வாக்குகளைத்தான் பெற்றது.

தி.மு.கழகம் 24.89 சதவீத வாக்குகளையும், ஜனதா கட்சி 16.66 சதவீத வாக்குகளையும் பெற்றன. இவ்விரு கட்சிகளும் இணைந்து தேர்தலைச் சந்தித்திருந்தால் 30.37 சதவீதவாக்குகளைப் பெற்ற எம்.ஜி.ஆர். அத்தேர்தலில் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பது வெள்ளிடைமலை. இரண்டு கட்சிகளின் வாக்குகளைக் கூட்டிப் பார்த்தால் இக்கட்சிகள் தாராளமாக 137 இடங்களில் வெற்றி பெற்றிருக்க முடியும். முன்னதாக நடந்த இடைத்தேர்தல் களின்போது காமராஜர் உயிருடன் இருந்தபோது அ.தி.மு.க.வுக்கு அடுத்த இடத்தில் ஸ்தாபன காங்கிரஸ் வாக்குகளைப் பெற்றது.

காமராஜர் மறைவுக்குப் பின்னரும் அதே அளவு செல்வாக்கு இருக்கும் என்று தப்புக்கணக்குப் போட்டு ஜனதா கட்சி தனித்துப் போட்டியிட்டது. அதேபோல் 1977-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் மூன்று இடங்களில் வெற்றி பெற்றதால் தி.மு.க.வை விடத் தனக்குச் செல்வாக்கு அதிகமாக இருப்பதாக அது மயக்கத்தில் இருந்தது. அன்று போட்ட தப்புக்கணக்கு அக்கட்சி தமிழகத்தில் பலவீனமடைந்ததற் கான காரணங்களில் ஒன்றாகிப் போனது. ❑

www.tamilarangam.net

# ஜனதா மாற்று சக்தியின் அற்பாயுள்

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய அரசியலில் தனிக்கட்சி ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. எனினும் துவக்கத்திலேயே மாற்று சக்தியின் குறைபாடுகள் தெரிய ஆரம்பித்தன. ஜனதா ஆட்சியில் 19 அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் ஏற்க இருந்த தினத்தில் ஜெகஜீவன்ராம், எச்.என் பகுகுணா, ராஜ்நாராயணன், ஜார்ஜ் பெர்னாண்டஸ், நானாஜி தேஷ்முக் ஆகிய ஐந்துபேர் வராமல் இருந்து விட்டனர். ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலையிட்டு சமாதானம் செய்த பின்னர் அடுத்தநாள் இந்த ஐவரும் அமைச்சரவையில் சேர்ந்தனர். துணைப்பிரதமர் பொறுப்பைக் கேட்ட ஜெகஜீவன்ராம் பாதுகாப்பு அமைச்சராக ஆனதுடன் அன்றைய நிலையில் திருப்தியடைய நேரிட்டது. அதன் பின்னரே ஜகஜீவன்ராமும் சரண்சிங்கும் துணைப்பிரதமர்களாக ஆனார்கள்.

காங்கிரஸ் ஆட்சி நடந்த உத்தரப்பிரதேசம், பிகார், ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்கம், ஒரிசா, இமாசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய ஒன்பது மாநில ஆட்சிகளை டிஸ்மிஸ் செய்யும் அதிரடி நடவடிக்கையில் (மே 1977) ஜனதா அரசாங்கம் இறங்கியது. இந்த ஒன்பது மாநிலங்களின் ஆளுநர்களின் அறிக்கையைப் பெறாமலேயே ஆட்சிக் கலைப்பை மத்திய அரசு நிறைவேற்றியது. இந்த ஒன்பது மாநிலங்களில், ஏழு மாநிலங்களில்

www.tamilarangam.net



ஓராண்டு அவகாசத்திற்குள் தேர்தல் நடக்க இருந்தது. எனினும் ஜனதா அரசாங்கம் இந்த ஆட்சிக் கலைப்புகள் மூலம் மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியது.

நெருக்கடி கால அத்துமீறல்கள் பற்றி விசாரிக்க ஷா கமிஷன் நியமிக்கப்பட்டது. விசாரணை மூலம் அடக்குமுறை பற்றிய பல உண்மைகள் வெளிவந்தன.

ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் இந்திராகாந்தியைக் கைது செய்யும் முடிவு ஜனதா ஆட்சியின் குளறுபடிகளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. அக்டோபர் 3-ம் தேதி அவர் கைதாகும் தினத்தில் காங்கிரசார் பெரும் ரகளை செய்தனர். அவரை அடுத்த நாள் கோர்ட் விடுதலை செய்வதாக அறிவித்தது. தேர்தலை முன்னிட்டு கட்சிக்காரரர்களுக்காக இந்திராகாந்தி பெரும் தொழிலதிபர்களிடமிருந்து ஜீப் வாங்கியது உள்ளிட்ட புகார்களுக்கு ஆதாரம் எதுவும் இல்லாததால் கோர்ட் விடுதலை செய்ய உத்தரவிட்டது.

பெல்ச்சியில் 11 ஹரிஜனங்கள் கொல்லப்பட்டதை அடுத்து அந்த இடத்திற்கு யானையில் இந்திராகாந்தி சென்று மக்களுக்கு ஆறுதல் அளித்தது அவருக்குப் பெரும் புகழை ஈட்டித்தந்தது. சிக்மகளூர் இடைத்தேர்தலில் இந்திராகாந்தி மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஜனசங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஜனதாவில் ஐக்கியமான பின்னரும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் உறுப்பினராக இருந்தனர். இந்த இரட்டை உறுப்பினர் முறையை ஜனதாவில் உள்ள சோசலிஸ்டுகள் எதிர்த்தனர். இவ்விஷயத்தில் பிரதமர் மொரார்ஜி தேசாய் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடக்கத்தில் ஜனதா கட்சியிலிருந்து ராஜ்நாராயண் ராஜிநாமா செய்தார். முன்னாள் பாரதீய லோக்தளத்தைச் சேர்ந்தவர்கள் பத்துபேர் அடுத்து ராஜிநாமா செய்தனர். ஜனதா (செக்யூலர்) என்ற கட்சியை ராஜ்நாராயண் துவக்கினார். அடுத்தடுத்து பலர் விலகிடவே ஜனதா கட்சி தனது பெரும்பான்மையை இழந்தது.

பெட்ரோலிய அமைச்சராக இருந்த பகுகுணா விலகியபோது ஜாம்ஷெட்பூர், அலிகார் கலவரங்களுக்குப் பின்னணியில் ஆர்.எஸ்.எஸ். இருந்ததைச் சுட்டிக்காட்டி அறிக்கை விட்டார்.

www.tamilarangam.net



ஜனசங்கம் மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளின் கைதியாக பிரதமர் தேசாய் இருக்கிறார் என பகுகுணா வர்ணித்தார்.

தேசாய் அரசு 28 மாதம் பொறுப்பில் இருந்த பின்னர் 1979-ம் ஆண்டு ஜூன்15-ல் ராஜினாமா செய்தது. காங்கிரஸ் ஆதரவில் சரண்சிங் பிரதமர் ஆனார். ஆகஸ்ட் 20-ல் இந்திராகாந்தி தனது ஆதரவை வாபஸ் பெற்றார். இதையடுத்து சரண்சிங்கும் பதவி விலகினார். மக்களவையைச் சந்திக்காமலேயே பிரதமர் பதவியை வகித்தவர் என்ற பெயரைப் பெற்றார் சரண்சிங்.

மக்களவைக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தேர்தலுக்கு முன்பே அ.தி.மு.க. - இ.காங்கிரஸ் உறவில் விரிசல் ஏற்பட்டுவந்தது. தஞ்சாவூரில் (15.7.1979) இடைத்தேர்தலின்போது அங்கு இந்திரா காந்தி போட்டியிடுவதாக இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் பாதுகாப்புக் காரணங்களைக் கூறி அங்கு இந்திரா போட்டியிட வேண்டாம் என்று எம்.ஜி.ஆர். கூறினார். மொரார்ஜி தேசாயின் நிர்பந்தம் காரணமாகவே தன் முடிவிலிருந்து எம்.ஜி.ஆர். பின்வாங்கினார் என்ற விமர்சனம் எழுந்தது.

அ.தி.மு.க.வின் ஊசலாட்டப் போக்கைப் பார்த்த இந்திராகாந்தி தி.மு.க.வுடன் கூட்டணி வைக்க முன்வந்தார். ''நேருவின் மகளே வருக; நிலையான ஆட்சி தருக'' என்ற கோஷத்தை கருணாநிதி முன்வைத்தார்.

நெருக்கடி நிலை காலத்தில் கட்சியினர் அனுபவித்த சித்ரவதைகள், இன்னல்கள் மறக்கப்படும் முன்பே இ.காங்கிரஸ் விஷயத்தில் தி.மு.க. தன் நிலையை மாற்றிக் கொண்டது. சர்க்காரியா கமிஷனிலிருந்து தப்பும் உள்நோக்கம் காரணமாகவே திமுக இ.காங்கிரசை ஆதரிக்க முன்வந்தது என்ற விமர்சனம் எழுந்தது. அக்கட்சியுடன் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணியை லட்சிய உறவு என்று கருணாநிதி அழைத்தார். ''நான் நெருக்கடி நிலையை எதிர்த்தேன் என்றாலும்கூட, அம்மையார் அறிவித்த இருபது அம்சத் திட்டத்தை வரவேற்றிருக்கிறேன். இன்னும் கூடச் சொல்லப்போனால் சஞ்சய் காந்தி இங்கே சொன்னாரே ஐந்து அம்சத் திட்டம் அதை இந்தியாவிலேயே நெருக்கடி நிலையை எதிர்த்த அந்தக் காலத்திலேயே வரவேற்றது கருணாநிதிதான் என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்'' என்றார் கருணாநிதி. (-முரசொலி, 26.11.1979)

www.tamilarangam.net



சரண்சிங் அமைச்சரவையில் அ.தி.மு.க சார்பில் சத்தியவாணி முத்துவும் பாலாபழனூரும் மத்திய அமைச்சர்களாகப் பொறுப் பேற்றனர். ஜனதா கட்சியுடன் உறவை ஏற்படுத்திக் கொண்ட எம்.ஜி.ஆர். ஜெகஜீவன்ராம் பிரதமராக வருவதற்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறினார். இந்நிலையில் இரண்டு அ.தி.மு.க. மத்திய அமைச்சர்களையும் விலகும்படி சரண்சிங் கேட்டுக்கொண்டார். அதனால் அவர்கள் இருவரும் ராஜினாமா செய்ய நேரிட்டது.

மக்களவைத் தேர்தல் 1980-ம் ஆண்டு ஜனவரி 3, 6 தேதிகளில் நடந்தது. 1978-ல் வழங்கப்பட்ட கைச் சின்னத்தில் போட்டியிட்ட காங்கிரசை மீண்டும் மக்கள் அரியணையில் ஏற்றினர். ஜனதா கட்சியினரின் பதவிச் சண்டை, நிலையற்ற அரசியல் போக்கு பற்றிய காங்கிரசின் விமர்சனம் மக்களிடம் நன்கு எடுபட்டது.

காங்கிரஸ் 42.7 சதவீத வாக்குகளைப் பெற்று 353 இடங்களில் வென்றது. சரண்சிங் கட்சி 41, மார்க்சிஸ்ட் 36, ஜனதா 31, தி.மு.க.16, இந்திய கம்யூனிஸ்ட் 11 இடங்களைப் பெற்றன. எதிர்க்கட்சி அந்தஸ்துள்ள கட்சி மக்களவையில் இல்லாத தொடக்க கால நிலைமை மீண்டும் உருவானது.

தமிழகத்தில் 24 இடங்களில் போட்டியிட்ட அ.தி.மு.க. சிவகாசி, கோபிசெட்டிபாளையம் ஆகிய இரண்டே இடங்களில் மட்டும் வெற்றி பெற்றது. 22 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் 20 இடங்களில் வெற்றி பெற்றது. போட்டியிட்ட 16 இடங்களிலும் தி.மு.க வெற்றி பெற்றது.

முன்னதாக உ.பி., பிகார், ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்கம், ஒரிசா, இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சிகள் 1977-ல் கலைக்கப்பட்டன. மக்களவைத் தேர்தலில் இம்மாநிலங்களில் இ.காங்கிரஸ் தோல்வியுற்றதைக் காரணம் காட்டியே மத்தியில் ஆண்ட ஜனதா கவிழ்ப்பு நடவடிக்கையில் இறங்கியது.

அதே பாணியைப் பின்பற்றி ஜனதா ஆட்சி நடந்த இடங்களில் இந்த ஆட்சிகளை இந்திரா காந்தி கலைத்தார். தமிழகத்தில் அ.தி.மு.க. தோல்வியுற்றதால் அந்த ஆட்சியையும் கலைக்க இந்திரா முன்வந்தார். தமிழக ஆட்சியைக் கலைக்கும் கோரிக்கையை

www.tamilarangam.net



வலியுறுத்துவற்காக தில்லியில் கருணாநிதி முகாமிட்டார். தமிழக ஆட்சிக் கலைப்புக்குப் பின்னர் சென்னை திரும்பிய கருணாநிதிக்கு விமானநிலையத்தில் தி.மு.க.வினர் மாலையிட்டு வரவேற்றனர்.

எம்.ஜி.ஆர். மீதான ஊழல் புகாரப் பட்டியலை 1980-ம் ஆண்டு பிப்ரவரியில் ஆளுநரிடம் தி.மு.க. தந்திருந்தது. இ.காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியிலிருந்து எல்.இளைய பெருமாளுக்குப் பதிலாக எம்.பி.சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டார். இதனால் தி.மு.க. - இ.காங்கிரஸ் உறவில் சிக்கல் ஏற்பட்டது.

ஆயினும் தி.மு.க. - இ.காங்கிரஸ் சரிபாதி இடங்களைப் பகிர்ந்து கொண்டு பேரவைத் தேர்தலைச் சந்தித்தன. முதன்முறையாக இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகளும் ஓரணிக்கு வந்து அ.தி.மு.க.வுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டன. நெருக்கடிநிலையை ஆதரித்தது தவறு என்று கம்யூனிஸ்ட் கட்சி சுய விமர்சனம் செய்து கொண்டது.

யார் முதல்வர் என்ற சர்ச்சையைக் காங்கிரசார் கிளப்பினர். அதிக இடங்களில் வெற்றிபெறுகிற கட்சியின் சார்பில்தான் முதல்வர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். இந்திரா காந்தி தலையிட்டு கருணாநிதி முதல்வராக வருவார் என்று அறிவித்தார்.

''முதல்வரை முடிவு செய்ய வேண்டியது மக்கள்தான். மத்தியில் உள்ள தலைவர்கள் அல்ல. சர்க்காரியா கமிஷனிலிருந்து தப்பவே இந்திராவுடன் கருணாநிதி கூட்டணி சேர்ந்தார்'' என்று எம்.ஜி.ஆர். பிரசாரம் செய்தார்.

கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் தேர்தலை ஆக்கிரமித்தன. விவசாயக் கடன் ரத்து, ஐந்து கிலோ அரிசி வாங்கும் வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு ஒரு கிலோ அரிசி இலவசம் என்று அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை வாக்குறுதி அளித்தது.

தி.மு.க.வோ ஏழைப்பெண்கள் திருமணம் முடிக்க தாலிக்குத் தங்கம் போன்ற வாக்குறுதிகளை அளித்தது. ''எம்.ஜி.ஆர். இரண்டரை ஆண்டுக்காலம் நடத்தியது ஆட்சியல்ல. சினிமாக் காட்சியே'' என்று கருணாநிதி பிரசாரம் செய்தார்.

பிற்பட்ட வகுப்பினர் சலுகைகளைப் பெற ஆண்டு வருமானம் ரூ.9,000 ஆக இருக்க வேண்டும் என்று 1979-ம் ஆண்டு ஜூலை 2-ம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேதி எம்.ஜி.ஆர். அறிவித்திருந்தார். மக்களவைத் தேர்தலில் தோல்வியைக் கண்ட அவர் வருமான வரம்புத் திட்டத்தை ரத்து செய்ததோடு பிற்பட்ட வகுப்பினர் இட ஒதுக்கீட்டு அளவை 32 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக தேர்தலுக்கு முன்பு உயர்த்தினார்.

வெற்றி உறுதி என்று எதிர்பார்த்திருந்த தி.மு.க. - இ.காங்கிரஸ் கூட்டணி தோல்வியைச் சந்தித்தது. கருணாநிதி வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கையில் அவரை வாழ்த்தி மிகப்பெரிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. காலைவாரி விடுகிற பாணியில், மறைமுக சதியில் காங்கிரசார் ஈடுபட்டதால்தான் தோல்வி ஏற்பட்டது என்று கருணாநிதி கருதினார்.

ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி ஒன்று காரண காரிய மின்றி டிஸ்மிஸ் செய்யப்பட்டதை மக்கள் அங்கீகரிக்கவில்லை. தொடக்கக் காலத்தில் எம்.ஜி.ஆர். முடிந்த அளவு ஊழலற்ற ஆட்சியைத் தர முயன்றார். இச்சாதக நிலைமையால் எம்.ஜி.ஆர். வெற்றி பெற்றார். 1980-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் எம்.ஜி.ஆருக்கு எதிராக சி. நாராயணசாமி நாயுடு தலைமையிலான விவசாய சங்கத்தினர் வாக்களித்தனர். பேரவைத் தேர்தலில் தங்கள் விருப்பப்படி சங்க உறுப்பினர்கள் வாக்களிக்கலாம் என்று நாராயணசாமி அறிவித்தார். இந்த நிலைப்பாடும் தேர்தல் முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்று அரசியல் பார்வையாளர்கள் கணித்தனர்.

இத்தேர்தலுக்குப் பின்னர் இ.காங்கிரஸ் - தி.மு.க. உறவு நீடிக்கவில்லை. வெற்றியை ஈட்டக்கூடிய அ.தி.மு.க.வின் தோளை இ.காங்கிரஸ் நாடியது. இவ்விரு கட்சிகளின் செல்வாக்கு குறைந்து வந்தபோதிலும் அக்கட்சிகளே அதிகாரத்தில் நீடிப்பதற்கான நிலைமைகள் உருவெடுத்தன. ❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சாவுக்கும் நோவுக்கும் வாக்கு

**ச**ட்டப்பேரவைக்கு 1980-ம் ஆண்டில் நடந்த தேர்தலுக்குப் பின்னரும் எம்.ஜி.ஆரா? கருணாநிதியா? என்ற மிகக்குறுகிய வட்டத்துக்குள்ளேயே தமிழக அரசியல் வளைய வந்தது. எம்.ஜி.ஆர். ஆட்சியில் தவறுகள் அதிகம் நடக்க ஆரம்பித்தன. ஆயினும் எம்.ஜி.ஆர். மீது கருணாநிதி கூறிய ஊழல் புகார்களை சாதாரண மக்கள் நம்பத் தயாராக இல்லை.

கருணாநிதியை ஒரு வில்லன், தீயசக்தி என்று 'கதாநாயகன் எம்.ஜி.ஆர்.' சித்தரித்து வந்ததால் சாதாரண மக்கள் அதனை நம்பினர். இதோடு எம்.ஜி.ஆர். அதுவரை ஏற்று நடித்து வந்த 'உத்தமர்', 'ஏழைப்பங்காளர்', 'அபலைப் பெண்களின் ஆபத்பாந்தவர்' வேடங்கள் அவரது செல்வாக்கை வாழவைத்தன. இருந்தாலும் அ.தி.மு.க.வில் உட்கட்சி பூசல் என்ற பூதம் கிளம்ப எம்.ஜி.ஆரே காரணமாக இருந்து விட்டார்.

மதுரையில் 1981-ம் ஆண்டு ஜனவரியில் நடத்திய உலகத் தமிழ் மாநாட்டில் அவரது முன்னாள் கதாநாயகி ஜெயலலிதாவின் நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா நட்பு புதுப்பிப்பிக்கப்பட அந்நிகழ்ச்சி பயன்பட்டது.

அது மட்டுமல்ல, 1980 தேர்தல்களில் தி.மு.க. அணியில் இருந்த இந்திராகாந்தியைத் தன் அணியின் பக்கம் ஈர்க்கும் வகையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவரை அம்மாநாட்டிற்கு வரவழைத்து உரையாற்றச் செய்தார் எம்.ஜி.ஆர். அந்நிகழ்ச்சி முடிந்து திரும்பும்போதுகூட தி.மு.க. - இ.காங்கிரஸ் உறவு நீடிக்கும் என்று இந்திரா அறிவித்தார்.

இதற்கிடையே, சர்க்காரியா கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் தி.மு.க.வினர் மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்கை நீதின்றம் 1981-ல் தள்ளுபடி செய்தது.

எம்.ஜி.ஆர். விரும்பியபடி திருப்பத்தூர் இடைத்தேர்தல் திருப்புமுனையை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்தது. ஒரு தொகுதியின் மக்கள் பிரதிநிதி இறந்தால் அந்த இடத்தை அப்பிரதிநிதி சார்ந்துள்ள கட்சிக்கே விட்டுக் கொடுத்துவிடலாம் என்ற 'அபூர்வமான' யோசனையை எம்.ஜி.ஆர். முன்வைத்தார்.

திருப்பத்தூர் இடைத்தேர்தலில் தனித்துப் போட்டியிடுவோம் என்று அறிவித்த இ.காங்கிரஸை அ.தி.மு.க. வலியச் சென்று ஆதரித்தது. ''ஆதரவை ஏற்போம். ஆனால் ஒரேமேடையில் பிரசாரம் கிடையாது'' என்று இ.காங்கிரஸ் அறிவித்தபோதிலும் தனியாகச் சென்று இ.காங்கிரசுக்காக எம்.ஜி.ஆர். பிரசாரம் செய்தார். இ.காங்கிரசே வெற்றி பெற்றது.

அத்தொகுதியில் தனது கூட்டணிக்கட்சியான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை எம்.ஜி.ஆர். காலைவாரிவிட்டார்.

இ.காங்கிரசை ஆதரிப்பதில் தி.மு.க. - அ.தி.மு.க. இடையே கடும்போட்டி நிலவிய காலம் அது. தி.மு.க.வைச் சேர்ந்த கம்பம் நடராஜன் இறந்ததால் பெரியகுளம் மக்களவைத் தொகுதிக்கு இடைத்தேர்தல் வந்தது. அந்நேரத்தில் எம்.ஜி.ஆர். தனது பழைய 'பார்முலா'வைக் கைவிட்டு விட்டு அங்கு அ.தி.மு.க. வேட்பாளரை நிறுத்தினார். இங்கும் இ.காங்கிரஸ் தனித்துப் போட்டியிட முடிவு செய்து, டெபாசிட்டை இழந்தது. அ.தி.மு.க. வெற்றி பெற்றது. அதே சமயத்தில் தி.மு.க.வின் செல்வாக்கும் வளர்ந்தது.

இதன் பின்னர் நடந்த நான்கு பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் அண்ணாநகர், மயிலாடுதுறையில் தி.மு.க. வெற்றியடைந்தது. ஒரு கட்டத்தில் தி.மு.க. - அ.தி.மு.க. இணைப்பு பற்றிய பரிசீலனையில் இரு கட்சிகளின் தலைவர்கள் இறங்கினர். ஆனால் தொடர்போராட்டங்கள் மூலம் எம்.ஜி.ஆருக்கு கருணாநிதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நெருக்கடிகளை ஏற்படுத்தி வந்தார். எம்.ஜி.ஆரும் தி.மு.க.வை பலவீனப்படுத்தும் முயற்சிகளைத் தொடர்ந்தார்.

இக்காலகட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழக மண்ணில் அனுதாபத்தை உருவாக்கியிருந்தது. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக எம்.எல்.ஏ. பதவியைக் கருணாநிதி ராஜினாமா செய்தார். ஆயினும் விரைவிலேயே சட்டமேலவைக்குத் தேர்வு பெற்றார். சட்ட மேலவை எதிர்கட்சித் தலைவராக கருணாநிதி வந்தது எம்.ஜி.ஆருக்குப் பிடிக்கவில்லை. இக்காரணத்தாலோ அல்லது திவால் அறிவித்த நடிகை நிர்மலா மேலவை உறுப்பினராக ஆவதற்கு சட்டப்படி முடியாததாலோ எம்.ஜி.ஆர். ஆட்சியில் மேலவை ரத்து செய்யப்பட்டது.

காமராஜரின் மதிய உணவுத் திட்டத்தை விஸ்தரித்து 1982-83 நிதியாண்டில் 'சத்துணவுத் திட்டம்' என எம்.ஜி.ஆர். கொண்டு வந்தார். மக்களைக் கவர்ந்த அத்திட்டம் எம்.ஜி.ஆர். புகழ் நிலைபெற உதவியது.

குடிப்பழக்கத்தை எதிர்க்கும் வேடங்களில் நடித்துவந்த எம்.ஜி.ஆர். சாராயக் கடைகளைத் திறக்க உத்தரவிட்டார். 'அப்பனுக்குச் சாராயம்; பிள்ளைக்குச் சத்துணவா' என்ற விமர்சனம் பிரபலமடைந்தது.

'எம்.ஜி.ஆர். ஒன்று என்றால் அமைச்சரவையில் உள்ள ஏனையோர் பூஜ்யங்கள்' என்று அமைச்சரவை சகாக்கள் கூறிக்கொண்டனர். எம்.ஜி.ஆர். ஒரு கழுதையை நிறுத்தினாலும் அது வெற்றிபெறும் என்று புகழ்ந்தனர். அதற்கு முன்பே எம்.ஜி.ஆர். உருவத்தைக் கட்சியினர் பச்சை குத்திக் கொண்டிருந்தனர். தலைமை வழிபாடு உச்சக்கட்டத்தை அடைந்தது.

சத்துணவுத் திட்ட உயர்நிலைக் குழுவில் பொறுப்பு, தொடங்கி கொள்கைபரப்புச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் என்று படிப்படியாகப் பதவிகள் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டன. அவர் பங்கேற்கும் நிகழ்ச்சி மேடைகளில் ஒரு நாற்காலி மட்டும் வைக்கும் நடைமுறை அப்போது அறிமுகமானது.

கட்சியில் ஜெயலலிதாவுக்குக் கிடைத்துவந்த முக்கியத்துவத் துக்கு எதிராகக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. இக்குரல்களுக்குப் பின்னணியில் ஆர்.எம். வீரப்பன் இருந்தார். எஸ். திருநாவுக்கரசு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போன்றோர் ஜெயலலிதா ஆதரவு அணியில் திரண்டனர். ஜெயலலிதா எதிர்ப்பாளர்களில் ஒருவரான எஸ்.டி. சோமசுந்தரம் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். ஜெயலலிதாவின் கொள்கை பரப்புச் செயலாளர் பதவியும் பறிக்கப்பட்டது.

1984-ம் ஆண்டு அக்டோபரில் எம்.ஜி.ஆரின் உடல்நலம் திடீரென்று பாதிக்கப்பட்டது. அவர் அமெரிக்காவில் சிகிச்சை பெற பிரதமர் இந்திராகாந்தி உதவினார். எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் அக்டோபர் 31-ம் தேதி தன் பாதுகாப்புக்கு இருந்த போலீசாரின் குண்டுகளுக்கு இந்திராகாந்தி பலியானார். அதற்கு முந்தைய கட்டத்தில் அவசர நிலைக் காலத்தில் சஞ்சய்காந்தியின் செயல்பாடுகள் கடும் விமர்சனத்திற்கு ஆளான போதிலும்இந்திரா காந்தி, சஞ்சயின் ஆலோசனையை ஏற்று நடந்துவந்தார். எட்டு மாநிலங்களில் தேர்தலுக்குப் பின்னர் உ.பி. முதல்வராக சஞ்சய் காந்தி பொறுப்பேற்க வேண்டும் என்று அம்மாநில எம்.எல்.ஏக்கள் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். இருந்த போதிலும் இப்பொறுப்பை ஏற்க வேண்டாம் என இந்திராகாந்தி கூறிவிட்டார். அவருக்கு மிகப்பெரிய பொறுப்பே காத்திருக்கிறது என்பதன் முன்னறிவிப்பாக அது கருதப்பட்டது. பொறுப்புகள் இல்லாத சஞ்சயின் அதிகாரம் கொடிகட்டிப் பறந்தது. காங்கிரஸ் கட்சியின் அதிகாரமும் மத்தியப்படுத்தப்பட்டு வந்தது.

சஞ்சய்காந்தி 1980-ம் ஆண்டு ஜூன்23-ம் தேதி பிளையிங்கிளப்பின் விமானத்தைத் தாழ்வாக ஓட்டியபோது விபத்தில் சிக்கி உயிரிழந்தார். இந்த மரணம் இந்திரா காந்திக்குப் பேரிழப்பாக இருந்தது. அவருக்கு அடுத்தபடியாக ராஜீவ் காந்தியை அரசியலில் நுழைக்க இந்திராகாந்தி விரும்பினார். ''அரசியல் எனக்குத் தெரியாது. எனினும் என் தாயாருக்கு எவ்வகையிலாவது உதவ வேண்டும்'' என்று 'இந்தியா டுடே' பத்திரிகைக்கு 1980 -ம் ஆண்டு ஆகஸ்டில் அளித்த பேட்டியில் ராஜீவ் கூறினார். ஆனால் 1981-ல் அமேதி தொகுதியில் போட்டியிட்டு எம்.பி.ஆனார்.

சஞ்சய்காந்தியின் மனைவி மேனகா காந்தி, இந்திராகாந்தியின் அரசியல் வாரிசாக உருவாக முயற்சித்ததால் குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டது. வீட்டைவிட்டு மேனகா காந்தி வெளியேறினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திராகாந்தியின் படுகொலைக்குப் பின்னர் பிரதமர் பொறுப்பை ஏற்றார் ராஜீவ்காந்தி. உடனடியாக மக்களவைத் தேர்தலை நடத்த முடிவு செய்தார். அதனுடன் சேர்ந்து டிசம்பர் 24-ல் தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலும் நடந்தது.

நியூயார்க் நகரில் ப்ரூக்ளின் மருத்துவமனையில் இருந்து கொண்டே ஆண்டிபட்டி தொகுதியில் போட்டியிட எம்.ஜி.ஆர். மனுச் செய்தார். இந்தியத் தூதரக அதிகாரி முன்பு வேட்புமனுத் தாக்கலுக்கான பிரமாணம் செய்வது சட்டப்படி சரியா என்ற சர்ச்சையும் ஏற்பட்டது.

சாவுக்கு (இந்திரா) ஒரு ஓட்டு; நோவுக்கு (எம்.ஜி.ஆர்.) ஒரு ஓட்டு என்ற கோஷத்தையும் தாயில்லாப் பிள்ளைக்கு (ராஜீவ்) ஒரு வாக்கு வாயில்லாப் பிள்ளைக்கு (எம்.ஜி.ஆர்.) ஒரு வாக்கு என்ற கோஷத்தையும் இ.காங்கிரஸ் - அ.தி.மு.க. கூட்டணியினர் எழுப்பினர். எம்.ஜி.ஆர். உடல் ஐஸ் பெட்டியில் வைக்கப்பட்டிருப்பதா கவும் தேர்தலுக்குப் பின்னர் அவர் மரணம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என்றும் வதந்திகள் உலவின.

சிகிச்சையின் விளைவாக எம்.ஜி.ஆர்.உடல்நிலை தேறிவருவதை விளக்கும் விடியோ படம் எடுக்கப்பட்டு தமிழகம் முழுவதும் திரையிடப்பட்டது. இப்படத்தில் இந்திராகாந்தியின் இறுதி ஊர்வலக் காட்சிகளும் இணைக்கப்பட்டன. படத்தின் பெயர் வெற்றித் திருமகன். பட்டி தொட்டிகளிலும் திரையரங்குகளிலும் இந்தத் திரைப்படம் ஒளிபரப்பப்பட்டது.

நோய்வாய்ப்பட்ட நிலையில் எம்.ஜி.ஆர். தோற்றமளித்த சுவரொட்டிகளும், துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியான இந்திராவின் சுவரொட்டிகளும் பெருமளவில் அச்சடித்து ஒட்டப்பட ஆர்.எம்.வீரப்பன் உள்ளிட்ட அ.தி.மு.க.வின் இரண்டாம் நிலைத் தலைவர்கள் ஏற்பாடு செய்தனர்.

மாநில சுயாட்சிக்கு உத்தரவாதம் செய்துதரும் பூரண சுயாட்சி அமைப்பை இந்தியாவில் உருவாக்கத் தி.மு.க. பாடுபடும் என்று அக்கட்சியின் தேர்தல் அறிக்கை கூறியது.

'ஏழு வருட தண்டனை கொடுத்துவிட்டீர்களே அது போதாதா? எனது 9 வருட ஆட்சிக்காலத்தில் எனக்குத் தெரியாமல் சில தவறுகள் நடந்திருக்கலாம். அப்படித் தவறு செய்தவர்கள்

www.tamilarangam.net



இப்போது எங்கே (அ.தி.மு.க.வில்) இருக்கிறார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். என்னை தண்டனையிலிருந்து மீட்பீர்களா' என்று கருணாநிதி பிரசாரத்தின்போது கூறினார்.

'நான் முதல்வரானால் அப்போது எம்.ஜி.ராமச்சந்திரன் முழு குணமடைந்து முதல்வர் பொறுப்பேற்கத் தகுதியான உடல்நிலையுடன் வந்தால் நான் பதவியை விட்டு இறங்கி எம்.ஜி.ஆரை முதல்வர் பதவியில் அமர்த்துவேன்' என்றும் கருணாநிதி பிரசாரம் செய்தார்.

ஏனைய பல்வேறு பிரச்சினைகள் இத்தேர்தலில் பின்னுக்குத் தள்ளப்பட்டு அனுதாப அடிப்படையில் அ.தி.மு.க. பிரசாரம் செய்தது. பல்வேறு மாவட்டங்களில் ஜெயலலிதா தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

எம்.ஜி.ஆர். பெயரைச் சொல்லி அ.தி.மு.க. அனுதாபம் தேடுவது முறையல்ல. ஏனெனில் அ.தி.மு.க.வினர் கொடுத்த தொந்தரவினால்தான் எம்.ஜி.ஆர். உடல்நிலை மோசமடைந்தது என்று இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் எம். கல்யாணசுந்தரம் விமர்சித்தார்.

உழவர் உழைப்பாளர் கட்சி என்ற கட்சியைத் தொடங்கிய விவசாய சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு, தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்பு காலமானார். எஸ்.டி.எஸ். தொடங்கிய 'நமது கழகம்' தலைமையில் ஆறு கட்சி ஊழல் ஒழிப்புக் கூட்டணியும் தேர்தலைச் சந்தித்தது.

அகில இந்திய அளவில் பஞ்சாப், காஷ்மீர், அஸ்ஸாம் பிரச்சினைகள் வளர இ.காங்கிரசின் அணுகுமுறைகள் காரணமாக இருந்தன. பஞ்சாபில் அகாலிதளத்திற்கு எதிராக பிந்தரன்வாலேயை இந்திராகாந்தி வளர்த்தார். பின்னர் பிந்தரன்வாலே பிரிவினை இயக்கத்தின் தலைவரானார். அமிர்தசரஸில் உள்ள பொற்கோயிலுக்குள் இருந்துகொண்டு செயல்பட்ட தீவிரவாதிகளை வெற்றியேற்ற பொற்கோயிலுக்குள் ராணுவம் நுழைந்தது. பிந்தரன்வாலே கொல்லப்பட்டார். இதன் எதிர்விளைவாகவே இந்திராகாந்தி கொல்லப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலைமைகள் இவ்வாறிருக்க, பிளவு சக்திகளுக்கு எதிர்க்கட்சிகள் ஊக்கமளிப்பதாக ராஜீவ்காந்தி தேர்தல் பிரசாரத்தின்போது புகார் தெரிவித்தார்.

எட்டாவது பொதுத்தேர்தலில் (1984) காங்கிரஸ் புதிய வரலாறு படைத்தது. 515 இடங்களில் போட்டியிட்ட அக்கட்சி 415 இடங்களில் வெற்றி பெற்றது. நேருவின் காலத்தில்கூட இத்தகைய வெற்றியைக் காங்கிரஸ் பெற்றதில்லை. மூன்றில் இரண்டுபங்குக்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்றபோதிலும் 48.1. சதவீத வாக்குகளைத்தான் அக்கட்சி பெறமுடிந்தது.

ஜனதா 219 இடங்களில் போட்டியிட்டு 6.7 சதவீத வாக்குகளைப் பெற்று பத்து இடங்களில் வெற்றி பெற்றது. பாரதீய ஜனதா கட்சி 229 இடங்களில் போட்டியிட்டு 7.4 சதவீத வாக்குகளைப் பெற்று இரண்டு இடங்களில் வென்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 66 இடங்களில் போட்டியிட்டு ஆறு இடங்களைப் பிடித்தது. அக்கட்சி 2.7 சதவீத வாக்குகளையே பெற்றது. 64 இடங்களில் போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கட்சி 22 இடங்களில் வென்று 5.7 சதவீத வாக்குகளைப் பெற்றது. 174 இடங்களில் போட்டியிட்ட லோக்தளம் 9 இடங்களில்தான் வென்றது.

எம்.ஜி.ஆர் வழியில் அரசியலுக்கு வந்த என்.டி.ராமராவின் தெலுங்கு தேசம் மக்களவையில் 30 இடங்களைப் பிடித்தது. தமிழகத்தில் 26 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் 25 இடங்களைப் பிடித்தது. 27 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. இரண்டு இடத்தைப் பிடித்தது. போட்டியிட்ட 12 இடங்களிலும் அ.தி.மு.க. வென்றது. ❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## போஃபர்ஸ் கிளப்பிய புயல்

அமெரிக்காவில் சிகிச்சை முடித்துத் திரும்பிய எம்.ஜி.ஆர். முதல்வர் பொறுப்பேற்றார். கட்சிக்குள் ஒற்றுமை ஏற்படுத்த முடியாமல் திணறினார். சரியாகப் பேசமுடியாத நிலையிலும் நிகழ்ச்சிகளில் பேசி வந்தார். 1987-ம் ஆண்டு டிசம்பர் 24-ம் தேதி அவர் காலமானார். அவர் உயிருடன் இருந்தபோது அ.தி.மு.க.வில் தொடங்கிய பதவிப் போட்டி அவர் மறைந்த தினத்தன்றே வெடித்தது.

ராணுவ வண்டியில் ஏறி எம்.ஜி.ஆரின் தலைக்கு அருகே அமர்ந்திருந்த ஜெயலலிதாவை ஜானகியின் உறவினர் ஒருவர் கீழே தள்ளிவிட்டார். தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பின் மூலம் இச்சம்பவம் தமிழகமெங்கும் பரவியது. ஜெயலலிதாவுக்கு ஆதரவாக எஸ்.திருநாவுக்கரசு, சாத்தூர் ராமச்சந்திரன் ஆகிய அமைச்சர்கள் முனைப்பாகச் செயல்பட்டனர்.

அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்களில் பெரும் பான்மையானவர்களும் அமைச்சர்களும் ஆர்.எம்.வீரப்பன் பிரிவை ஆதரித்தனர். இருந்த போதிலும், ஜானகி எம்.ஜி.ஆரை முதல்வர் ஆக்கினார் ஆர்.எம். வீரப்பன். வாரிசு அரசியல் அல்லது குடும்ப அரசியல் கலாசாரம் பலனளிக்கும் என்று அவர் நம்பினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜானகி ஆட்சியைக் காப்பாற்ற தி.மு.க. ஆதரவு கோரப்பட்டது. ஆனால் தி.மு.க. ஆதரவில்லை என்று தெரிவித்து விட்டது.

ஜெயலலிதா தலைமையில் உருவான அணிக்கு 33 பேரவை உறுப்பினர்களின் ஆதரவே இருந்தது. பேரவையில் பெரும்பான்மையை நிலைநாட்ட ஜானகி அமைச்சரவை திட்டமிட்ட நேரத்தில் ஜெயலலிதா ஆதரவு 33 எம்.எல்.ஏக்களும் விருதுநகரில் உள்ள ஒரு நூற்பாலையில் பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டனர். பேரவையின் பலப்பரீட்சை தினத்தன்று அங்கு வரலாறு காணாத வன்முறை நடந்தது. பேரவை உறுப்பினர்கள் மைக்குகளைப் பிடுங்கி அடித்துக் கொண்டனர். பலருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது. பேரவை வளாகத்துக்குள் ஒரு கும்பல் புகுந்து வன்முறை தாக்குதல் நடத்தியது. தமிழகப் பேரவை வரலாற்றில் நடந்த வன்முறைகளில் எல்லாம் உச்சகட்டமாக அது மாறியது.

தொடக்கத்தில் ஒன்றுபட்ட அ.தி.மு.க.வையே ஆதரிப்போம் என்று கூறிய ராஜீவ்காந்தி, ஜெயலலிதாவின் வேண்டுகோளை ஏற்று, பேரவையில் ஜானகி ஆட்சிக்கு எதிராக வாக்களிக்க தனது கட்சியினரைக் கேட்டுக்கொண்டு விட்டார். ஜானகியின் 28நாள் ஆட்சி கவிழக் காரணமாக இருந்தார்.

ஜானகியை ஆதரிக்க வேண்டும் என்று விரும்பிய சிவாஜிகணேசன், காங்கிரஸ் எம்.எல்.ஏக்களில் பிளவை ஏற்படுத்தினார். (அக்குழுவே பின்னர் தமிழக முன்னேற்றக் கழகம் ஆனது)

தி.மு.கழகத்தில் இரண்டாவது இடத்தில் இருந்த போதிலும் முதல்வர் பதவியைப் பெறமுடியாத நெடுஞ்செழியன் இந்நிலையிலும் இரண்டாவது இடத்தில் இருந்தார். இச்சமயத்திலும் முதல்வராகும் வாய்ப்பைப் பெறவில்லை. இதனால் அதிருப்தியுற்ற அவர் ஜெயலலிதா அணிக்கு மாறினார்.

தமிழக அரசியலில் தனிநபர் விமர்சனம் குழாயடிச் சண்டைத் தரத்திற்கும் கீழே இறங்கியது. ''மோரில் விஷம் கலந்து கொடுத்து எம்.ஜி.ஆரை கொல்லப் பார்த்தார் ஜானகி ; பில்லி சூன்யம் வைத்து ஜானகி என்னைக் கொல்லப் பார்த்தார்'' என்பது போன்ற விமர்சனத்தில் ஜெயலலிதா ஈடுபட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜெயலலிதா அணியில் மேலாதிக்கம் செய்ய இயலாத நிலையில் அதை விட்டு வெளியேறிய நெடுஞ்செழியன், பண்ருட்டி ராமச்சந்திரன், திருநாவுக்கரசு, அரங்கநாயகம் ஆகியோர் விலகி நால்வர் அணியை ஏற்படுத்தினர். இவர்கள் உதிர்ந்த ரோமத்துக்குச் சமம் என்று ஜெயலலிதா விமர்சித்தார்.

தமிழகத்தில் முன்எப்போதும் இல்லாத வகையில் ஆளுநர் ஆட்சி 1988-ம் ஆண்டு மார்ச் முதல் ஓராண்டுக்கு நீடித்தது. அ.தி.மு.க. பிளவுபட்டுள்ள நிலையில் ஆளுநர் ஆட்சி மூலம் நற்பெயர் சம்பாதித்து, ஆட்சியைப் பிடிக்கத் திட்டமிட்டது காங்கிரஸ் .

அ.தி.மு.க.வின் இரு பிரிவினரும் உரிமை கோரிய இரட்டை இலைச் சின்னத்தைத் தேர்தல் கமிஷன் முடக்கியது. அ.தி.மு.க.-ஜெ.வுக்கு சேவல் சின்னமும் ஜானகிக்கு இரட்டைப்புறா சின்னமும் ஒதுக்கப்பட்டன. தேர்தலில், சிவாஜி கணேசன் தொடங்கியிருந்த தமிழக முன்னேற்ற முன்னணியும் ஜானகி அணியும் கூட்டணியாகப் போட்டியிட்டன.

தேர்தலின்போது ஜெயலலிதா அணிக்கு திருநாவுக்கரசு திரும்பி விட்டார். ஜெயலலிதாவை முதல்வராக ஆக்கச்சம்மதிக்காத காங்கிரஸ், 'காமராஜ் ஆட்சி' என்ற முழக்கத்தை முன்வைத்தது. மூப்பனாரை முதல்வர் என்று அறிவித்த ராஜீவ்காந்தி, தமிழகத்தில் 14முறை பிரசாரம் செய்ய வந்தார். சாலையோரம் நின்ற மக்கள், வயல்வெளிகளில் நின்ற மக்களைச் சந்தித்து ராஜீவ் காந்தி உரையாடினார்.

தி.மு.கழக அணியில் 1984-ல் இருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஐந்து சட்டப்பேரவை இடங்களை மட்டுமே ஒதுக்க தி.மு.க. முன்வந்தது. இதனால் இந்திய கம்யூனிஸ்ட், ஜெயலலிதா அணியில் சேர்ந்தது. தி.மு.க. அணியில் மார்க்சிஸ்ட் கட்சி, ஜனதாதளம் இடம் பெற்றன. தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் ஸ்டாலினுக்குப் போட்டியாகக் கருதப்பட்ட நடிகரும் இயக்குநருமான டி.ராஜேந்தர் 'தாயக மறுமலர்ச்சிக் கழகத்'தைத் தொடங்கினார்.

நான்கு முனைப் போட்டியில் வெற்றி பெற்று 13 ஆண்டுகளுக்குப் பின்னர் கருணாநிதி முதல்வரானார். ஜெயலலிதா தலைமையில் உள்ள அ.தி.மு.க. தனிப்பெரும் சக்தி அல்ல என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிரூபணம் ஆனது. போடி தொகுதியில் வெற்றிபெற்ற ஜெயலலிதா எதிர்க்கட்சித் தலைவரானார். ராஜீவின் தீவிரப் பிரசாரத்திற்குப் பின்னரும், ஜெயலலிதா பெற்ற 26 இடங்களுக்கு ஒன்று குறைவாக, 25 இடங்களைத்தான் காங்கிரஸ் பெற்றது.

எம்.ஜி.ஆரின் தொகுதியான ஆண்டிபட்டியில் போட்டியிட்ட அவரது மனைவி ஜானகி மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்டார். ஜானகி அணியில் பி.எச். பாண்டியன் ஒருவர் மட்டுமே வெற்றி பெற்றார். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கருணாநிதி தன் கட்சியினரைக் கட்டுக்குள் வைத்து நல்லாட்சி தர பெரும் முயற்சி எடுத்தார். ஆனால் ஒன்பது மாதத்தில் மக்களவைத் தேர்தலைக் கருணாநிதி சந்திக்க நேரிட்டது. 1989-ம் ஆண்டு நவம்பர் 24-ம் தேதி அத்தேர்தல் நடந்தது.

ஜெயலலிதாவுடன் இணக்கமாகச் செல்லும் மாநிலத் தலைவர் தேவை என்ற அடிப்படையில் மூப்பனாருக்குப் பதிலாக வாழப்பாடி ராமமூர்த்தி காங்கிரஸ் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

முன்னதாக நடந்த சட்டப்பேரவைத் தேர்தல் மூலம் எம்.ஜி.ஆர். வாக்கு வங்கி தனக்கு ஆதரவாக இருப்பதை ஜெயலலிதா நிரூபித்திருந்தார். இதனால் ஜானகி அரசியலை விட்டு ஒதுங்க வேண்டியிருந்தது. இரண்டு அணியும் சேர்ந்ததால் இரட்டை இலைச் சின்னம் மீண்டும் கிடைத்தது. மதுரை கிழக்கு, மருங்காபுரி இடைத்தேர்தலில் ஒன்றுபட்ட அ.தி.மு.க. இரண்டு தொகுதிகளிலும் வெற்றியை ஈட்டியது. கட்சி உடைந்தபின் எதிர்காலமே இல்லை என்றிருந்த அ.தி.மு.க.வினருக்குக் கிடைத்த திடீர் டானிக்காக இந்த இடைத்தேர்தல் முடிவு அமைந்தது.

இந்திராகாந்தி மறைவுக்குப் பின் அமோகமான வெற்றி பெற்று ஆட்சி நடத்தி வந்த ராஜீவ்காந்தியால் திறமைக்குறைவு காரணமாகப் பல சிக்கலான பிரச்சினைகளைச் சமாளிக்க முடியவில்லை. முஸ்லிம் பெண்கள் ஜீவனாம்சச் சட்ட மசோதாவைக் கொண்டுவந்து அதை வாபஸ் பெற்றார். செயலில் இறங்கிவிட்டுப் பின்னர் அதைப் பற்றிச் சிந்திப்பவராக ராஜீவ்காந்தி இருந்தார் என்பதற்கு இது போன்று பல உதாரணங்களைக் கூறலாம். பஞ்சாயத்து ராஜ், நகர்பாலிகா மசோதாக்களைக் கொண்டுவர விரும்பினார். அதன்மூலம் அதிகாரங்கள் கிராமப்புறங்களைச் சென்றடைய முயற்சி எடுத்தார். மாநில அரசின் அதிகாரத்தைக் குறைக்கும் வகையில் இச்சட்டங்கள் கொண்டு வரப்படுவதாக சில மாநிலக் கட்சிகள் புகார் தெரிவித்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீர்மூழ்கிக் கப்பல் வாங்கியதில் ஊழல் என்ற புகார் எழுந்த நிலையில் அது பற்றி விசாரணை நடத்த பாதுகாப்பு அமைச்சராக இருந்த வி.பி.சிங் உத்தரவிட்டார். இதன் விளைவாக ஏற்பட்ட கருத்து மாறுபாட்டால், பதவியை ராஜிநாமா செய்தார் வி.பி.சிங்.

இச்சமயத்தில்தான் சுவீடன் நாட்டிலிருந்து ரூ.1,705 கோடிக்கு போஃபர்ஸ் பீரங்கி, வாங்கப்பட்டதில் ஊழல் என்ற புகாரும் வெடித்தது. இது மட்டுமின்றி பிரிட்டிஷ் ஹெலிகாப்டர் என ராணுவத் தளவாடங்கள் வாங்கியதில் ஊழல் என்ற குற்றச் சாட்டுகளையும் ராஜீவ் காந்தி சந்திக்க நேர்ந்தது. போபர்ஸ் பீரங்கி வாங்கியதில் ரூ.64 கோடி கமிஷன், நான்கு பெயர்களில் சுவிட்சார்லாந்து வங்கியில் போடப்பட்டது என்று சுவீடன் நாட்டு ரேடியோ அறிவித்தது. 'லோட்டஸ்' என்ற புனை பெயரில் பரிவர்த்தனை நடந்தது என்றும் கூறியது.

மிஸ்டர் கிளீன் (பரிசுத்தர்) என்று பெயர் பெற்ற ராஜீவுக்கு எதிரான பிரசாரத்தில் எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி தேசியப் பத்திரிகைகளும் ஈடுபட்டன.

இது அயல்நாட்டு மற்றும் எதிர்கட்சிகளின் சதி என்று காங்கிரஸ் வர்ணித்தது. ராஜீவை மாற்றிவிட்டு நூறு காங்கிரஸ் எம்.பிக்கள் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்கப் போவதாக செய்திகள் உலவின. குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்கும் இதற்கு உடந்தை என்று கூறப்பட்டது. போஃபர்ஸ் பற்றிய ஆவணங்களை ஜெயில்சிங் கேட்டார். 'ஆட்சிக்கவிழ்ப்புக்குப் பலரும் மறைமுகமாகத் தயாரானார்கள். ஆனால் அதற்குத் தலைமையேற்க வி.பி.சிங் தயாராக இல்லை. இந்நிலையில்தான் வி.பி.சிங்கையும் தனது உறவினர் அருண்நேருவையும் ராஜீவ் காந்தி கட்சியிலிருந்து நீக்கினார். தன்னுடன் டூன் ஸ்கூலில் படித்த, அந்நாளைய அமைச்சர்கள் அருண்சிங், ஆரிப்முகமது கான் ஆகியோரின் ராஜினாமாக்களையும் ஏற்றார்.

நடிகர் அமிதாப்பச்சனின் வெளிநாட்டுச் சொத்து பற்றி விசாரிக்க உத்தரவிட்டார். ராஜீவின் நிர்ப்பந்தத்தால் அமிதாப்பச்சன் தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார்.

பீரங்கி ஊழலில் நானோ என் குடும்பத்தினரோ லஞ்சம் எதையும் பெறவில்லை என்று ராஜீவ் காந்தி மக்களவையில் (ஆகஸ்ட் 1987) அறிவித்தார். தொழில் நுட்ப ரகசியங்களை வேவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பார்ப்பதற்காக பீரங்கி பேரப் பணம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று பின்னர் கூறினார். பீரங்கி பேர ஒப்பந்தைத்தை ரத்து செய்து தேசத்தின் மானம் காக்க வேண்டும் என்று ஜெனரல் சுந்தர்ஜி கூறினார்.

போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல் மக்களுக்கு எளிதில் புரிந்தது. விபி.சிங் அணியினர் திறமையான பேச்சாளர்கள். சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் திரளாக்க் கூடினர்.

இச்சூழலில் தேர்தலுக்கு முன் வி.பி.சிங் உருவாக்கிய ஜன்மோர்ச்சா, ஜனதா கட்சி ஆகியவை சேர்ந்து ஜனதா தளம் உருவானது. சந்திரசேகர் தொடர்ந்து 12 ஆண்டுகளாக ஜனதாவை நடத்திவந்தார். 1977-ஆம் ஆண்டு சோதனைக்குப் பின்னர் ஆட்சி அதிகாரத்தின் நுழைவாயிலை அக்கட்சி எட்டிப்பார்க்கும் என்ற நம்பிக்கையே இல்லாதிருந்த நேரம் அது. காங்கிரசிலிருந்து விலகி வந்தவர்களுடன் சங்கமிக்க விரும்பாமல் இருந்தார் சந்திரசேகர். இறுதியில் ஜனதாதளத்தின் முக்கியப் பொறுப்பாளர்கள் பழைய ஜனதாக்கட்சியினராக இருப்பார்கள் என்ற உடன்பாட்டின் அடிப்படையில் ஜனதாதளம் உருவானது.

தி.மு.க., தெலுங்கு தேசம், லோக்தளம், காங்கிரஸ் (எஸ்), அசாம் கணபரிஷத் ஆகியவை சேர்ந்து தேசிய முன்னணி உருவானது. அதன் அமைப்பாளராக வி.பி.சிங் பணியாற்றினார். பாரதீய ஜனதா கட்சி எதிர்ப்பு உருவாகாத காலம் அது. அக்கட்சியுடன் தேசிய முன்னணி தொகுதிப் பங்கீட்டைச் செய்து கொண்டது. இடது சாரிகள் தேசிய முன்னணியுடன் மட்டும் கூட்டணி வைத்துக் கொண்டனர்.

ராஜீவ் ஆட்சியில் நாட்டின் பாதுகாப்பும் கண்ணியமும் நாட்டு மக்களின் அடிப்படை நலனும் பேராபத்திற்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றன என்று தி.மு.க. தேர்தல் அறிக்கை கூறியது. ராஜீவ் ஆட்சியை நீடிக்கச் செய்ய வேண்டும் என்று அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை கூறியது.

தேர்தலில் காங்கிரஸ் பெரும் தோல்வியைச் சந்தித்தது. 510 இடங்களில் போட்டியிட்ட அக்கட்சி 39.5. சதவீத வாக்குகளைப் பெற்று 197 இடங்களில் வெற்றி பெற்றது. 244 இடங்களில் போட்டியிட்ட ஜனதாதளம் 143 இடங்களில் வெற்றி பெற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



225 இடங்களில் போட்டியிட்ட பாரதீய ஜனதா கட்சி 85 இடங்களில் வெற்றி பெற்று திடீர் சாதனையை நிகழ்த்தியது. அக்கட்சி 11.5 சதவீத வாக்குகளைப் பெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 12 இடங்களிலும், மார்க்சிஸ்ட் கட்சி 33 இடங்களிலும் வென்றன.

யாருக்கும் பெரும்பான்மை இல்லாத நிலையில் தேசிய முன்னணி ஆட்சி அமைய பாரதீய ஜனதா கட்சியும் இடது சாரிக் கட்சிகளும் வெளியிலிருந்து ஆதரவை நல்கின. வி.பி.சிங் பிரதமர் ஆனார். மாநிலங்களவை உறுப்பினராக இருந்த முரசொலி மாறன் மத்திய அமைச்சர் ஆனார்.

மத்தியில் எழுந்த ஊழல் எதிர்ப்பு அலை தமிழகத்தைப் பாதிக்கவில்லை. அ.தி.மு.க.11 இடங்களிலும் 28 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ்27 இடங்களிலும் வெற்றி பெற்றன. தி.மு.க. அணியில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி ஓரிடத்தில் மட்டுமே வெற்றி பெற்றது. ஒன்றுபட்ட அ.தி.மு.க. மகத்தான சக்தி என்பதை மக்களவைத் தேர்தல் நிரூபித்தது. ❑

www.tamilarangam.net

## மண்டலும் கமண்டலமும்

*ஜனதாதள நாடாளுமன்றக் கட்சியின் தலைவராக அதாவது பிரதமர் - வேட்பாளராக வி.பி.சிங் தேர்ந்தெடுக்கப்பட்ட போதே கட்சிக்குள் குழப்பம் தலையெடுத்தது.*

*சந்திரசேகர் பிரதமர் ஆக விரும்பினார். அதற்கான போட்டியில் தான் இருப்பதாகக் கூறினார். ஆனால் தேவிலால் பிரதமராக விரும்பினால் அவரை ஆதரிப்பதாகக் கூறினார். அதே சமயத்தில் தேவிலால் பிரதமர் ஆக வரவேண்டும் என்ற நிர்பந்தத்தை ஏற்படுத்தும் வகையில் ஓம் பிரகாஷ் சௌதாலாவைத் தூண்டிவிட்டார் சந்திரசேகர். ஹரியானாவிலிருந்து பஸ்களில் ஜாட் மக்கள் தில்லிக்கு வந்து தேவிலால்தான் பிரதமர் என்று கோஷமிட்டனர்.*

*கட்சித் தலைவர் நவம்பர் 28-ம் தேதி தேர்ந்தெடுக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டது. அது ஒவ்வொரு நாளும் தள்ளிப் போனது. நான்கு நாட்கள் கழித்து கூட்டம் தொடங்கியபோது, வி.பி.சிங் எழுந்து தேவிலால் பெயரை முன்மொழிந்தார். சந்திரசேகர் அதை வழிமொழிந்தார். சிறிது நேரத்திற்குள் பிரதமர் ஆவதைத் தான் விரும்பவில்லை என்று தேவிலால் கூறிவிட்டார். ஊழலுக்கு எதிரான போர் வீரர் வி.பி.சிங்குங்கிற்கே மக்கள் வாக்கு அளித்துள்ளனர். அதனால் அவரை நான் வழிமொழிகிறேன் என்றார்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேவிலால். அஜீத்சிங் வழிமொழிந்தார். இவ்வகையில் வி.பி.சிங் தேர்வு பெற்றவுடன் சந்திரசேகர் அதிர்ச்சி அடைந்தார்.

பிரதமர் பொறுப்பேற்ற வி.பி.சிங், மத்திய அரசுப் பணிகளில் 27 சதவீத இடஒதுக்கீட்டை (7.8.1990) அமல்படுத்தும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவை அறிவித்தார். இம்முடிவு பல சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

இடஒதுக்கீட்டால் மக்கள் மத்தியில் சாதி அடிப்படையிலான பிரிவினை வளர்ந்துவிடும் என்று சிலர் கூக்குரலிட்டனர். சமூகநீதிக் கொள்கையையும் இட ஒதுக்கீட்டையும் நேரடியாக எதிர்க்க முடியாத சிலர் வருமானவரம்பு விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தனர்.

இடஒதுக்கீட்டிற்கு எதிராக கிளர்ச்சி வலுத்தபோது பிற்பட்டோருக்கு இட ஒதுக்கீட்டை நிறைவேற்றுவதா, பதவியில் நீடிப்பதா என்ற கேள்வி வருமானால் கொள்கையைத் தேர்ந்தெடுப்பேன் என்று வி.பி.சிங் அறிவித்தார். வி.பி.சிங்கிற்குப் பதிலாக வேறு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்தால் ஜனதாதள ஆட்சிக்கு காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்று ராஜீவ்காந்தி அறிவித்தார். ஏற்கெனவே புகைந்து கொண்டிருந்த ஜனதாதள உட்கட்சிப் பூசல் கொழுந்து விட்டு எரிய இந்த அறிவிப்பு பயன்பட்டது.

பாபர் மசூதி உள்ள சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அத்வானி ரத யாத்திரையை நடத்தினார். அத்வானியின் ரதயாத்திரை பிகாரில் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதன் காரணமாக முதன் முறையாக நாட்டில் 1989-ம் ஆண்டு டிசம்பரில் அமைந்த வி.பி.சிங்கின் சிறுபான்மை ஆட்சி கவிழ்க்கப்பட்டது. மொத்தம் 11 மாதங்களே வி.பி.சிங் பதவியில் நீடிக்க முடிந்தது. இந்த அரசுக்கு அளித்து வந்த ஆதரவை பா.ஜ.க. வாபஸ் பெற்றவுடன் தனது பதவியை வி.பி.சிங் ராஜினாமா செய்யவில்லை.

மக்களவையைச் சந்தித்து அங்கு தன் பெரும்பான்மையை நிலைநாட்ட விரும்புவதாக வி.பி.சிங் கூறினார். நவம்பர் 7-ம் தேதி மக்களவை கூடுவதற்கு முன்பு ஜனதாதளம் உடைந்தது. சந்திரசேகர் தலைமையில் ஜனதா தளம் (சோசலிஸ்ட்) உருவானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சந்திரசேகருக்கு 58 மக்களவை உறுப்பினர்களின் ஆதரவு இருந்தது. சந்திரசேகர் ஆட்சி அமைக்க வெளியிலிருந்து காங்கிரஸ் ஆதரவு தருவதாக அறிவித்தது. இந்நிலையில் சந்திரசேகரை ஆதரித்த 25 மக்களவை உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்குவதாகக் கட்சித் தலைவர் வி.பி.சிங் அறிவித்தார். அந்த 25 பேரும் எக்கட்சியும் சாராத உறுப்பினர்கள் என்று மக்களவை சபாநாயகர் ரபிராய் அறிவித்தார்.

மக்களவையில் வி.பி.சிங் கொண்டுவந்த நம்பிக்கை கோரும் தீர்மானம் தோல்வியைச் சந்தித்தது. காங்கிரஸ் ஆதரவில் சந்திரசேகர் பிரதமர் ஆனார். ஏற்கனவே தமிழகத்தில் 1989-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றிருந்தது. இந்நிலையில் தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அ.தி.மு.க. வலியுறுத்தி வந்தது.

இலங்கையில் வடகிழக்கு மாகாணக் கவுன்சில் கலைப்பை அடுத்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் இந்தியாவில் தஞ்சமடைந்தனர்.

ஒரிசாவில் தங்கியிருக்க வேண்டிய பத்மநாபா ரகசியமாகச் சென்னைக்கு வந்திருந்தார். இத்தருணத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள், பத்மநாபா மற்றும் சிலரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பினர். கருணாநிதி அப்போது தில்லியில் இருந்தார். ''அவருக்குத் தெரிந்தே படுகொலை நடந்தது. அதனால்தான் புலிகள் எளிதில் தப்பிச் செல்ல முடிந்தது'' என்று கூறி ஆட்சிக் கலைப்பை அ.தி.மு.க. வலியுறுத்தியது.

இந்திராகாந்தி காலத்திலேயே இலங்கைப் போராளிகளுக்கு ஆயுதம் தரப்பட்டது. தமிழகத்தில் போராளிக் குழுக்கள் பயிற்சி முகாம் அமைத்துச் செயல்பட்டனர். முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். நிதியுதவியும் தார்மீக உதவிகளையும் அளித்தார். பல்வேறு போராளிக்குழுக்களை இந்தியாவில் ஆயுதத்துடன் நடமாட அனுமதித்ததால் இலங்கையில் அவர்கள் நடத்தி வந்த சகோதர யுத்தத்தின் தொடர்ச்சியைத் தமிழகத்திலும் அரங்கேற்றினர்.

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்ற ராஜீவ் காந்தி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை (29.7.1987) உருவாக்கினார். இந்த ஒப்பந்தத்திற்கு விடுதலைப்புலிகளின் ஒப்புதலைப் பெறத் தவறிவிடடார். இதன் விளைவாக இலங்கை சென்றிருந்த இந்திய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைதிப்படைக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையே மோதல் நடந்தது. இந்நிலைமை ஏற்பட்டு விடுதலைப்புலிகள் விஷயத்தில் இந்திய அரசின் அணுகுமுறை மாறிய பின்னரும் கருணாநிதி விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டதாகப் புகார் எழுந்தது. இந்திய அமைதிப்படை சென்னை வழியாக இந்தியா திரும்பிய போது அவர்களை முதல்வர் கருணாநிதி வரவேற்கச் செல்லவில்லை. இதுவும் பிரச்சினையாக்கப்பட்டது.

காங்கிரசின் பிநாமியாகச் செயல்பட்ட சந்திரசேகர் ஆட்சி, விடுதலைப்புலிகள் நடமாட்டத்தைக் காரணமாக்கி தி.மு.க. ஆட்சியைக் கவிழ்த்தது. உண்மையில் காங்கிரசுக்கும், ஜெயலலிதா தலைமையில் இருந்த அ.தி.மு.க.வுக்கும் இடையே நடந்த கூட்டணி பேரத்தின் அடிப்படையில்தான் இந்த ஆட்சிக் கவிழ்ப்பு நடந்தது. சந்திரசேகரின் சிறுபான்மை ஆட்சிக்கு அ.தி.மு.க.வின் 11எம்.பி.க்களின் ஆதரவும் தேவையாக இருந்தது.

காங்கிரஸ் வழக்கம்போல் சில மாதங்களில் தன் வேலையைக் காட்டியது. ராஜீவ் காந்தியின் இல்லத்தை ஹரியானாவைச் சேர்ந்த இரு போலீஸ்காரர்கள் கண்காணிப்பதாகக் கூறி தமிழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் இரா. அன்பரசு மக்களவையில் பிரச்சினையைக் கிளப்பினார். இக்கண்காணிப்பைக் கண்டித்து காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். நடவடிக்கை எடுக்கும்வரை மக்களவை நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்கப் போவதாகவும் அறிவித்தனர். இதன் விளைவாக மார்ச் 6-ம் தேதி சந்திரசேகர் தன் பதவியை ராஜினாமா செய்தார்.

இக்கட்டத்தில் பாரதீய ஜனதா கட்சி தனது ஹிந்துத்துவக் கொள்கையை வெளிப்படையாக முன்வைத்தது. இப்போக்கும் இலங்கைப் பிரச்சினையும் இந்திய அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

இச்சூழலில் 1991-ம் ஆண்டு மே மாதத்தில் தொடங்கிய பத்தாவது மக்களவைத் தேர்தலில் வன்முறை வெறியாட்டம் பரவலாக இருந்தது. காங்கிரஸ், ஜனதாதளம் மற்றும் இடதுசாரி அணி, காங்கிரஸ் (எஸ்) ஆகிய கட்சிகளின் கோஷங்களில் அதிக வித்தியாசம் இல்லை. மதச்சார்பின்மை, தேச ஒற்றுமை, ஒருமைப்பாடு, வறுமை வேலையின்மை ஒழிப்பு போன்ற கோஷங்களையே இக்கட்சிகள் முன்வைத்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காங்கிரஸ் மீண்டும் நிலையான ஆட்சி என்ற கோஷத்தை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டது. ஆனால் தேசிய முன்னணி நிலையான ஆட்சி கோஷத்தை எதிர்த்தது. நிலைத்த தன்மை என்பது முழு ஆட்சிக் காலத்துக்கு அதிகாரத்தில் நீடிப்பது என்று அர்த்தமல்ல. அப்படிக் கருதியதால்தான் மதவெறிக்குப் பணிய மறுத்து கொள்கை நிலையில் உறுதியாக நின்று பதவியை இழந்தோம் என்று தேசிய முன்னணி கூறியது.

பிற்போக்கு சக்திகளுடன் சமரசம் செய்துகொள்ளும் இ.காங்கிரஸ்தான் நிலையற்ற தன்மையை உருவாக்குகிறது. மதரீதியான மோதல்களை உருவாக்குவதன் மூலம் பாரதீய ஜனதா நிலைத்த தன்மைக்குப் பெரும் ஆபத்தை உண்டாக்குகிறது என்று இடதுசாரிகள் பிரசாரம் செய்தனர்.

பாரதீய ஜனதா கட்சியைப் பொருத்தவரை மற்ற கட்சிகள் போலி மதச்சார்பின்மையை வலியுறுத்துவதாகவும் சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்தி வாக்குகளைப் பெறவுமே மதச்சார்பின்மை பற்றி அக்கட்சிகள் பேசுவதாகவும் விமர்சனம் செய்தது. ராம், ரொட்டி என்பது பா.ஜ.க.வின் வாக்குறுதியாக இருந்தது.

மண்டலா? கோயிலா? என்ற கேள்வி அரசியல் மேடைகளை ஆக்கிரமித்தது. மசூதியை இடிக்கக்கூடாது. பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்போம் என்று அனைத்துக் கட்சிகளும் கூறின. பாரதீய ஜனதா கட்சியோ மசூதியை அப்படியே தூக்கி வேறு இடத்தில் நிறுவிவிட்டு மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் கட்டுவோம் என்று கூறியது.

மாநில சுயாட்சியோடு கூடிய முழுமையான உண்மையான கூட்டாட்சி முறைக்கேற்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப் படவேண்டும். மாநில அரசைக் கலைக்கும் மத்திய அரசின் அதிகாரத்தை நீக்க வேண்டும். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை முழுமையாக அமல்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வற்புறுத்துவோம் என்று தி.மு.க தனது தேர்தல் அறிக்கையில் கூறியது.

அ.தி.மு.க.வோ பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் 50 சதவீத இட ஒதுக்கீடு பெற வலியுறுத்துவோம்.

www.tamilarangam.net



மத்திய - மாநில உறவில் மாநில உரிமைகள் பாதிக்காத அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வலியுறுத்துவோம் என்றது.

சமூகநீதியில் பின்தங்கிய நிலை மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலை ஆகிய இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டே இடஒதுக்கீடு கொள்கையை உருவாக்க வேண்டும். பின்தங்கிய வகுப்பினரில் ஏழைகளுக்கு முன்உரிமை தர வேண்டும் என்று பா.ஜ.க. கூறியது.

மே20-ம் தேதி முதற்கட்டப் பொதுத்தேர்தல் நடந்துமுடிந்த பின்னர் இரண்டாவது கட்டப் பொதுத்தேர்தலை முன்னிட்டு ஸ்ரீபெரும்புதூரில் பிரசாரம் செய்ய ராஜீவ் காந்தி வந்தார். தனு என்ற மனித வெடிகுண்டால் கொல்லப்பட்டார். அவருக்கு அருகில் பாதுகாப்புக்கு நின்ற போலீசார் சிலரையும் சேர்த்து 20 பேர் இந்த வெடிகுண்டுக்குப் பலியாயினர். விடுதலைப்புலிகளுடன் ராஜீவ் ஏற்படுத்திக் கொண்ட பகைமையே இப்படுகொலைக்குக் காரணம் என்று பரவலாக நம்பப்பட்டது. இரண்டு மற்றும் மூன்றாம் கட்டத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டு ஜூன்12, 15 தேதிகளில் நடைபெற்றது.

ராஜீவ் காந்தி கொலையை அடுத்து தி.மு.க.வினரின் சொத்துக்கள், உடைமைகள் சேதப்படுத்தப்பட்டன. சென்னையில் அன்பழகன் வீடும் தாக்கப்பட்டது. ராஜீவ் கொலையானதற்குக் காரணம் என்று செய்யப்பட்ட பொய்ப்பிரசாரம் காரணமாகத் தமிழகத்தில் தி.மு.க. அணி படுதோல்வியைச் சந்தித்தது. ஆட்சிக் கலைப்பினால் தி.மு.க.வுக்கு ஆதரவாக கிடைக்க இருந்த வாக்குகளையும் ராஜீவ் காந்தி அனுதாப அலை அமுக்கியது. அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்றது.

முதற்கட்டத் தேர்தலின்போது 197 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் 47 இடங்களில்தான் வெற்றிபெற முடிந்தது. இரண்டாம் கட்டத் தேர்தலில் 286 இடங்களில் போட்டியிட்டு 178 இடங்களில் வெற்றி பெற்றது. இரண்டாம் கட்டத் தேர்தலின் மூலம் தென் மாநிலங்களிலும் மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களிலும் காங்கிரஸ் அதிக இடங்களில் வெற்றி பெற்றது.

ஆனால் வட மாநிலங்களில் ராமர் கோயில் பிரச்சினையை எடுத்த பா.ஜ.க.வுக்கு ஆதரவு பெருகியது. உ.பி., பிகாரில்காங்கிரஸ் பெரும் தோல்வியைச் சந்தித்தது. மக்களவையில் அறுதிப்

www.tamilarangam.net



பெரும்பான்மை இடங்களைப் பெற முடியவில்லை. மொத்தம் 227 இடங்களில்தான் வெற்றி பெற்றது. 36.42 சதவீத வாக்குகளைப் பெற்றது.

வாக்காளர்களைக் கவர பாரதீய ஜனதா கட்சிக்கு மதவாதம் நன்றாகவே உதவியது. அக்கட்சி 20.2 சதவீத வாக்குகளைப் பெற்று 119 இடங்களில் வெற்றி பெற்றது. ஜனதாதளம் 11.57 சதவீத வாக்குகளைப் பெற்று 56 இடங்களிலும், மார்க்சிஸ்ட் 6.27 சதவீத வாக்குகளைப் பெற்று 35 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 2.54 சதவீதம் பெற்று 13 இடங்களிலும் வென்றன.

தெலுங்கு தேசம் 12 இடங்கள், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா 6 இடங்கள், சமாஜவாதி ஜனதா 5 இடங்களைப் பிடித்தன. தென் மாநிலங்களிலிருந்து முதன்முதலில் பிரதமராக நரசிம்மராவ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தமிழ்நாட்டில் 29 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. மட்டுமின்றி அந்த அணியில் இருந்த கட்சிகள் எந்த இடத்திலும் வெற்றியை ஈட்டமுடியவில்லை. அனுதாப அலையின் வேகம் தீவிரமாக இருந்தது. பழிச்சொல்லுக்கு ஆளானபோதிலும் தி.மு.க. 22.69 சதவீத வாக்குகளைப் பெற்றது. அதாவது 56 லட்சம் வாக்காளர்கள் ஆதரவை வெளிப்படுத்தினர். இதுதான் அக்கட்சியின் மிக மோசமான தேர்தல் அறுவடையாக இருக்க முடியும் என்று கணிக்கப்பட்டது.

அ.தி.மு.க. மக்களவையில் 11 இடங்களில் போட்டியிட்டு அனைத்து இடங்களிலும் வென்றது. 26 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் அனைத்து இடங்களிலும் வெற்றியை ஈட்டியது.

சட்டப்பேரவையில் மருந்துக்குக்கூட எதிர்க்கட்சிகள் இல்லை என்ற நிலைமையைத் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தின. துறைமுகம் தொகுதியில் கருணாநிதி மட்டுமே தி.மு.க. சார்பில் வெற்றி பெற்றார். கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியை அடுத்து, தன் உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார். இதன் காரணமாக துறைமுகத்திலும் வேட்பாளர் மரணமடைந்ததால் எழும்பூரிலும் நடந்த இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றது. ❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஊழல் எதிர்ப்பு அலை

ஆட்சி பீடத்தில் ஜெயலலிதா அமர்ந்தவுடன் மலிவு விலை மதுவை ஒழிக்கும் உத்தரவில் கையெழுத்திட்டார். தி.மு.க. ஆட்சியில் அறிமுகமாகியிருந்த மலிவுவிலை மதுத்திட்டம் கடும் விமர்சனத்துக்கு ஆளாகி வந்தது. தமிழகத் தேர்தல் மூலம் முதலமைச்சரான முதல் பெண் என்ற அந்தஸ்து ஜெயலலிதாவுக்குக் கிடைத்தது. (அதற்கு முன்பு 23 நாட்கள் முதலமைச்சராக இருந்த ஜானகி தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராகவில்லை.) ஜெயலலிதாவுடன் 25 பெண் எம்.எல்.ஏக்களும் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது சாதனையாகக் கருதப்பட்டது.

ஜெயலலிதா நல்லாட்சி புரிவார் என்று சாதாரண மக்கள் நம்பினர். ஆனால் ஆட்சிக்கு வந்த ஓராண்டுக்குள்ளேயே அரசாங்க நிலமான டான்சி நிலத்தை விலைக்கு வாங்கியதில் பிரச்சினை எழுந்தது.

ராஜீவ் காந்தியின் மரணத்தினால் ஏற்பட்ட அனுதாப அலை காரணமாகவே எதிர்க்கட்சிகள் பெரும்தோல்வியைச் சந்தித்தன. ஜெயலலிதா இதைத் தனது தனிப்பட்ட வெற்றியாக கருதிக்கொண்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓராண்டு ஆட்சி நிறைவை முன்னிட்டு மதுரையில் நடத்திய மாநாட்டில் ராஜீவ் காந்தியின் அனுதாப அலையால் வெற்றி பெறவில்லை என்று முழங்கினார். விடுதலைப்புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் இல்லாத வகையில் கடும் நடவடிக்கையை எடுத்தார். இதனாலும் அதிகாரத்தில் உள்ளவர்களின் அனுசரணையை விரும்பியதாலும் ஜெயலலிதாவுக்கு காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்திற்குள் முழு ஆதரவைத் தந்தது.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக்கூட்டத்தில் பேசிய முதல்வர் ஜெயலலிதா, கரசேவையை ஆதரித்தார். இதை உடனடியாக ஆட்சேபித்து அறிக்கை வெளியிட்டார் மாநில காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி.

வெளிநாட்டிலிருந்து அன்னியச் செலாவணியைத் தாராளமாகப் பெற்றுக் கொள்ளும் திட்டம் 1992-ல் அமலில் இருந்தது. அப்போது மூன்று லட்சம் அமெரிக்க டாலர்களை ஜெயலலிதா பெற்றார் என்ற புகாரும் எழுந்தது.

மாதம் ஒரு ரூபாய் சம்பளத்தை அடையாளமாகப் பெற்றார் ஜெயலலிதா. ஆனால் சசிகலாவின் பெயரிலும் அவரின் உறவினர்கள் பெயரிலும் கட்டடங்கள், அசையாச் சொத்துக்களை வாங்கியதாகவும் புகார் எழுந்தது. சட்டமன்றம், நீதிமன்றம், பத்திரிகைகள் ஆகியவற்றை மதிக்கவில்லை என்று தெரிவிக்கப் பட்டது. பத்திரிகையாளர்களைச் சந்திப்பதை அவர் தவிர்த்தார். எதிர்த்து எழுதிய பத்திரிகைகள் மீது குண்டர்கள் பாய்ந்தனர். பத்திரிகைகள் மீது வழக்குகள் தொடர்ந்தார்.

இதன் தொடர்ச்சியாக, தலைமைத் தேர்தல் கமிஷனர் சேஷன் விமான நிலையத்திலிருந்து வெளியேற முடியாதமுற்றுகைப் போராட்டத்தைச் சந்தித்தார். அவர் தங்கியிருந்த ஹோட்டலும் தாக்குதலுக்கு ஆளானது. நரசிம்மராவின ஆசியோடு ஜெயலலிதாவைக் கட்டுப்படுத்திப் பணியவைக்கும் வேலையில் சுப்பிரமணியம் சுவாமி ஈடுபட்டிருந்தார். பெரும் முயற்சி செய்து ஜெயலலிதா மீது வழக்குத் தொடர ஆளுநரின் அனுமதி பெற்றார். அனுமதி வழங்கிய ஆளுநரின் காரும் மறியலுக்கு ஆளானது. ஜெயலலிதாமீது அடுக்கடுக்கான வழக்குகள் தொடர்ந்த சுவாமி, கோர்ட் வளாகத்திலேயே ஒரு வன்முறையைச் சந்திக்க நேர்ந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழகத்தின் 69சதவீத இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்கும் வகையில் அரசமைப்புச்சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்க நடவடிக்கை எடுத்தார் ஜெயலலிதா. இதைப் பாராட்டும் முகமாக 'சமூகநீதி காத்த வீராங்கனை' என்ற பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார் தி.க. பொதுச்செயலாளர் கி.வீரமணி.

ஜெயலலிதா தனது வளர்ப்புமகனாக சசிகலாவின் அக்கா மகன் சுதாகரனைத் தேர்வு செய்தார். அவருக்கு மன்னராட்சிக் காலத்துப் பாணியில் ஆடம்பரத் திருமணத்தை நடத்தினார். இது சாதாரண மக்களிடம் கோபத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தின.

இதற்கிடையே தி.மு.கழகத்தில் 1993-ல் பிளவு ஏற்பட்டது. விடுதலைப் புலிகள் ஆதரவாளர் என்ற எண்ணத்தை மக்களிடமிருந்து அகற்றும் வகையில் கருணாநிதி காய்களை நகர்த்தினார். தனது மகன் மு.க.ஸ்டாலினுக்குப் போட்டியாக மாவட்ட அளவில் உருவாகும் கோஷ்டிகளுக்குப் பின்னணியில் வை.கோபால்சாமி இருப்பதாகக் கருதினார். ஏற்கெனவே தி.மு.க. தலைமைக்குத் தெரியாமலேயே யாழ்ப்பாணத்திற்குச் சட்டவிரோதப் பயணம் சென்று விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்ததை வை.கோபால்சாமி ஒப்புக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் திடீரென்று கூட்டப்பட்ட பத்திரிகையாளர்களிடம் மத்திய உளவுத்துறையிடமிருந்து வந்துள்ள ஊர்ஜிதமாகாத தகவலைக் கருணாநிதி வெளியிட்டார். மாநில அரசு மூலம் கிடைத்த அத்தகவல், கோபால் சாமிக்குச் சாதகமாக கருணாநிதியைக் கொல்ல விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளதாகக் கூறியது.

தன் மீது பழிசுமத்தப்பட்ட நிலையில் வை.கோபால்சாமி, தலைமைக்கு எதிராகக் கருத்துக் கூறினார். அவருக்கு ஆதரவாக சில மாவட்டச் செயலாளர்கள் அறிக்கை விட்டனர். இறுதியில் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். உடனடியாகத் தனிக்கட்சி தொடங்காமல் தான்தான் உண்மையான தி.மு.க. என்று கூறிவந்த கோபால்சாமி பின்னர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார்.

திராவிடக் கட்சியில் ஏற்பட்டு வந்துள்ள பிளவுகளுக்கு வாரிசுரிமைப் போட்டி ஒரு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*''பெரியாரின் வாரிசு மனோநிலை ஒரு பிளவுக்குத் தூண்டுகோலாய் அமைந்ததைப் போன்றே, கருணாநிதியின் வாரிசு மனோநிலை 1972, 1993 பிளவுகளுக்கும் ஏதோ ஓர் அளவில் காரணமானது. அ.இ.அ.தி.மு.க.வின் தோற்றத்துக்குச் சந்தர்ப்பங்களைத் தக்க அளவில் பயன்படுத்த வேண்டும் என்ற எம்.ஜி.ஆரின் அரசியல் விருப்பம், இந்திரா காங்கிரசின் தூண்டுதல் என்பன காரணங்களாயினும் எம்.ஜி.ஆர். திரையுலக வாழ்க்கைக்கும் ரசிகர் மன்ற அடித்தளத்துக்கும் மாற்று வடிவம் கொடுக்கும் அளவில் மு.க.முத்து திரையுலகில் பரபரப்புக்கும் ஆர்ப்பாட்டத்துக்கும் ஊடே புகுத்தப்பட்டதும் ஒரு காரணம் ஆகும். இப்போது ஏற்பட்டுள்ள பிளவுக்கு மு.க. ஸ்டாலினை அடுத்த தலைமையாக உருவாக்குவதற்கான முயற்சிக்கு எதிர்ப்பானதாக மட்டுமில்லாமல் தமக்குரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மேலே செல்லக்கூடிய மனோநிலையும் கோபால்சாமி உட்பட பலரிடம் இருப்பதும் காரணங்களாகும்.'' (-திராவிட இயக்கத்தில் பிளவுகள், முனைவர் கோ. கேசவன்: பக்.135)*

''திராவிடக் கட்சிகளில் ஏற்பட்டுள்ள பிளவுகளுக்குக் கொள்கைகள், கோட்பாடுகள் காரணமாக இருக்கவில்லை என்ற விமர்சனம் உள்ளது. *''திராவிட இயக்கத்தில் ஏற்பட்ட எந்தவொரு பிளவும் அடிப்படையான பொருளாதார மாற்றத்தையோ பாரதூரமான நிலச்சீர்திருத்தத்தையோ காரணமாகக் கொள்ளவில்லை; கொள்ளவும் இயலாது. ஏனைய எவ்வளவோ குழாயடிச் சண்டைகளிலும் இத்தகைய வர்க்க நலன்கள் மீறப்பட்டதே இல்லை. (-திராவிட இயக்கத்தில் பிளவுகள்: பக்.143)*

மத்தியில் நரசிம்மராவ் ஐந்தாண்டுக் காலம் நிலையான ஆட்சியைத் தந்தபோதிலும் அவரது ஆட்சிக்காலத்தில் ஹர்ஷத் மேத்தாவின் ஐந்தாயிரம் கோடி ரூபாய் பங்குப் பத்திர ஊழல் போன்ற மாபெரும் ஊழல்கள் பொங்கிப் பிரவாகமெடுத்தன. ஜார்க்கண்ட் கட்சியைச் சேர்ந்த நான்கு எம்.பிக்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.50லட்சம் கொடுத்துக் கட்சித் தாவலை ஏற்படுத்தி, காங்கிரஸ் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றது.

பாபர் மசூதி 1992-ம் ஆண்டு டிசம்பர் 6-ல் இடிக்கப்பட்டது. மசூதியை இடித்த இந்து மதவாத அமைப்புகளுடன் பாரதீய ஜனதா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சியும் சேர்ந்து கொண்டது. இந்த இடிப்பைத் தடுக்கத் தவறியதன் மூலம் காங்கிரஸ் கட்சியும் மறைமுகமாக மசூதி இடிப்பை ஆதரித்தது என்ற புகார் எழுந்தது. முன்னர் ராமர் கோயிலை வழிபாட்டிற்குத் திறந்துவிட்ட ராஜீவ் காந்தி, 'கரசேவை'யை அனுமதித்த நரசிம்மராவ், ஆகியோர் பெரும்பான்மை மதத்தினரின் ஓட்டுக்களைப் பெறும் அரசியலில் சிக்கிவிட்டனர். மசூதி இடிப்பை அடுத்து நாடு முழுவதும் நடந்த மதரீதியான மோதல்களில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

ஜெயின் டைரி அடிப்படையில் வெளியான ஹவாலா ஊழல் காங்கிரஸ் கட்சி உட்பட, இடதுசாரிகள் நீங்கலான அகில இந்தியக் கட்சித் தலைவர்கள் மீது மக்களின் சந்தேகக் கண் விழக் காரணமாக இருந்தது.

ஊழல் புகாரில் சிக்கிய அ.தி.மு.க.வுடன் 1996 தேர்தலில் கூட்டணியைத் தொடர வேண்டாம் என்று தமிழகக் காங்கிரசாரில் பெரும்பான்மையோர் கருத்துத் தெரிவித்தனர். ஏற்கனவே காங்கிரஸ் கட்சியில் கோஷ்டிப்பூசல் உருவெடுத்திருந்தது. காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையில் வாழப்பாடி ராமமூர்த்தி தன் மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்திருந்தார். அப்போதே ஜெயலலிதா ஆதரவு, எதிர்ப்பு கோஷ்டிகள் காங்கிரஸ் கட்சியில் உருவெடுத்திருந்தன. காங்கிரஸ் தலைவராக இருந்த வாழப்பாடி ராமமூர்த்தி மாற்றப்பட்டு குமரிஅனந்தன் தலைவர் பொறுப்பை ஏற்றிருந்தார். நடிகர் ரஜினிகாந்த் ஆதரவில் தமிழ்நாட்டில் மூன்றாவது அணியை உருவாக்கக் காங்கிரசார் முயற்சித்தனர். இதற்கான பேச்சு வார்த்தையில் குமரிஅனந்தன் ஈடுபட்டு வந்தார். மாநிலக் காங்கிரசார் விருப்பத்திற்கு மாறாக நரசிம்மராவ் அ.தி.மு.க.வுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டார். ''ஊழலும் ஊழலும் கை கோர்த்தன'' என்று இக்கூட்டணி பற்றி கருணாநிதி வர்ணித்தார்.

கூட்டணியை ஆட்சேபித்து கொதித்தெழுந்த காங்கிரஸ் காரர்கள் நரசிம்மராவ் உருவப்படத்தை சத்தியமூர்த்தி பவன் வாயிலில் கொளுத்தினர். இதன் விளைவாக மூப்பனார் தலைமையில் தமிழ் மாநில காங்கிரஸ் உருவானது. தி.மு.க.வுடன் அது கூட்டணி அமைத்தது. ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரஜினிகாந்த் கூறினார். தி.மு.க. - த.மா.கா. கூட்டணிக்கு தனது ஆதரவையும் தெரிவித்தார்.

மத்தியிலும் தமிழகத்திலும் ஊழல் எதிர்ப்பே முக்கியப் பிரச்சினையாக உருவெடுத்தது. மத்தியிலும் காங்கிரஸ் பல இடங்களில் தோல்வியைச் சந்தித்தது. தமிழகத்தில் ஜெயலலிதா எதிர்ப்பலை புயலாக உருவெடுத்தது. தன் தொகுதிக்கு நன்மைகளை வாரி வழங்கியபோதிலும் பர்கூர் வாக்காளர்கள் ஜெயலலிதாவுக்குத் தோல்வி யைத் தந்தனர்.

மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் போட்டியிட்ட 39 இடங்களிலும் தி.மு.க. - த.மா.கா இந்திய கம்யூனிஸ்ட் கூட்டணி வெற்றி பெற்றது. இக்கூட்டணி 55 சதவீத வாக்குகளைப் பெற்றது. அ.தி.மு.க. - காங்கிரஸ் 26.12 சதவீத வாக்குகளைப் பெற்றது.

மறுமலர்ச்சி தி.மு.க.வுடன் மார்க்சிஸ்ட், ஜனதாதளம் கூட்டணி சேர்ந்தன. இந்த அணி 7.85 சதவீத வாக்குகளையும் ஊழல் எதிர்ப்பு, சமூக நீதி அணி என வர்ணித்துக் கொண்ட பாட்டாளி மக்கள் கட்சி - திவாரி காங்கிரஸ் கூட்டணி 4.43 சதவீத வாக்குகளையும் பெற்றன.

சட்டப்பேரவைக்கு 182 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. 42 சதவீத வாக்குகளைப் பெற்று 173 தொகுதிகளில் வெற்றி பெற்றது. கருணாநிதி மீண்டும் முதல்வர் ஆனார்.

தமிழ் மாநிலக் காங்கிரஸ் 40 பேரவை இடங்களில் போட்டியிட்டு 9.3. சதவீத வாக்குகளைப் பெற்று 39 இடங்களில் வென்றது. இக்கட்சியின் அணியில் இருந்த இந்திய கம்யூனிஸ்ட் 11 இடங்களில் போட்டியிட்டு 8 இடங்களில் வென்று 2.2 சதவீத வாக்குகளைப் பெற்றது. காங்கிரஸ் ஓர் இடத்தில்கூட வெற்றி பெறமுடியவில்லை.

அ.தி.மு.க. 168 இடங்களில் போட்டியிட்டு 21.5 சதவீத வாக்குகளைப் பெற்று நான்கு இடங்களிலும், மார்க்சிஸ்ட், ஜனதா தளம், பாரதிய ஜனதா ஆகியவை ஒவ்வோர் இடத்தையும் பிடித்தன.

மத்தியில் தேசியக் கட்சிகள் எதற்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதிக இடங்களைப் பெற்ற பாரதிய ஜனதா கட்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சார்பில் வாஜ்பேயி 13 நாள் பிரதமராக இருந்தார். பெரும்பான்மையை அவரால் நிரூபிக்க முடியவில்லை. காங்கிரஸ் கட்சியும் ஆட்சிஅமைக்க முன்வரவில்லை.

ஜனதாதளம், இடதுசாரிக் கட்சிகள், தி.மு.க., த.மா.கா., தெலுங்கு தேசம், அசாம் கண பரிஷத் உள்ளிட்ட 13 கட்சிகள் இணைந்து ஐக்கிய முன்னணியை உருவாக்கின. இந்திய வரலாற்றில் முதன்முறையாக மத்திய அமைச்சரவையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இடம் பெற்றது. ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு மார்க்சிஸ்ட் கட்சி வெளியிலிருந்து ஆதரவைத் தந்தது. காங்கிரஸ் கட்சியும் வெளியிலிருந்து ஆதரவை அளித்தது.

1996-ம் ஆண்டுத் தேர்தல் இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக அமைந்தது. பா.ஜ.க மற்றும் சிவசேனை அணி இத்தேர்தல் மூலம் மக்களவையில் மிகப் பெரிய கட்சியாக உருவெடுத்தது. வடக்கு மற்றும் மேற்கு மாநிலங்களில் நிலையான செல்வாக்கை பாஜக நிலைநாட்டிக் கொள்ள முடிந்தது. மொத்தத்தில் 20 சதவீத வாக்குகள் பெற்றது. மேல் தட்டு மக்களின் ஆதரவோடு இறுகிப்போய் தனிமைப்பட்டிருந்த பாஜகவுக்கு தலித், பிற்பட்டோர் ஆதரவும் செல்வாக்கும் கிடைக்கத் தொடங்கியது. இப்போக்கை மேலும் விரைவு படுத்தும் வகையில் கட்சியின் நடத்தை, தோற்றம், குணம், ஆகியவற்றில் மாற்றம் செய்ய வேண்டும் என்று கட்சியின் கொள்கை வகுப்பாளர் கே.என்.கோவிந்தாச்சாரியா தெரிவித்தார்.

தென் மாநிலங்களைப் பொருத்தவரை கர்நாடகத்தில் குறிப்பிடத்தக்க வெற்றியை பா.ஜ.க ஈட்டியது. இம்மாநிலத்தில் ஜனதாதளத்தில் ஏற்பட்ட கோஷ்டிப் பூசல் பா.ஜ.கவுக்கு உதவியாகத் திரும்பியது. அஸ்ஸாமில் வங்கதேச அகதிகள் பிரச்சினையை முன்வைத்து மதவாத அரசியலை பா.ஜ.க. முன்னெடுத்தது. இதன் மூலம் 14 சதவீத வாக்குகளை அம்மாநிலத்தில் பெற்றது. ஒரிஸ்ஸாவில் 17 சதவீத வாக்குகளைப் பெற்றது. நிலஉடைமை யாளர்களின் ஆதரவு இங்கு பா.ஜ.கவுக்கு அதிகரித்தது.

லாலு பிரசாத் யாதவின் செல்வாக்கு குறைந்ததால் பீகாரிலும், தெலுங்கு தேசம் கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாக ஆந்திரத்திலும் பா.ஜ.க.வுக்கு நல்ல வாய்ப்பு உருவெடுத்தது. ❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பா.ஜ.கவின் புதிய வியூகம்

ஐக்கிய முன்னணி சார்பில் பிரதமர் பொறுப்புக்கு வந்த தேவகௌடவுக்குத் தொடக்கம் முதலே காங்கிரஸ் தலைவலியைத் தந்தது. காங்கிரஸ் தலைவர் பொறுப்பை ஏற்ற சீதாராம் கேசரி சிறிது காலத்திற்குள்ளேயே ஐக்கிய முன்னணிக்கு அளித்து வந்த ஆட்சிக்கான ஆதரவை திடீரென்று விலக்கிக்கொண்டார். ஊழல் வழக்குகளில் காங்கிரஸ் தலைவர்கள் மீதான சட்டபூர்வ நடவடிக்கையைத் தடுக்கும் முயற்சியாக இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தினார். மக்களவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் கௌட ஆட்சி தோற்றது. பின்னர் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சி மீண்டும் ஏற்பட்டது.

சில மாதங்களுக்குள் ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை அடிப்படையில் தி.மு.கவின் மத்திய அமைச்சர்கள் விலக வேண்டும் என்ற கோரிக்கையைக் காங்கிரஸ் முன்வைத்தது. காங்கிரஸ் ஆட்சி அமைக்கவும் சீதாரம்கேசரி விருப்பத்தை வெளியிட்டார். ஈழ விடுதலைப் பிரச்சினையைப் பொருத்தவரை தி.மு.க. மிகுந்த உறுதியைக் காட்டியதில்லை. தமிழகத்தில், செல்வாக்கைத் தக்கவைக்க, இலங்கைத் தமிழர் ஆதரவு நிலையை அது எடுத்து வந்தது. இந்நிலையில் ராஜீவ் கொலைக்கான சூழல் உருவாக தி.மு.க. ஆட்சிதான் காரணமாக இருந்தது என்று ஜெயின்

www.tamilarangam.net



கமிஷன் இடைக்கால அறிக்கை பழிசுமத்தியது. விடுதலைப் புலிகளுடன் தொடர்பு என்ற காரணத்தைக் கூறி தி.மு.க. ஆட்சியை 1991-ல் டிஸ்மிஸ் செய்த முன்னாள் பிரதமர் சந்திரசேகர், ராஜீவ் கொலைவழக்கில் தி.மு.கவையோ கருணாநிதியையோ தொடர்பு படுத்த முடியாது. அதற்கான ஆதாரம் இல்லை என்றார். அரசியல் நோக்கத்தோடு இந்த இடைக்கால அறிக்கை வெளியாகியிருக்கும் என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதிகாரத்தைத் தொடர்ந்து ருசித்து வந்த காங்கிரஸ் கட்சியால் எதிர்க்கட்சியாக சில ஆண்டுகள் கூட பணியாற்ற முடியவில்லை.

ஆட்சியமைக்க விரும்பிய காங்கிரசுக்கு ஐக்கிய முன்னணியின் ஆதரவு இல்லை என்று தெளிவு படுத்தப்பட்டது. ராஜீவ் கொலையில் தி.மு.க.மீது வீண் பழியைச் சுமத்தும் முயற்சியை ஐக்கிய முன்னணி முறியடித்தது. இறுதியில் குஜ்ரால் ஆட்சிக்கான தனது ஆதரவை காங்கிரஸ் வாபஸ் பெற்றது. மக்கள் மீது இரண்டாண்டுகளுக்குள் ஒரு தேர்தலை காங்கிரஸ் சுமத்தியது. ஐக்கிய முன்னணியின் 19மாத கால ஆட்சியில் மாநிலங்களுக்கு முக்கியத்துவம் கிடைத்தது. கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் ஆட்சி நடந்தது. தமிழகத்தின் சார்பில் 9பேர் அமைச்சர் ஆனார்கள். ஊழல் புகார்களுக்கு இடமளிக்காத வகையில் நல்லாட்சியை ஐக்கிய முன்னணி தந்தது.

அந்த ஆட்சி மட்டுமன்றி தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி மீதும் ஊழல் புகார்கள் எழவில்லை. இதுபோன்ற நல்ல அம்சங்கள் இருந்தபோதிலும் ஜனதாதளத்தில் நிலவிய கோஷ்டிப் பூசல்கள் ஐக்கிய முன்னணியின் நன்மதிப்புக்கு பாதிப்புகளை ஏற்படுத்தியது.

ஐக்கிய முன்னணி ஆட்சியின் சாதனைகளைக் கூறி தி.மு.க. தமிழ்மாநிலக் காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் அணி 12-வது மக்களவைத் தேர்தலைச் சந்தித்தது. ''சேது சமுத்திரத் திட்டம் பரிசிலனைக்கு எடுக்கப்பட்டது. ஊரகக் கட்டமைப்பு வளர்ச்சி நிதி மூலம் தமிழகத்திற்கு ரூ.271 கோடி கிடைத்துள்ளது. தூத்துக்குடி துறைமுகத் திட்ட விரிவாக்கத்திற்கு 200 கோடி அனுமதி பெறப்பட்டுள்ளது. 356-வது பிரிவை அறவே நீக்கவேண்டும்'' என்று தி.மு.க. தேர்தல் அறிக்கை கூறியது.

அதேசமயத்தில் அ.தி.மு.க. - பா.ஜ.க. அணி உருவானதை தி.மு.க. கடுமையாகச் சாடியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''கோடி கோடியாக கொள்ளையடித்து ஊரெல்லாம் சொத்து வாங்கி ஜனநாயக நடைமுறையை மதிக்காமல் சட்டமன்றத்தைத் தன் கொலு மண்டபமாக மாற்றி எதிர்க்கட்சியினரை இழிவு படுத்திய எதேச்சதிகாரி எதையும் செய்யலாம்; யார் கேட்க முடியும்? கேட்டாலும் அவர்கள் வாயை அடைக்கத் தன்னிடம் அடுக்கி வைக்கப்பட்ட பெட்டி உண்டு என்ற மமதை கொண்ட கோடீஸ்வரி அந்தத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்டார். ஆனால் இவரது சீட கோடிகளும் இத்தேர்தலில் ஒருசில இடங்களைப் பெற்றுவிட்டால் தங்கள் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகளையும் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளையும் மக்கள் ஏற்கவில்லை என்று 'மாய்மாலம்' பேசியே அவ்வழக்குகளை வாபஸ் பெறும்படி மைய அரசை வலியுறுத்தலாம் என்ற நோக்கத்தில் ஒரு அணி உருவாக்கி, மக்களைத் திசை திருப்ப முனைந்துள்ளனர். ஊழலை ஒழிக்க 'லோக்பால்' அமைப்பு கொண்டு வருவதாகவும், பிரதமர் மீதும் நடவடிக்கை எடுக்கும் உரிமை அதற்குத் தரப்படும் என்றும் வாஜ்பாய் அறிவித்துள்ள நிலையில் ஊழல் கட்சியுடன் கூட்டணி அமைந்துள்ளதை எப்படி நியாயப்படுத்த முடியும்? ஊழலற்ற ஆட்சியை உருவாக்கும் முயற்சிக்கு ஊழல் கொள்ளையில் சுருட்டிய நிதியே ஊன்றுகோலா? தமிழ்நாட்டில் காலூன்ற பாரதீய ஜனதாவுக்கு வேறு வழியில்லை என்றாலும் அக்கட்சியைத் தமிழ்நாட்டு மக்கள் எப்படி ஏற்பார்கள்'' என்று தி.மு.க. பிரசாரம் செய்தது.

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை முழுவதும் பாரதீய ஜனதா கட்சியின் குரல் விரவிக் கிடந்தது. பா.ஜ.க. தலைவர் அறிவித்தது போல் அதிபர் ஆட்சிமுறை வேண்டும் என்ற கருத்தை அ.தி.மு.க.வும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டது. மத்திய, மாநில ஆட்சித்தலைவர்கள், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்று தேர்தல் அறிக்கை கூறியது. இது கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா முன்பிருந்தே வலியுறுத்தி வரும் கருத்து என்ற விளக்கமும் தரப்பட்டது.

அதிபர் முறையை அமல்படுத்தினால் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலத்தவரே தொடர்ந்து அதிபராக வரும் நிலை ஏற்படலாம். சர்வாதிகார வழியைப் பின்பற்றும் ஆபத்தும் அதிபர் ஆட்சி முறையில் உள்ளது. அதிகாரப் பரவல், மாநிலங்களின் கூட்டாட்சி பற்றிய கருத்து நாட்டின் அனைத்து மூலைகளிலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒலிக்கத் துவங்கியுள்ள நேரத்தில் அதிபர் ஆட்சிமுறை யோசனை தமிழகத்திலிருந்து எழுந்திருப்பது பலருக்கு ஆச்சரியத்தைத் தந்தது. கூட்டாட்சி அமைப்பு முறையின் அவசியத்தையும் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை கூறியது.

ஆனால் தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் கூட்டாட்சிக்காகச் சட்டத்திருத்தம் தேவை என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டது. இதேபோல் கூட்டாட்சி முறைக்கு சவாலாக விளங்கும் மாநில அரசுகளை டிஸ்மிஸ் செய்யப் பயன்படும் அரசமைப்புச் சட்டத்தின் 356-வது பிரிவைப் பற்றி அ.தி.மு.க. அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. பிரிவினை கோரல் போன்ற பிரத்யேகச் சூழலில் மட்டும் இச்சட்டத்தைப் பயன்படுத்தலாம் என்பது பா.ஜ.க.வின் கருத்து. தன்இஷ்டப்படி அச்சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதால் அ.தி.மு.க. அந்தப் பிரச்சினையின் பக்கம் திரும்பிப் பார்க்கக்கூடத் தயாராக இல்லை.

கடந்த 1996 -ம் ஆண்டு தேர்தலின்போது அ.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தொடக்கத்திலேயே 'மதவெறியால் உயர்வு பெற்ற நாடுகள் இல்லை, சாதிவெறியால் மேன்மை பெற்ற வகுப்புகள் இல்லை. இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படையாக விளங்கும் மச்சார்பின்மையை வலுப்படுத்த உழைப்போம்'' என்று தெரிவித்திருந்தது. ஆனால் அதற்கு மாறாக இஸ்லாமியர் ஏற்க மறுக்கிற பொதுசிவில் சட்டத்தை இந்தத் தேர்தல் அறிக்கையில் அ.தி.மு.க. வலியுறுத்தியது.

பொது சிவில் சட்டம், பெண்கள் நலன் கருதியது என்று பா.ஜ.க. தலைவர்கள் தருகிற விளக்கத்தையே அ.தி.மு.க.வும் தந்தது. பொது சிவில் சட்டத்திருத்தப் பிரச்சினையில் அனைவரும் ஏற்கத்தக்க இணக்கமான ஓர் அணுகுமுறை கண்டிட அ.தி.மு.க. பாடுபடும் என்று கூறியது. பெண்ணினம் அடிமைப்படுத்தப்பட்ட போக்கினை பெரியாரும் அண்ணாவும் கடுமையாகச் சாடி வந்துள்ளனர். அத்தகைய லட்சியத் தலைவர்கள் வழி வகுத்துத் தந்துள்ள நெறிகளின் அடிப்படையில் சட்டம் வரவேண்டும் என்று புது விளக்கத்தையும் அ.தி.மு.க. அளித்தது.

முந்தைய தேர்தல் அறிக்கையில் மத்திய அரசுப் பணி, கல்வி வேலை வாய்ப்பு, பதவி உயர்வு ஆகியவற்றில் பிற்பட்டவருக்கு 50

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சதவீத இட ஒதுக்கீடு தேவை என்று அ.தி.மு.க. வலியுறுத்தியது. ஆனால் 1998-ம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையில் அதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இட ஒதுக்கீடு விஷயத்திலும் பா.ஜ.க. வழியையே அ.தி.மு.க. வும் பின்பற்றுகிறதோ என்ற எண்ணத்தை இது ஏற்படுத்தியது. மாநிலங்களில் இடஒதுக்கீடு விஷயத்தைப் பற்றி மட்டும் அறிக்கை குறிப்பிட்டது. அந்தந்த மாநிலங்களே இட ஒதுக்கீட்டின் அளவை நிர்ணயித்துக் கொள்ளும் வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தம் தேவை என்று கூறியது. காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370-வது பிரிவை நீக்க வேண்டும் என்று பா.ஜ.க. கூறுகிறது. இவ்விஷயத்தில் நேரடியாக பா.ஜ.க.வின் நிலையை ஆதரிக்காமல் சுற்றி வளைத்து அப்பிரச்சினையில் அ.தி.மு.க. கருத்து தெரிவித்தது. விசேஷ சலுகைகள் அல்லது விதிவிலக்குகள் பெற்று வரும் எல்லா மாநிலங்களுக்கிடையே ஓர் ஒத்த கருத்து உருவாகி, அதற்கேற்ப இப்பிரச்சினையை அணுகிட அ.தி.மு.க. முயற்சி செய்யும் என்று அறிக்கை தெரிவித்தது.

காஷ்மீர் விஷயத்திலோ அல்லது அயோத்தி பிரச்சினையிலோ பா.ஜ.க.வின் நிலையை ஆதரிக்க முடியாது என அதன் கூட்டணிக் கட்சியான சமதா கட்சி தெளிவுபடக் கூறியுள்ளது. அதுபோன்ற உறுதியான நிலையை அ.தி.முக. எடுக்கவில்லை.

''இந்து மதவெறியோ அல்லது இஸ்லாமிய மதவெறியோ அது எந்த வெறியானாலும் இந்த நாட்டின் ஒற்றுமைக்கு உலை வைக்கும் தீ. அ.தி.மு.க. தன் ஐந்தாண்டுக் கால ஆட்சியில் ஊழலில் கின்னஸ் ரிக்கார்டு ஏற்படுத்தியுள்ளது. அக்கட்சியுடனும் மேலும் பல சந்தர்ப்பவாதக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு நிற்பதால் இப்பேரபாயத்தை முறியடிக்க தமிழக மக்கள் ஒன்று பட்டு நிற்க வேண்டும்'' என்று மார்க்சிஸ்ட் கட்சி கூறியது.

தி.மு.க. - த.மா.கா அணியில் இடம் கிடைக்காத நிலையில் மதுரை, வடசென்னைத் தொகுதிகளில் மட்டும் மார்க்சிஸ்ட் கட்சி போட்டியிட்டது. மற்ற இடங்களில் தி.மு.க. - த.மா.கா அணியை ஆதரித்தது. இதேபோல் ஜனதா தளமும் வெளியிலிருந்து இந்த அணியை ஆதரித்தது.

தேர்தலுக்கு முன்பு அத்வானி கோவையில் 14.2.1998-ல் பிரசாரம் செய்ய இருந்த பொதுக்கூட்ட மேடை அருகே தொடர் வெடிகுண்டுகள் வெடித்தன. இதில் 59பேர் உயிரிழந்தனர்.

www.tamilarangam.net



இவ்வெடிகுண்டு சம்பவத்திற்கு அடிப்படையாக, இதற்கு முன்பு 29.11.1997-ல் கோவையில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் இருந்தன. போலீஸ்காரர் செல்வராஜ் கொலையை அடுத்து அப்போது நடந்த மோதல் - வன்முறையில் 18 முஸ்லிம்களும் 4 ஹிந்துக்களும் கொல்லப்பட்டனர். சிலகோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன. இச் சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதால் அதற்குப் பழிவாங்கும் வகையில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

இந்த வெடிகுண்டுச் சம்பவம் தேர்தலில் பல அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. அதற்கு முன்பு தென் மாவட்டங்களில் நடந்த சாதிக்கலவரங்கள் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன. பஸ் கட்டண உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இச்சூழலில் தமிழகம், பாண்டிச்சேரி உள்ளிட்ட 40 இடங்களுள் 30 இடங்களில் அ.தி.மு.க. அணி வென்றது. அ.தி.மு.க. 18 இடங்களிலும் பா.ம.க. 4 இடங்களிலும் ம.தி.மு.க., பா.ஜ.க. தலா மூன்று இடங்களிலும் ராஜீவ் காங்கிரஸ் ஓரிடத்திலும் வெற்றி பெற்றன.

தேர்தலில் ஊழல் எதிர்ப்பைத் தமிழக மக்கள் முதல் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளவில்லை. நிலையான ஆட்சியை பா.ஜ.க.வால் தரமுடியும் என்ற எண்ணம் மத்திய தர வர்க்கத்திடம் வலுவடைந்திருந்தது.

அ.தி.மு.க. என்ற திராவிடக் கட்சி ஒன்று பா.ஜ.க.வுக்கு நற்சான்றிதழ் வழங்கியதால் அக்கட்சியை ஏற்க மக்கள் முன்வந்தனர். பிற்பட்ட மக்களில் ஒருபகுதியினரும் பா.ஜ.க. ஆதரவு நிலைக்கு மாறினர். இதுபோன்ற பல காரணங்கள் பா.ஜ.க. - அ.தி.மு.க. அணி தமிழகத்தில் வெற்றிபெறக் காரணமாக அமைந்தது.

அகில இந்திய அளவில் பா.ஜ.க. முன்னேற்றம் அடைந்து 179 இடங்களைக் கைப்பற்றியது. இதன் கூட்டணிக் கட்சிகளான சமதா 12, சிவசேனை 6, லோக்சக்தி 3, திருணாமூல் 7 ஆகியவையும் முன்னேற்றத்தைப் பெற்றன. காங்கிரஸ் 141, மார்க்சிஸ்ட் 32, இந்திய கம்யூனிஸ்ட் 8 மற்றும் தி.மு.க. 6, த.மா.கா.3 இடங்களையும் வென்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜெயலலிதா விரிவான கூட்டணியை உண்டாக்கிய நிலையில் 1996 -ம் ஆண்டுத் தேர்தலில் 39 இடங்களை வென்ற மிதப்பில் தி.மு.க. - த.மா.கா. இரண்டும் புதிய கட்சிகளைத் தங்கள் அணியில் சேர்த்துக் கொள்ளவில்லை. இந்த அணி நினைத்திருந்தால் பாட்டாளி மக்கள் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி, ஜனதாதளம், புதிய தமிழகம் போன்ற கட்சிகளுக்கு உரிய இடங்கள் அளித்து ஒன்றுபட்ட உறுதியான அணியை உருவாக்கி இருக்க முடியும்.

கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு பாஜக மத்தியில் ஆட்சியில் அமர்ந்தது. வாஜ்பாய் பிரதமர் ஆனார். இத்தேர்தலில் பா.ஜ.க.வுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஒரிசாவில் பிஜூ ஜனதாதளம், கர்நாடகத்தில் லோக்சக்தி, தமிழகத்தில் அ.தி.மு.க. ஆகிய கட்சிகளுடன் புதிதாகக் கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டதே பா.ஜ.க.வின் வெற்றிக்குப் பிரதான காரணம்.

பா.ஜ.க.வின் கூட்டணியில் ஏற்கெனவே உள்ள சமதா கட்சி மட்டுமின்றி புதிய இக்கட்சிகளும் பா.ஜ.க.வின் மதவாத கருத்துகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் மதவாதம் நாட்டில் காலூன்றி விட்டது என்பதை விட மதச்சார்பற்ற கட்சிகள் தேர்தல் ஆதாயத்திற்காக பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்ததால் பா.ஜ.க. முன்னணிக்கு வந்துள்ளது என்றும் சொல்லலாம். ❑

www.tamilarangam.net

# கார்கில் போர் தந்த வெற்றி

மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமைந்த உடனேயே அந்த ஆட்சிக்கான நெருக்கடி தமிழகத்திலிருந்து வந்தது. தொடக்கத்தில் அமைச்சரவையில் சேர மாட்டோம் என்று ஜெயலலிதா அறிவித்ததை அடுத்து, அவரைச் சந்திக்க தில்லியிலிருந்து அடுத்தடுத்து பல அமைச்சர்கள் சென்னை வந்தனர்.

அதன் பின்னர் அவர் விருப்பப்படியே சட்டத்துறை உள்ளிட்ட சில அமைச்சரவைப் பதவிகள் அ.தி.மு.க.வுக்கு ஒதுக்கப்பட்டன. (ஊழல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதால் பதவிஏற்ற 20 நாள்களில் சேடப்பட்டி முத்தையா தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய நேரிட்டது)

தனக்குப் பாதுகாப்புத்துறை அமைச்சர் பதவி தர பிரதமர் முன்வந்தார் என்றும் எனினும் தான் அதை ஏற்கவில்லை என்றும் பத்திரிகைகளைச் சந்தித்தபோது ஜெயலலிதா தெரிவித்தார். பா.ஜ.க.வின் ராமர் கோயில் கட்டும் திட்டம் உள்ளிட்ட பா.ஜ.க.வின் சர்ச்சைக்குரிய திட்டங்களைக் கிடப்பில் போட்டுவிட வேண்டும் என்று தான் வலியுறுத்தியதாகவும் தெரிவித்தார்.

இந்திய மக்களைப் பிளவுபடுத்தும் அனைத்து மதவாதப் போக்குகளையும் கைவிடுங்கள்; அவற்றை எல்லாம் 25, 30 ஆண்டுகளுக்குக் கிடப்பிலே தள்ளுங்கள்; மக்களின் இன்றைய முக்கியத் தேவை குடிதண்ணீர், வேலைவாய்ப்பு ஆகியன ஆகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுங்கள் என்று பா.ஜ.க.வை கேட்டுக்கொண்டதாக ஜெயலலிதா பின்னர் தெரிவித்தார்.

பா.ஜ.க.வுக்கு மேலும் ஒரு சில மாதங்களை ஒதுக்க எதிர்க்கட்சித் தயாராக இருந்த போதிலும் கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க. அத்தகைய வாய்ப்பை ஆளும் கட்சிக்குத் தரத் தயாராக இல்லை என்பது அக்கட்சியின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தெரிந்தது.

அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பா.ம.க., தமிழக ராஜீவ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் இலாகா ஒதுக்கீடு விஷயத்தில் கூட ஜெயலலிதாவின் தலையீடு இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. த.ரா.கா. தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியின் பெட்ரோலிய இலாகாவை அ.தி.மு.க.வுக்கு ஒதுக்க வேண்டும் என்று ஜெயலலிதா வற்புறுத்தினார். அப்படி மாறுதல் எதையும் செய்யக்கூடாது என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் எதிர்ப்புத் தெரிவித்தார்.

பெரும் பணம் புரள வாய்ப்புள்ள அத்துறையைத் தொடக்கத்தில் சேடப்பட்டி முத்தையாவுக்குத் தர பிரதமர் முன்வந்தபோது அதை ஜெயலலிதா அனுமதிக்கவில்லை. அதன்பின் மனம் மாறிய ஜெயலலிதா பெட்ரோலிய இலாகாவைத் தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று கோரியபோது அதில் அவர் வெற்றி பெறமுடியவில்லை.

பெட்ரோலியத்துறையைத் தங்கள் கட்சிக்கு ஒதுக்கவேண்டும் என்று ஜெயலலிதா வெளிப்படையாகக் கோரினால் அத்துறையை விட்டுத் தருகிறேன் என்று வாழப்பாடி ராமமூர்த்தி பகிரங்கமாக அறிவித்தார்.

இது மட்டுமின்றி 356-வது பிரிவைப் பயன்படுத்தி தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்றும் ஜெயலலிதா வலியுறுத்தி வந்தார். முன்னதாகத் தேர்தலின் போதே, பா.ஜ.க. ஆட்சி ஏற்பட்டால் தி.மு.க. ஆட்சி கலைக்கப்படும் என்று அ.தி.மு.க. பிரசாரம் செய்தது. அதை பா.ஜ.க. எதிர்க்கவும் செய்தது. பா.ஜ.க. துணைத்தலைவர் ஜனா.கிருஷ்ணமூர்த்தி, மாநிலச் செயலாளர் இல. கணேசன் போன்றவர்கள் இப்பிரசாரத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

www.tamilarangam.net



356-வது பிரிவைப் பயன்படுத்தி தமிழக ஆட்சியைக் கலைக்கக் கூடாது என்ற தனது கொள்கை முடிவை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்திக் கூற ஆரம்பித்தார். தன்னுடன் கூட்டணியில் இருந்த தமிழகக் கட்சிகள் ஜெயலலிதாவின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத நிலை உருவானது. இந்நிலையில் அக்கட்சிகளுடன் உறவு இல்லை என்று அ.தி.மு.க. அறிவித்தது. உடனடியாகத் தாங்களும் உறவை முறித்துக் கொள்கிறோம் என்று அறிவிக்க முடியாத நிலையில் கூட்டணிக் கட்சிகள் தத்தளித்தன.

ஜெயலலிதா விருப்பப்படி தி.மு.க. ஆட்சியைக் கலைக்கும் முடிவை மத்திய அரசு எடுத்தாலும் அது தொடர்பான தீர்மானம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேறி ஆகவேண்டும். அதற்குப் போதுமான எண்ணிக்கை பலம் இல்லை என்று கூறி பா.ஜ.க. தப்பித்துக் கொள்ளப் பார்த்தாலும் அப்பலத்தைத் தன்னால் பெற்றுத்தர முடியும் என்று ஜெயலலிதா அறிவித்தார்.

அதற்கும் பா.ஜ.க. இணங்காதபோது பா.ஜ.க.வுக்கும் தி.மு.க. வுக்கும் ரகசிய உறவு என்று ஜெயலலிதா புகார் தெரிவித்தார். தி.மு.க. ஆட்சியைக் கலைக்க எங்களை ஆதரியுங்கள் என்று தேர்தலில் தான் பிரசாரம் செய்ததாகவும் அதை ஏற்றுத்தான் மக்கள் தங்களுக்கு வாக்களித்தனர் என்றும் ஜெயலலிதா தெரிவித்தார்.

தி.மு.க. ஆட்சிக் கலைப்பு என்ற ஓரம்சக் கோரிக்கையை ஜெயலலிதா வலியுறுத்த, வலியுறுத்த, பா.ஜ.க. சில விஷயங்களில் வளைந்து கொடுக்க ஆரம்பித்தது. ஜெயலலிதா மீதான வழக்கு களைத் தனிநீதிமன்றம் விசாரிப்பதற்குப் பதிலாக அமர்வு நீதிமன்றம் இனிமேல் விசாரிக்கும் என்ற உத்தரவை அ.தி.மு.க. சார்பில் சட்ட அமைச்சராக இருந்த தம்பிதுரை பிறப்பித்தார். பின்னர் அந்த உத்தரவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்து தனிநீதிமன்ற விசாரணைக்கு அனுமதி அளித்தது.

மிரட்டிப் பணிய வைக்கும் முயற்சி எடுபடாத நிலையில் 1998-ம் ஆண்டு ஜூன் 27-ம் தேதி நடந்த பா.ஜ.க. கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஜெயலலிதா புறக்கணித்தும் பார்த்தார். தனக்கு உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தைத் தெரிவித்து விட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அவரைக் கடுமையாக விமர்சித்து வந்த ஜனதா கட்.சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமியின் நிலைப்பாடு ஏற்கனவே உருமாறிப் போயிருந்தது. ஜெயலலிதா வுடன் அணி சேர்ந்திருந்த அவருக்கும் மத்திய அமைச்சரவையில் இடம் தர வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கையைப் பிரதமர் ஏற்கவில்லை. அதனால் கோபமடைந்திருந்த சுவாமி, மத்திய ஆட்சியைக் கவிழ்த்து விட்டு மாற்றாகக் காங்கிரஸ் ஆட்சியை மத்தியில் அமைப்பேன் என்று சபதமேற்றுக் காய்களை நகர்த்தி வந்தார்.

மத்திய ஆட்சி மீது ஜெயலலிதாவின் கசப்பு உச்சகட்டத்தை அடைந்த வேளையில் தேநீர் விருந்து என்ற திருப்புமுனைத் திட்டத்தை சுவாமி வகுத்தார். இந்நிகழ்ச்சி மூலம் சோனியாகாந்தி ஜெயலலிதா சந்திப்புக்குத் திட்டமிடப் பட்டது. எனினும் சோனியா காந்தி பங்கேற்பாரோ இல்லையோ என்ற 'சஸ்பென்ஸ்' நிலவிய நேரத்தில் அவ்விருந்தில் பங்கேற்றார்.

இதன் தொடர்ச்சியாக வாஜ்பாய் ஆட்சிக்கு அளித்து வந்த ஆதரவை 1999 -ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் தேதி ஜெயலலிதா வாபஸ் பெற்றார். மதச்சார்பற்ற கட்சிகளின் ஆட்சியை அமைப்பேன் என்று கூறி அவர் தில்லியில் முகாமிட்டார்.

முன்னதாக அட்மிரல் பகவத்தை கடற்படைத் தளபதி பதவியிலிருந்து நீக்கியதை ஜெயலலிதா எதிர்த்தார். ஒரிசாவில் கிரஹாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் உள்ளிட்ட சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்கள் போன்றவற்றையும் அவர் கண்டித்து வந்தார் என்பது உண்மையே. இறுதியில் ஜார்ஜ் பெர்னாண்டஸ் மீது ஊழல் குற்றச் சாட்டைச் சுமத்தினார். பெர்னாண்டசைப் பதவியிலிருந்து நீக்கக் கோரினார். கோவாவில் கூடிய பா.ஜ.க.வின் தேசிய செயற்குழு, ஜெயலலிதாவின் கோரிக்கைகளை நிராகரித்ததால் தனது இரண்டு அமைச்சர்களை முதலில் வாபஸ் பெற்றார். பின்னர் ஒருங்கிணைப்புக் குழுவிலிருந்து ராஜினாமா செய்தார்.

ஜெயலலிதா ஆட்சிக்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற்றவுடன், அரசாங்கம் சிறுபான்மை அரசாக மாறிவிட்டது என்று எதிர்க்கட்சிகள் கூறின. இந்நிலையில் மக்களவையில் நம்பிக்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாக்கெடுப்பை நடத்தும்படி பிரதமர் வாஜ்பாயை குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

ஜெயலலிதா விருப்பப்படி மத்தியில் காங்கிரஸ் தலைமையில் மாற்று ஆட்சி அமைந்து விட்டால் ஜெயலலிதா மீதான வழக்கு வாபஸ் பெறப்படுவதோடு தி.மு.க.வுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகள் வரலாம் என்ற அச்சத்தில் தி.மு.க. தனது பாஜக எதிர்ப்பு நிலையை மறுபரிசீலனை செய்யத் தயாரானது.

முற்கனவே ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையின் அடிப்படையில் தி.மு.க.வை ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்து விலக்க, காங்கிரஸ் நிர்பந்தம் செய்த கசப்பான அனுபவமும் தி.மு.க.வுக்கு நினைவில் வந்திருக்க வேண்டும். இக்காரணங் களாலும் மத்தியில் அதிகாரத்தில் பங்கு பெறுவதற்காகவும் பாஜகவை ஆதரிப்பதென்று தி.மு.க. முடிவெடுத்தது எனவும் கணிக்கப்பட்டது. நம்பிக்கை கோரும் வாக்கெடுப்புக்கு ஆதரவாக வாக்களிக்க முடிவு செய்தது.

எந்தக் கட்சியை எதிர்த்து மக்களிடம் வாக்குப் பெற்றதோ அந்தக் கட்சிக்கு, 'நிலையான ஆட்சி' என்ற வாதத்தை முன்வைத்து தி.மு.க. ஆதரவளிக்க முன்வந்தது. அதன் இச்சந்தர்ப்பவாத முடிவு தமிழக அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

தி.மு.க. கூட்டணியில் இருந்த த.மா.கா. மதச்சார்பின்மை என்ற கொள்கை அடிப்படையில் பாஜக கூட்டணி ஆட்சியை எதிர்த்தது. அதன் விலையாகத் தமிழகத்தில் தி.மு.க. கூட்டணியையும் முறித்துக் கொள்ள வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டது.

தி.மு.க.வின் முடிவில் த.மா.கா. மட்டுமின்றி இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், ஜனதாதளம் ஆகியவையும் வெறுப்புற்று தி.மு.க.வின் எதிராணிக்குச் செல்ல வேண்டிய நிர்பந்தம் உருவானது.

பா.ஜ.க. ஆட்சியை ஜெயலலிதா எதிர்த்த போதிலும் அதன் கூட்டணியில் இருந்து வந்த ம.தி.மு.க., பா.ம.க., த.ரா.கா. ஆகியவை பா.ஜ.க.வுக்கு ஆதரவான நிலையைத் தொடர்ந்து மேற்கொண்டன.

தொடக்கத்தில் பகுஜன் சமாஜ் கட்சி நடுநிலைமை வகிக்கும் என்று அறிவித்திருந்தது. இதனால் நம்பிக்கை கோரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாக்கெடுப்பில் வெற்றி பெற்றுவிட முடியுமென்ற நம்பிக்கையோடு பா.ஜ.க. இருந்தது. ஆனால் பா.ஜ.க.விற்கு எதிராக வாக்களிக்க, கடைசி நேரத்தில் பகுஜன் கட்சி முடிவெடுத்தது. ஒரு வாக்கு வித்தியாசத்தில் பாஜக தோற்று ஆட்சியை இழந்தது. சேடப்பட்டி முத்தையாவின் ஒரு வாக்கும் பதிவு செய்யப்பட்டிருந்தால் இரண்டு வாக்குகளில் பாஜக தோற்றிருக்கும்.

திட்டமிட்டபடி மாற்று அரசாங்கம் அமைப்பதில் எதிர்க்கட்சிகள் இடையே ஒற்றுமை ஏற்படவில்லை. காங்கிரஸ் தலைமையில் மாற்று ஆட்சி ஏற்படுவதற்கு எதிராக முலாயம் சிங்கின் சமாஜ்வாதி கட்சி, இடதுசாரி அணியில் இருந்த ஆர்.எஸ்.பி. பார்வர்ட் பிளாக் ஆகியவை செயல்பட்டன. இதனால் காங்கிரஸ் ஆட்சியை அமைக்கப் போதுமான ஆதரவைக் காட்ட முடியவில்லை.

இறுதியாக காங்கிரஸ் அல்லாத மூன்றாவது அணி ஆட்சி அமைக்க காங்கிரஸ் ஆதரவு தர மறுத்துவிட்டது. இந்நிலையில் வாஜ்பாயின் காபந்து சர்க்கார் ஆட்சியில் இருந்தது. உடனடியாகத் தேர்தலை நடத்தினால் அனுதாப வாக்குப் பெறலாம் என்று பா.ஜ.க. நினைத்தது. ஆனால் உடனடியாகத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் முன்வரவில்லை.

இதற்கிடையே கார்கில் ஊடுருவல் நடந்தது. அதனால் நடந்த போரில் சுமார் 500 இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். இறுதியில் ஊடுருவல்காரர்கள் நம் எல்லையிலிருந்து வெளியேறினர். கார்கில் வெற்றியை முன்வைத்து தேர்தலைச் சந்திக்க பாஜக திட்டமிட்டது. அச்சமயத்தில் தேர்தல் செப்டம்பர் 5-ம் தேதி முதல் அக்டோபர் 3-ம் தேதிவரை 5 நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

''ஜார்ஜ் பெர்னாண்டசின் 5000 கோடி ரூபாய் ஆயுத பேர ஊழல் பற்றி விசாரணை என்பதோடு, சர்க்காரியா கமிஷன் அறிக்கைக்குப் புத்துயிர் ஊட்டி நடவடிக்கை மேற்கொள்ளுதல், ஜெயின் கமிஷனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது தீவிர கிரிமினல் நடவடிக்கை'' என அ.தி.மு.க. வெளியிட்ட 27 பக்க அறிக்கை தெரிவித்தது .

தி.மு.க. வெளியிட்ட 24 பக்கத் தேர்தல் அறிக்கையில் ''மதவெறி காரணமாக பிற மதச்சகோதரர் எவருக்கும் தீங்குவராது என்றும் அவ்வாறு வருமானால் தி.மு.க. பொங்கியெழுந்து

www.tamilarangam.net



அவர்களுக்குத் துணை நின்று காப்பாற்ற எவ்விதத் தியாகத்துக்கும் தயங்காது எனவும் வாக்குறுதி தரப்பட்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி என்பது வேறு. அது யாருடைய அரசியல் சாயமும் அல்ல; அரசியல் கரமும் அல்ல. அது இந்திய மக்களின் ஒன்றாக இணைந்த அரசியல் கரமாகும். எனவே யாரும் ஒதுக்கி வைக்கப்பட மாட்டார்கள் என்று தி.மு.க. தெரிவித்தது.

தமிழக அளவில் மூன்றாவது அணி அமைத்த த.மா.கா.வின் 15 பக்க அறிக்கையில், ஊழல், மதவாத்தை ஒருசேர எதிர்க்கும் கொள்கை நிலை குறித்து விளக்கம் தரப்பட்டது. தமிழ்ச் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினைரையும் நலிந்தவர்களையும் சிறுபான்மை சமுதாயத்தினரையும் அரசியல் நீரோட்டத்துக்கு அழைத்து வந்துள்ளதாகவும் விவரித்தது.

1998-ம் ஆண்டுத் தேர்தலில் பாஜக கூட்டணியில் அ.தி.மு.க. இருந்த இடத்தில் இன்று தி.மு.க. நாணமில்லாமல் அமர்ந்துள்ளது என்றும் த.மா.கா. விமர்சித்தது. மேம்பட்ட பொருளாதார வளர்ச்சியை எட்டுவதன் மூலம் வறுமையை ஒழித்து விடலாம் என்ற வாய்ப்பாட்டை மூன்று அறிக்கைகளும் தெரிவித்தன.

பா.ஜ.க.வைத் தேர்ந்தெடுத்தால் வகுப்பு வேற்றுமைகள் மற்றும் ஒற்றுமையின்மை அதிகரிக்கும். இடது ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற சக்திகளை தேர்ந்தெடுப்பதால் தேச ஒற்றுமையும் மதச்சார்பற்ற ஜனநாயகமும் காப்பாற்றப்படும் என்று இடது சாரிகள் தெரிவித்தனர்.

அதிபர் தேர்தலுக்குப் போட்டி நடப்பது போல் சோனியா காந்தியா அல்லது வாஜ்பாயா என்ற அளவில் பிரசாரம் குறுக்கப்பட்டது. கொள்கை பின்னுக்குத் தள்ளப்பட்டது. இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர் சோனியா காந்தி என்ற பிரசாரம் முன்னிலைப்படுத்தப்பட்டது. ராம் ராஜ்யமா அல்லது ரோம் ராஜ்யமா என்ற கோஷம் எழுப்பப்பட்டது.

தேர்தலைச் சந்திக்கும் நேரத்தில் காங்கிரஸ் ஒரு பெரும் பின்னடைவைச் சந்தித்தது. சோனியாவைப் பிரதமருக்கான வேட்பாளராக முன்னிறுத்தக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்து சரத்பவார், பி.ஏ.சங்மா போன்றோர் போர்க்கொடி தூக்கினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசியவாதக் காங்கிரஸ் என்ற புதிய அமைப்பைத் தொடங்கினர். மகாராஷ்டிர மாநிலத்தில் மக்களவையுடன் சேர்த்து சட்டசபைத் தேர்தலும் நடத்தப்பட்டதால் சரத்பவாரின் நிலைப்பாடு பெரும் நெருக்கடியைக் காங்கிரசுக்கு ஏற்படுத்தியது.

இதற்கிடையே தமிழகத்தில் சோனியா காந்தியும் ஜெயலலிதாவும் திட்டமிட்டபடி விழுப்புரம் பொதுக்கூட்டத்தில் பேசவில்லை. ஜெயலலிதா அக்கூட்டத்தை புறக்கணித்தார். ஜெயலலிதாவின் இப்புறக்கணிப்பு காரணமாக தமிழகத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படும் என கணிக்கப்பட்டது. சோனியா காந்தியுடன் சேர்ந்து பிரியங்காவும் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

தேர்தல் நடைபெற்ற 537 இடங்களில் பாஜக கூட்டணிக் கட்சிகள் 299 (41 சதவீத வாக்கு) இடங்களைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தன. தெலுங்கு தேசம், தி.மு.க., ஐக்கிய ஜனதாதளம் உள்ளிட்ட மதச்சார்பற்ற கட்சிகளையும் சேர்த்து மொத்தம் 24 கட்சிகளின் விரிவான கூட்டணி அமைக்கப்பட்ட பாஜகவுக்கு இந்த வெற்றி கிட்டியது.

அ.தி.மு.க., ராஷ்ட்ரீய ஜனதாதளம் உள்ளிட்ட கட்சிகளுடன் காங்கிரஸ் கூட்டணி அமைத்திருந்தது. ஆனாலும் தேசிய அளவில் விரிவான கூட்டணியை அமைக்க அக்கட்சி தவறிவிட்டது. காங்கிரசும் அதன் கூட்டணிக் கட்சிகளும் 134 இடங்களில் வெற்றி பெற்று 34 சதவீத வாக்குகளைப் பெற்றன. கடந்த தேர்தலை விட 28 இடங்கள் குறைவாகவே காங்கிரசுக்குக் கிடைத்தன. கர்நாடகத்தில் சட்டப்பேரவையை பிடித்தது. பஞ்சாப், உ.பி.யில் சிறிதளவு முன்னேற்றம் இருந்தது.

மூன்றாவது அணி சரியாக உருப்பெறாத நிலையில் இடதுசாரிகள் மேற்கு வங்கம், கேரளம் ஆகிய இடங்களில் மட்டும் வெற்றியைத் தக்க வைத்துக்கொண்டனர்.

மார்க்சிஸ்ட் கட்சி 32 இடங்களிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 4 இடங்களிலும் வென்றன. சமாஜ்வாதி கட்சி 26 இடங்களிலும் பகுஜன் சமாஜ் கட்சி 14 இடங்களிலும் வென்றன. தெலுங்கு தேசம் 29 இடங்களிலும் சிவசேனா 15 இடங்களிலும் தி.மு.க. 12 இடங்களிலும் வென்றன.

இத்தேர்தலில் பா.ஜ.க. எதிர்பார்த்த வெற்றியை ஈட்டமுடியவில்லை. உ.பியில் அதன் இடங்கள் 29ஆகக் குறைந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1998-ல் 57 இடங்களை அது பிடித்திருந்தது. எனினும் பிகாரில் அந்த இடங்களை ஈடுகட்டும் வகையில் இத்தேர்தலில் அதற்கு வெற்றி கிட்டியது. மொத்தத்தில் கடந்த தேர்தலை விட கூடுதலாக இரண்டு இடங்களையே பெற்றது. கடந்த தேர்தலில் 384 இடங்களில் போட்டியிட்ட பாஜக இம்முறை 340 இடங்களில் போட்டியிட்டது. வாக்கு சதவீதம் 25.5. சதவீதத்தில் இருந்து 23.8 சதவீதமாகக் குறைந்துவிட்டது.

தேர்தலின் போது பொருளாதார சீர்திருத்தத்தினால் ஏற்படும் பாதகங்கள் சரியாக மக்களிடையே பிரசாரம் செய்யப்படவில்லை. மாநிலப் பிரச்சினைகளே முன்னுக்கு வந்தன. உதாரணமாக ஜெயலலிதா எதிர்ப்பு என்ற அளவில்தான் தி.மு.க. தன் பிரசாரத்தை அமைத்துக் கொண்டது.

பல மாநிலங்களில் சாதியக் கண்ணோட்டம் மற்றும் உள்ளூர் பிரச்சினைகள் அடிப்படையில் மக்கள் வாக்களித்தனர். கார்கில் வெற்றி ராணுவத்தின் வெற்றி என்ற போதிலும் வாஜ்பாயின் ராஜதந்திரமே அவ்வெற்றியை ஈட்ட உதவியது என்று பா.ஜ.க. செய்த பிரசாரம் அக்கட்சிக்கு லாபத்தைத் தந்தது.

அதோடு ''இந்த மனிதர் என்ன தவறு செய்தார். 13 மாதத்தில் அவர் பதவியை இழந்தார் என்று கூறி வாஜ்பாய் ஆட்சிக் கவிழ்ப்பு பற்றி பிரசாரம் செய்து பா.ஜ.க. அனுதாப வாக்கையும் திரட்டியது. 1998-ல் ஆதரவளித்த மத்தியதர வர்க்க மற்றும் பிற்பட்ட வகுப்பினரின் ஆதரவு 1999-ம் ஆண்டிலும் நீடித்ததால் வாஜ்பாய் மீண்டும் பிரதமர் ஆனார். ❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

NORMAN SEELAN BOOKS

# பகுதி - ௨

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தலித் அரசியலும் சாதி அரசியலும்

**த**மிழ்நாட்டில் சாதிக்கொரு சங்கம் - நடவடிக்கை என்ற போக்கு தலைதூக்கியுள்ளது. புதிது புதிதாகச் சாதித் தலைவர்கள் ஆங்காங்கு முளைக்கின்றனர். சாதி அடிப்படையில் வாக்கு வங்கியை உருவாக்க அவர்கள் களத்தில் இறங்கிச் செயல் படுகின்றனர்.

என்ன சாதி என்று வெளியில் கூறுவதை அல்லது கேட்பதைக் கீழ்த்தரமான செயல் என்று கருதும் காலகட்டம் ஒன்று தமிழகத்தில் இருந்தது. ஆனால், தற்போது நிலைமை தலைகீழாக மாறிவருவது வேதனை தரத்தக்கது.

சாதி என்பது நம் நாட்டைப் பீடித்துள்ள ஒரு விசித்திரமான சாபக்கேடாகும். நாட்டின் சமூக ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் சாதி நடைமுறை தடைக்கல்லாக இருந்து வருகிறது. நாடு முழுவதும் 4,650 சாதிகள் உள்ளன என ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. தமிழகத்தில் மட்டும் 400வகைச் சாதிகள் உள்ளன. பிற்பட்ட பிரிவில் 323 சாதிகளும் அதன் உட்பிரிவுகளும் மற்றும் தாழ்த்தப்பட்ட பிரிவில் 67 சாதிகளும் உள்ளன.

நாட்டிலும் தமிழகத்திலும் சாதி அரசியல் உருவாக அரசியல் கட்சிகளும் ஒரு காரணமாக இருந்து வந்துள்ளன. ஒரு தொகுதியில் பெரும்பான்மை மக்கள் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கவனித்தே முக்கியக் கட்சிகள் வேட்பாளர்களை நிறுத்துகின்றன.

www.tamilarangam.net



முக்கிய வேட்பாளர்கள் அனைவரும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் என்ற நிலையில் கட்சிச் செல்வாக்கு, தனிப்பட்ட செல்வாக்கு போன்றவை வெற்றியைத் தீர்மானிக்கும் சக்திகளாக மாறிவிடுகின்றன.

ஊர்த்தலைக்கட்டு, சாதிப்பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு அந்தந்த சாதி மக்கள் வாக்குகளை அளிக்கும் பழக்கம் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. பணம் கொடுத்தோ அல்லது காரியம் செய்து தருவதற்கான வாக்குறுதியை அளித்தோ சாதிப்பெரியவர்களை அரசியல் கட்சிகள் கவர்கின்றன.

சிறு நகரங்களில் கட்சி சாராத அமைப்பாக உள்ள சாதிச் சங்கங்கள் கூட தேர்தலின்போது கூடி ஆலோசனை நடத்துகின்றன. தனது சாதியைச் சேர்ந்த வேட்பாளர் போட்டியில் இல்லாத நிலையில் தங்களுக்குச் சாதகமான சாதியைச் சேர்ந்தவர்களுக்கு வாக்களிக்கின்றனர்.

ஆதிக்கச் சாதி வேட்பாளர்கள் தலித்துகளை எச்சரிக்கை செய்து மிரட்டி வாக்குகளைப் பெறும் போக்கும் நீண்ட காலமாக நடந்து வந்தது. பொருளாதார ரீதியில் ஆதிக்கச் சாதியினரைச் சார்ந்து வாழ்வதால் தலித்துகள் சுதந்திரமாக முடிவெடுத்து வாக்களிக்க முடியாத நிலை இருந்தது.

தலித்துகள் மட்டுமின்றி சிறுபான்மைச் சாதியாக யார் இருக்கிறார்களோ அவர்கள் குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று தெரிய வந்தால் சம்பந்தப்பட்டப் பகுதியில் வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்கு வரக்கூடாது என்று எச்சரிக்கை செய்து விடுவார்கள். அதையும் மீறி வந்தால் கலவரத்தை ஏற்படுத்தி வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கச் செய்து விடுவார்கள். இதன்பின் சிறுபான்மைச் சாதியினரின் வாக்குகளையும் சேர்த்துக் கள்ள வாக்குகளாக ஆதிக்கச் சாதி வேட்பாளர்கள் தங்களுக்குச் சாதகமாகப் போட்டுக்கொள்வார்கள்.

இத்தகைய போக்கில் மாற்றம் ஏற்பட்டு வன்னியர், தேவர் எனப்படும் முக்குலத்தோர், தலித்துகள், நாடார்கள், கொங்கு வேளாளர்கள், நாயுடுகள் போன்ற முக்கியச் சாதிகள் தங்களுக்கென அரசியல் கட்சிகளைத் தொடங்கி விட்டன. இப்போக்கைக் கண்டு ஏற்கனவே சாதி அரசியலை நடத்தி வந்த கட்சிகள் பலவும் திகைப்படைந்துள்ளன.

www.tamilarangam.net



அ.தி.மு.க.வில் செல்வாக்கிழந்த முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் யாதவ குலத்தினர் சார்பில் 'மக்கள் தமிழ்த் தேசத்தை'த் தொடங்கியுள்ளார். அ.தி.மு.க. முன்னாள் எம்.பி. சண்முகம் 'புதிய நீதிக்கட்சி' என்ற பெயரில் முதலியார் சாதிக்காகப் புதிய கட்சியைத் தெடங்கியுள்ளார்.

ஒடுக்கப்பட்டுள்ள சாதிகள் அரசியலதிகாரத்தில் இடம் பிடிக்கக் கட்சி அரசியலில் ஈடுபடுவது என்பது ஒருவகை என்றால், முதலியார் போன்ற செல்வாக்கு உள்ள ஆதிக்கச் சாதியினரும் அரசியல் கட்சி தொடங்குவது கூர்ந்து நோக்கத்தக்கது. சாதி வாக்கைச் செல்வாக்குள்ள நபர் தனக்கு ஆதரவாகத் திருப்பிக் கொள்ளப் பார்க்கிறாரா அல்லது ஆதிக்கச் சாதிகள் தங்கள் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள கட்சி அரசியலில் ஈடுபடுகின்றனவா என்றும் ஆராய வேண்டியுள்ளது.

தங்களுடைய பிரதிநிதித்துவம் பற்றிப் பேசுகின்ற அதே நேரத்தில் தலித்துகள் (தாழ்த்தப்பட்டோர்) தொகுதியைச் சுழற்சி முறையில் மாற்ற வேண்டும் என்றும் தலித்துகள் தொகுதிகளை ரத்து செய்ய வேண்டும் என்றும் சில பிற்படுத்தப்பட்டோர் சார்பு அமைப்புகள் கோருகின்றன. ஆதிக்கச் சாதியாகத் தொடர்ந்து நீடிக்கும் நோக்கத்தில் சில பிற்படுத்தப்படுத்தப்பட்ட சாதிக்கட்சிகள் தங்கள் செயல்பாடுகளை வகுத்து வருகின்றனர். மீண்டும் அனைத்து இடங்களிலும் இரட்டைத் தம்ளர் முறையை அமலாக்க வேண்டும் என்றும் கோருகின்றனர்.

இதே காலகட்டத்தில் தலித்துகள் சாதி சமத்துவம் கோரும் போராட்டத்தை வேகப்படுத்தியுள்ளனர். டாக்டர் கிருஷ்ணசாமியின் 'புதிய தமிழகம்' தீண்டாமை போன்ற கொடுமைகளை எதிர்ப்பதில் முனைப்பாகச் செயல்படுகிறது. இக் கட்சியின் வருகைக்குப் பின் சாதி மோதல் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது, தாங்கள் தாக்கப்பட்டால் தலித்துகள் திருப்பித் தாக்கும் நிலைமை உருவெடுத்துள்ளது. வடமாவட்டங்களில் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பும் போர்க்குணத்துடன் செயல்படுகிறது.

இப்படி உருவாகியுள்ள சாதித் தீவிரவாதத்தின் விளைவாக அப்பாவி ஏழை மக்கள் வீடு, உடைமைகளை இழக்கின்றனர். திருப்பித் தாக்கும் தலித்துகளைப் பழிவாங்கும் வகையில் அவர்களுக்கு நிலங்களில் வேலை தர மறுப்பது, பொதுக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழாய்களில் நீர் தர மறுப்பது, கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் தர மறுப்பது போன்ற நடவடிக்கைகளில் ஆதிக்கச் சாதியினர் இறங்குகின்றனர்.

பல இடங்களில் சிறுபான்மை எண்ணிக்கையில் உள்ள தலித்துகள் ஊரைவிட்டே விரட்டப்படுகின்றனர். பாதிக்கப் பட்டோர் அதிக எண்ணிக்கையில் தலித்துகள் வாழும் ஊர்களுக்குச் சென்று குடியேறி பல நாட்கள் அகதி வாழ்க்கை வாழ நேரிடுகிறது. பொருளாதாரப் பலம் குறைந்திருப்பது எளிதில் குறி வைத்துத் தாக்கப்படுவதற்கான முக்கியக் காரணமாக உள்ளது.

இது தவிர தலித்துகளை ஒடுக்குவதில் சமீப காலமாகப் சிலபிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே ஆச்சரியமான ஒற்றுமை காணப்படுகிறது. ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பாக நடந்த போடி கலவரத்தின்போது பிற்படுத்தப்பட்ட சாதியினரிடையே இத்தகைய மூர்க்கத்தனத்தைப் பார்க்க முடியவில்லை.

போடிநாயக்கனூர் பி. மீனாட்சிபுரத்தில் தேவேந்திர குலச் சங்கத்தைச் சேர்ந்த ஜான் பாண்டியனின் (10.9.89) ஆத்திரமூட்டும் பேச்சால் அப்போது வன்முறை துவங்கியது. இதன் விளைவாக முத்துப்பிள்ளை என்ற தாழ்த்தப்பட்ட இனத்துப் பெண் கொல்லப்பட்டார். இதை ஆட்சேபித்த தாழ்த்தப்பட்டோர் கடும் தாக்குதலுக்கு ஆளானார்கள். தொடர்ச்சியாக போடி, தேனி, சின்னமனூர், ஆண்டிப்பட்டி போன்ற இடங்களில் பரவலாக நடந்த கலவரத்தின்போது தாழ்த்தப்பட்டோர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தாழ்த்தப்பட்டோரை அடக்கச் சில முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பிற்படுத்தப்பட்ட ஏழைகளுக்குப் பொருளுதவி செய்தனர். அதே முற்பட்ட வகுப்பினர் வீடிழந்த தலித்துகளுக்கும் சில இடங்களில் உணவும் வழங்கினர்.

ஆனால், சமீபகாலமாக பிற்படுத்தப்பட்டோர் தலித் எதிர்ப்பில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேல் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட தலித்துகள் தங்கள் உரிமைக்காகக் குரல் கொடுப்பதை அங்கீகரிக்கத் தவறுகின்றனர்.

இதன் மூலம் ஆதிக்கச் சாதியினர் ஒரு பக்கமும் தலித்துகள் மறுபக்கமாகவும் இருகூறாகப் பிளவுபட்டு நிற்பதாகச் சொல்ல முடியாது. சாதி அரசியல் செய்வோர் அத்தகைய பிளவை உண்டாக்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாக்கு வங்கியை உருவாக்க முனைகின்றனர். சாதி மேலாதிக்க மனோபாவம் வளரப் போட்டி போட்டுக்கொண்டு தூபமிடுகின்றனர். ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள வேண்டாமா என்ற முழக்கத்தை முன் வைக்கின்றனர்.

மிகவும் பின்தங்கிய முக்குலத்தோர், வன்னியர் போன்ற சாதியினர் சில இடங்களைத் தவிர பெரும்பாலான இடங்களில் மிகவும் வறுமை நிலையில் உள்ளனர். இவர்களால் தலித்துகளின் மேல் நோக்கிய பொருளாதார, கலாசார முன்னேற்றங்களைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

தமிழ் நாட்டில் உள்ள 80 லட்சம் விவசாயக் கூலித் தொழிலாளர்களில் 40லட்சம்பேர் தலித்துகள். ஏனையோர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுப் பொதுக் கோரிக்கையை எழுப்புவதற்குத் தடையாகச் சாதி நிற்கிறது.

வளர்ந்து வரும் சாதி ஆதிக்க உணர்வு சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் பிரதிபலிக்கிறது. மனுநீதி நாளை, சட்டப்பேரவை உறுப்பினராக உள்ள கிருஷ்ணசாமி நடத்த விடாமல் தடுக்கும் வகையில் கயத்தாறு பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் ஒட்டுமொத்த விடுப்பில் சென்றனர். நிர்வாக அளவிலும் சாதி உணர்வு தலையெடுத்து உள்ளதை அது நிரூபித்தது. அதற்கு முன்னதாக அ.தி.மு.க. ஆட்சியில் 1995-ல் கொடியங்குளம் கிராமத்தை 600 'காவலர்கள் முற்றுகையிட்டுத் தாக்கி அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தின் அறிகுறியாக விளங்கிய தொலைக்காட்சி மற்றும் நுகர்பொருட்களை அடித்து நொறுக்கினர்.

நிர்வாகம் மற்றும் காவல்துறையின் ஒன்றுபட்ட தலித் எதிர்ப்புப் போக்குக்கு உதாரணமாக 17 பேரின் உயிரிழப்புக்குக் காரணமான நெல்லைப் படுகொலையைக் கூறலாம்.

நீதிமன்றம் தலித்துகளின் உரிமைக்காக உத்தரவு போட்டால் கூட அதை நிறைவேற்றும் சக்தியிழந்து நிர்வாகமும் காவல்துறையும் நிற்பதற்கு உதாரணமாக சிவகங்கை மாவட்டம் கண்டதேவி திருவிழா விளங்குகிறது. இங்குள்ள தேரை வடம் பிடித்து இழுப்பதில் தாழ்த்தப்பட்டோரும் பங்கேற்கலாம் என்று உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவை நடைமுறைப்படுத்த இயலாமல் தமிழக அரசு நிர்வாகம் திணறுகிறது.

www.tamilarangam.net



இதேபோல்தான் வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதி வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் தொடங்கிய நிகழ்வைப் பார்க்க வேண்டியுள்ளது. தலித் அல்லாத மற்றவரின் மனம் புண்பட்டு விடும் என்ற அச்சம் காரணமாக விழா கூட எடுக்காமல் ஓசையின்றி அப்போக்குவரத்துக் கழகத்தைத் தமிழக அரசு தொடங்கியது. ஆனால் இக்கழகப் பேருந்துகளை இயக்க விடாமல் ஆதிக்கச் சாதியினர் வன்முறையில் இறங்கினர். தாழ்த்தப்பட்டோர் ஒருவர் பெயரில் உள்ள பேருந்தில் ஏறமுடியாது என்று விதண்டாவாதம் செய்தனர்.

இப்பிரச்சினையில் உரிய முறையில் தீர்வு காணத் தவறிய தமிழக அரசு ஒட்டுமொத்தமாக மாவட்டங்கள், போக்குவரத்துக் கழகங்களுக்கு இடப்பட்டிருந்த அனைத்துத் தலைவர்களின் பெயர்களையும் நீக்கும் முடிவை எடுத்தது.

ஒரு தலித் சுதந்திரப் போராட்ட வீரருக்குச் சாதி முத்திரை குத்தப்படுவதைத் தி.மு.க. அரசு சகித்துக்கொண்டது. பொதுவாகச் சாதி மோதல்களைச் சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாகப் பார்க்கும் போக்கு தமிழக அரசிடம் உள்ளது. உரிமை கோருபவர்களையும், உரிமையைப் பறித்தவர்களையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கும் போக்கை அரசு கடைப்பிடிக்கிறது.

மோதல்களுக்கு அடிப்படைக் காரணமாக உள்ள தீண்டாமை கொடுமையைப் போக்குவதிலும் தீண்டாமைக் கொடுமைச் சட்டத்தை அமல்படுத்துவதிலும் போதிய அக்கறை இல்லாத நிலை இருக்கிறது. தமிழகத்தில் 7000 கிராமங்களில் தீண்டாமை இருப்பதாக மார்க்சிஸ்ட் கட்சி வெளியிட்ட 'தீண்டாமை ஒழிப்போம்' என்ற பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தீண்டாமை நீடிக்கும் அதே சமயத்தில் அமைதியும் நிலவ வேண்டும் என்று அரசு எதிர்பார்ப்பது இனிமேல் நடக்காது என்ற கொந்தளிப்பான நிலைமை தற்போது உருவெடுத்துள்ளது.

ஆதிக்கச் சாதி சகிப்பின்மை உணர்வுக்கு உயர்ந்தபட்சக் குறியீடாக மேலவளவில் பஞ்சாயத்துத் தலைவர் முருகேசன் மற்றும் 5பேர் பேருந்தில் சென்றபோது வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

உள்ளாட்சி அமைப்புகளில் தலித் இட ஒதுக்கீட்டைச் சகித்துக் கொள்ள முடியாத சாதி வெறியர்களின் இந்த வெறிச் செயல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜனநாயக நாட்டில்தான் வாழ்கிறோமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது. முருகேசனுக்கு அச்சுறுத்தல் வந்த நேரத்தில் அவர் கேட்டுக்கொண்டபடி காவல்துறையின் பாதுகாப்பு அவருக்குத் தரப்பட்டிருந்தால், இந்தப் படுகொலைகள் நடந்திருக்காது.

சமீபத்தில் நடந்த சாதிக் கலவரங்களில்மட்டும் 1995-ல் 68 பேரும் 1996-ல் 58 பேரும் 1998-ல் 35 பேரும் உயிரிழந்தனர் என்று 1998 அக்டோபர் 22-ம் தேதி நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கான குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில் தலித்துகள் தனிமைப்படும் ஆபத்து உள்ளது. சாதிச் சண்டைகளுக்கு அடிப்படைக் காரணமாக உள்ள சர்ச்சைக்குரிய இடத்தில் சிலைநிறுவுதல், கந்துவட்டி, கள்ளச் சாராயம் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க அரசு முன்வர வேண்டும்.

வட மாவட்டங்களில் தற்போது வன்னியர் - தலித் மோதல் மீண்டும் தலையெடுத்துள்ளது என்றாலும், ஒரு பத்தாண்டு காலத்திற்கும் மேல் இப் பகுதியில் சாதிக் கலவரம் நடக்காமல் இருந்ததற்கும் வன்னியர் சங்கம் கட்சியாக மாறி அனைத்துச் சாதியினரின் வாக்குகளைப் பெற முயன்றதற்கும் தொடர்பு உள்ளது. இது தவிர பல்வேறு கட்சிகளில் உள்ள ஜனநாயகச் சக்திகளைத் தலித்துகள் நேச சக்தியாகப் பாவிக்க வேண்டும்.

சாதிக் கலவரத்தின்போது கட்சிக் கொடிகள் வெட்டப்படுவது அதிகரித்துள்ளது. கட்சிகள் தங்கள் செயல்பாட்டில் குறை உள்ளதா அல்லது அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவானவர்களாக இருக்கத் தவறி விட்டனவா என்பதை ஆராய வேண்டும்.

இப்போக்கில் ஒரு மாறுதலாக இந்திய கம்யூனிஸ்ட்கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி ஆகியவை சாதி அரசியலைப் பயன்படுத்தாமல் இருப்பதால், சாதிச் சண்டை நடந்த இடங்களுக்கு உடனடியாகச் சென்று சமாதானம் செய்ய முடிகிறது. அதேபோல் அமைதி ஊர்வலங்களை நடத்தி மக்களுக்கு நம்பிக்கை ஊட்டமுடிகிறது. மற்ற கட்சிகளோ என்ன செய்வதென்றே அறியாமல் திகைத்து நிற்கின்றன.

தமிழ்நாட்டில் சுயமரியாதை, சாதி ஒழிப்பு ஆகியவற்றில் அக்கறை காட்டி வந்த திராவிடர் கழகம், தி.மு.க. ஆகியவை முற்போக்குச் சிந்தனைகள், சமூகச் சீர்திருத்தங்கள் வளர உதவின.

www.tamilarangam.net



ஆனால், அந்த நற்பணி தற்போது கெடும் வகையில் திராவிடக் கட்சிகளின் தொண்டர்கள் நடந்து கொள்கின்றனர். சாதிச் சண்டை என்று வரும்போது கரை வேட்டியைக் கழற்றிப் போட்டுவிட்டுச் சாதியின் பிரதிநிதிகளாக அவர்கள் உருமாறி விடுகின்றனர். திராவிடக் கட்சிகளுக்குள் தலித்துகள் முக்கியப் பொறுப்புக்கு வர முடியாத நிலைமையும் உள்ளது. இக்கட்சிகளில் உள்ள ஜனநாயகச் சக்திகள் இந்நிலை மாற நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

சாதிக் கலவரம் எங்கெல்லாம் தலைதூக்காமல் இருக்கிறது என்பது பற்றிய ஆய்வும் அவசியமாகிறது. உதாரணமாகப் பெரிய தொழிற்சாலைகள், இடதுசாரி விவசாயச் சங்கங்கள் உள்ள பகுதிகளில் சாதி மோதல்கள் ஏற்படவில்லை என்பது ஆறுதல் தரும் விஷயம்.

இதைத் தனது 'காஸ்ட் கான்பிளிக்ட் இன் தமிழ்நாடு ஏ ஸ்டடி' என்ற தனது கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ள மூத்த பத்திரிகையாளர் எஸ்.விஸ்வநாதன் '''சாதிப்பிரச்சினை தீர உடனடி மற்றும் தொலைநோக்குத்திட்டம் தேவை. சமூக அநீதிகளுக்கு எதிராகப் பாடுபடுவதோடு பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும்'' என்று யோசனை தெரிவித்துள்ளார்.

உதாரணமாக மேற்கு வங்காளத்தில் 10.32 லட்சம் ஏக்கர் உபரி நிலங்கள் ஏழை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 3.63 லட்சம் நிலங்கள் தலித்துகளுக்குச் சென்றுள்ளது. நிலச் சீர்திருத்தம் மூலம் கிடைத்த பொருளாதார முன்னேற்றம் காரணமாகவே மேற்கு வங்கத்தில் சாதி மோதல்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டோரின் பொருளாதார பலம் உயர்ந்துவிட்டால் தாக்கப்படுவது எளிதில் நடந்தேறிவிடாது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இட ஒதுக்கீட்டுக்காக மண்டல் பரிந்துரையை ஆதரிக்கும் பிற்படுத்தப்பட்டோர் அமைப்புகள் அதில் கூறப்பட்டுள்ள நிலச் சீர்திருத்தப் பரிந்துரையை வலியுறுத்த முன்வராதது ஏன்? கட்சிகளின்-சாதிகளின் அரசியலில் வர்க்க நலனும் ஒளிந்து கொண்டிருக்கிறது. தென் மாவட்டச் சாதிக்கலவரம் தொடர்பாக ஆய்வு செய்த நீதிபதி மோகன் கமிஷனும், வேலையின்மை, பின்தங்கிய நிலைமை தொடர்ந்துவரும் பகையுணர்ச்சி ஆகியவைதான் மோதல்களுக்குக் காரணம் என்று கண்டறிந்துள்ளது. ஆகவே, தொழிற்சாலைகளை நிறுவுவது, தரிசு

www.tamilarangam.net



நில மேம்பாடு போன்றவற்றில் அரசு அக்கறை காட்டக் கோரி இயக்கங்கள் நடத்தப்பட வேண்டும்.

சாதியற்றோர் சங்கம் உருவாக்கி இயக்கம் நடத்துதல், கலப்புத் திருமணங்களுக்கு ஊக்கம் அளித்தல் போன்றவை சாதி ஒழிப்புக்கு உதவும் என்று யோசனை தெரிவிக்கப்படுகிறது. ''தாழ்த்தப் பட்டோரும் பிற சாதிகளின் ஜனநாயக சக்திகளும் இணைந்து புதிய வகையிலான சங்கங்கள் உருவாக்கப்படல்வேண்டும். இது சாதிய முரண்பாடுகளைகணக்கிலெடுத்துச் செயல்படும். அத்தகைய புதிய வகையிலான சங்கங்களை சாதி ஒழிப்புக் கருத்துருவத்தின் அடிப்படையிலும் கட்ட இயலும். அது சாதியத்துக்கும் அரசதிகாரத்திற்கும் உள்ள இணைப்பை முறியடிக்கும் வலிமை பெற்றதாகும் என்கிறார் முனைவர் கோ. கேசவன். (சாதியம் :பக்.222)

இச்சூழலில் சாதி சமத்துவம் கோரும் போராட்டத்தைச் சாதி ஒழிப்புப் போராட்டமாகத் தலித்துகள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். தேவேந்திரர், தேவேந்திர குல வேளாளர், பறையனார் என்றெல்லாம் தலித்துகள் சாதிப்பெருமை பொங்க, தங்களை அழைத்துக் கொள்வது எவ்வகையிலும் பயன்படாது. சாதிகள் இருக்கும்வரை சாதி சமத்துவத்துக்கு வாய்ப்பில்லை என்பதை உணர வேண்டும். தலித்துகளுக்குள் உள்ள வேறுபாடுகளைக் குறைத்தல், உட்பிரிவுகளுக்கிடையே திருமணம் செய்தல் போன்றவை வளர வேண்டும். தலித்துகள் ஒற்றுமை வலுப்பட உட்பிரிவுகள் முதலில் ஒழிய வேண்டும்.

புதிதாக, தற்போது பிற்படுத்தப்பட்டவர் மத்தியில் எழுந்துவரும் சாதி அரசியல் - அதை நாடாளுமன்ற அரசியல் பேரத்திற்குப் பயன்படுத்தும் போக்கையும் தலித்துகளின் உரிமைப் போரையும் ஒட்டுமொத்தமாகச் சாதி அரசியல் என்று வர்ணிப்பது தவறு. முற்பட்டவர்கள் தங்களைப் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று உரிமை கோருகின்றனர் என்றால் அவர்களின் உரிமையைப் பறித்தது யார்? தலித்துகளா? இக் கேள்விகளுக்கு அவர்களின் பதில் என்ன? அனைவருக்குமான முன்னேற்றத்திற்கு என்று இல்லாமல் பகுதி பகுதியான முன்னேற்றம் ஏற்பட சாத்தியமில்லை. சாதி அரசியலின் சாயம் வெகு விரைவில் வெளுத்துவிடும். சாதி அரசியலுக்கு அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவு கிடைக்காது என்பது மட்டும் நிச்சயம். ❑

*(ஆறாம்திணை 22.12.2000)*

www.tamilarangam.net

# தமிழகத்தில் மதவெறியின் வேர்கள்

தமிழகத்தில் இந்துத் தீவிரவாதமும் இஸ்லாமியத் தீவிரவாதமும் போட்டி போட்டுக் கொண்டு வளர்கின்றன. கோவையும், திருநெல்வேலி மேலப்பாளையமும் மோதல் களங்களாக மாறிவிட்டன. மத நல்லிணக்கம், நல்லுறவுக்கு உதாரணமாக விளங்கிய தமிழகத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் வெடிகுண்டுக் கலாச்சாரம் காலூன்றி விட்டது. இந்துக் கலாசாரத்தை ஏற்காத இஸ்லாமியர் பாகிஸ்தானுக்கு ஓட வேண்டும் என்று இந்து அமைப்புகள் பிரசாரம் செய்கின்றன. இந்து அமைப்புகளின் இந்நிலையை ஆதரிக்காத கட்சிகள் சிறுபான்மையினர் ஆதரவுக் கட்சிகள் என்று முத்திரை குத்தப்படுகின்றன. இந்துத் தீவிரவாத அமைப்புகளை ஆதரிக்காத கட்சிகள் போலி மதச்சார்பின்மையைப் பின்பற்றுவதாகவும் கணிப்புக்கு ஆளாகின்றன.

கடவுள் வழிபாடு தனிநபர் விவகாரமாக இருந்தால் அது யாருக்கும் கெடுதல் விளைவிப்பதில்லை. கடவுள்களின் பெயரில் மத நிறுவனங்கள் செயல்படும்போது போட்டிகள் உருவாகின்றன. மக்களின் அமைதி குலைக்கப்படுகின்றது. இன்றைய நிலையோடு ஒப்பிடுகையில் ஒரு காலத்தில் மத வன்முறைகளுக்கு வாய்ப்பில்லாத நிலைமை தமிழகத்தில் இருந்தது. பாகிஸ்தான் பிரிவினையின்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்து-இஸ்லாமியர் இடையே மோதல் உச்சகட்டத்திலிருந்தது. ஆனால்

www.tamilarangam.net



தமிழகத்தில் எத்தகைய வன்முறையும் நிகழவில்லை. அதன்பின் காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட பின்னரும்கூட மாநிலத்தில் வன்முறை நிகழவில்லை. இந்துத் தீவிரவாதி ஒருவரால்தான் காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் இஸ்லாமியருக்கு அதில் சம்பந்தம் இல்லை என்றும் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் பிரசாரத்தில் ஈடுபட்டு அமைதியை நிலைநாட்டினர்.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதத்தினர் அன்பு பாராட்டி ஒருவரையொருவர் மதித்து ஒருவர் மற்றவர் ஆலயங்களுக்கும் சென்று வழிபடுவது தமிழகத்தில் இன்றளவும் உள்ளது. இடைப்பட்ட காலத்தில் இஸ்லாமியர்கள் அந்நியர் என்ற பிரசாரம் தலைதூக்கி அவர்களைத் தனிமைப்படுத்தும் போக்கில் இந்து அமைப்புகள் ஈடுபட்டுள்ளன.

குறிப்பாகத் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் கிறிஸ்தவருக்கும், இந்துக்களுக்கும் இடையே பகைமை வளர்ந்ததற்கு நீண்ட வரலாறு உள்ளது. விவேகானந்தரின் நூற்றாண்டு பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் கன்னியாகுமரியில் அவருக்கு நினைவிடம் எழுப்ப 1963-ல் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு முடிவு செய்தது. அதற்கு கிறிஸ்தவர்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு இருந்ததால் தொடக்கத்தில் நினைவிடம் அமைக்கத் தமிழக அரசு உரிய அனுமதியை வழங்கவில்லை. இந்நிலையில் கன்னியாகுமரி பாறையில் சிலர் சிலுவையை நட்டனர். இதனால் எழுந்த பெரும் சர்ச்சையை அடுத்து சிலுவை அங்கிருந்து அகற்றப்பட்டது.

விவேகானந்தரைப் பொருத்தவரை எந்தவிதத்திலும் மத சகிப்பின்மையை ஆதரிக்காதவர். இதற்கு மாறாக இந்து சமயத்தில் நிலவும் தீண்டாமைக் கொடுமையை அவர் கடுமையாகக் கண்டித்துள்ளார். ஆனால், விவேகானந்தரை இந்துக் கலாசாரத் தேசியத்தின் குறியீடாக ஆக்கும் முயற்சியில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தீவிரம் காட்டியது. விவேகானந்தரை மதிக்கிற 235 எம்.பிக்களின் கையெழுத்தைப் பெற்று நினைவிடம் அமைப்பதற்கு ஆதரவைத் திரட்டினர். மத்திய அரசு மட்டத்தில் எழுந்த இத்தகைய நிர்பந்தத்திற்குப் பின்னர் நினைவிடம் அமைக்க ஒப்புதல் அளித்தது தமிழக அரசு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விவேகானந்தர் பாறையை உருவாக்குவதன் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்து மத உணர்வுகளை ஆர்.எஸ்.எஸ். வளர்த்தது. இன்று தமிழகத்தில் பா.ஜ.க.வினர் கன்னியாகுமரி மாவட்டத்தில் செல்வாக்குப் பெற்றிருப்பது தற்செயலான நிகழ்ச்சி அல்ல என்று பேராசிரியர் கே.என். பணிக்கர் தனது 'கம்யூனல் திரட் - செக்யூலர் சேலஞ்ச்' என்ற நூலில் பதிவு செய்துள்ளார்.

இம் மாவட்டத்தில் ஒலிபெருக்கி மூலம் மாறிமாறி மத உணர்வைப் புண்படுத்துகிற பிரசாரம் நடந்தது. 1982-ம் ஆண்டு மார்ச் முதல் தேதியில் மண்டைக்காடு அருகே பகவதியம்மன் கோயில் பகுதியில் கடலில் நீராடச் சென்ற இந்துக்களைக் கத்தோலிக்கக் கிறிஸ்தவத் தீவிரவாதிகள் சிலர் தாக்கினர். இதைத் தொடர்ந்து கிறிஸ்தவ - இந்து மதவெறி தூண்டப்பட்டது. இரு தரப்பினரும் ஒருவருடன் ஒருவர் மோதும் வகையில் திரண்டு நின்றபோது அவர்களைக் கலைக்கப் போலீசார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 6 மீனவர்கள் உயிரிழந்தனர். அடுத்து மார்ச் 15-ம் தேதி நடந்த கோஷ்டி மோதலில் 2 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் பற்றி விசாரிக்க நீதிபதி வேணுகோபால் கமிஷனை அரசு நியமித்தது. இக்கமிஷன் மதமாற்றத்தைத் தடை செய்யலாம் என்ற ஒரு பரிந்துரையை வழங்கியது. இச்சம்பவத்திற்கு ஓராண்டுக்கு முன்னர் திருநெல்வேலி மாவட்டம் மீனாட்சிபுரத்தில் 800 இந்துக் குடும்பங்கள் இஸ்லாம் மதத்திற்கு மாறினர். மதமாற்றத்திற்கு இஸ்லாம் மதத்தினரின் தூண்டுதல் இருந்திருக்க வாய்ப்பு உண்டு என்ற போதிலும், ஒருவர் தனது தனிப்பட்ட வாழ்வில் எம்மதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சுயமாக முடிவெடுக்க அரசியலமைப்புச் சட்டம் அனுமதி வழங்கியுள்ளது. இங்கு நடந்த மதமாற்றம் அகில இந்திய அளவில் பெரும் சர்ச்சையை உருவாக்கியது.

இந்து சமூகத்தில் நிலவி வரும் சாதி அடுக்குமுறை, தீண்டாமை, வேலையின்மை, வறுமை, சமூக அந்தஸ்துக் குறைவு போன்ற நிலைமைகளால்தான் பல்லாண்டுகளாக மத மாற்றங்கள் நடந்து வந்துள்ளன. தங்கள் சமூகத்தில் உள்ள குறைபாடுகளைக் களைவதில் அதிக அக்கறை காட்டுவதற்குப் பதிலாக மாற்று மதத்தினர் மீது வெறுப்பை வளர்க்கும் பிரசாரத்தில் இந்துத் தீவிரவாத அமைப்புகள் ஈடுபடலாயினர்.

www.tamilarangam.net



மீனாட்சிபுரத்தின் தொடர்ச்சியாகவே மண்டைக்காடு சம்பவம் அமைந்தது. மண்டைக்காடு சம்பவம் பற்றி விசாரித்த நீதிபதி வேணுகோபால் கமிஷன் ஆர்.எஸ்.எஸ். குறித்துத் தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்பு இந்தியாவுக்குத் தேவையில்லை என்று கமிஷன் கூறியது.

''ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக்கின் ஹிந்து மத மறுமலர்ச்சி புத்தெழுச்சி கொள்கை இந்நாட்டை நாகரிகமற்ற பின்தங்கிய காலத்திற்கு அழைத்துச் செல்லும்... ஆர்.எஸ்.எஸ். கருத்து நம்முடைய பழமையான திராவிடப் பண்பாடு, கலாசாரத்திற்கு அயலானது. ஆர்.எஸ்.எஸ்.ஸின் துன்பம் விளைவிக்கும் கருத்துகள், தத்துவங்கள் ஆகியவை குறித்து மக்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டாலும் அவர்களுக்கு அவற்றைப் பற்றி எடுத்துரைத்தாலும் இம் மண்ணில் ஆர்.எஸ்.எஸ். வேரூன்ற முடியாது...

''இந்து மதம் கடந்த காலத்தில் பல மதங்களின் கடும் தாக்குதலுக்குப் பின்னரும் உயிருடன் உள்ளது. இது இன்னும் உணர்ச்சியூட்டக்கூடிய ஒரு மதமாக நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகிறது. இந்நாட்டிலுள்ள இந்துக்களின் எண்ணிக்கை அதிகமாதலால் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக அவர்கள் அஞ்சத் தேவையில்லை. அவர்களுக்கு ஆர்.எஸ்.எஸ். போன்ற பாதுகாவலர் தேவையில்லை'' எனப் பரிந்துரையின் 245-ம் பக்கத்தில் நீதிபதி வேணுகோபால் தெளிவுபடத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மதவாத விஷயத்தில் கட்சிகள் எடுத்த நிலை பரிசீலிக்கத்தக்கது. மதச்சார்பின்மை பற்றி காங்கிரஸ் பேசினாலும் அக்கட்சியின் தொடக்க காலத்திலேயே இந்து மத ஆதரவுப் போக்கு வெளிப்படையாகத் தெரிந்தது. பின்னர் வாக்கு வங்கிக்காக மற்ற மத ஆலயங்களுக்குச் செல்வது போன்ற காரியங்களில் கட்சியின் தலைவர்கள் ஈடுபட்டனர். மதச்சார்பின்மைக் கொள்கைகளில் நேரு உறுதியாக இருந்ததால் காங்கிரசார் ஒரளவு கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டனர்.

இதற்கு மாறாக மத உணர்வுகளை வளர்த்தெடுத்து காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாக உருவெடுக்க பாரதீய ஜனதா கட்சி முயற்சிக்கிறது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முன்னணி அமைப்பாக விளங்கும் பா.ஜ.க. வெளிப்படையாக இந்துமத ஆதரவுப் போக்கைக் கடைப்பிடிக்கிறது. இதற்கு உதாரணமாக அயோத்தியில் ராமர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோயில் கட்டும் முயற்சியைச் சொல்ல வேண்டும். தெற்கிலும், கிழக்கிலும் ராமர் என்ற கடவுள் பிரபலமான கடவுள் இல்லை என்ற போதிலும் கோயில் கட்டும் நல்ல காரியத்திற்கு நாடு முழுவதும் உள்ள சாதாரண பக்தர்கள் உளரீதியான தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர். ஆனால், 1992-ம் ஆண்டு டிசம்பர் 6-ம் தேதி கோயில் கட்டும் பணிக்குப் பதிலாக பாபர் மசூதியை இடிக்கும் பாதகச்செயல் நடந்தேறியது. இச்சம்பவம் முஸ்லிம்களின் மத்தியில் ஆறாத புண்ணை ஏற்படுத்திவிட்டது. ஏற்கனவே இஸ்லாம் மதத்தில் உள்ள பழமைப் போக்கு, பெண்களுக்கு எதிரான கண்ணோட்டம் ஆகியவற்றை மாற்றிக் கொள்ள இஸ்லாமியர் தயாராக இல்லை. அதற்குப் பதிலாக, இஸ்லாத்தைக் காப்போம்' என்று குரல் கொடுத்துத் தங்களிடம் உள்ள குறைகளை மறைக்கும் வகையில் இஸ்லாமில் உள்ள ஆதாய நோக்குடையவர்கள் செயல்பட்டனர். மசூதி இடிப்பு ஒரு குறியீடாக மாறி, இஸ்லாம் தீவிரவாதத்தைச் சாதாரண முஸ்லிம் ஒருவரும் ஏற்கும் நிலைமை உருவெடுத்துவிட்டது.

'பாபர் மசூதி இடிப்பு நிகழ்ச்சி தமிழக முஸ்லிம்களிடையே பெருத்த கொந்தளிப்பை ஏற்படுத்தி மதத் தீவிரவாதம் தமிழகத்தில் பரவிடக் காரணமாக அமைந்தது. இடிப்புக்கு முன்பு தனி நபர்கள் மீது குறி வைத்து வன்முறை நடத்தப்பட்டு வந்தது. இடிப்புக்குப் பின் முஸ்லிம் தீவிரவாத வன்முறையாளர்கள் குண்டு வெடிப்புகளில் ஈடுபடலாயினர்' என கோவை குண்டு வெடிப்பு பற்றிய தமிழக அரசின் வெள்ளை அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

பாபர் மசூதி இடிப்புக்குப் பின்னர் மும்பையில் பெரும் கலவரம், தொடர் வெடிகுண்டுகள் வெடித்து நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். தமிழகத்திலும் மசூதி இடிப்பின் எதிரொலி உக்கிரமான வேகத்திலேயே இருந்தது.

சென்னையில் ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்தில் 1993 ஆகஸ்ட் 8-ம் தேதி நடந்த பயங்கர குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 11பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அதன் பின்னர் 1995-ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் தேதி இந்து முன்னணி அலுவலகத்தில் வெடிகுண்டு வெடித்தது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதேபோல் பார்சல் வெடிகுண்டு அனுப்பி நாகூரில் இந்து அமைப்பின் ஆதரவாளரைக் கொல்ல முயற்சி நடந்தது. பார்சல் வெடிகுண்டைப் பெற்ற பிரமுகரின் மனைவி தங்கம் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழகத்தில் மட்டும் பத்தாண்டுகளில் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளின் தாக்குதலில் 65 இந்து மத ஆதரவு அமைப்பினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று இந்து முன்னணி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. ஒருமுறை இராம கோபாலன் கடுமையான தாக்குதலுக்கு ஆளானார். 1982ஆம் ஆண்டு பா.ஜ.க. நிர்வாகிகள் நாராயண ராவ், ஜனா. கிருஷ்ணமூர்த்தி, திருக்கோயிலூர் சுந்தரம், டி.ஆர்.கோபாலன் ஆகியோர் மீதும் தாக்குதல் நடந்தது. இதில் திருக்கோயிலூர் சுந்தரம் பலத்த காயம் அடைந்தார்.

இவ்வகையில் 1994ஆம் ஆண்டு அக்டோபர் 10-ம் தேதி இந்து முன்னணியின் மாநிலத் தலைவர் ராஜகோபாலன் மதுரையில் அவரது வீட்டின் முன்பாகவே வெட்டிக் கொல்லப்பட்டார்.

இந்து அமைப்புகளின் ஆதரவாளர்கள் மீது மட்டும் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் 1997 டிசம்பர் 6-ம் தேதியன்று பாபர் மசூதி இடிப்பு நினைவு தினத்தை முன்னிட்டு அப்பாவி மக்கள் பயணம் செய்த மூன்று ரயில்களைக் குறிவைத்து வெடிகுண்டு வைத்தனர். ரயில்களில் வெடிகுண்டுகள் வெடித்ததில் 9பேர் உயிரிழந்தனர்.

இச்சூழலில் கோவையில் ஆர்.எஸ்.எஸ். இயக்கமும் அல்உம்மா அமைப்பும் மாறிமாறி சுவரொட்டிப் போரில் ஈடுபட்டு வந்தன. இப்போக்கைத் தடுக்கத் தமிழகப் போலீசின் உளவுத்துறை தவறிவிட்டது. கோவையில் பணியில் ஈடுபட்டிருந்த போலீஸ்காரர் செல்வராஜை இஸ்லாமியத் தீவிரவாதிகள் கத்தியால் குத்திக் கொலை செய்த சம்பவம் ஏற்கனவே வளர்க்கப்பட்ட மதவெறி கொழுந்துவிட்டு எரிய வழிவகுத்துவிட்டது. செல்வராஜ் கொலையை அடுத்து ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஆத்திரமுற்ற போலீசார் இணைந்து அரங்கேற்றிய மோதலில் 18 முஸ்லிம்கள் கொல்லப் பட்டனர். ‘காயமடைந்து மருத்துவமனைக்குச் சிகிச்சை பெற வந்த அபீப் ரகுமான் என்பவர் மீது போலீசார் பெட்ரோல் ஊற்றினர். இந்துத் தீவிரவாதி ஒருவர் அவர் உடலுக்குத் தீ வைத்தார்’ என்று பியூசிஎல் என்ற அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘காவலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரண்டு இந்துக்களும் இறந்தனர். ஆகவே காவலர் இந்துமத அடிப்படைவாத அமைப்புகளுக்கு உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சாரம் இருப்பதாகத் தெரியவில்லை’ என கோவை செல்வராஜ் கொலையை அடுத்து நிகழ்ந்த நிலைமைகள் பற்றி ஆய்வு செய்த நீதிபதி பி.ஆர்.கோகுலகிருஷ்ணன் அறிக்கை கூறுகிறது. ஆனால், செல்வராஜ் கொலைக்குப் பின்னர் போலீசார் கடமையாற்றத் தவறி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வன்முறையில் ஈடுபட்டது, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள்தான் அதிகம் உள்ளன.

கோவை மோதலுக்கு இந்து - முஸ்லிம் வணிகர்கள் இடையே நடந்துவந்த போட்டி, போலீஸ் மாமூல், போலீசாரின் மதச்சார்பு, தீவிரவாதத்தின் ஆபத்தை உணராத கட்சிகள் ஆகியவை காரணமாக இருந்துவிட்டன.

இச்சூழலில் 1998-ம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் பிரசாரம் செய்ய பிப்ரவரி 14-ம் தேதி அத்வானி கோவை வந்தார். அவர் கூட்ட மேடைக்கு வரும் முன்பு கூட்டம் கூடியிருந்த இடத்தில் தொடர் வெடிகுண்டுகளை இஸ்லாமியத் தீவிரவாதிகள் வெடிக்கச் செய்தனர். இதில் 49பேர் கொல்லப்பட்டனர்.

இத்தகைய வன்முறைச் செயல்களுக்குக் காரணமான ஜிகாத் கமிட்டி, அல்உம்மா ஆகிய அமைப்புகளைத் தமிழக அரசு தடை செய்துள்ளது. எனினும் இந்த அமைப்புகளில் இருந்தவர்கள் தமிழகமுஸ்லிம் முன்னேற்றக் கழகம் போன்ற அமைப்பில் ஊடுருவிச் செயல்பட்டு வருவதாகப் புகார் கூறப்படுகிறது. தமிழ் இஸ்லாமியப் பேரவை, இஸ்லாமியப் பாதுகாப்புப்படை, அல்ஜமாத், சிமி, நஜாத் போன்ற அமைப்புகளையும் தடை செய்ய வேண்டும் என்று இந்து அமைப்புகள் கோரி வருகின்றன.

இந்து அமைப்புகளைப் பொருத்தவரை தமிழகத்தில் வளர்ந்துவிட்ட வெடிகுண்டுக் கலாசாரத்திற்கு எவ்வகையிலும் தாங்கள் பொறுப்பேற்க முடியாது என்கின்றனர். இருந்தபோதிலும் வெறுப்பை வளர்க்கும் பழைய பாணி இஸ்லாமிய எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்துத் தீவிரவாத அமைப்புகள் தமிழகத்தில் காலூன்ற முடியாத நிலைமை மாறி அவற்றுக்குச் செல்வாக்கு வளர்ந்து வருகிறது. அரசியல் ரீதியாக பா.ஜ.க.வுடன் தமிழகக் கட்சிகள் எதுவும் கூட்டணி சேர முன்வராத நிலைமை நீண்ட காலமாக இருந்து வந்தது.

இத்தொடர்ச்சியான போக்கில் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா, பா.ஜ.க.வுடன் 1998 மக்களவைத் தேர்தலில் கூட்டணி சேர்ந்தார். தமிழக அரசியலில் இம் முடிவு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. தேர்தலுக்கு முன்பு வெடிகுண்டு வெடிப்பும் நடந்ததால் பா.ஜ.க. அ.தி.மு.க. கூட்டணி 30 இடங்களைப் பிடித்தது. குண்டு வெடிப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடந்த கோவையில் பா.ஜ.க. வேட்பாளர் மாநிலத்திலேயே மிக அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். நகர்ப்புறங்களில் மத்திய தர வர்க்கத்தினரும் ஆதிக்க சாதியினரும் பா.ஜ.க. ஆதரவு நிலையை எடுத்தனர்.

ஓராண்டில் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர தி.மு.க. முன்வந்து விட்டது. ஜெயலலிதா பா.ஜ.க.வுடன் முன்னதாகக் கூட்டணி சேர்ந்தபோது தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில், 'மதவெறியைத் தூண்டி பிற மதத்தினரை அன்னியப்படுத்தவும், வர்ணாஸ்ரம ஆதிக்கத்தைப் புதுப்பிக்கவும் முயலும் பிற்போக்குச் சக்திகளுடன் கைகோர்த்து நிற்பவர்கள் பெரியார், அண்ணா பெயரைக் கூறிக்கொள்ளவும் அருகதை அற்றவர்கள். நமது லட்சியத்துக்கு துரோகம் செய்யும் அவர்களைத் தமிழக மக்கள் அடையாளம் கண்டு பாடம் கற்பிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தது.

மாறிய சூழலில் தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில் சென்னை மெரினா கடற்கரையில் நடந்த மாநாட்டில் ஜெயலலிதாவின் பேச்சு குறிப்பிடத்தகுந்ததாக இருந்தது. பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்த தவறைச் செய்து விட்டேன். இனி எந்தக் காலத்திலும் இத்தவறைச் செய்ய மாட்டேன் என்று குறிப்பிட்டார்.

தமிழகத்தில் திராவிடக் கட்சிகள் மூலம் இவ்வாறாக இந்து மதவாதம் காலூன்றி வருகிறது. இந்து மதவாதத்தை எதிர்க்க இஸ்லாமியர் மேலும் ஒன்று சேரத் துவங்கியுள்ளனர். இது சரியான போக்கு அல்ல. இந்து மதவெறியை ஒருநாளும் முஸ்லிம் மதவெறியால் எதிர்கொள்ள முடியாது. மதவெறிக்குப் பதிலாக மதவெறியை முன்னிறுத்துவது சரியல்ல. தீயைத் தீயைக்கொண்டு அணைக்க இயலாது.

இருதரப்பிலும் திசை தவறிய இளைஞர்கள் வன்முறைக்குப் பலியாகின்றனர். அவர்கள் மத்தியில் நிலவும் வேலையின்மை, அதிருப்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி மதவெறி சக்திகள் தங்கள் பாதைக்கு அவர்களை இழுத்துச் செல்கின்றன. இப்பிரச்சினையை அரசும் அக்கறையுள்ளோரும் தீர்க்க முன் வரவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைதியை விரும்பும் மக்கள் அனைவரும் தீவிரவாதிகளின் பின்னே செல்லும் நிலைமை இருவர்க்கும் கூறு தீவிரவாதிகள் தங்களால்தான் மதங்களைக் காப்பாற்ற முடியும் என்று கூறுவதை மக்கள் புறக்கணிக்க வேண்டும். தீவிரவாதிகளை மக்கள் தனிமைப்படுத்த வேண்டும். அதன் மூலமே மதத்தின் பெயரால் நடக்கும் ரத்தக்களரிகளைத் தடுக்க முடியும். ❑

*(-ஆறாம்திணை 29.12.2000)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கூட்டணி ஆட்சி சகாப்தத்தில் சிக்கல்கள்

கூட்டணி அரசியல் சகாப்தத்தில் இந்தியா நுழைந்து பதினொரு ஆண்டுகள் ஆகிவிட்டன. எனினும் கூட்டணி நடைமுறைக்கான பக்குவத்தை - முதிர்ச்சியை நம்நாட்டு அரசியல் எய்தவில்லை. 1999-ல் அமைந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியில் நிலவும் உள் முரண்பாடுகள் காரணமாக அடிக்கடி அந்தக் கூட்டணியில் சச்சரவுகள் -மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

மேற்குவங்க ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று வற்புறுத்தியும், பின்னர் பெற்ரோலிய பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்தும் திரிணமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி தமது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். எனினும் அந்த ராஜினாமாக்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இறுதியாக பாதுகாப்புத்துறைக்கு ஆயுதங்கள் வாங்குவதில் ஊழல்கள் நடக்கின்றன என்பதை டெஹல்கா இணையதளம் இரகசிய வீடியோ படம் மூலம் அம்பலப்படுத்திய உடன் பா.ஜ.க. அரசுக்கு அளித்து வந்த ஆதரவை மம்தா திரும்பப் பெற்றுக் கொண்டார். அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயிலைக் கட்ட வேண்டும் என்ற தன் விருப்பத்தைச் சமீபத்தில் வாஜ்பாய் வெளியிட்டார். திரிணமுல் காங்கிரஸ் மட்டுமின்றி தி.மு.க.வும் அயோத்தி விவகாரத்தில் புதிய முடிவுகள் எதையும் திணிக்கக்கூடாது என்று போர்க்கொடி தூக்கியது.

www.tamilarangam.net



மாறுபட்ட கொள்கையுடைய தெலுங்கு தேசம், தி.மு.க., ம.தி.மு.க., திரிணமுல் ஆகிய மதச்சார்பற்ற கட்சிகள் பா.ஜ.க.வின் மதச்சார்பு நிலையைத் தெரிந்தே அக்கட்சியுடன் கூட்டணி சேர்ந்தன. தேர்தல் அறுவடையை மனதில் கொண்டே அவ்வாறு செய்தன. இன்றுள்ள நிலையில் உ.பி. தேர்தலில் இந்துக்களின் வாக்குகளை கவருவதற்காக பா.ஜ.க. தனது உண்மைச் சொரூபத்தைக் காட்ட நேர்ந்துள்ளது. எனினும் கூட்டணிக் கட்சிகளின் நிர்ப்பந்தம் காரணமாக பா.ஜ.க. தனது மதச்சார்புப் பாதையில் வேகமாக நடைபோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அக்கட்சி இரட்டை வேடம் போட்டு வருகிறது.

தற்போது தேசிய ஜனநாயகக் கூட்டணியில் 22 கட்சிகள் உள்ளன. புதிதுபுதிதாக மாநிலங்களில் முளைத்து வரும் மாநிலக் கட்சிகள் ஆங்காங்கு செல்வாக்கு பெற்று வருகின்றன. இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டதால்தான் விரிவான கூட்டணியை பா.ஜ.க. உருவாக்கியுள்ளது. தனிப்பெரும் கட்சியாக விளங்கிய காங்கிரஸ் இந்த நிதர்சனத்தைப் புரிந்துகொள்ள வில்லை. காங்கிரசின் தனி ஆட்சிதான் நிலையான ஆட்சியைத் தரமுடியும் என்று அது கூறிவருகின்றது.

காங்கிரஸ் மட்டுமின்றி ஏனைய பலரும் கூட்டணி ஆட்சி என்பதை ஒரு தகாத வார்த்தையாகக் கருதுகிறார்கள். கூட்டணி ஆட்சியில் ஒரு கட்சி செய்யும் தவறை மற்றொரு கட்சி தட்டிக் கேட்க வாய்ப்புள்ளது. இது வரவேற்கத்தக்க விளைவுகளை உருவாக்கக்கூடும். அதே சமயத்தில் பல பாதக அம்சங்களும் கூட்டணி ஆட்சியில் உள்ளன. உதாரணமாக ஆங்காங்கு கட்சிகள் சந்தர்ப்பவாதக் கூட்டணி ஏற்படுத்திக் கொள்வதால் மக்களிடமிருந்து தெளிவான உத்தரவு எதையும் அவை பெற்றதாகக் கூற இயலாது.

மத்தியக் கூட்டணி அமைச்சரவை 'ஜம்போ' அமைச்சரவை யாக உள்ளது. கட்சிகளைத் திருப்திப் படுத்துவதற்காக பல அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு வேலையோ பொறுப்போ இருப்பதில்லை. இதைச் சுட்டிக்காட்டி 20க்கும் மேற்பட்ட இணை அமைச்சர்கள் தங்களுக்கு பொறுப்புகள் தரவேண்டும் என்று அவர்கள் கூட்டிய கூட்டத்தில் கூறியுள்ளனர். பெரிய அமைச்சரவைகளால் ஏற்கனவே திவாலாகி வரும் பொருளாதாரம் மேலும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டணி ஆட்சியின் நிலையற்ற தன்மையால் கொள்கை முடிவுகள் எடுப்பதில் தாமதம் ஏற்படும் என்றும் கூறப்படுகிறது. இதுபோன்ற பல எதிர் அம்சங்கள் இருந்தாலும் கூட்டணி அரசியல் என்பது ஒரு தவிர்க்க முடியாத நிலைமையாக நாட்டில் உருவெடுத்துவிட்டது.

நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் ஆதரிக்கும் - ஒருங்கிணைக்கும் சக்தியாக காங்கிரஸ் விளங்கி வந்தது. அக்கட்சித் தேய்ந்து செல்வாக்கிழந்து வருவதால் அக்கட்சி ஏற்படுத்திய வெற்றிடத்தை எந்த ஓர் அனைத்திந்தியக் கட்சியாலும் நிரப்ப முடியவில்லை.

காங்கிரஸ் கட்சி மாபெரும் கட்சியாக விளங்கிய போதிலும் மாநிலப் பிரச்சினைகளில் அதனால் உரிய கவனம் செலுத்த முடியவில்லை. மாநிலத் தலைமையின் மீது தங்கள் முடிவுகளைக் கட்சித்தலைமை கட்டாயமாகத் திணித்து வந்தது. அது மட்டுமின்றி மத்தியில் நிலையான ஆட்சி பற்றிப் பேசியபோதிலும் காங்கிரஸ் ஆட்சி செய்த மாநிலங்களின் முதல்வர்களை மாற்றி நிலையற்ற நிலைமையையே ஏற்படுத்தியது. இதோடு காங்கிரஸ் கட்சியை வழிநடத்திச் சென்ற தனிப்பெரும் தலைவர்கள் யாரும் இப்போது இல்லை.

நாட்டின் தனிப்பெரும் கட்சியாக காங்கிரஸ் விளங்கிய காலங்களில் கூட எதிர்க்கட்சிகள் செல்வாக்குடன் திகழ்ந்தன. எதிர்க்கட்சிகள் ஒன்றுபடாமல் பிளவுபட்டு நின்றதால் காங்கிரஸ் எளிதில் வெற்றி பெற முடிந்தது. இந்த நிலைமை 1952 முதல் ஏறக்குறைய 35 ஆண்டுகள் நீடித்தது.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்ற அரசியல் தலைவர்கள் கட்சி அரசியலில் ஈடுபட மறுத்தனர். ஜெயப்பிரகாஷ் நாராயணன் எதிர்க்கட்சித் தலைவராக வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நேருவே ஒருமுறை தன் ஆதங்கத்தைத் தெரிவித்தார்.

முதல் பொதுத் தேர்தலில் சென்னை மாகாணத்தில் மட்டுமின்றி, பெப்சு (பாட்டியாலா மற்றும் கிழக்கு பஞ்சாப்) ஒரிசா, திருவாங்கூர், கொச்சி போன்ற இடங்களிலும் காங்கிரஸ் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியவில்லை. மற்றபடி காங்கிரஸ் ஆட்சிகள் எல்லா இடங்களிலும் ஏற்பட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் மாநில அளவில் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் ஒன்று சேர்வதும் பின்னர் காங்கிரசில் ஐக்கியமாவதும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இதனால் வலுவான எதிர்க்கட்சி உருவாகும் வாய்ப்பு உருவாகாமல் இருந்தது.

காங்கிரசிலிருந்து பெரிய பெரிய ஜாம்பவான்கள் எல்லாம் வெளியேறிய போதிலும், அதன் காரணமாகப் பாதிக்கப்படாத வலுவான உள் கட்டமைப்புடன் அக்கட்சி திகழ்ந்தது.

இப்படி வெளியேறியவர்களில் ஜே.பி. கிருபளானி, ராஜாஜி, என்.ஜி.ரங்கா, கிருஷ்ண மேனன் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். காங்கிரசை எதிர்த்தவர்கள் கூட, 'எங்களால் காங்கிரசை விட நல்லாட்சியைத் தர முடியும்' என்று கூறினார்களே தவிர, வேறு புதிய கொள்கை எதையும் அவர்களால் அறிவிக்க முடியவில்லை.

இந்திய அரசியலில் 1967-ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தல், மாநில அளவில் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. கால் நூற்றாண்டு காலமாகக் காங்கிரஸ் ஆட்சியைப் பார்த்து வந்த மக்கள் அதன்.மீது சலிப்புற்று எட்டு மாநிலங்களில் மாற்றுக் கட்சிகளை நம்பத் துவங்கினர். அப்போதும்கூட காங்கிரசுக்குச் சவால் விடக்கூடிய மாற்றுக் கட்சி அனைத்திந்திய அளவில் உருவாகி விடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாநில அளவில் கூட மாஜி காங்கிரஸ்காரர்கள்தான் முதல்வராக வர முடிந்தது.

தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட போதிலும் தனிப் பெரும்பான்மை கிடைத்ததால் தனி ஆட்சியை அமைத்தது. கேரளம், மேற்கு வங்கம், ஒரிசா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் அமைந்த காங்கிரசல்லாத கூட்டணி அரசாங்கங்கள்தான் கூட்டணி முறைக்கு வழிகாட்டியாக அமைந்தன.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி கொண்டு வந்த நெருக்கடி நிலை காரணமாகச் சிதறிக் கிடந்த எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜனதா கட்சி உருவானது. இதில் சோசலிஸ்டுகள் மட்டுமின்றி ஜனசங்கத்தைச் சேர்ந்தவர்களும் இடம் பெற்றனர். காங்கிரசுக்கு எதிரான அலை வட மாநிலங்களில் வீசியதால் ஜனதா, ஆட்சிப் பீடத்தைப் பிடிக்க முடிந்தது. எனினும் அந்த அமைப்பில் இடம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெற்ற தலைவர்களிடையே வேற்றுமை உணர்வு மேலோங்கியதால் அவர்களால் ஓரணியில் இணைந்து இயங்க முடியவில்லை.

1989-ல் காங்கிரசிலிருந்து விலகிய வி.பி.சிங், அருண்நேரு போன்றவர்கள் தொடங்கிய ஜன்மோர்ச்சா, தேசிய அளவில் தேசிய முன்னணியை உருவாக்கி, பா.ஜ.க. மற்றும் இடது சாரிகள் வெளியிலிருந்து ஆதரவு தருவது என்ற திட்டத்தின் மூலம் கூட்டணி ஆட்சி அமைத்தது.

மாநிலக் கட்சிகளின் விருப்பங்கள் நிறைவேற தேசிய முன்னணி ஆட்சி உறுதுணையாக இருந்ததால் பிராந்திய உணர்வுகள் மேலும் வளர ஆரம்பித்தன. தேசிய அளவில் மதச்சார்பின்மை அரசியல், சோசலிஸப் பொருளாதாரம் போன்றவற்றில் இருந்து வந்த ஒருமித்த கருத்து நொறுங்கத் தொடங்கியது.

தேசிய முன்னணி ஆட்சி தொடங்கி 1996 வரையிலான காலத்தைச் சிறுபான்மை பலம் கொண்ட ஆட்சிகளின் காலம் என்று கூறலாம். 1991-ம் ஆண்டில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர் கூட, காங்கிரசால் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. ஜார்க்கண்ட் எம்.பி.க்களை விலைக்கு வாங்கி நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்று ஐந்தாண்டு காலத்திற்கு நிலையான ஆட்சியை ராவ் வழங்கினார்.

அதன்பின் 1996 தேர்தலில் முதல்முறையாகக் காங்கிரஸ் மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்டது. அப்போது தேசிய முன்னணி போன்ற வடிவிலான மாற்றுக்கட்சியாக 14 கட்சிகள் கொண்ட ஐக்கிய முன்னணி ஆட்சி ஏற்பட்டது. இந்த ஆட்சிக்குக் காங்கிரஸ் வெளியிலிருந்து ஆதரவை நல்கியது.

ஐக்கிய முன்னணியின் கூட்டணி ஆட்சி சில முற்போக்கான அம்சங்களைக் கொண்டிருந்தது. மாநிலத்திற்குக் கூடுதலாக நிதியைப் பகிர்ந்தளிக்கும் நல்ல முடிவை அக்கூட்டணி ஆட்சிதான் ஏற்படுத்தியது. கூட்டாட்சி தத்துவத்தை மதித்து நடந்தது. அந்த ஆட்சிக்கான ஆதரவையும் காங்கிரஸ் திரும்பப் பெற்றது.

இதன்பின் 1998-ல் நாட்டின் அரசியல் போக்கை நன்கறிந்த பா.ஜ.க. பல்வேறு மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி சேர முன்வந்தது. பல்வேறு ஊழல் வழக்குகளில் சிக்கியிருந்த அ.தி.மு.க.வும் இந்தக் கூட்டணியில் சேர்ந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தெலுங்கு தேசம், தேசிய மாநாட்டுக்கட்சி, சவுதாலாவின் லோக்தளம் போன்ற கட்சிகளின் ஆதரவையும் பெற்று வாஜ்பாய் மத்தியில் கூட்டணி ஆட்சியை அமைத்தார். அதனால் கூட்டணியில் இடம் பெற்றிருந்த ஜெயலலிதாவின் மிரட்டல்களைச் சமாளிக்க முடியாமல் தூக்கமில்லாத இரவுகளை வாஜ்பாய் ஓராண்டுக்குச் சந்திக்க நேர்ந்தது.

தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு என்று ஒரு செயல் திட்டம் இருந்தாலும் அதில் அங்கம் பெற்றிருந்த ஜெயலலிதா தனக்கென ஒரு திட்டத்தை வகுத்துச் செயல்படுத்த முனைந்தார். தி.மு.க. ஆட்சியைக்கலைக்க வேண்டும் அல்லது தன் மீதான ஊழல் வழக்குகளை ஒன்றுமில்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி வந்தார். ஆட்சியில் கவனம் செலுத்துவதைவிட கூட்டணிக் கட்சியைத் திருப்தியுடன் வைத்துக் கொள்ளவேண்டிய வகையில் பா.ஜ.க. தனது நேரத்தைச் செலவிட்டு வந்தது.

இந்நிலையில் தில்லியில் தேநீர் விருந்தில் சந்தித்துக் கொண்ட ஜெயலலிதாவும் சோனியா காந்தியும் வாஜ்பாய் ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிட்டனர். நம்பிக்கை வாக்கெடுப்பில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வாஜ்பாய் ஆட்சி கவிழ்ந்தது.

வாஜ்பாய் ஆட்சியைக் கவிழ்ப்பதில் ஒன்று சேர்ந்த எதிர்க்கட்சிகள் மாற்று ஆட்சியை அமைப்பதில் ஒற்றுமையாகச் செயல்பட முடியவில்லை.

கூட்டணி என்ற கருத்தை சோனியா காந்தி ஏற்கவில்லை. காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைக்க மற்ற கட்சிகள் வெளியிலிருந்து ஆதரவு தர வேண்டும் என்ற கருத்தை சோனியாகாந்தி வலியுறுத்தினார். இந்நிலையில் சோனியா காந்தி வெளிநாட்டிவர் என்றும் அவர் தலைமையில் ஆட்சி அமைவதை ஆதரிக்க முடியாது என்று கூறி முலாயம்சிங் முட்டுக்கட்டை போட்டார். இடது சாரிகளின் தலைமையிலான ஆட்சியையும் காங்கிரஸ் ஆதரிக்கத் தயாராகஇல்லை. கூட்டணி சகாப்தம் இது என்பதை காங்கிரஸ் உணரத் தயாராக இல்லை.

www.tamilarangam.net



அதன் பின்னர் நாடு 1999-ல் மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திக்க நேரிட்டது. தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியைச் சந்தித்தது.

காங்கிரஸ் மட்டுமே நாட்டை ஆளப்பிறந்த கட்சி என்ற மனப்பான்மை அக்கட்சிக்கு இருந்ததால், மதச்சார்பற்ற கட்சிகள் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் காங்கிரஸ் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை இதுவரை பெற்றதில்லை என்பதை அறிய இயலும்.

நேரு காலத்தில் நடந்த மூன்று பொதுத் தேர்தல்களில் முறையே 44.99, 47.78, 44.72 சதவீத வாக்குகளைத்தான் காங்கிரஸ் பெற்றது. லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி காலத்தில் நடந்த பொதுத் தேர்தலில் 40.73, 43. 68 சதவீத வாக்குகளைத்தான் காங்கிரஸ் பெற்றது. நெருக்கடி நிலை காலத்திற்குப் பின் நடந்த தேர்தலில் 34.54 சதவீதமாக அதன் செல்வாக்கு சரிந்தது. 1980இல் 42.7 சதவீத வாக்குகளைப் பெற்றது. இந்திரா படுகொலைக்குப் பின் நடந்த தேர்தலில் அதிகபட்சமாக 48.1.சதவீத வாக்குகளைப் பெற்றது.

ஒன்பது, பத்து, பதினொன்றாவது மக்களவைத் தேர்தல்களில் முறையே 40, 37, 29 சதவீத வாக்குகளைத்தான் பெற்றது. அதன்பின் 12, 13 மக்களவைத் தேர்தல்களில் சுமார் 25 முதல் 28 சதவீத வாக்குளாக அது குறைந்து விட்டது. எனினும் தனித்து ஆட்சி என்ற கனவோடு அந்தக் கட்சி இன்னமும் இருந்து வருகிறது.

இப்படி காங்கிரஸ் கட்சி தேய்வதால் குறிப்பாகக் காங்கிரசை ஆதரித்து வந்த தாழ்த்தப்பட்டோர் தங்களுக்கென்று தனிக் கட்சி தொடங்கியுள்ளனர். உ.பி., பஞ்சாபில் பகுஜன் சமாஜ் கட்சியைத் தலித்துகள் ஆதரிக்கின்றனர். காங்கிரசை ஆதரித்து வந்த இஸ்லாமியர்கள் உ.பி.யில் சமாஜ்வாதிக் கட்சியையும் பிகாரில் ராஷ்ட்ரிய ஜனதா தளத்தையும் ஆதரிக்கின்றனர்.

இந்நிலையில்தான் 1984-ல் 2மக்களவை இடங்களை மட்டுமே பெற்ற பா.ஜ.க. 1999 தேர்தலில் 182 இடங்களைப் பெற , மத்திய தர வர்க்கத்தினர், மேல் சாதியினர் ஆதரவு ஒருமுகப்பட்டிருப்பதும் காரணமாக உள்ளது. இருந்த போதிலும் சுமார் 23 முதல் 25 சதவீத வாக்குகளை மட்டுமே பா.ஜ.க. கடந்த இரு மக்களவைத்

www.tamilarangam.net



தேர்தல்களில் பெற்றுள்ளது. காங்கிரஸ் போன்று அகில இந்தியக் கட்சியாக, காங்கிரசுக்கு மாற்றாக பா.ஜ.க. இன்னும் விரிவடையவில்லை.

தமிழகத்தைப் பொருத்தவரை தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் மத்தியில் கூட்டணி ஆட்சியை வலியுறுத்தினாலும் மாநிலத்தில் தனி ஆட்சி என்பதில் பிடிவாதமாக உள்ளன. அ.தி.மு.க.வுடன் அணி சேர்ந்துள்ள த.மா.கா., ஆட்சியில் பங்கு வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. அ.தி.மு.க.வோ ஆட்சி அமைந்தால் அதில் பங்கு கிடையாது என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

கட்சிகள் வளரவும் இருப்பைத் தொடர்ந்து வளப்படுத்திக் கொள்ளவும் ஆட்சி, அதிகாரம் போன்றவை தேவை என்று நம்புகின்றன. அதனாலும் கூட்டணி ஆட்சி என்று சிறுசிறு கட்சிகள் கூட வலியுறுத்துகின்றன. ஐக்கிய ஜனதா தளத்திலிருந்து பிரிந்து ராம்விலாஸ் பாஸ்வான் லோக்ஜனசக்தி என்ற தனிக்கட்சியைத் தொடங்கியுள்ளார். மத்தியிலும் மாநிலத்திலும் ஒரு எம்.பி., எம்.எல்.ஏ கூட ஆட்சியின் நிலையான தன்மையைக் குலைக்க முடியும் என்ற நிலையில் சிறிய கட்சிகளுக்கும் முக்கியத்துவம் கிடைக்கின்றது. இதுவும் கூட்டணி சகாப்தத்தின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கட்சிகள் மூலம் தங்கள் குரல்களை வெளிப்படுத்த முடியாத பல சாதியினரும், பிரிவினரும் தனித்தனியே கட்சிகளைத் துவக்கி வருகின்றனர். தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ள புதிய புதிய சாதிக் கட்சிகள் இப்போக்குக்கு உதாரணமாகச் சொல்லலாம். அதே சமயம் பிற்பட்ட மற்றும் மேல்சாதி ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டும் நோக்கமும் சில கட்சிகளுக்கு உள்ளது.

இவ்வாறு சமூகத்தில் பல்வேறு மட்டங்களில் மேலது கீழதுமாக, கீழது மேலதுமாக ஒருவிதக் கடைதல் நடந்து வருகின்றது. பலமொழி, கலாசாரம், மதங்கள், சாதிகளைக் கொண்ட நம் நாட்டில் அனைவரது விருப்பங்களையும் ஒரு கட்சியோ அல்லது ஒரு சில கட்சிகளோ நிறைவேற்றிவிடும் என்று எதிர்பார்ப்பது விவரமற்ற போக்காகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூக மட்டத்தில் பல மாநிலங்களில் பிற்படுத்தப் பட்டவர்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் தங்கள் உரிமைகளைப் பெற தங்கள் குரலை உயர்த்தி வருகின்றனர். இத்தகைய நிலைமை அரசியல் மட்டத்திலும் பல மாற்றங்களை உருவாக்கி வருகிறது. இதன் ஒரு விளைவாகவும் கூட்டணி அரசியலைப் பார்க்க வேண்டும்.

பல நிர்ப்பந்தங்கள், மிரட்டல்கள், சிக்கல்கள் கூட்டணி அரசியலில் - கூட்டணி ஆட்சியில் ஏற்பட்டாலும் அந்த நிலைமை களைச் சமாளிக்கும் உத்திகளை உருவாக்குவது முக்கியம். உதாரணமாகக் கேரளம், மேற்கு வங்கத்தில் இடது சாரிக் கூட்டணி ஆட்சிகள் நீண்ட காலமாகச் சுமூகமான முறையில் ஆட்சி நடத்தி வருகின்றன.

சிறிய கட்சிகள் கூட சம அந்தஸ்தையும் மரியாதையையும் பெறுகின்றன. பெரும்பாலும் ஒருமித்தக் கருத்துக் கொண்ட கட்சிகளாக இருப்பதாலும் இடதுசாரிகள் நடத்தும் கூட்டணி ஆட்சியில் பங்கேற்கும் கட்சிகளிடையே மோதல்கள் அதிகம் ஏற்படுவதில்லை. இந்த ஆட்சிகளின் செயல்பாடு பற்றி அறியவும் அதிலிருந்து படிப்பினைகளைப் பெறவும் மற்ற கட்சிகள் முன்வர வேண்டும்.

பொதுவாகக் கூட்டணி ஆட்சி என்றாலே நிலையற்ற ஆட்சி, அடிக்கடி தேர்தல் என்ற அச்சுறுத்தல்கள் இருந்தாலும் கூட்டணி ஆட்சி என்பது தவிர்க்க முடியாத ஓர் அரசியல் வழிமுறையாக நம் நாட்டில் உருவாகி விட்டது. ❑

*-ஆறாம்திணை 15.12.2000*

www.tamilarangam.net

## சீர்திருத்தம் வேண்டி நிற்கும் தேர்தல் முறை

இந்தியாவில் கட்சிகள் செயல்படும் விதமும், தேர்தல் நடைமுறைகளும் இந்திய ஜனநாயகத்தைப் பெரும் சோதனைக்கு ஆளாக்கி வருகின்றன. சுதந்திரமான, நேர்மையான தேர்தல் நடைபெறுவதற்கு கட்சிகள் பெரும் தடைக்கல்லாக உள்ளன. கட்சிகளின் போக்கைக் கட்டுப்படுத்தவோ தேர்தலின்போது விளையும் குற்றங்களைத் தடுக்கவோ உள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் குறைபாடு உடையவையாகவே உள்ளன.

தேர்தல் நடைமுறையில் உள்ள குறைபாடுகளைச் சரி செய்ய தேர்தல் சீர்திருத்தம் பற்றி நீண்ட காலமாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்த போதிலும் இதுவரை உருப்படியாகக் காரியம் எதுவும் நடைபெறவில்லை. தேர்தல் சீர்திருத்தத்தில் மிகுந்த அக்கறை காட்டிய டி.என். சேஷன் தலைமைத் தேர்தல் ஆணையராக இருந்தபோதுகூட தேர்தல் தில்லுமுல்லுகளைக் குறைக்கச் சட்டப்பூர்வமான நடைமுறை எதையும் உருவாக்க முடியவில்லை.

தேர்தல் என்பது பெரும் செலவு மிக்க காரியமாக இருக்கிறது. இந்நிலையில் கட்சிகள் தேர்தலை முன்னிட்டு நன்கொடைகள் பெறுவதைத் தடை செய்ய முடியாத நிலை உள்ளது.

www.tamilarangam.net



நிறுவனங்கள் கட்சிகளுக்கு நிதி தருவதைத் தடுக்க வகை செய்த 1969-ம் ஆண்டுச் சட்டம், திருத்தப்பட்டு 1985-ல் ஒரு சட்டத்திருத்தம் வந்தது. மூன்று ஆண்டுகள் கிடைத்த லாபத்தின் சராசரியில் 5 சதவீத நிதியைத் தர அது வழிவகுத்தது. ஆனால், அவ்வழிமுறை பின்பற்றப்படவில்லை. மாறாகப் பெரும் தொழிலதிபர்கள், பண முதலைகள் கட்சிகளுக்கு ரகசியமாக நிதி தருவது என்பது காலங்காலமாக நடந்து வருகிறது. இந்த நன்கொடைகள் பெரும்பாலும் கருப்புப் பணமாக உள்ளன. இந்திய அரசியலில் மேல் நிலையில் ஊழல்கள் நடக்கின்றன என்பதற்கு ஒரே உதாரணம் இந்த நன்கொடைகள்தான்.

போலி ஆயுத விற்பனை நிறுவனம் ஒன்றிடமிருந்து ஆயுதம் வாங்குவதற்கு பேரம் நடத்தி, தொடக்கத் தொகையாக ஒரு லட்சத்தை லஞ்சமாக வாங்கியதாக வெளியான புகாரில் பா.ஜ.க. தலைவராக இருந்த பங்காரு லட்சுமணன் பதவியை ராஜினாமா செய்ய நேரிட்டுள்ளது. கட்சிக்காக வாங்கப்பட்ட அந்த நன்கொடை கட்சியிடம் செலுத்தப்பட்டு விட்டது என்று பங்காரு லட்சுமணன் கூறியிருக்கிறார். எப்படியோ முறையற்ற வகையில் நன்கொடைகள் பெறப்படுகின்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளுக்கும் தொழிலதிபர்களுக்கும் இடையே நிலவி வரும் இந்த முறிக்க முடியாத கூட்டு பற்றி கவலைப்பட்ட சூழலில், 1971-ல் ஜெகன்னாதராவ் தலைமையில் நாடாளுமன்றக் கூட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. தேர்தல் செலவை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அக்குழு பரிந்துரை அளித்தது. ஆனால், அரசாங்கத்திற்கு இப்பொறுப்பு காரணமாகக் கடுமையான நிதிப்பளு ஏற்பட்டு விடும் என்று அச்சமும் தெரிவிக்கப்பட்டது. நிதி உதவி என்றால் அது எப்படி செலவாகிறது என்பது குறித்து சரியாக கண்காணிக்க இயலாது என்றும் விமர்சிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து 1974-ல் தார்க்குண்டே தலைமையிலும் 1990-ல் தினேஷ் கோஸ்வாமி தலைமையிலும் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. இரு கமிட்டிகளும் ரொக்கமாக உதவி செய்யாவிட்டாலும் தேர்தல் செலவுகளை மீடியாக்களில் பிரசாரம் செய்ய வசதி செய்வது போன்ற வழியில் உதவலாம் என்று பரிந்துரைத்தன. அதையடுத்து இந்திரஜித் குப்தா குழுவும் தேர்தல் செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ளலாம் என்று பரிந்துரைத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிதி உதவி என்றால் பெரிய கட்சி, சிறிய கட்சி என ஒதுக்கீடு விஷயத்தில் சச்சரவுகள் எழும். இந்நிலையில் 1998-ல் தேர்தல் கமிஷன் எடுத்த நடவடிக்கை காரணமாக அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மின்னணு ஊடகங்களில் சரிசமமாகப் பிரசாரம் செய்ய முடிந்தது. இதே அணுகுமுறையை நிதி ஒதுக்கீட்டில் பின்பற்ற முடியாது. சுயேச்சைகள் விஷயத்தில் எத்தகைய அணுகுமுறை தேவை என்பதில் தெளிவே இல்லை.

சுவரொட்டி ஒட்ட இடம் தருவது, தபால் செலவுகளை ஏற்பது, பொது இடங்களில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதிப்பது, வாகன வசதி அளிப்பது போன்ற வகையிலும் கட்சிகளுக்கு மானிய உதவிகளை அளித்துத் தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தலாம் என்ற யோசனையும் தெரிவிக்கப்படுகிறது. சுவீடன் உள்பட 22 நாடுகளில் மறைமுக நிதியுதவி மூலம் தேர்தல்கள் நடக்கின்றன. ஆனால் இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் கட்சிகள் இருப்பதால் தேர்தலுக்கு அரசாங்கம் நிதி உதவி செய்வது சிரமம் எனக் கருதப்படுகிறது.

இந்தியாவில் தேர்தல் நிதிப் புழக்கத்தை முறைப்படுத்த 1997-ல் டாட்டா நிறுவனம் தேர்தல் நிதி அமைப்பு ஒன்றை உருவாக்கியது. ஆனால் நிதி அளிப்பது என்னவோ தொடர்ந்து ரகசியமாகவே புழங்கியதால் இந்த அமைப்பும் உரிய வெற்றியை ஈட்ட முடியவில்லை.

தேர்தல் செலவின் ஒரு பகுதியையாவது அரசாங்கம் ஏற்பதன் மூலம் தேர்தலில் தற்போது நிலவி வரும் ஊழல்களைக் களைய முடியும் என்ற நம்பிக்கை பலருக்கும் உள்ளது. அப்படிச் செலவை ஏற்கும் சூழலில் கட்சிகள் தங்கள் செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தானாகவே எழுகிறது.

ஏற்கனவே 1992-ம் ஆண்டு தேர்தல் ஆணையம் அளித்த பரிந்துரை, கட்சிகள் தங்கள் கணக்குகளைத் தணிக்கை செய்து கணக்கைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியது. அதே போல் தனிப்பட்ட வேட்பாளரின் தேர்தல் செலவு குறித்தும் வரம்புகளைப் பரிந்துரைத்தது. அதன் மூலம் வேட்பாளர்கள் மக்களவைத் தொகுதிக்கு ரூ.15 லட்சமும் சட்டப்பேரவைக்கு ரூ.6 லட்சமும் செலவழிக்கும் நடைமுறை அமலுக்கு வந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேட்பாளரின் அனுமதியின்றி அவருக்காக யாராவது தேர்தல் செலவில் ஈடுபட்டால் அவருக்கு ஓராண்டு முதல் ஐந்தாண்டு வரை சிறைத்தண்டனைகளை விதிக்க வேண்டும் என ஒரு பரிந்துரை கூறியிருந்தது. குறிப்பிடத்தக்க இப் பரிந்துரை அமலாகவில்லை.

வாக்காளருக்கு லஞ்சம் கொடுப்பது முதல் ஏராளமான பணம் செலவழிக்கும் ஒரு கட்சி, ஆட்சிக்கு வந்த பின்னர் லஞ்ச லாவண்யத்தில் ஈடுபடாமல் இருக்குமா? அதனால் கட்சிகள் மட்டத்திலேயே செலவுகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். இதற்கு ஒரே வழி கட்சிகள் தங்கள் கணக்கைப் பொதுமக்கள் பார்வைக்கு வருமாறு வெளியிட வேண்டும். கட்சியின் முக்கியஸ்தர்களும் தங்கள் சொத்துக் கணக்கை வெளியிட முன்வர வேண்டும்.

தற்போது கட்சிகள் தங்கள் சொத்துக் கணக்கைக் கட்சியினருக்குக் கூட காண்பிப்பதில்லை. கட்சி உறுப்பினர் பட்டியலைக் கூட வெளிப்படையாக அறிவிப்பதில்லை. கட்சிகள், அறக்கட்டளைகளைத் தொடங்கித் தங்களின் பணத்தைப் போட்டு வைக்கின்றன. வெளி நாட்டிலிருந்துகூட கட்சிகளுக்கு நன்கொடை வருகிறது. உதாரணமாக நரசிம்மராவ் கட்சித் தலைவராக இருந்த காலத்தில் வெளிநாட்டில் வாழும் இந்தியர் ஒருவர் பெரும் தொகையை நன்கொடையாக வழங்கினார். விசாரணையில் காங்கிரஸ் இந்த நன்கொடை பெற்றதை ஒப்புக் கொண்டது. ஆனால் அனுப்பியது யார் என்ற விவரத்தை மூடி மறைத்து விட்டது. இதேபோல் ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது வெளிநாட்டிலிருந்து மூன்று லட்சம் அமெரிக்க டாலரை நன்கொடையாகப் பெற்றார். இதைத் தன் சொந்தக் கணக்கில் சேர்த்துக் கொண்ட ஜெயலலிதா, இதுவரை அவ்வளவு டாலரையும் அனுப்பியது யார் என்ற விவரத்தை வெளியிடவில்லை.

அரசியலுக்கு வருபவர்கள் பொதுத் தொண்டாற்ற வருவது உண்மை என்றால், கட்சிக் கணக்கையோ அல்லது தனிப்பட்ட சொத்துக் கணக்கையோ வெளியிடத் தயங்குவது ஏன்? பதவியிலிருந்து ஊழல் செய்த அரசியல்வாதிகள் மீது வழக்குத் தொடர்வது என்றால் அதற்கு ஆளுநரின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற தேவையற்ற விதிமுறையும் நடைமுறையில் உள்ளது. எந்த ஓர் அரசியல்வாதியின் மீதும் சாதாரணக் குடிமகனும் வழக்குத் தொடர அனுமதி அளிக்கப்பட வேண்டும். அற்பமான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காரணங்களுக்காகவோ பொய்யாகவோ வழக்குத் தொடர்பவர்கள் மீது சட்டப்படி தண்டனை வழங்கப்படும் எனச் சட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம்.

இப்போதைய அரசியல்வாதிகள் மக்களுக்கு மட்டுமல்ல, சொந்தக் கட்சியினருக்கே பதில் சொல்லத் தயாராக இல்லை. உள்கட்சி ஜனநாயகம் என்பது பெரும்பாலான கட்சிகளில் மருந்துக்கும் இல்லை. இச்சூழலில் கட்சித் தாவல் தடைச்சட்டமும் பொருளற்றதாகி விடுகிறது. பெரும்பாலும் லாப நோக்கில் கட்சித் தாவல்கள் நடக்கிறதென்றாலும் கட்சித் தலைவரே லாப நோக்கில் - தனது தேர்தல் அறிக்கைக்கு மாறாக அணி மாறினால் அதைக் கேள்வி கேட்க அக்கட்சியில் உள்ள சிறுபான்மை பலம் கொண்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமையில்லாத நிலை உள்ளது.

மக்கள் பிரதிநிதியாகத் தேர்வு பெற்ற பின்னர் ஒருவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி நடப்பதா அல்லது கட்சித்தலைவர் சொல்படி கேட்பதா என்ற கேள்வியும் எழுகிறது. கட்சிக்குள் உள்ள மூத்த தலைவர்கள் கூட கேள்வி கேட்பார் இல்லாமல் கட்சியை விட்டு நீக்கப்படுகின்றனர். உதாரணமாக ஹெக்டேயை தேவகௌட நீக்கியதையும், சேடப்பட்டி முத்தையாவை ஜெயலலிதா நீக்கியதையும் குறிப்பிடலாம்.

மற்றபடி தற்போதுள்ள கட்சித் தாவல் தடைச்சட்டம், எவ்விதப் பயனும் இல்லாதது. தனியாக ஒருவர் கட்சி தாவாமல் மூன்றில் ஒரு பங்கினைத் திரட்டிக் கட்சி தாவும் போக்கைச்சட்டம் ஊக்குவித்துள்ளது.

கட்சித் தாவலைத் தடுக்கும் விதிமுறைகளில் ஒன்றாக விகிதாசாரப் பிரதிநிதித்துவம் பரிந்துரை செய்யப்படுகிறது. கட்சிக்காக மக்கள் வாக்களித்துவிட்டால், கட்சிகள் சார்பில் தேர்வுபெறும் பிரதிநிதியைத் தேவைப்படும் நேரத்தில் திரும்பப் பெறும் உரிமையைக் கட்சிகளிடம் அளித்து விடலாம். மேலும் வெற்றி என்ற லாப நோக்கில் புனிதமற்ற கூட்டணிகளைச் சிறிய கட்சிகள் நாடும் நிலை முடிவுக்கு வரும் வாய்ப்பும் உள்ளது.

வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுதல், கள்ளவாக்கு போன்றவை நம் தேர்தல் முறையின் தொடரும் சாபக்கேடுகளாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதில் கள்ள வாக்கைத் தடுக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள வாக்காளர் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை முறை அமலாவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அடையாள அட்டை தயாரிப்பதில் பிழைகள் மலிந்திருப்பது புதிய தலைவலியாக உருவெடுத்துள்ளது.

தேர்தலில் பண பலத்திற்கு அடுத்தபடியாகக் குண்டர்கள் பலம் முக்கிய இடம் பெற்று வந்தது. நாளடைவில் குண்டர்களே நேரடியாக அரசியலில் குதிக்க ஆரம்பித்து விட்டனர். அரசியல், குண்டர்களின் கூடாரமாக மாறி வருகிறது. பீகார், உ.பி.யில் மாஃபியா கும்பலைச் சேர்ந்தவர்கள், கடத்தல் காரர்கள் உள்ளிட்ட கிரிமினல் வழக்குத் தொடரப்பட்ட பலர், எம்.எல்.ஏ., எம்.பி. ஆகியுள்ளனர்.

தேர்தல் ஆணையத்தின் பொன்விழா நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளில் 500 முதல் 800 பேர்வரை கிரிமினல்களாக உள்ளனர் என்று வேதனையுடன் தெரிவித்துள்ளார். இதற்கு முன்பு இந்தியத் தேர்தல் ஆணையம் 1997-ல் வெளியிட்ட அறிக்கையில் 40 எம்.பிக்களும் 700 எம்.எல்.ஏக்களும் கிரிமினல் பின்னணி கொண்டவர்கள் என்று கூறியிருந்தது. அரசியலில் அரசியல் வாதிகளுக்கும், குண்டர்களுக்கும் இடையே நிலவி வரும் கூட்டணியை ஆராய்ந்த வோரா குழு பல உண்மைகளை வெளியிட்டுள்ளது. ஆனால் இப்போக்கைத் தடுக்க முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை.

கிரிமினல் சதி, ஊழல் செய்த ஓர் அரசியல்வாதி சட்டப்படி இரண்டு ஆண்டுகள் தண்டிக்கப்பட்டு விட்டால் அவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் கூறுகிறது. இச்சட்டம் வலிமையற்ற ஒன்றாக உள்ளது. உதாரணமாக ஜெயலலிதாவுக்கு டான்சி நில பேர வழக்கில் மூன்று ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்ட போதிலும், அவர் மேல்முறையீடு செய்துள்ளதால் அவர் தேர்தலில் போட்டியிட அனுமதி பெற வாய்ப்புள்ளது. இது பற்றி தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் கேட்டால், ஜெயலலிதா போட்டியிடலாமா வேண்டாமா என்பதைச் சம்பந்தப்பட்ட தொகுதியில் ஜெயலலிதா மனு செய்த பின்னர் அத்தொகுதியின் தேர்தல் அதிகாரி தான் முடிவெடுப்பார் என்று பதில் தந்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொதுவாக நீதிமன்றங்களில்ஊழல் நிரூபிக்கப்படவே பல ஆண்டுகள் ஆகின்றன. இதில் மேல்முறையீடு எனத் தனது ஆயுள் காலம் முழுவதும் ஒருவர் தண்டனையிலிருந்து தப்பிவிட முடியும். போஃபர்ஸ் வழக்கில் 12 ஆண்டுகள் ஆன பின்னரும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டுள்ள இந்தியன் வங்கி ஊழல் வழக்குக்கும் இதே கதிதான்.

நமது தேர்தல் முறையில் உள்ள சிக்கல்கள் மற்றொன்று அதிக எண்ணிக்கையிலான கட்சிகளும் புற்றீசல் போன்ற சுயேச்சை வேட்பாளர்களும் ஆவர். சுயேச்சைகளின் எண்ணிக்கையைக் குறைக்க அவர்கள் வழங்கும் டெபாசிட் தொகையைப் பத்து மடங்காக உயர்த்த வேண்டும் என்றுதேர்தல் சீர்திருத்தம் பற்றி முன்பு ஆய்வு செய்த சட்டக் கமிஷன் பரிந்துரை வழங்கியுள்ளது. எனினும், வசதி வாய்ப்புகளற்ற ஒருவரும் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற நமது ஜனநாயகத்தின் நோக்கம் டெபாசிட் உயர்த்தப்படுவதால் அடிபட்டுப் போய்விடும் என்ற புகார் எழவும் வாய்ப்புள்ளது.

இரண்டு சதவீதம் அளவுக்கு ஒப்புதலைப் பெறும் சுயேச்சை வேட்பாளர் மட்டுமே தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கும் முறை ஒன்று அமெரிக்காவில் உள்ளது. அதுபோன்று குறைந்த அளவு வாக்காளர்களின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்ற விதிமுறையை உருவாக்கினால் நல்லது. தற்போது ஒரு வேட்பாளருக்கு எதிராக ஏராளமான வேட்பாளரை நிறுத்தி அத் தொகுதியின் தேர்தலையே தள்ளிப் போடும் நிலையும் உருவெடுத்துள்ளது.

மேற்கூறிய ஏராளமான பிரச்சினைகள் ஒருபுறமிருக்க சாதி, மதத்தைத்தூண்டித் தேர்தல் பிரசாரம் செய்வதைத் தடுக்கும் சட்டங்கள் வலுவானதாக இல்லை. இருக்கும் சட்டங்கள் வளைந்து நெளிந்து கொடுக்கின்றன. எத்தகைய தேர்தல் சீர்திருத்தங்கள், சட்டத் திருத்தங்கள் வந்தாலும் தற்போதைய அரசியல்வாதிகள் அவற்றையும் செயலிழக்கச் செய்யும் அளவுக்கு வல்லமை படைத்தவர்களாக உள்ளனர். சட்டப்படி நீதி கிடைப்பதில் உள்ள தாமதம் அரசியல்வாதிகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாக உள்ளது. பணபலம், குண்டர்பலம் போன்றவற்றைப் பயன்படுத்தும் கட்சிகளை அடையாளம் கண்டு மக்களும் அவற்றைப் புறக்கணிக்க முன்வர வேண்டும். அதன் மூலமும் கட்சிகளின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ❑

(-ஆறாம்திணை -5.12.2000)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஊகமா? உண்மையா?

**தே**ர்தலை ஒரு திருவிழாபோல் பாவிக்கும் போக்கு நாட்டில் இன்னமும் நீடிக்கிறது. ஜெயிக்கிற கட்சி அல்லது வேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டும் என்ற மனப்பான்மையுள்ள வாக்காளரும் இங்கு உள்ளனர். இந்நிலையில் வாக்குப்பதிவு நடக்கும் காலகட்டத்தில் தேர்தல் கணிப்புகளை வெளியிட தேர்தல் கமிஷன் தடை விதித்துள்ளது.

*கருத்துக் கணிப்பின் காரணமாக 1996 தேர்தலில் அதிக வெற்றியைப் பெறமுடியவில்லை என்று கருதிய பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ச.ராமதாஸ் தேர்தல் கணிப்பை ஒட்டுமொத்தமாகத் தடைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். ''கருத்துக்கணிப்பும் ஒரு விஞ்ஞானமே. கருத்துக் கணிப்புக்குத் தடை விதிப்பது சரியல்ல. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் தேர்தல் சமயத்தில் தினந்தோறும் கருத்துக் கணிப்புகள் வெளியிடப்படுகின்றன. அதனால் இங்கும் அதை அனுமதிக்க வேண்டும்'' என்று சிலர் கூறுகின்றனர்.*

*சமீப காலமாக நம் நாட்டிலும் பிரபலமடைந்து வரும் கருத்துக் கணிப்புகள் வாக்காளர்களின் ஆர்வத்தைத் தூண்டி பரபரப்பை ஏற்படுத்துகின்றன.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய வாக்காளர்கள் யாருக்கு வாக்களிப்போம் என்பதை முன்பின் தெரியாதவர்களிடம் பகிர்ந்து கொள்ள முன்வருவதில்லை. கட்சிக் கொள்கைகள் ஒருபுறமிருக்க, சாதி, மதம், மொழி, வட்டாரம் ஆகிய அடிப்படையிலும் மக்கள் வாக்களிக்கின்றனர். இத்தகைய வாக்காளரிடம் 'சர்வே' நடத்தி தேர்தலில் வெற்றி எப்படி இருக்கும் என்று கணிப்பது கடினமான காரியம்.

சில தேர்தல்களில் காற்று எந்தப்பக்கம் யாருக்கு ஆதரவாக வீசுகிறது? யாருக்கு எதிராக அலை அடிக்கிறது என்பதை எளிதில் கண்டுபிடித்து விடமுடியும். முக்கியப் பிரச்சினைகள் இல்லாத தேர்தலில் மக்களைக் கணிப்பது, கயிற்றின் மேல் நடப்பது போன்ற சாகசமாகவே இருக்கும்.

இந்தியாவில் தொடக்கத்தில் பத்திரிகையாளர்கள் தான் தேர்தல் கணிப்புகளில் ஈடுபட்டு வந்தனர். கடைசி நேரத்தில் நிலைமைகள் மாறலாம். இப்படியும் இருக்கலாம் அப்படியும் போகலாம் என்ற வகையில் அவர்கள் எழுத்தில் நழுவல்வாதம் இடம் பெறுவதும் உண்டு. 'இந்தியன் இன்ஸ்ட்டியூட் ஆப் பப்ளிக் ஒபீனியன்' அமைப்புதான் முதன் முதலாக 1957 தேர்தலுக்கு முன்பு கருத்துக் கணிப்பை வெளியிட்டது. 1967-ம் ஆண்டுத் தேர்தலின் போதுதான் மக்களைக் கணிப்பதில் பத்திரிகைகளின் திறமை வெளிப்பட ஆரம்பித்தது.

1971-ம் ஆண்டுத் தேர்தலின்போது தமிழகத்தில் காமராஜர் - ராஜாஜி கூட்டணியின் பிரசார கூட்டங்களுக்கு மக்கள் பெருமளவில் கூடியதைப் பார்த்த பத்திரிகையாளர்கள் அக்கூட்டணியே வெற்றி பெறும் என்று மதிப்பிட்டனர். ஆனால் அக்கூட்டணி பெரும் தோல்வியைச் சந்தித்தது.

1980-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் கிடைத்த அபார வெற்றியின் அடிப்படையில் அதன் பின் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலிலும் தி.மு.க. - காங்கிரஸ் அணி வெற்றி பெறும் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால் தேர்தல் முடிவு அ.தி.மு.க.வுக்குச் சாதகமாகத் திரும்பி விட்டது.

ஒரு கட்சிக்குக் கூடும் மக்கள் கூட்டத்தை வைத்துக் கூட வெற்றி வாய்ப்பை அறுதியிட்டுச் சொல்ல முடியாது என்பதை 1984 தேர்தலும் நிரூபித்தது. அத்தேர்தலின்போது கருணாநிதிக்குப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரும் கூட்டம் கூடியது. ஆனால் தி.மு.க. ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. அதன் பின்னர் பேச்சைக் கேட்க வரும் கூட்டத்தினரைப் பார்த்து நான் ஏமாறமாட்டேன் என்று கருணாநிதி குறிப்பிட நேரிட்டது.

அடுத்து வந்த தேர்தல் முடிவுகளை எளிதில் கணிக்கவே முடிந்தது. 1996 தேர்தலில் தமிழகத்தில் தி.மு.க. - த.மா.கா கூட்டணி அமோக வெற்றி பெறும் என்று கருத்துக் கணிப்புகள் வெளியாகின. இதேபோல் பத்திரிகைகளின் கணிப்பும் துல்லியமாக அமைந்தன.

1996 தேர்தலில் அகில இந்திய அளவில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காது என்று பல பத்திரிகைகள் கணித்தன. பா.ஜ.க. முந்துகிறது என்று 'தி வீக் மோட்', இந்தியா டுடே - மார்க்' தேர்தலைக் கணித்தன. 'தி வீக்' 190 முதல் 215 இடங்கள் பா.ஜ.க.வுக்குக் கிடைக்கும் என்றது. 'இந்தியா டுடே' வோ 178 முதல் 197 இடங்கள் வரை கிடைக்கும் என்று கணித்தது. தேர்தலில் 161 இடங்களில் பா.ஜ.க் வெற்றி பெற்றது.

இடங்கள் பற்றிய கணிப்பு ஓரளவு சரியாக இருந்தது. வாக்கு சதவீதம் உயரும் என்ற கணிப்பு தவறாகி விட்டது. 1991 தேர்தலில் 120 இடங்களில் வென்றபோது கிடைத்த 20.8 சதவீதத்தைவிடக் குறைவாக 20.3. சதவீத வாக்குகளைத்தான் பா.ஜ.க. பெற்றது.

1998 தேர்தலிலும் கருத்துக் கணிப்பு நடத்தி பரபரப்பான விற்பனையைச் செய்வதில் பத்திரிகைகள் இடையே பெரும் போட்டி நிலவுகிறது. வாரப்பத்திரிகைகள் இதில் முன்னணியில் நிற்கின்றன. தனியார் 'சர்வே' நிறுவனங்கள் பத்திரிகைகளுடன் இணைந்து தேர்தல் கருத்துக் கணிப்பில் ஈடுபடுகின்றன. இவற்றுடன் தனியார் தொலைக்காட்சிகளும் சேர்ந்து கொண்டன. தொலைபேசி மூலமான சர்வேயும் பரீட்சித்துப் பார்க்கப்படுகிறது.

கட்சிகளும் கருத்துக் கணிப்பு நடத்தும் நிறுவனங்களின் உதவியோடு தங்கள் செல்வாக்கை எடைபோடுகின்றன. சில கட்சிகள் தங்கள் செல்வாக்கை உயர்த்திக்கொள்வதற்காக 'சர்வே' நிறுவனங்களின் உதவியை நாடுவதாகப் புகார்களும் உள்ளன. கட்சி சார்பு நிலை எடுக்கும் பத்திரிகைகளும் தாங்கள் விரும்பும் கட்சியை உயர்த்திப் பிடித்து வெற்றி தேடித்தரப் பார்க்கின்றன.

நாடுமுழுவதும் குறிப்பிட்ட சில தொகுதிகளில் பலதரப்பு வாக்காளரிடையே நடத்தும் 'சாம்பிள் சர்வே' யின் அடிப்படையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொத்தத்தில் கட்சிகளுக்கு எவ்வளவு இடங்கள் கிடைக்கும் என்பதைக் கணக்கிடுகின்றனர். இதுவே பொதுவான நடைமுறையாக உள்ளது. மொத்தத்தில் நாடு முழுவதும் பத்தாயிரம் வாக்காளர்களிடம் சர்வே எடுத்தால்தான் ஓரளவு கணிப்பு சரியாக அமையும் நிலை உள்ளது. இப்போதெல்லாம் பொதுத்தேர்தல் போலவே வாக்குப் பெட்டி வைத்து ரகசியம் காப்பாற்றப்படும் வகையில் 'சர்வே' நடத்தும் முறையும் பிரபலமடைந்து வருகிறது.

முடிவெடுக்காத வாக்காளர்கள் ஒரு பெரிய பிரச்சினை. இவர்கள் கடைசி நேரத்தில் யாருக்கு ஆதரவாக மாறுவார்கள் என்று அறிய முடியாத நிலையில் கருத்துக் கணிப்பின் துல்லியம் தவறுகிறது. கணிப்பில் தோல்வி அடையும் அமைப்புகள் இந்தக் காரணத்தைக் காட்டி தங்கள் 'முகத்தைக்' காப்பாற்றிக் கொள்கின்றன. ஆளும் கட்சிக்கு வாக்காளர்கள் அஞ்சுகின்ற சூழல் இருந்தால் கணிப்புகள் நிச்சயம் தோல்வியைச் சந்திக்கும்.

வாக்குச்சாவடியில் வாக்களித்து விட்டுத் திரும்புவோரிடம் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதைக் கண்டறிய 'எக்சிட் போல்' வாக்குக் கணிப்பு (Exit poll) நடத்துகிறார்கள். இந்த முறை மூலம் குறிப்பிட்ட பகுதி மக்களின் வாக்கு எத்தகைய அடிப்படையில் விழுகிறது என்பதைக் கணக்கிடுகிறார்கள். இம்முறை ஓரளவு சரியான கணிப்பைச் செய்ய உதவுகிறது.

ஒரு தேர்தலில் ஒரு கட்சி பெற்ற வாக்கு சதவீதத்தை எடுத்துக் கொண்டு அடுத்த தேர்தலில் அக்கட்சி பெற்ற வாக்குகளோடு ஒப்பீடு செய்து, எத்தனை சதவீத வாக்குகள் எப்படிக் கூடின அல்லது குறைந்தன என்பதன் அடிப்படையில் தேர்தல் முடிவுகள் பற்றிய ஆராய்ச்சி செய்யப்படுகிறது. இந்த முறையை 'ஸ்விங் தியரி' (Swing theory) என்று அழைக்கிறார்கள்.

நாடு முழுவதும் ஒரே சீராக கட்சிக்கு வாக்குகள் கூடியிருந்தால்தான் இடங்களின் எண்ணிக்கை உயர்வும் சீரானதாக அமையும். எல்லா நேரங்களிலும் அப்படி ஏற்படுவதில்லை. அதேபோல் இரு கட்சி முறையில்தான் இந்த அளவுகோல் துல்லியமாக இருக்கும். எதிர்க்கட்சிகளின் வாக்குகள் பல கூறுகளாகப் பிரிந்தால் இந்த அளவுகோலும் பொருந்தாமல் போகும்.

குறிப்பிட்ட ஒரு தொகுதியில் வெற்றி வாய்ப்பைக் கணிப்பது ஓரளவு சாத்தியமே. ஆனால் ஒரு கட்சி எத்தனை இடங்களில் வெற்றி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெறும் என்பதைக் கணிப்பது கஷ்டமான காரியம். வாக்கு சதவீதத்தில் ஏற்படும் சிறுமாற்றம் கூட மொத்த இடங்களின் எண்ணிக்கையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தி விடுகிறது.

வாக்கு சதவீத உயர்வு அளவுக்கு இடங்களின் எண்ணிக்கையும் உயர்வதைக் 'க்யூப் லா' (Cube Law) என்ற முறையில் கணக்கிடுகின்றனர். இரண்டு கட்சி முறை அமலில் இருக்கும் பிரிட்டன் போன்ற நாடுகளில்தான் இக்கணக்கீட்டு முறையும் பொருத்தமானதாக இருக்கிறது.

இந்தியாவில் 1977-ல் இரு அணிகள் என்ற நிலைமை கூர்மையடைந்தது. அப்போது 41.3 சதவீத வாக்குகளைப் பெற்ற ஜனதா கட்சி 295 இடங்களில் வென்றது. 34.5 சதவீத வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ் கட்சி 152 இடங்களைப் பெற்றது. 'க்யூப் லா' முறைப்படி என்றால் ஜனதா கட்சிக்கு 283 இடங்களும் காங்கிரசுக்கு 164 இடங்களும் கிடைத்திருக்க வேண்டும்.

ஐம்பது சதவீதத்திற்கும் குறைவான வாக்குகள் பெற்ற போதிலும் எதிர்க்கட்சிகளின் வாக்குகள் பிரிவதன் காரணமாக காங்கிரஸ் வெற்றியைப் பெற்று வந்துள்ளது. அக்கட்சிக்கு ஆதரவாக அல்லது எதிர்ப்பாக எத்தனை சதவீத வாக்குகள் மாறுகின்றன என்பதன் அடிப்படையில் மற்ற கட்சிகளுக்குக் கிடைக்கும் இடங்கள் மாறுகின்றன. தேர்தல் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையும் வாக்காளர்களின் மனப் போக்கை மாற்றும் சக்தியுடையதாக இருந்துள்ளது.

எதிர்க்கட்சிகளிடையே 1977 தேர்தலில் ஏற்பட்ட ஒற்றுமை போலவே 1989 தேர்தலில் தொகுதிப் பங்கீடு மூலம் எதிர்க்கட்சிகள் ஒன்று பட்டதால் காங்கிரஸ் தோல்வியைச் சந்தித்தது. மற்ற சமயங்களில் எதிர்க்கட்சிகளின் பிளவு விகிதத்தை (Split factors) பொருத்து அவற்றின் தோல்வி விகிதமும் மாறியது.

நாட்டில் எழும் அலைகள் எல்லாப் பிராந்தியத்திலும் ஒரே மாதிரியாக எதிரொலிப்பதில்லை. 1977 தேர்தலில் காங்கிரசுக்கு எதிரான அலை தென் மாநிலங்களைப் பாதிக்கவில்லை. 1984-ல் காங்கிரஸ் ஆதரவு அலை ஆந்திரத்தில் பாதிப்பை ஏற்படுத்த முடியவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொதுவான மனநிலையைப் பிரதிபலிக்கும் வட்டாரங்கள், தொகுதிகள், கலவையான வாக்காளர் ஆகியவற்றைத் தேர்வு செய்வதில்தான் கருத்துக் கணிப்பின் வெற்றியே அடங்கியுள்ளது. எப்படியும் துல்லியமாக நாடு முழுவதும் உள்ள நிலைமையைக் கண்டறியும் அறிவியல் வழிமுறை இன்னும் உருவாகவில்லை. பரபரப்புக்கும் சில கட்சிகளின் உற்சாகத்துக்குமே தேர்தல் கருத்துக்கணிப்பு பயன்பட்டு வருகிறது.

தேர்தல் கணிப்புகளுக்கு அடுத்தபடியாக சமீபகாலமாக பெரும் போக்காக நடத்தப்பட்டுவரும் வாக்குக் கணிப்பு முறை பலவித சர்ச்சைகளை உருவாக்கி வருகிறது. தாரணமாக 1999-ம் ஆண்டு மக்களவைத் தேர்தல் செப்டம்பர் 5-ம் தேதி துவங்கி அக்டோபர் 3ஆம் தேதி வரை ஏறக்குறைய ஒரு மாத காலத்திற்கு நடைபெற்றது. இடைப்பட்ட காலத்தில் வாக்குப்பதிவின்போது வாக்குக் கணிப்பு நடத்தி முடிவை வெளியிடுவதற்குத் தேர்தல் ஆணையம் தடை விதித்தது. ஒரு பகுதியின் வாக்குக் கணிப்பு முடிவுகள் மற்ற பகுதியில் செல்வாக்குச் செலுத்தி விடும் என்பதால் தடை விதிப்பதாகவும் இது ஜனநாயக விரோத நடவடிக்கை அல்ல என்றும் தேர்தல் ஆணையர் எம்.எஸ்.கில் தெரிவித்தார். 40சதவீத மக்கள் கல்வியறிவற்றவர்களாக உள்ள நம் நாட்டில் இந் நடவடிக்கை அவசியமாகிறது என்றும் அவர் விளக்கமளித்தார்.

தடை நடவடிக்கை, கருத்துரிமைக்கு எதிரானது என்று பல தரப்பிலிருந்தும் புகார்கள் எழுந்தன. ஒரு தனியார் தொலைக்காட்சி இப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றத்தை அணுகியது. இதில் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், தடை விதிக்க தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை என்றனர். ''ஜனநாயக உரிமைகளில் தலையிட்டுப் பத்திரிகைகளின் குரல்வளையை நெரித்தல் அல்லது கட்டுப்படுத்துதல் போன்ற வேலையில் தேர்தல் ஆணையம் ஈடுபடக்கூடாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அமைப்புக்கு இவ்வகை உரிமைகள் இல்லை'' என்றும் உச்சநீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது.

உண்மையில் தேர்தல் ஆணையத்தின் நோக்கம் நல்ல தன்மை கொண்டதாகவே இருந்தது. கார்கில் போருக்குப் பின்னர் பா.ஜ.கட்சியின் வெற்றி வாய்ப்பு உறுதி என்றிருந்த நிலையில் கருத்துக் கணிப்புகளும் வாக்குக் கணிப்பும் தங்களுக்கு மேலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதரவைத் தேடித் தரும் என்று பா.ஜ.க.வினர் நம்பினர். அதனால் அவர்கள் தேர்தல் ஆணையத்தின் முடிவை எதிர்த்துப் பத்திரிகைகள் வாயிலாகக் கடும் கண்டனத்தை வெளியிட்டனர்.

உலக நாடுகளில் தேர்தல் கணிப்பு பற்றி பலவித விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளில் தேர்தலுக்கு ஒரு வார காலகட்டத்தில் தேர்தல் கணிப்பு வெளியிடக்கூடாது. போர்ச்சுக்கலில் 2 வாரம், ஸ்பெயினில் 5 நாட்கள், கனடாவில் 2நாட்கள் எனத் தடை உள்ளது. பிரிட்டனில் இவ் விஷயத்தில் தடை எதுவுமில்லை. அமெரிக்காவில் தாமாக முன்வந்து வாக்குப்பதிவுக் காலத்தில் வாக்குக் கணிப்பு முடிவுகளை வெளியிடாமல் நிறுத்தி வைக்கும் நடைமுறை அமலில் உள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை பலவிதக் கணிப்புகள் காரணமாக மக்கள் கருத்து மாற்றப்படுகிறது என்பதை நிரூபிக்க எவ்வித ஆதாரமுமில்லை. தகவல்களை அறியும் உரிமை ஜனநாயகத்தில் எல்லோருக்கும் உள்ளது. கருத்துரிமைதான் ஜனநாயகத்தின் சாராம்சம். படிப்பறிவில்லாதவர்கள் 40 சதவீதமாக இந்தியாவில் இருக்கின்றனர். 30 சதவீத இந்திய மக்கள் எந்தத் தகவல் தொடர்பு சாதனத்தையும் பயன்படுத்தாதவர்களாகவும் உள்ளனர்.

உதாரணமாக 1998-ம் ஆண்டுத் தேர்தலில் தமிழகத்தில் வாக்குக் கணிப்புக்கு மாறாகத் தேர்தல் முடிவுகள் அமைந்தன. கோவையில் வெடிகுண்டு வெடித்த பின்னர் தேர்தல் கணிப்புகள் வெகுவாக மாறிவிட்டன. அ.தி.மு.க. அணி 30 மக்களவை இடங்களில் வெல்லும் என்று யாராலும் கணிக்க முடியவில்லை.

இதேபோல் 1999 தேர்தலில் அகில இந்திய அளவில் ஊடகங்களால் சரியான கணிப்பை வெளியிட முடியவில்லை. தில்லி, உத்திரப்பிரதேசம், பிகார், பஞ்சாப், மகாராஷ்டிரம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் கணிப்புக்கு மாறான முடிவுகள் வந்தன. பா.ஜ.க.வின் செல்வாக்கு உத்தரப்பிரதேசத்தில் கணித்ததை விடக் குறைந்து போனது. மாறாக பீகாரில் பா.ஜ.க. நல்ல வெற்றியைப் பெற்றது.

மக்களவைக்கு 538 இடங்களுக்குத் தேர்தல் நடைபெற்றது. இதில் 294 இடங்களில் பா.ஜ.க. அணி வென்றது. மொத்தமாக பா.ஜ.க.அணிக்கு எவ்வளவு இடங்கள் கிடைக்கும் என்பதை ஓரளவு சரியாகக் கணிக்க முடிந்த போதிலும், கணிப்பாளர்கள் எதிர்பார்த்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்கு மாறாக எதிர்பாராத மாநிலங்களில் கிடைத்த வெற்றியே கணிப்பின் வெற்றிக்கு உதவியது.

இந்திய மக்கள் அனுதாப அலைக்கும் பரபரப்புக்கும் இடம் அளித்து வந்துள்ளனர். எனினும் இக்காரணங்களை வைத்துத் தேர்தல் கணிப்பு, வாக்குக் கணிப்பை எதிர்ப்பது சரியல்ல. தேர்தல் கணிப்பாளர்களின் முகத்தில் கரி பூசும் வல்லமையும் மக்களுக்கு உள்ளது. இதனால் வாக்குக் கணிப்பு போன்றவற்றால் பாதிக்கப்படாமல் தங்கள் வாழ்க்கை அனுபவத்தின் அடிப்படையில் வாக்களிக்கும் பக்குவத்தை மக்கள் பெற்று விடுவார்கள் என்று நம்பலாம்.

இவ்விஷயத்தில் தடை சரியல்ல. பொய் வாக்குறுதிகளை அளித்து மக்களை முட்டாளாக்கும் அரசியல்வாதிகளை, சில சந்தர்ப்பங்களிலாவது முட்டாளாக்குவதற்கு வாக்காளர்களுக்கு உள்ள வாய்ப்பைத் தேர்தல் ஆணையம் பறித்து விடக்கூடாது. ❑

*-தினமணி தேர்தல் மலர் - 1998,*
*ஆறாம்திணை, 12.1.2001*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மக்களவைத் தேர்தல் கூட்டணிகள் 1952 - 1999

| | | | | |
|---|---|---|---|---|
| 1999 | தி.மு.க.-பா.ஜ.க.<br>ம.தி.மு.க.- பா.ம.க. த.ரா.கா. | அ.தி.மு.க.-<br>காங்.-கம்யூ.மார்க்சிஸ்ட் | த.மா.கா.-புதிய தமிழகம்<br>ஜனதாதளம் - வி.சிறுத்தைகள் | |
| 1998 | அ.தி.மு.க. - பா.ஜ.க.-<br>ம.தி.மு.க. - பா.ம.க. | தி.மு.க.-த.மா.கா.-<br>கம்யூனிஸ்ட் | காங்கிரஸ்-<br>எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. | மார்க்சிஸ்ட் (தனி)<br>புதிய தமிழகம் (தனி) |
| 1996 | இ.காங்.-அ.தி.மு.க. | தி.மு.க.-த.மா.கா.-<br>கம்யூனிஸ்ட் | ம.தி.மு.க.<br>மார்க்சிஸ்ட் - ஜனதா தளம் | பா.ம.க.-திவாரி காங். |
| 1991 | இ.காங்.-அ.தி.மு.க. | தி.மு.க-கம்யூனிஸ்ட் -<br>மார்க்சிஸ்ட் - ஜனதாதளம் | | |
| 1989 | இ.காங்.- அ.தி.மு.க. | தி.மு.க.-கம்யூனிஸ்ட்<br>மார்க்சிஸ்ட் | | |
| 1984 | இ.காங்.-அ.தி.மு.க. | தி.மு.க. - கம்யூனிஸ்ட்-<br>மார்க்சிஸ்ட் - முஸ்லீம் லீக் | | |
| 1980 | அ.தி.மு.க.-கம்யூனிஸ்ட்-<br>மார்க்சிஸ்ட் | தி.மு.க.-இ.காங். | | |
| 1977 | இ.காங்.-அ.தி.மு.க.-<br>கம்யூனிஸ்ட் | தி.மு.க.-ஸ்தாபன காங்.<br>மார்க்சிஸ்ட் | | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## மக்களவைத் தேர்தல் கூட்டணிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1971 | ஸ்தாபன காங்.-சுதந்திரா கட்சி | தி.மு.க.-இ.காங் கம்யூனிஸ்ட் | மார்க்சிஸ்ட் | |
| 1967 | காங்கிரஸ் | தி.மு.க.-மார்க்சிஸ்ட் சுதந்திரா-முஸ்லீம்லீக் | கம்யூனிஸ்ட் | |
| 1962 | காங்கிரஸ் | தி.மு.க.-சுதந்திரா-முஸ்லீம்லீக் | கம்யூனிஸ்ட் | |
| 1957 | காங்கிரஸ் | தி.மு.க. | கம்யூனிஸ்ட் | |
| 1952 | காங்கிரஸ் | கம்யூனிஸ்ட்-விவசாய தொழிலாளர் மக்கள் கட்சி – | காமன்வீல் கட்சி | உழைப்பாளர் கட்சி |

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சட்டப்பேரவைத் தேர்தல் கூட்டணிகள் 1977 - 1996

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1996 | தி.மு.க.- த.மா.கா இந்திய கம்யூ. | அ.தி.மு.க.- காங்கிரஸ் | ம.தி.மு.க.- மார்க்சிஸ்ட்- ஜனதாதளம் | பா.ம.க.- திவாரி காங். | ஜனதா- தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு | பா.ஜ.க. |
| 1991 | அ.தி.மு.க.- காங்கிரஸ் | தி.மு.க.- கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் ஜனதாதளம் | பா.ம.க. | | | |
| 1989 | தி.மு.க.- மார்க்சிஸ்ட் ஜனதாதளம் | அ.தி.மு.க.(ஜெ) கம்யூனிஸ்ட் | அ.தி.மு.க.(ஜா) தமிழக முன்னேற்ற முன்னணி | காங்கிரஸ் | | |
| 1984 | அ.தி.மு.க.- காங்கிரஸ்(இ) | தி.மு.க.- கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் முஸ்லீம்லீக் | | | | |
| 1980 | அ.தி.மு.க. கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் | தி.மு.க.- காங்கிரஸ் | | | | |
| 1977 | அ.தி.மு.க. மார்க்சிஸ்ட் | தி.மு.க. | காங்கிரஸ்(இ) கம்யூனிஸ்ட் | காங்கிரஸ் (ஸ்தா) | | |

❖ 1952 முதல் 1971வரை நடந்த பொதுத் தேர்தல்களில் மக்களவைத் தேர்தலிலும் சட்டபேரவைத் தேர்தலிலும் ஒரே மாதிரியான கூட்டணிகளே அமைந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டவணை - 1

### 1952 சென்னை மாகாணப் பேரவைத் தேர்தல் முடிவுகள்★

| | |
|---|---|
| காங்கிரஸ் | 152 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 62 |
| விவசாயத் தொழிலாளர் மக்கள் கட்சி | 35 |
| தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி | 19 |
| க்ரிஷிகார் | 15 |
| சோசலிஸ்ட் கட்சி | 13 |
| காமன்வீல் கட்சி | 6 |
| முஸ்லிம் லீக் | 5 |
| பார்வர்ட்பிளாக் (மார்க்சிஸ்ட் பிரிவு) | 3 |
| பெடரேஷன் | 2 |
| ஜஸ்டிஸ் கட்சி | 1 |
| சுயேச்சைகள் | 62 |

★ மலபார் ஆந்திரப் பகுதிகளையும் சேர்த்து 375 சட்டப்பேரவை இடங்கள் இருந்தன. மொழிவழி மாநிலப் பிரிவினைக்குப் பின்னர் 1957-ல் 205 பேரவை இடங்களாக மாறியது. 1962-ல் 206 இடங்களாக ஆனது. 1967 முதல் 234 இடங்கள் பேரவையில் உள்ளன.

## அட்டவணை - 2

### 1952 மக்களவை முடிவுகள்: மொத்த இடங்கள் 489*

| கட்சி | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| காங்கிரஸ் | 479 | 364 | 44.99 |
| கம்யூனிஸ்ட் | 49 | 16 | 3.3 |
| சோசலிஸ்ட் | 256 | 12 | 10.6 |
| விவசாயத்தொழிலாளர் மக்கள் கட்சி (கேஎம்பிபி) | 146 | 9 | 5.8 |
| ஜனசங்கம் | 93 | 3 | 3.1 |
| தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி (ராமசாமி படையாச்சி) | 7 | 4 | - |
| காமன்வீல் (மாணிக்க நாயக்கர்) | 3 | 3 | - |
| இதர கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் | - | 68 | - |

* 1957, 1962-ல் 494 இடங்கள், 1967-ல் 520, 1971-ல் 518, 1977, 1980, 1984-ல் 542, 1989முதல் 1999வரை 543 இடங்கள் என மக்களவை மொத்த இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அட்டவணை - 3
### 1957 மக்களவைத் தேர்தல் முடிவுகள்

| கட்சி | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|
| காங்கிரஸ் | 371 | 47.8 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 27 | 8.9 |
| பிரஜா சோசலிஸ்ட் கட்சி | 19 | 10.4 |
| பாரதீய ஜனசங்கம் | 4 | 5.9 |
| தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் | 6 | -- |
| சோசலிஸ்ட் | 3 | - |
| தி.மு.க. | 2 | - |

## அட்டவணை - 4
### 1957 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள்

| கட்சி | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| காங்கிரஸ் | 204 | 151 | 45.34 |
| தி.மு.க. | 112 | 15 | 12.79 |
| இந்திய கம்யூனிஸ்ட் | | 4 | -- |
| காங்கிரஸ் சீர்திருத்தக்கமிட்டி | | 9 | -- |
| பிரஜா சோசலிஸ்ட் | | 2 | -- |
| சோசலிஸ்ட் | | 1 | -- |
| பார்வர்ட் பிளாக் | | 3 | -- |
| சுயேச்சைகள் | | 20 | -- |

SEELAN BOOKS ★ NORWAY ★ SIGNATURE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அட்டவணை - 5

### 1962 மக்களவைத் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|
| காங்கிரஸ் | 361 | 44.72 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 29 | 9.9 |
| சுதந்திரா கட்சி | 22 | 4.4 |
| ஜனசங்கம் | 14 | 6.44 |
| பிரஜா சோசலிஸ்ட் கட்சி | 12 | 6.81 |
| தி.மு.க. | 7 | 2.01 |

## அட்டவணை - 6

### 1962 பேரவைத் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| காங்கிரஸ் | 205 | 138 | 58,15,978<br>46.22 |
| தி.மு.க. | 143 | 50 | 34,13,653<br>27.10 |
| கம்யூனிஸ்ட் | 68 | 2 | 9,65,344<br>7.67 |
| சுதந்திராகட்சி | 94 | 6 | 9,93,768<br>7.90 |
| பார்வர்ட் பிளாக் | 6 | 3 | 1,73,261<br>1,37 |
| சோசலிஷட் கட்சி | 7 | 1 | 40,794<br>0.32 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அட்டவணை - 7

### 1967 மக்களவைத் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| காங்கிரஸ் | 516 | 283 | 40.8 |
| சுதந்திரா கட்சி | 178 | 42 | 8.5 |
| ஜனசங்கம் | 249 | 35 | 9.3 |
| சம்யுக்த சோசலிஸ்ட் | 123 | 23 | 4.9 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 104 | 23 | 4.9 |
| மார்க்சிஸ்ட் | 63 | 19 | 4.5 |
| பிரஜா சோசலிஸ்ட் | 110 | 13 | 3.1 |
| தி.மு.க. | 25 | 25 | 3.8 |

## அட்டவணை - 8

### 1967 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| தி.மு.க. | 173 | 138 | 41.51 |
| காங்கிரஸ் | 234 | 50 | 34.99 |
| சுதந்திரா | -- | 20 | -- |
| மார்க்சிஸ்ட் | 20 | 11 | 6.85 |
| கம்யூனிஸ்ட் | | 2 | 1.94 |
| பிரஜா சோசலிஸ்ட் | -- | 4 | -- |
| சம்யுக்த சோசலிஸ்ட் | -- | 2 | -- |
| சுயேச்சைகள் | - | 7 | -- |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அட்டவணை - 9

### 1971 மக்களவைத் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| காங்கிரஸ் (இ) | 441 | 350 | 43.7 |
| ஸ்தாபன காங்கிரஸ் | 238 | 16 | 10.4 |
| சுதந்திரா | 56 | 8 | 3.1 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 87 | 23 | 4.7 |
| மார்க்சிஸ்ட் | 85 | 25 | 5.1 |
| ஜனசங்கம் | 160 | 22 | 7.4 |
| தி.மு.க. | 24 | 23 | -- |

## அட்டவணை - 10

### 1971 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| தி.மு.க. | 203 | 184 | 48.58 |
| ஸ்தாபன காங்கிரஸ் | | 15 | 34.99 |
| இந்திய கம்யூனிஸ்ட் | | 8 | |
| பார்வர்ட் பிளாக் | | 7 | |
| சுதந்திராக் கட்சி | | 6 | |
| முஸ்லிம் லீக் | | 6 | |
| பிரஜா சோசலிஸ்ட் | | 4 | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டவணை - 11

### 1977 மக்களவைத் தேர்தல் முடிவுகள்

### மார்ச் 16,19

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| *காங்கிரஸ் இ.* | *492* | *152* | *34.5* |
| *ஜனதா (ஜனநாயகக் காங்கிரஸ் லோக்தளம், காங்கிரஸ் (ஸ்தாபனம்)* | *421* | *297* | *43.0* |
| *இந்திய கம்யூனிஸ்ட்* | *91* | *7* | *2.8* |
| *மார்க்சிஸ்ட்* | *53* | *22* | *4.3* |
| *அ.தி.மு.க.* | *20* | *18* | -- |
| *தி.மு.க.* | *19* | *1* | -- |

## அட்டவணை - 12

### 1977 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள்

### (ஜூன் 12,14)

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| *அ.தி.மு.க.* | *200* | *130* | *30.37* |
| *தி.மு.க.* | *230* | *48* | *24.89* |
| *காங்கிரஸ் இ.* | *198* | *27* | *17.51* |
| *ஜனதா* | *233* | *10* | *16.66* |
| *மார்க்சிஸ்ட்* | *20* | *12* | *2.79* |
| *இந்திய கம்யூனிஸ்ட்* | *32* | *5* | *2.91* |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அட்டவணை - 13

### 1980 மக்களவைத் தேர்தல் முடிவுகள் ஜனவரி 3, 6

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| காங்கிரஸ் | 492 | 353 | 42.7 |
| ஜனதா கட்சி (ஜேபி) | 432 | 31 | 19.0 |
| காங்கிரஸ் (யு) | 212 | 13 | 5.3 |
| ஜனதக(எஸ்) | 294 | 41 | 9.4 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 48 | 11 | 2.6 |
| மார்க்சிஸ்ட் | 63 | 36 | 6.1 |
| தி.மு.க. | 16 | 16 | -- |
| அ.தி.மு.க. | 24 | 2 | -- |

## அட்டவணை - 14

### 1980 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் மே28, 31

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| அ.தி.மு.க. | 177 | 129 | 38.74 |
| தி.மு.க. | 114 | 38 | 22.54 |
| இ.காங்கிரஸ் | 112 | 30 | 20.48 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 16 | 10 | 2.99 |
| மார்க்சிஸ்ட் | 16 | 11 | 3.13 |
| காந்தி - காமராஜ் தேசிய காங்கிரஸ் | 10 | 6 | 1.71 |
| ஜனதா (ஜேபி) | 94 | 2 | 2.78 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அட்டவணை - 15
### 1984 சட்டப்பேரவைத் தேர்தல்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்குகள் மற்றும் % |
|---|---|---|---|
| அ.தி.மு.க. | 155 | 133 | 80,44,273 (37.09) |
| தி.மு.க. | 168 | 24 | 63,96,518 (29.49) |
| இ.காங்கிரஸ் | 72 | 62 | 35,69,872 (16.46) |
| இந்திய கம்யூனிஸ்ட் | 16 | 2 | 5,32,575 (2.46) |
| மார்க்சிஸ்ட் | 17 | 5 | 6,32,574 (2.92) |
| காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் | 5 | 2 | 1,20,704 (0.56) |
| ஜனதா | 16 | 3 | 4,93,374 (2.27) |

## அட்டவணை - 16
### 1984 மக்களவைத் தேர்தல்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| இ.காங்கிரஸ் | 515 | 415 | 48.1 |
| காங்கிரஸ் (எஸ்) | 39 | 5 | 1.6 |
| ஜனதா கட்சி | 219 | 10 | 6.7 |
| பா.ஜ.க. | 229 | 2 | 7.4 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 66 | 6 | 2.7 |
| மார்க்சிஸ்ட் | 64 | 22 | 5.7 |
| லோக்தளம் | 174 | 3 | 5.6 |
| தெலுங்கு தேசம் | 34 | 30 | 4.1 |
| அ.தி.மு.க. | 12 | 12 | -- |
| தி.மு.க. | 27 | 2 | -- |

www.tamilarangam.net



## அட்டவணை - 17

### 1989 சட்டப்பேரவைத் தேர்தல் - ஜன.21

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்குகள் மற்றும் % |
|---|---|---|---|
| தி.மு.க. | 199 | 146 | 78,74,547 (33.34) |
| அ.தி.மு.க.(ஜெ) | 196 | 26 | 51,17,868 (21.90) |
| காங்கிரஸ் இ. | 208 | 26 | 48,42,579 (20.08) |
| அ.தி.மு.க. (ஜா) | 175 | 1 | 22,04,052 (9.10) |
| மார்க்சிஸ்ட் | 21 | 15 | 8,14,484 (3.50) |
| தமு.மு. | 49 | 0 | 4,62,150 |
| தமிழக ஜனதா | 20 | 2 | 3,85,241 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 12 | 3 | 2,87,761 |
| ஜனதாதளம் | 10 | 4 | 2,82,647 |

## அட்டவணை - 18

### 1989 மக்களவைத் தேர்தல் முடிவுகள்-நவ.24

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| இ.காங்கிரஸ் | 510 | 197 | 39.5 |
| ஜனதாதளம் | 244 | 143 | 17.8 |
| காங்கிரஸ் (எஸ்) | 14 | 1 | 0.3 |
| ஜனதா கட்சி | 156 | 0 | 1.0 |
| பா.ஜ.க. | 225 | 85 | 11.4 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 50 | 12 | 2.6 |
| மார்க்சிஸ்ட் | 64 | 33 | 6.5 |
| லோக்தளம் | 119 | 0 | 0.2 |
| தெலுங்கு தேசம் | 33 | 2 | 3.3 |
| அ.தி.மு.க. | 11 | 11 | -- |
| தி.மு.க. | 31 | 0 | |

www.tamilarangam.net



## அட்டவணை - 19

### 1991 சட்டப்பேரவைத் தேர்தல்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்குகள் மற்றும் % |
|---|---|---|---|
| அ.தி.மு.க. | 168 | 164 | 1,09,40,866 (44.39) |
| காங்கிரஸ் | 66 | 61 | 37,97,076 (15.4) |
| தி.மு.க. | 176 | 2 | 55,35,708 (22.46) |
| மார்க்சிஸ்ட் | 22 | 1 | 7,77,532 (3.15) |
| இந்திய கம்யூனிஸ்ட் | 10 | 1 | 3,05,143 (1.24) |
| ஜனதா தளம் | 15 | 1 | 4,15,947 (1.69) |
| பா.ம.க. | 199 | 1 | 14,56,456 (5.91) |
| அண்ணா புரட்சித் தலைவர் திமுக | 9 | 2 | 3,41,104 (1.38) |

## அட்டவணை - 20

### 1991 மக்களவைத் தேர்தல்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| காங்கிரஸ் | 492 | 232 | 36.5 |
| பா.ஜ.க. | 468 | 120 | 20.8 |
| ஜனதா தளம் | 307 | 59 | 11.8 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 42 | 14 | 2.49 |
| மார்க்சிஸ்ட் | 60 | 35 | 6.16 |
| அ.தி.மு.க. | 11 | 11 | 1.62 |
| தெலுங்கு தேசம் | 35 | 13 | 2.99 |
| தி.மு.க. | 29 | 0 | 2.09 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அட்டவணை - 21
### 1996 சட்டப்பேரவைத் தேர்தல்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்குகள் மற்றும் % |
|---|---|---|---|
| தி.மு.க. | 182 | 173 | 1,14,23,163 (42.06) |
| தா.ம.கா. | 40 | 39 | 25,26,472 (9.3) |
| இந்திய கம்யூனிஸ்ட் | 11 | 8 | 5,75,570 (2.12) |
| அ.தி.மு.க. | 168 | 4 | 58,39,363 (21.5) |
| பா.ம.க. | 116 | 4 | 10,42,332 (3.84) |
| ஜனதா தளம் | 16 | 1 | 1,17,801 (0.43) |
| பா.ஜ.க. | 145 | 1 | 4,99,111 (1.83) |
| ஜனதா | 50 | 1 | 1,50,134 (0.55) |
| மார்க்சிஸ்ட் | 40 | 1 | 4,56,172 (1.68) |
| அகில இ. பார்வர்டு பிளாக் | 1 | 1 | 75,324 |

## அட்டவணை - 22
### 1996 மக்களவைத் தேர்தல்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| பா.ஜ.க. | 471 | 161 | 20.2 |
| காங்கிரஸ் | 529 | 140 | 28.8 |
| ஜனதா தளம் | 196 | 46 | 8.0 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 43 | 12 | 1.97 |
| மார்க்சிஸ்ட் | 75 | 32 | 6.12 |
| தி.மு.க. | 17 | 17 | |
| த.மா.கா. | 20 | 20 | |
| தெலுங்கு தேசம் | 36 | 16 | |
| சமாஜ்வாதி | 64 | 16 | |
| அசாம் கணபரிஷத். | 11 | 5 | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அட்டவணை 23
## 1998 மக்களவைத் தேர்தல்

| கட்சிகள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|
| பா.ஜ.க. அணி | 252 | - |
| பா.ஜ.க. | 179 | 25.38 |
| சிவசேனை | 6 | 1.74 |
| சமதா | 12 | 1.77 |
| பிஜு ஜனதாதளம் | 9 | 1.00 |
| திருணாமுல் | 7 | - |
| லோக்சக்தி | 3 | - |
| ஹரியானா விகாஸ் கட்சி | 1 | - |
| அ.தி.மு.க. | 18 | 1.82 |
| பா.ம.க. | 4 | 0.42 |
| ம.தி.மு.க. | 3 | 0.44 |
| தமிழக ராஜீவ் காங்கிரஸ் | 1 | - |
| ஜனதா | 1 | - |
| காங்கிரஸ் அணி | 166 | |
| காங்கிரஸ் | 142 | 25.72 |
| ராஷ்ட்ரிய ஜனதாதளம் | 17 | 2.67 |
| இந்திய குடியரசுக்கட்சி | 4 | |
| மற்றக்கட்சிகள் | 3 | |
| ஐக்கிய முன்னணி | 96 | |
| ஜனதா தளம் | 6 | 3.20 |
| மார்க்சிஸ்ட் | 32 | 5.21 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 9 | 3.20 |
| புரட்சி சோசலிஸ்ட் கட்சி | 5 | 1.74 |
| பார்வர்ட் பிளாக் | 2 | - |
| தி.மு.க. | 6 | 1.45 |
| த.மா.கா. | 3 | 1.41 |
| சமாஜ்வாதி கட்சி | 20 | - |
| தெலுங்குதேசம் | 12 | 2.78 |
| தேசிய மாநாடு | 1 | - |

www.tamilarangam.net



## அட்டவணை – 24
## 1999 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | வாக்கு % |
|---|---|---|---|
| பா.ஜ.க. | 340 | 182 | 23.7 |
| தெலுங்குதேசம் | 34 | 29 | |
| ஐக்கிய ஜனதா தளம் | 61 | 20 | |
| சிவசேனா | 63 | 15 | |
| தி.மு.க. | 19 | 12 | |
| ஏனைய பாஜக கூட்டணிக் கட்சிகள் | 80 | 41 | |
| காங்கிரஸ் | 453 | 112 | 28.4 |
| அ.தி.மு.க. | 29 | 10 | |
| ராஷ்ட்ரீய ஜனதா தளம் | 60 | 7 | |
| மற்ற காங்கிரஸ் கூட்டணிக் கட்சிகள் | 42 | 5 | |
| மார்க்சிஸ்ட் | 72 | 32 | |
| இந்திய கம்யூனிஸ்ட் | 54 | 4 | |
| பகுஜன் சமாஜ் | 224 | 14 | |
| சமாஜ்வாதி | 151 | 26 | |
| தேசியவாத காங்கிரஸ் | 130 | 6 | |
| மற்ற கட்சிகள் | | 22 | |

www.tamilarangam.net



## தமிழக மக்கள்தொகை, வாக்காளர், வாக்களித்தோர் பட்டியல்

| தேர்தல் ஆண்டு | மக்கள்தொகை ※ | வாக்காளர்கள் | வாக்களித்தோர் | % |
|---|---|---|---|---|
| 1952* | 5,70,16,002❖ | 2,69,80,956❖ | 2,09,06,259❖ | 77.49❖ |
| 1957* | 3,18,20,800 | 1,75,14,993 | 1,14,93,955 | 65.62 |
| 1962* | 3,35,39,300 | 1,86,75,436 | 1,31,94,649 | 70.65 |
| 1967* | 3,64,12,400 | 2,07,97,325 | 1,59,28,693 | 76.59 |
| 1971* | 4,01,84,000 | 2,30,64,985 | 1,65,69,760 | 71.83 |
| 1977 | 4,50,56,000 | 2,81,73,342 | 1,73,43,472 | 61.56 |
| 1980 | 4;60,49,800 | 2,91,99,969 | 1,91,01,113 | 65.41 |
| 1984* | 4,84,08,077 | 3,09,57,439 | 2,27,32,298 | 73.57 |
| 1989 | 5,41,11,000 | 3,54,19,324 | 2,45,95,071 | 69.44 |
| 1991* | 5,56,38,318 | 3,99,17,777 | 2,54,78,486 | 63.83 |
| 1996* | 5,94,52,000 | 4,24,86,212 | 2,64,12,069 | 62.17 |

❖ ஆந்திரம், கேரளப் பகுதிகள் உள்ளிட்ட ஒன்றுபட்ட சென்னை மாகாணம்

※ முதல் ஐந்து பொதுத் தேர்தல்களில் மக்கள்தொகை அளவு ஓர் உத்தேச கணக்கே.

★ 1952, 57,62,67,71,84,91,96 ஆண்டுகளில் மக்களவைக்கும் சட்டப் பேரவைக்கும் ஏக காலத்தில் தேர்தல்கள் நடந்தன.

www.tamilarangam.net



## சட்டப்பேரவை:
## பெண் வேட்பாளர்கள் போட்டியும் வெற்றியும்

| தேர்தல் ஆண்டு | வேட்பாளர்கள் போட்டியிட்டோர் | வென்றோர் |
|---|---|---|
| 1952 | 24 | 2 * |
| 1957 | 24 | 13 |
| 1962 | 23 | 13 |
| 1967 | 16 | 4 |
| 1971 | 15 | 5 |
| 1977 | 29 | 2 |
| 1980 | 17 | 5 |
| 1984 | 48 | 8 |
| 1989 | 78 | 10 |
| 1991 | 101 | 31 ** |
| 1996 | 156 | 11 |

* ஒன்றுபட்ட சென்னை மாகாணம்

** இரண்டு தொகுதிகளில் போட்டியிட்ட ஜெயலலிதா காங்கேயம் தொகுதி உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு பர்கூர் தொகுதி உறுப்பினராக இருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தேர்தலுக்கு அரசு செலவு, வேட்பாளர் செலவு உச்சவரம்பு

| தேர்தல் ஆண்டு | தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு அரசின் செலவு | சட்டப்பேரவை வேட்பாளர் தேர்தல் செலவு உச்சவரம்பு |
|---|---|---|
| *1952* | *1,98,84,194*❖ | *8,000*■ |
| *1957* | *58,86,472* | *9,000* |
| *1962* | *96,28,354* | *9,000* |
| *1967* | *1,46,06,000* | *12,000* |
| *1971* | *1,45,15,735* | *12,000* |
| *1977* | *1,47,35,000* | *12,000* |
| *1980* | *1,90,28,000* | *35,000* |
| *1984* | *4,98,39,516* | *50,000* |
| *1989* | *8,62,98,000* | *50,000* |
| *1991* | *18,66,04,273* | *50,000* |
| *1996* | *42,34,92,162* | *1,50,000* |

❖ ஒன்றுபட்ட சென்னை மாகாணத்திற்கு ஆன தேர்தல் செலவு

■ இரட்டை உறுப்பினர் முறை அமலில் இருந்த *1952*-ல் அத்தொகுதிக்கு *ரூ.12,000 1957-ல் 14,000 என் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆட்சிகளின் பதவிக்காலங்கள், தேர்தல் தேதிகள்

| ஆண்டு | பேரவை அமைக்கப்பட்ட பின் முதல் அமர்வு | பதவிக்கால முடிவு | தேர்தல் நடந்த தேதிகள் |
|---|---|---|---|
| *1952* | *03.06.1952* | *31.05.1957* | ஜனவரி *2,5,8,9,11,12,16 21,25* |
| *1957* | *29.04.1957* | *01.03.1962* | மார்ச் *1,4,6,8,11* |
| *1962* | *29.03.1962* | *28.02.1967* | பிப்ரவரி *17,19,21,24* |
| *1967* | *15.03.1967* | *05.01.1971* | பிப்ரவரி *15,18,21* |
| *1971* | *22.03.1971* | *31.01.1976* | மார்ச் *1,4,7* |
| *1977* | *04.07.1977* | *17.2.1980* | ஜூன் *12,14* |
| *1980* | *19.06.1980* | *15.11.1984* | மே *28,31* |
| *1984* | *25.02,1985* | *30.01.1988* | டிச.*24* |
| *1989* | *06.02.1989* | *30.01.1991* | ஜன.*21* |
| *1991* | *01.07.1991* | *13.05.1996* | ஜூன் *15* |
| *1996* | *22.05.1996* | *14.02.2001* | ஏப்ரல்*27*, மே*2* |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

நூலாசிரியர் தி. சிகாமணி
'தினமணி' நாளிதழின்
முன்னாள் தலைமை நிருபர்.
ஆறாம் திணை,
தமிழ் சென்னை ஆன்லைன்
இணைய இதழ்களின்
முன்னாள் செய்தி ஆசிரியர்.

தமிழகத்தில்
1952 முதல் நடந்த
பொதுத் தேர்தல்களில்
அரசியல் கட்சிகள்
வாரி வழங்கிய வாக்குறுதிகள்,
எழுப்பிய கோஷங்கள்,
மையம் கொண்ட
முக்கியப் பிரச்சினைகள் ..
இப்படித் தேர்தலின்
பல்வேறு பரிமாணங்களை
ஆராய்கிறது
இந்நூல்.
விடுதலைக்கு பின்
தேர்தல் அரசியல் பற்றிய
வரலாற்றுப் பதிவு இது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்